
மல்லிகா மணிவண்ணனின்
தலைவியின்
நாயகன்
தலைவியின் நாயகன் ★ மல்லிகா மணிவண்ணன் ★

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : தலைவியின் நாயகன் |
| ஆசிரியர் | : மல்லிகா மணிவண்ணன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : மார்ச், 2013 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 316 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : நாகம்மை நிலையம்<br>43/18, எஸ்.பி.எஸ். முதல் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.140.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |




# தலைவியின் நாயகன்

# தலைவியின் நாயகன்

## 1

### இன்றைய நிகழ்வுகள்

அழகிய, பரபரப்பான சென்னை மாநகரம். தன்னுள் பல அசுத்தமான, அசிரத்தையான, விஷயங்களை கொண்டிருந்தாலும், அது அழகிய பரபரப்பான நகரமே! அது வருவோர் யாரையும், எவரையும், எந்த வேற்றுமையும் பாராது, உள்ளடக்கிக் கொள்ளும்.

இங்கே வந்து வாழ்ந்தவரும் உண்டு! வீழ்ந்தவரும் உண்டு! ஆனால வாழ்ந்தாரோ! வீழ்ந்தாரோ! இங்கே விட்டு வேறு இடம் செல்பவர் மிகச் சிலரே!

நாம் சாம்ராஜ்யங்களையும் ராஜ்யங்களையும் விட்டு வந்த பிறகு... என்னால் தான் உனக்கு இந்தப் பெருமை என்று சென்னை மாநகரம் சொல்லிக் கொள்வதற்கு

எண்ணிடலங்கா மக்கள் உள்ளனர்! எண்ணிலடங்காத விஷயங்கள உள்ளன!

அதே சமயம் குற்றங்களின் எண்ணிக்கையும் இங்கு அதிகமே! குற்றங்களை உள்ளடக்கி! குற்றவாளிகளை உள்ளடக்கி! அதை வளர்ப்பவர்களையும் உள்ளடக்கி! இருந்தாலும்... அதை தீர்ப்பவர்களையும்! அழிப்பவர் களையும்! இதே உள்ளடக்கி! உள்ளது!

இப்படி பலப்பல நாம் பல நூறு பக்கங்கள் சொல்லிக் கொண்டே போகலாம். இத்துணை பெருமைகளை யுடைய சென்னையில, ஒரு இனிய காலை பொழுதில்...

சென்னை கமிஷனர் ஆபீஸ் பரபரப்பாக இருந்தது. இன்று புதிதாக ஒரு அசிஸ்டென்ட் கமிஷனர் பொறுப் பேற்க வருகிறான். தமிழன் என்றாலும் தமிழ் நாட்டில் அவன் பணியில் சேர்ந்த பிறகு இப்பொழுது தான் முதன் முதலாக பொறுப்பேற்கிறான்.

கமிஷனர் இருந்திருந்தால் சற்று பரபரப்பு கம்மியாக இருக்கும். ஆனால் அவர் மருத்துவ விடுப்பில் இருந் தார். திடீரென்று அவர் நேற்றைக்கு முதல் நாள் விடுப் பெடுத்துக் கொண்டார். காரணம் யாருக்கும் தெரிய வில்லை. அதனால் ஒரு போர்க்கால அவசர நிலை போல இவன் அங்கே வருகிறான். அவனுக்கு அது தெரியாது. அது அவனுக்கு திடீரென்று சொல்லப்பட்ட ஒரு ட்ரான்ஸ்பர். தமிழ் நாட்டுக்கு வர அவனுக்கு விருப்ப மில்லை. ஆனாலும் மிக முக்கியமான உயர் பதவியில் இருப்பவர்கள் வேண்டி கேட்டுக் கொண்டதால் வரு கிறான்.



சப் இன்ஸ்பெக்டர் இருவர் பேசிக் கொண்டிருந்தது கேட்டு வெளியே காவலாளிகளின் மத்தியில் அமர்ந் திருந்த விசாரணைக் கைதி ஒருவனுக்கு வயிற்றைக் கலக்கியது.

''எப்போவும் புதுசா யாராவது வர்றதும், போறதும் நமக்கு என்ன புதுசா? அதுக்கு ஏன் இன்னைக்கு எல்லாரும் இவ்வளவு பதட்டமாக இருக்காங்க.''

''வர்றவருக்கு சின்ன வயசுப்பா. நேத்துதான் இங்க ஒருத்தர் அவரைப் பத்தி சொல்லிக்கிட்டு இருந்தார். ரொம்ப சின்ன வயசுலயே ஐ.பி.எஸ். பாஸ் பண்ணிட் டார் போல, போன போஸ்டிங் மும்பைல போல, அங்க இருக்கிற மாஃபியா கேங் கண்ணுலயே விரல விட்டு ஆட்டுனவரான்ப்பா.''

''என்கௌன்ட்டர் ஸ்பெஷலிஸ்ட்டாம், ஜனாதிபதி கிட்ட அவார்ட் வாங்கியிருக்காராம். நம்ம சென்னைல இப்போ ரௌடியிசம் அதிகமாயிட்டதால ஸ்பெஷலா அப்பாயிண்ட் பண்ணியிருக்காங்களாம்.''

''தமிழ்நாட்டுக்கு வர ஒத்துக்கவே இல்லையாம். கட் டாயப்படுத்தி கூட்டிட்டு வந்திருக்காங்க போல, கைதி களை விசாரிக்க வந்து நின்னாலே அவரோட ட்ரீட் மென்ட்டுக்கு பயந்து உண்மைய சொல்லிடுவாங்களாம்.''

''அங்க உட்கார்ந்து இருக்கானே, இன்னைக்கு அவனை ஒரு கேஸ் விஷயமா விசாரிக்கக் கூட்டிட்டு வந்திருக் காங்க. அநேகமா இன்னைக்கு அவரோட முதல் விசா ரணை அவனா இருக்கலாம்.''

இதைக் கேட்டு தான் அந்த விசாரணை கைதிக்கு வயிற்றைக் கலக்கியது.

''அவர் பேர் என்னப்பா.''

''அட ஒரு விவரமும் தெரியலை. எல்லாம் அவங்க அவங்க ஒண்ணொன்னு சொல்றாங்க. ஆனா எல்லாரும் பொதுவா சொல்ற ஒரு விஷயம் ரொம்ப அடாவடியான ஆளாம்பா. பயமே கிடையாதாம். அரசியல்வாதிங்க, சீனியர் ஆபீசர்ன்னு யாரும் அவர் வேலையில தலை யிட முடியாதாம். மொத்தத்துல சொல்லணும்னா குற்ற வாளிங்களுக்கு மட்டுமில்லாமல் நம்ம டிபார்ட்மெண்ட் ஆளுங்களுக்கும் அவர் சிம்ம சொப்பனம் தானாம்.''

சுற்றிக் கொண்டிருந்தவர்களில் சிலர் பயமாக பார்க்க, பலர் அலட்சியமாக, 'எவன் அவன்! இது மாதிரி எத் தனை பேரை நம்ம சர்வீஸ்ல பார்த்திருப்போம்' என்று எண்ணிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் எண்ணங்கள் எல்லாம் பொய்யாக்குவதற் காக அவர்களின் பேச்சின் நாயகன் அங்கே படி ஏறிக் கொண்டிருந்தான்.

சரியாக ஆறடி உயரம், அதற்கேற்ற அளவான உடல், இந்த துறைக்கு வந்ததில் இருந்து அவன் தினமும் உடற்பயிற்சி செய்து சீர்படுத்தி வைத்திருக்கும் உடல், கரிய நிறம், மாநிறமாக இருந்தவன் தன் வேலையின் காரணத்தினால் வெயில் என்றும் மழை என்றும் பாராமல் பணியில் ஈடுபட்டதால் நிறம் சற்று மங்கி கரிய நிற மாகவே தோற்றமளித்தது.

அவன் முக லாவண்யம் யாரையும் அவனை மரியாதை யோடு பார்க்க வைக்கும். பார்த்தவர்கள் உடனே சொல்லு வார்கள். இவன் சிரித்தால் நன்றாக இருக்கும் என்று, ஆனால் அவன் சிரிப்பை மறந்து போனானா, இல்லை.



பழகவே இல்லையா! அவனுக்கே தெரியாத விஷயம் அது.

அவன் முக தீட்சண்யமே அவன் சிறந்த போராளி எனக் காட்டியது. அவன் கண்களில் தெரியும் கடுமை யாருக்குமே பயத்தைக் கொடுக்கும்.

வந்தவன் அங்கே நின்று பார்வையால் சுற்றுப் புறத்தை அளந்தான். அங்கங்கே எல்லாரும் நின்று வளவளத்துக் கொண்டிருந்தனர். இவன் யுனிபார்மில் இல்லை. அதனால் அவன் யார் என்று மற்றவர்களுக்குத் தெரிய வில்லை. ஆனாலும் இரண்டொருவர் இவன் பால் கவரப்பட்டு யாரிவன் என்பது போல பார்த்திருந்தனர்.

அங்கே அமர்ந்திருந்த விசாரணை கைதி இவன் போலீஸ் என்பதை அடையாளம் தெரிந்து... அவன் தோற்றம்... கண்களில் தெரிந்த அலட்சியம்... கடுமை... அளவிடும் தன்மை... இதையெல்லாம் பார்த்து இவன் தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்த ஆபீசர் ஆக இருப் பார்... எனத் தெரிந்து எழப்போக, ஒரே பார்வையில் அவனை அடக்கினான்.

அங்கே இருந்த வாயிலில் நின்றிருந்த கான்ஸ்டபி ளிடம், ''கமிஷனர் எங்க பார்க்கறது'' என்றான்.

அவனுடைய போதாத காலம், இவன் தோற்றத்தை வைத்தாவது இவன் போலீஸ் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். ஆனால் அதை அவன் அறியவில்லை.

அவன் என்ன யோசனையில் இருந்தானோ? அவன் பதில் கூறாமல், ''நீங்க யாரு எதுக்குக் கேக்கறீங்க...?'' என்றான்.

''எனக்கு அவரைப் பார்க்கணும்'' என்றான், இவன் யார் என்பதை உரைக்காமல்.

''எதுக்குன்னு தெரியாமல் எப்படி அனுப்ப முடியும், யாராவது சொல்லிப் பார்க்க வந்து இருக்கீங்களா...'' என்றான் அந்த கான்ஸ்டபிளும் விடாமல், ஒரு வேளை யாராவது பெரிய ஆளாக இருந்து விட்டால்.

''தெரிஞ்சு நீ என்ன பண்ணப் போற'' என்றான் இவன் சட்டென்று ஒருமைக்குத் தாவி, குரலைச் சற்று உயர்த்தி, பொறுமை அவனிடம் நிறைய இருந்தாலும் அது பறந்து போகும் நேரம் அவன் அறியாதது.

அவன் பதிலளித்த விதமே அந்த கான்ஸ்டபிளுக்கு ஒரு மனதிற்குள் பயத்தைக் கொடுத்தது. இருந்தாலும் இப்போது எல்லாரும் அவர்களை கவனிக்க ஆரம்பித்து விட்டதால் அவரும் விடாமல்... ''அப்படி நினைச்ச நேரம் அவரைப் பார்க்க முடியாதுங்க, அவர் இல்லை, அவரைப் பார்க்க முடியாது.''

பதில் பேசாமல் அவனை பார்வை பார்த்தபடி, யாருக்கோ போன் செய்ய ஆரம்பித்தான்.

'இவன் யாருக்கோ தெரிந்தவனாக இருக்க வேண்டும். அதுதான் இவ்வளவு ஹோதா காட்டுகிறான். எப்படியும் பெரிய ஆளாகத்தான் இருக்க வேண்டும்' என்று முடிவு செய்து, பக்கத்தில் நின்ற மற்றொரு கான்ஸ்டபிளிடம், இவனுக்குக் காதில் விழுமாறு.

''தொரைக்கு கமிஷனர் பார்க்கணுமா... வீட்டு அட்ரெஸ் குடுத்தனுப்பு... காலைல வந்துட்டானுங்க நம்ம உயிரை எடுக்க, ஏன் நம்மளைப் பார்த்தா போலீஸ் மாதிரி தெரியலையா, கமிஷனர் தான் போலீஸா'' என்று முனகிக்கொண்டே இடத்தை விட்டு அகலப் போக.

''இங்கே வாங்க!'' என்றவன் ''நீங்க போலீஸா?...'' என்றான் அதட்டலாக. ''இங்க உட்கார்ந்திருக்கிற கைதி



நிமிஷத்துல நான் போலீஸ், ஏதோ ஹயர் ஆபீசர்ன்னு கண்டு பிடிச்சிட்டான்.

''உங்களுக்குத் தெரியலை... போலீசையே உங்களால அடையாளம் கண்டு பிடிக்க முடியலை. நீங்க எங்க குற்றவாளிய கண்டு பிடிக்கப் போறீங்க... இதுல தொரைன்னு அனாவசியமான பேச்சு வேற... டிபார்ட்மெண்ட் விளங்கும்!''

கேட்ட கான்ஸ்டபிள் அதிர்ந்தான். 'இவனும் போலீசா, அதுவும் ஹையர் ஆபீசரா, உனக்கு நேரமே சரியில்லடா' என தன்னைத் தானே நொந்து கொண்டான். சுற்றி ஆளுக்கொரு வேலையில் இருந்த டிபார்ட்மெண்ட் மக்களுமே இப்போது அலெர்ட் ஆனார்கள்.

''நீங்க போலீஸ் தான். ஆனா டிரெஸ் போடறதால மட்டும் போலீஸ் ஆயிடமாட்டோம். உயிரை எடுக்கறதுன்னா, என்னன்னு தெரியுமா...? தெரியலைன்னா என்னோட ஒரு நாள் வா காட்டுறேன்...

''ஆனா பாரு நான் கமிஷனர் கிட்ட தான் ரிப்போர்ட் பண்ண முடியும் உங்க கிட்ட பண்ண முடியாது'' என்றான்.

இது அத்தனையும் அவன் சொன்ன த்வனி அவனாக கேள்வி கேட்டால் தவிர, விஷயமில்லாமல் அவனிடம் ஒரு வார்த்தை கூட பேச முடியாது என்று மற்றவர்களுக்குப் புரிய வைத்தது.

அந்த கான்ஸ்டபிள் பயத்தோடு, ''சாரி சார்'' என்றான்.

''என் கேபின் எது?'' என்றான்.

''சார்! எங்களுக்கு எதுவும் தெரியாது சார். கமிஷனர் திடீர்னு முந்தா நேத்து மெடிக்கல் லீவ்ல போயிட்டாங்க, புதுசா ஒருத்தர் வர்றாங்கன்னு நேத்து ஈவினிங்

சொல்லிக்கிட்டாங்க. மற்றபடி ஒண்ணும் தெரியாது சார். நீங்க இந்த நேரத்துக்கு இப்படி வருவீங்கன்னு தெரிஞ்சா நம்ம ஆளுங்க... ப்ரெஸ்ன்னு... ஒரு பெரிய கூட்டமே கூடியிருக்கும்'' என்றான்.

''சரி நான் பார்த்துக்கறேன்'' என்றவன் போனை கையில் எடுக்கும் முன், ''குட் மார்னிங் சார்! இட்ஸ் எழில் வேந்தன் ரிபோர்டிங்'' என்று ஒரு சல்யூட்டுடன் அருகில் வந்து நின்றவனை ஒரு ஆச்சர்யமான மென்னகையுடன் எதிர்கொண்டான்.

''ட்ரைனிங்ல பார்த்தது எப்படி இருக்கீங்க!'' என்றான் இவன் அவனைப் பார்த்து,

''நல்லா இருக்கேன் சார். உங்க பேரைக் கேட்டவுடனே அது நீங்க தான்னு எனக்கு நிச்சயம்... ஆனாலும் ஒரு ஆர்வத்துல நானே வந்துட்டேன். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருத்தர் தான் உங்களை ரிசீவ் பண்ற மாதிரி இருந்தது. ஆர்வக் கோளாறு நானே வந்துட்டேன்.''

''என் பேர் உங்களுக்கு ஞாபகம் இருக்கா'' என்றவனை... ''என்ன சார் இப்படிக் கேட்டுட்டீங்க, மறக்கக் கூடிய பேரா அது 'வெங்கட ரமணன்.' உங்க அச்சீவ் மென்ட் என்ன சாதாரணமானதா... நானும் நீங்களும் சேர்ந்து தான் ட்ரைனிங் எடுத்தோம். நான் இப்போ தான் எஸ்.பி. ஆகியிருக்கிறேன்...

''நீங்க ஜாயின்ட் கமிஷனர் ஆப் போலீஸ்... எட்டு வருஷ சர்வீஸ்ல யாரும் நினைச்சுப் பார்க்க முடியாத விஷயம் ஏன் யாருக்கும் கிடைக்காத விஷயம்னே சொல்லலாம். அதை விட நம்ம போலீஸ் மக்கள் யாரும் அப்ஜெக்ட் பண்ணாம, கேஸ் அது இதுன்னு போகாம, உங்க



ப்ரமோஷனுக்கு எதிரா ஒரு வார்த்தை கூட பேசலியே அது இன்னும் பெரிய விஷயம்.

''நான் உங்களோட ட்ரைனிங் பீரியட்ல இருந்தேன்னு சொல்லிக்கறதே எனக்கு பெருமையான விஷயம் சார்.''

''அப்பா...! எனக்கு இன்னைக்கு சளி பிடிக்கப் போகுது. இவ்வளவு ஐஸா...''

''இதெல்லாம் நிஜம் சார்'' என்றவனை... ''விடுங்க சார்...'' என்ற ரமணன், ''இங்க என்னை யாருக்கும் தெரியலை'' என்றான்.

''எப்படித் தெரியும்? நீங்க பேர் சொன்னீங்கன்னா ஒரு வேளை தெரிஞ்சிருக்கும். நீங்க தான் உங்க முகத்தை யாருக்கும் காட்ட மாட்டேங்கறீங்களே. உங்க பேருமே அதிகமா வெளிய வரமாட்டேங்குது.

''நானே உங்க கூட ட்ரைனிங்ல இருந்ததுனால தெரிஞ்சது. அதுவுமே ரொம்ப வருஷ இடைவெளி. அப்போவுமே நல்லா இருப்பீங்க. இப்போ இன்னுமே ஹான்ட்சம் ஆகிட்டீங்க.'' அதற்குமே மென்னகையை மட்டுமே பதிலாகக் கொடுத்தான்.

''உங்களோட அளவுக்கு யாராவது அச்சீவ் பண்ணியிருந்தாங்கன்னா.... இந்தியாவோட ஹீரோ ஆகியிருப்பாங்க. இப்பத்திக்கு உங்க பேர் மட்டும் தான் ஹீரோ'' என்றவனுக்கு மறுபடியும் ஒரு மென்னகை மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

''நான் உங்களை ரிசீவ் பண்ண ஸ்டேஷன் வந்தேன்...'' என்றவனை, ''நான் ஃப்ளைட்ல வந்தேன் எழில்...'' ''ட்ரெயின்னு எனக்கு இன்பர்மேஷன்'' என்று எழில் இழுக்க...''

''எப்போவுமே என் ஜர்னி மோட் மாத்திட்டே இருப்பேன். நான் இந்த உலகத்துல இல்லாம இருந்தா பரவாயில்லைன்னு நினைக்கிறவங்க அதிகமாயிட்டாங்க... அதனால.''

''நீங்க இருக்கணும்னு நினைக்கறவங்க, அதைவிட அதிகம் சார்'' என்றவனுக்கு மறுபடியும் ஒரு மென்னகை.

'அதுதான் என்னை காப்பாத்திட்டு வருதுன்னு நினைக்கிறேன்' என்று மனதிற்குள்ளேயே எண்ணிக் கொண்டான்.

எழில் வேந்தன் மக்களை நினைத்து இதனை உரைக்க, இவனுக்கு வேறு சிலரின் நினைவுகள்.

''நான் வர்றது உங்களுக்கு எப்படித் தெரியும், நீங்க இங்க இருக்கீங்களா?''

''இல்லைங்க சார்... நான் norcotics control bureau (NCB)ல இருக்கேன். (அது போதை மருந்து கடத்தல் மற்றும் வேறு சில வகை குற்றவியல் விஷயங்கள் சம்பந்தப்பட்ட ஒரு பிரிவு).

''நேத்து இங்க ஒரு கேஸ் விஷயமா கமிஷனரை பார்க்க வந்தேன். அவர் மெடிக்கல் லீவ்னு தெரிஞ்சது. போன்ல அது விஷயமா பேசினப்போ, நீங்க தான் இங்க சார்ஜ் எடுக்கப் போறீங்கன்னு அவர் சொன்னார். அதுதான் நானே ரிசீவ் பண்றேன்னு வந்தேன். உங்களை மிஸ் பண்ணிட்டேன்.''

''பரவாயில்ல எழில், என்னோட முடிவுகளை நான் நிமிஷத்திற்கு நிமிஷம் மாற்ற வேண்டிய கட்டாயத்துல இருப்பேன்.''



''வாங்க கமிஷனர் கிட்ட பேசறேன்.'' என்றவன் உள்ளே போகும் முன் ''என்ன விஷயம் அது'' என்றான் ஏதோ தோணினவனாக,

''சார் இங்க உட்கார்ந்து இருக்கானே, இவனை போதை மருந்து கடத்தல் மற்றும் சப்ளை கேஸ்ல விசாரிக்கணும். அதுக்குள்ள சின்ன பிரச்சனைய பண்ணி... சட்டம் மற்றும் ஒழுங்க பங்கம் பண்ணினான்னு ஒரு கேச பண்ணி... இங்க உட்கார்ந்துட்டான். என்ன பண்றதுன்னு எனக்குப் புரியலை.''

''இவன் இங்க இருந்து வந்து... நான் கஸ்டடில எடுத்து... இவன்கிட்ட விஷயத்தை வாங்கறதுக்குள்ள... இவன் நெட் வொர்க்ல இன்னும் ரெண்டு பேர் புதுசா முளைச்சிடுவானுங்க. இன்னும் அதுக்குள்ள எத்தனை பேர் இந்தப் பழக்கத்துக்கு அடிமையாவாங்களோ தெரியலை'' என்று குரலில் போதை மருந்துக்கு அடிமையாகும் நமது இளைய சமுதாயத்தினர் மீது கவலை கொண்டவனாக எழில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அந்தக் கவலை ரமணனுக்கும் தொற்ற,

''இவனை நான் பார்த்துக்கறேன் எழில்'' என்றான். இவ்வளவு நேரமாக அவன் எழிலிடம் பேசிக் கொண்டிருந்த த்வனி க்ஷணத்தில் மாறியது. குரலில் கடுமை தொனிக்க, ''விஷயத்தைச் சொன்னா பார்க்கலாம்... இல்லைன்னா விடுதலை பண்ணிடலாம்'' என்று ரமணன் கூற... புரியாமல் எழில் பார்க்க... திரும்பி அந்த விசாரணை கைதியைப் பார்த்தவன், அவனையே தீர்க்கமாகப் பார்த்தபடி, ''இந்த இடத்தை விட்டு இல்லை! இந்த உலகத்தை விட்டு!'' என்று அவன் கூறிய தோரணை...

இப்படிக் கூடப் பார்வையாலும் வார்த்தையாலும் மரண பயத்தை ஒருவருக்கு கொடுக்க முடியுமா?... என்று எழில் அவனைப் பார்க்க, மற்றவர்களுக்கு அவனின் கீழ் வேலை பார்ப்பது அவ்வளவு சுலபமல்ல என்று தெரிய,

அந்த விசாரணைக் கைதிக்கு ரமணனின் பார்வையும், வார்த்தையும் உணர்த்திய செய்தி, சொன்னதைச் செய்வேன்! என்றதோடு மட்டுமல்லாமல், சொல்லாததையும் செய்வேன்! என்றது.



# 2

## அன்றைய நினைவுகள்

''அம்மா இன்னைக்கு அப்பா வந்துடுவாங்களா,'' என்ற கேள்விக்கு, ''வந்துடுவாங்க கண்ணு'' என்று பதிலளித்தாள் ராஜேஸ்வரி.

கேள்வி கேட்டவள் ராஜேஸ்வரியின் பத்து வயது மகள், வரமஹாலக்ஷ்மி. பெயருக்கேற்றார் போலவே... ஐஸ்வர்யம்! சௌந்தர்யம்! கலைவாணியின் பரிபூரண அனுக்கிரகம் என அனைத்தும் அமையப் பெற்றவள்.

ராஜேஸ்வரியின் இளைய புதல்வி. மூத்தவன் ராம் பிரசாத். பிறந்து பன்னிரெண்டு வருடங்களுக்குப் பிறகு பெண் வேண்டும் என்று ராஜேஸ்வரி தவமாய் தவமிருந்து பெற்ற மகள். அதனால் அதீத செல்லம், மகள் ஒன்று வேண்டும் என்று கேட்பதற்கு முன்னால்... அவள் அதைப் பார்க்கும் பொழுதே கண் முன் நிற்கும்.



ராஜேஸ்வரியின் கணவர், சிவசங்கரன் படிப்பில்... தொழிலில்... சட்டத்தை கொண்டவர். இன்று மத்திய அமைச்சர், மகள் பிறக்கும் வரை அரசியலுக்கு வரலாமா? வேண்டாமா? என்று மனக் குழப்பத்தில் இருந்தார்.

நண்பர் ஒருவரின் ஆலோசனையின் பேரில்... உதவியின் பேரில்... துணிந்து செயலில் இறங்க... இன்று மத்திய இணை அமைச்சர். அதனால் வரமஹாலக்ஷ்மிக்கு தந்தையும் அளவற்ற செல்லம்.

உடன் பிறந்தவனைப் பற்றி சொல்லவே வேண்டாம். இவ்வளவு நாள் அவன் அனுபவித்த பெற்றோரின் ஏக போக செல்லத்தைப் பங்கு போட பிறந்தவள் என்ற sibling rivalry சிறிதும் இல்லாமல் பெற்றோருக்கும் மேல் தங்கையை தாங்குபவன். அவன் தன் தந்தையைப் போலவே பெங்களூரில் உள்ள நேஷனல் லா ஸ்கூலில் சட்டம் கடைசி வருடம் பயில்பவன்.

இப்படி அனைவரின் செல்லத்திற்கும் உரிய வரமஹாலக்ஷ்மி இயல்பிலேயே பிடிவாதமான குழந்தை. அவளுடைய அப்பா மத்திய அமைச்சர் ஆன பிறகும் தங்களது இருப்பிடமான சென்னையை மாற்றவில்லை.

அதனால் அவர் வடநாட்டிற்கும் தென் நாட்டிற்கும் இடையே பயணத்தை அவ்வப்போது மேற்கொள்வார். அப்போதெல்லாம் அவருடைய செல்ல மகள் தந்தை எப்போது வருவார் என்று நச்சரித்து விடுவாள். தன்னுடைய தாயைத் தேடும் அளவிற்குத் தந்தையையும் தேடுவாள்.

இன்று காலையில் எழுந்ததில் இருந்து தன்னுடைய தந்தை எப்போது வருவார் என்று நச்சரித்துக் கொண்

டிருந்தாள். மற்ற நாட்கள் என்றால் பள்ளிக்குச் சென்று விடுவாள். இன்று ஞாயிறு ஆதலால் தன்னுடைய தந்தையை அதிகம் தேடினாள் அவருடைய செல்லப் புதல்வி.

வீட்டிற்கு முன் இருந்த லானில் விளையாடிக் கொண் டிருந்தாள். அவர்களுடையது அடையாறு பகுதியில் காண்போரை மறுபடியும் காணத்தூண்டும் அழகுற அமைந்த பங்களா. மத்திய அமைச்சர் வீடல்லவா... எப்போதும் அவரைக் காண நிறையப் பேர் காத்திருப் பார்கள்.

அவர் ஊரில் இல்லாததால் இன்று முன்பக்கம் பார்வை யாளர்கள் யாரும் இல்லாததால் சிறிது காலியாக இருக்க... அங்கே அவள் விளையாடிக் கொண்டு இருந்தாள். வேலையாட்கள் ஐந்தாறு பேர் சுற்றி நிற்க பந்தை வீசி அவர்களை ஓடவிட்டு அதை அவர்கள் எடுத்து வரு வதைப் பார்த்து கை கொட்டிச் சிரித்துக் கொண்டிருந் தாள்.

வயதானவர்... தோட்டக்காரர். அவரையும் அதே வேலை வாங்கிக் கொண்டு இருந்தாள். தன்னுடைய அன்னை சொல்லியும் கேட்டாளில்லை. ''அவரால ரொம்ப ஓட முடியாது கண்ணு, விட்டுடு!'' என்று ராஜேஸ்வரி ஒரு பக்கம் சொல்லிக் கொண்டே இருக்க... வேண்டும் என்றே இவள் அவரையே ஓட வைத்துக் கொண்டு இருந்தாள்.

தனது தந்தையின் கார் வர... விளையாட்டு மும்முரத் தில் அவரிடம் கூட சென்றாளில்லை... அம்மா அழைத் தும், ''தோ வரேன்மா'' என்றவள், மறுபடியும், மறுபடி யும், அந்த வயதானவரிடமே பந்தை எறிந்து அவர் முடியாமல் ஓடுவதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்



தாள். அவருடைய சிரமம் அவளுக்கு ஒரு விளையாட் டாக இருந்தது.

காரை விட்டு இறங்கிய சிவசங்கரன் தன்னோடு ஒரு புதியவனை அழைத்து வந்திருந்தார். சிறுவனும் அல்ல இளைஞனும் அல்ல பதினாறில் இருந்தான் அவன்.

அவன் யார் என்று தன் மனைவியிடம் அவர் கூறும் முன்னரே, அந்த புதியவன் வரமஹாலக்ஷ்மியின் விளை யாட்டை பார்த்திருந்தவன், அவனுக்கு அந்த சிறுமி கண்களுக்குத் தெரியவில்லை. அவள் போடும் பந்தால் அந்த பெரியவர் தடுமாறியபடி ஓடிக் கொண்டிருந்தது தெரிய, ''அவர் விழுந்துடுவார் ஐயா'' என்று உரைத் தவன்...

அவர் பதிலுக்கு காத்திராமல் நிமிடத்திற்கு விளை யாடும் இடத்திற்குச் சென்றவன், அவளிடம் ஒன்றும் சொல்லாமல் அந்த பெரியவரிடம், ''நீங்க போங்க நான் விளையாடுறேன்'' என்றவன், ''எனக்கு போடு!'' என்றான் அவளைப் பார்த்து.

தன்னுடைய விளையாட்டில் தன்னுடைய அனுமதி இல்லாமல் நுழைந்த அந்த புதியவனை வரமஹாலக்ஷ் மிக்கு முதல் பார்வையிலேயே பிடிக்கவில்லை. ''நீ யாரு?'' என்றாள்.

''நான் வெங்கி'' என்றான்.

''என்ன மங்க்கியா!...'' என்றாள் வேண்டுமென்றே அந்த சிறுமி. சற்றே கோபம் எட்டிப் பார்க்கத் தொடங் கிய போதும், ''நான் வெங்கட ரமணன்'' என்றான் மறு முறை.

''மை பிரண்ட்ஸ் கால் மீ வெங்கி'' என்றான்.

''ஐ அம் நாட் யுவர் பிரண்ட்'' என்றாள் வரமஹாலக்ஷ்மி.

''ஓஹ்! தட்ஸ் பைன்'' என்றான் ரமணன் பதிலுக்கு அலட்சியமாகத் தோளைக் குலுக்கியபடி, யாரும் அவளிடம் இதுபோல் அலட்சியம் காட்டிப் பேசியதில்லை. அந்தச் சிறுமிக்கு ஆத்திரத்தில் அழுகை வரப் பார்த்தது.

சட்டென்று பந்தைத் தூக்கி எறிந்த அவள் தன் தந்தையிடம் ஓடினாள். ''யார் அப்பா அது எனக்குப் பிடிக்கவேயில்லை. ஹி இஸ் இன்ட்ரஸ்டிங் இன் மை கேம்'' என்றாள்.

''அப்படி எல்லாம் சொல்லக் கூடாது பாப்பா, அவங்க நமக்கு ரொம்ப வேண்டியவங்க. இனிமே இங்க தான் இருப்பாங்க'' என்றார்.

''என்ன நம்ம வீட்லயா...'' ''ஆமாம் பாப்பா!'' என்றவரை அந்த பதில் தனக்கு பிடிக்கவில்லை என்று பிடிக்காத பார்வை பார்த்தாள்.

''அவன் இங்க வேண்டாம்!'' என்றாள் பிடிவாதமான குரலில்,

''பாப்பா இப்படி எல்லாம் மரியாதையில்லாம பேசுவீங்களா. என பாப்பா இப்படியெல்லாம் பேசமாட்டாங்களே'' என்று அவர் பொறுமையாகக் கூற... முகத்தைத் தூக்கி வைத்து திரும்பி நின்று கொண்டாள்.

பெரியவரின் சிரமத்தைப் பார்த்து அவசரத்தில் அவளிடம் அதட்டல் போட்ட ரமணன், இப்போது அவள் அவனிடம் வழக்காடி விட்டு, தன் தந்தையிடம் வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது தான் அவளை கவனித்தான்.



அழகான சிறுமி, அந்த வட்டமான முகம்... கண்ணீர் வரத் துடிக்கும் பெரிய கண்கள்... உதடு அழுகை அடக்கி பிதுங்கி நிற்க... அவனை அறியாமலேயே அவளைச் சமாதானப்படுத்த உந்துதல் வர... அவள் அருகில் சென்றவன், ''சாரி!'' என்றான்.

''உங்கிட்ட கேட்காம உன் விளையாட்டுல வந்துட்டேன்'' என்றவன் ''ஆனா எனக்கு தெரியாதே. உனக்கு வலிக்காதா கீழ விழுந்தா, எனக்கு வலிக்குமே!'' என்றான்.

''எனக்கும் வலிக்கும்.'' என்றாள்.

இது ஒரு சாதாரண குழந்தைகள் சைக்காலஜி. உனக்கு இது கூடத் தெரியாதா என்றால், உடனே எனக்குத் தெரியும் என்பார்கள். இதை அவன் உபயோகிப்பதைப் பார்த்த ராஜேஸ்வரிக்கு அவன் இயல்பிலேயே புத்திசாலி என்பது புரிந்தது.

''அப்போ அந்த தாத்தா கீழ விழுந்தாலும் வலிக்கும் தானே, அதனால தான் அனுப்பிட்டேன்... சாரி!'' என்றான் மறுபடியும்.

அவன் இருமுறை சாரி கேட்டு விட்டதால் அவள் முகம் சற்று தெளிந்தது. ஆனாலும் சிரிப்பு எட்டிப் பார்க்கவில்லை.

இப்போது சிவசங்கரனைப் பார்த்து ரமணன், ''என்ன ஐயா நீங்க? இவ்வளவு நேரமா கார்ல என்கிட்ட என் பொண்ணு அழகா சிரிப்பான்னு சொன்னீங்க... சும்மா சொன்னீங்களா...'' என்றான்.

''இல்லை!... நான் அழகா சிரிப்பேன்'' என்றவள் சிரிப்பதைப் போல் வாயை இழுத்துப் பிடிக்க, தங்களுடைய செல்ல மகளின் செய்கையில் பெற்றோர் இருவருக்கும் வாய் கொள்ளாச் சிரிப்பு மலர்ந்தது.

இது ஒரு சிறு புன்னகையை ரமணனிடத்திலும் வரவழைத்தது. அசட்டு தனங்கள் இல்லாமல் புன்னகை கூட அளவாய் புரியும் அவனை ராஜேஸ்வரிக்கு மிகவும் பிடித்து விட்டது.

சிவசங்கரனுக்குப் புரிந்தது... ரமணன் அவளைச் சமாதானப் படுத்துவதற்காக கூறுகிறான் என்று புன்னகையோடு பார்த்திருந்தார். அந்த புன்னகை ராஜேஸ்வரியையும் தொற்றிக் கொண்டது.

அவன் யார் என்பதைப் பற்றி எல்லாம் அவர் கவலைப் படவில்லை. தன்னுடைய செல்ல மகள் முகம் வாடுவது பொறுக்காமல், அவளைச் சமாதானம் செய்கிறான். அதுவும் அவளுடைய மனம் நோகாமல் அவளுடைய தவறையும் சுட்டிக் காட்டுகின்றான், என்றவுடன் அவருக்கு ரமணனை மிகவும் பிடித்து விட்டது.

ஓரளவு அவனுடைய காரணங்கள் இயற்கையிலேயே நியாயவாதியான வரமஹாலக்ஷ்மிக்கு புரிந்தாலும்... அதை ஒத்துக் கொள்ள மனமில்லாமல் அவனை விடுத்து தன் தந்தையிடம் ஒன்றினாள்.

''அப்பா பாப்பாக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கீங்க?'' என்றாள் மெல்லிய குரலில்.

''கார்ல இருக்கு எடுத்துக்கலாம்'' என்றவாறே, ரமணனை ராஜேஸ்வரியிடம் அறிமுகப்படுத்தினார். ''நம்ம ராமநாதன் அண்ணன் பையன். இனிமே இங்க தான் இருப்பாங்க'' என்றார். அதற்கு மேல் ஒரு கேள்வி கூட ராஜேஸ்வரி கேட்கவில்லை. ''உள்ள வாப்பா...'' என்றார்.

ராமநாதன் என்பவர் தன்னுடைய கணவருக்கு சிறு வயது முதலே நிறைய உதவிகள் செய்திருக்கிறார் என்று



ராஜேஸ்வரிக்குத் தெரியும். தந்தையில்லாத சிவசங்கரனுக்கு, படிப்பதற்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறார். திருமணம் கூட ராமநாதனும் அவர் மனைவியும் தான் முன்னின்று நடத்தினர்.

ஆனால் அவர்களுக்கு வெகு நாட்களாக குழந்தை பேறு இல்லாமல் இருந்து நிறைய வருடங்களுக்குப் பிறகு பிறந்தவன் வெங்கட ரமணன். ராமநாதனை கேட்காமல் சிவசங்கரன் எந்த வேலையும் செய்ய மாட்டார்.

அவர் அரசியலில் இறங்கியது கூட அவரின் ஆலோசனையின் பேரில் தான். அந்த சமயத்தில் அரசியலில் ஈடுபடுவதற்கு நிறைய பணம் தேவைப்பட்ட போது உதவியவரும் ராமநாதனே. பையன்கள் சீக்கிரம் வளர்ந்து விடுவதால் அவருக்கு சட்டென்று அடையாளம் தெரியவில்லை.

அவர் பார்த்து வளர்ந்தவன் தான், ஆனால் ஒரு நான்கைந்து வருடங்களாக பார்க்கவில்லை. அதனால் சரியாகத் தெரியவில்லை.

இப்போது அவருடைய மகன் என்று தெரிந்ததுமே, அவரும் உற்சாகமாக... ''ரொம்ப வருஷங்களுக்குப் பிறகு பார்க்கிறேன் இல்லையா... சரியா தெரியலை, உள்ள வாப்பா'' என்றார் மறுபடியும்.

ஆனால் அவன் வெகுவாகத் தயங்கினான்.

அவனுடைய தயக்கத்தைப் பார்த்தவர், ''வாப்பா'' என்றார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த வரமஹாலக்ஷ்மி, ''அம்மா கூப்பிடுறாங்கள்ள உள்ள போங்க...'' என்றாள் அதட்டலாக.

ரமணன் சிவசங்கரனின் முகத்தைப் பார்த்து, ''இல்லைங்க ஐயா, நான் ஹாஸ்டல்ல தங்கிக்கறேன்'' என்றான்.

''அம்மாவும் அப்பாவும் சொல்றாங்க இல்லை. கேட்க மாட்டீங்க... நீங்க வாங்க!'' என்றவள்... அவனுடைய கையைப் பிடித்து இழுத்து வீட்டுக்குள் கூட்டிப் போக முயற்சித்தாள்.

சிறுமி அல்லவா சிறிது நேரத்திற்கு முன்னால் தான் தான் அவனை இங்கே வேண்டாம் என்று கூறினோம் என்பதே அவளுக்கு மறந்து விட்டது.

சிரித்தபடியே அன்னையும் தந்தையும் பார்த்திருக்க... அவனை இழுக்க முடியாமல் இழுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

# 3

## இன்றைய நிகழ்வுகள்

அந்த கைதி இவன் சொன்னதையும் செய்வான் சொல்லாததையும் செய்வான் என்று பயத்தோடு பார்த்துக் கொண்டு இருக்க, எழில் வேந்தனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்ற ரமணன்,

அங்கே இருந்த கமிஷனர் சேரில் அமராமல், சோபாவில் அமர்ந்து, உரையாடலைத் துவங்கி, அவனிடம் தனக்குத் தேவையான விவரங்கள் வாங்கிய பிறகு, மரியாதை நிமித்தம் இரண்டொரு வார்த்தை பேசி முடிக்க, எழில் பிறகு வருவதாகக் கூறி விடைபெற, இவனைப் பார்க்க நிறைய பேர் வர ஆரம்பித்தனர்.



அங்கே இருந்த இன்-சார்ஜிடம் பத்திரிகையாளர்கள் யார் வந்தாலும் மரியாதையாகப் பேசி, ''வெங்கடரமணன் அவங்களே தனியா பிரஸ் மீட் இன்னும் ரெண்டு மூணு நாள்ல அரேன்ஜ் பண்ணுவாங்கன்னு சொல்லுங்க. எந்தக் கடினமான வார்த்தைகளையும் உபயோகிக்க வேண்டாம்!'' என்று கூறினான்.

எல்லோரையும் அவரவர் இடத்தில் இருக்குமாறு பணித்து, இவனே சென்று சந்தித்தான். எல்லோரிடமும் இரண்டொரு அளவான வார்த்தைகள் அளவளாவ, அதைத் திரும்ப யாராலும் செய்ய முடியவில்லை. அவன் கேட்பதற்கு மட்டுமே பதிலளிக்க முடிந்தது.

எல்லோருக்கும் இதுவே ஒரு ஆச்சர்யம்! ஏனென்றால் எந்த உயர் அதிகாரி வந்தாலும் இவர்கள், அதிகாரியைச் சென்று பார்ப்பது தான் வழக்கம். அதிகாரிகளும் அதைத்தான் விரும்புவர். ஆனால் அவன் அந்த முறைமைகளை எல்லாம் விரும்பவில்லை.

இவனே சென்று எல்லோரையும் சந்தித்தான். அதில் ஒரு ஸ்நேகபாவத்தை அவன் காட்டினான் இல்லை. ஒரு கணடிப்பு இருந்தது. அவனாக இப்படி! அப்படி! என்று எந்த ரூல்சும் பேசவில்லை, கேள்வியும் கேட்கவில்லை! எது எப்படி இருக்கிறது என்ற கணிப்பை மட்டுமே செய்தான்.

எல்லோரையும் பார்த்தது மட்டுமில்லாமல், கட்டிடத்தையும் சுற்றிப் பார்த்தான். இது அத்தனையும் செய்யும் போது அங்கே, இங்கே, நடக்க இருக்க, அப்போதெல்லாம் அவன் அந்த விசாரணைக் கைதியைப் பார்த்த பார்வை, கைதியினுள் மெதுவாக பயத்தை அதிகரித்துக்

கொண்டே இருக்க, அந்த பயம் அவன் கண்களில் நன்றாகத் தெரியும் வரை ரமணன் விடவில்லை.

வந்தது முதல் மதியம் வரை இதே வேலையில் இருந்தான். பிறகு உணவைத் தருவித்து உண்டு கொண்டு இருக்கும் போது தான் சென்னையை தொட்டது முதல் அணைத்து வைத்திருந்த தொலைபேசியை உயிர்ப்பித்தான்.

அவன் உயிர் கொடுக்கக் காத்திருந்த அது... அதனுடைய தொல்லை கொடுக்கும் வேலையைச் செய்ய... அதில் வரிசையாக மிஸ்டு கால் அலர்ட் வர ஆரம்பித்தது.

அவசரப்படாமல் மெதுவாக உண்டு முடித்தான். உண்டு முடித்து கால்களை பார்க்க... அன்னொவுன் நம்பரில் இருந்து சில கால்கள் வந்திருக்க, பல கால்கள் அவனுடைய அன்னையிடமிருந்து வந்திருந்தது. இன்னும் பல ராம் பிரசாத்திடம் இருந்து வந்திருந்தது.

பெயரிடப்படாமல் வந்திருந்த கால்களை இவனாக அழைத்துப் பேச ஆரம்பிக்க, அனேக அழைப்புகள் அவன் மும்பையிலிருந்து சென்னை மாற்றல் விஜயம் குறித்தே இருக்க எல்லாவற்றையும் பேசி முடித்தான்.

அதில் ஒன்று கமிஷனர் அழைப்பு, தான் சில சொந்த வேலைகளின் காரணமாக மருத்துவ விடுப்பில் செல்வதால் அவனை சார்ஜ் எடுக்குமாறு கூறி... எல்லா விவரங்களும் தான் எஸ்.பி. யிடம் தெரிவித்து இருப்பதாகவும் கூறினார்.

தற்போது அவரை தானும் இல்லாத... ரமணனும் இன்னும் பொறுப்பெடுக்காத காரணத்தால், அமைச்



சகத்தில் ஒரு மீட்டிங்கிற்கு செல்ல பணித்துள்ளதாகக் கூறினார்.

அவருடைய க்ஷேம லாபங்களை விசாரித்து முடித்து, போனை அணைக்க, அது உடனே மறுபடியும், ''என்னை எடு'' என்று அழைக்கத் துவங்கியது.

பார்த்தால் அது 'ராம் பிரசாத் காலிங்' என்றது. இன்னும் அதனை எடுக்காமல் விட்டால் நேரில் வந்து நிற்பான் என உணர்ந்து, எடுத்து ''ஹலோ'' என்றான்.

இவன் குரல் கேட்ட அடுத்த நிமிடம், ''ஹாப்பி டு ஸீ யூ பாக் இன் சென்னை'' என்றான் ராம். கேட்ட ரமணன் அமைதியாகவே இருந்தான். ''ரமணன் இருக்கியா'' என்று ராம் கேட்க...

''நினைச்சத சாதிச்சிட்டீங்க!... எப்படியோ ஏதேதோ செஞ்சு என்னை வரவெச்சிட்டீங்க. எனக்குத் தெரியும்! கமிஷனர் சொன்ன சொந்த வேலையின் காரணமாக மெடிக்கல் லீவ் நீங்க உருவாக்குனதுதானே ராம் அண்ணா?'' என்றான்.

அதற்கு பதிலளிக்காத ராம், ''நீ இன்னும் இந்த அண்ணாவ விட மாட்டியா'' என அவன் கேட்க....

இந்த முனையில் அவனுக்கு மௌனமே பதிலாகக் கிடைத்தது. ராமிற்குத் தெரியும் இதற்கு பதில் வராது என்று. தெரிந்தாலுமே ஒவ்வொரு முறையும் இந்த கேள்வியை ராம் பிரசாத் கேட்காமல் விட்டதில்லை.

''சரி சொல்லு. எப்போ வீட்டுக்கு வர்ற'' என்றான் ராம்.

''வரணுமா என்ன?''

''புளீஸ் ரமணன்! ஒரு வாய்ப்பு குடு! எங்களுக்காக வேண்டாம் உனக்காக'' என்றவன் குரலில் எதிர்பார்ப்பு மேலோங்கி நிற்க, இன்னுமே எதையும் தள்ள முடியாது என்றுணர்ந்தவனாக,

''எனக்கு இப்போதைக்கு இங்க வேற வீடு கிடையாது அண்ணா, வீடு அலாட் ஆகவும் நாளாகும்னு எனக்குத் தெரியும். நீங்க அலாட் ஆக விடமாட்டீங்கன்னு தெரியும், இங்க என்னோட இன்னைய வேலை எப்போ முடியும்னு தெரியாது! முடிஞ்சதும் வர்றேன்'' என்றவன் மேலே ராம் எதுவும் பேசும் முன்னே போனை கட் செய்தான்.

தன்னுடையது சிறிதும் மரியாதையில்லாத நடத்தை என்று தெரிந்தவனாக, சிறிது வருடங்களாக தான் இப்படி மரியாதையில்லாதவனாக மாறிவிட்டதை உணர்ந்தவனாக... வைத்தவன், கடமை அழைப்பதை உணர்ந்தவன், இன்னும் அம்மாவிடம் பேசாததை நினைவில் வைத்து அவர்களை அழைக்க...

''அம்மா!'' என்று இவன் அழைக்கும் முன்னரே,

''என் ரமணா நீ இப்படி போனை ஆப் பண்ணி வைக்கிற? பேச இஷ்டமில்லைன்னா கட் பண்ணு! அம்மா எதுவும் நினைச்சுக்க மாட்டேன். ஆனா இப்படி ஆப் பண்ணாத! நீ மறுபடியும் என்னைக் கூப்பிடற வரைக்கும் என் உயிர் என்கிட்ட இருக்கிறதில்லை'' என்று அவர் பொரிந்தார்.

அதில் கோபத்தை விட வருத்தமே மேலோங்கி இருக்க, ''சாரி அம்மா! இனிமே இப்படி பண்ணாம இருக்க முயற்சி பண்றேன்'' என்றான்.

''இன்னைக்கு என் திடீர்னு இந்த சுவிட்ச் ஆப் பியாக்குன! என்ன ஆச்சு?'' என்றார்.



''ஐ அம் இன் சென்னை மா.''

''ஒஹ்!'' என்று அவர் நிறுத்த, அவர் மேலே எதுவும் பேசும் முன், ''அம்மா! சாப்பிடறதுக்கே நிறைய நேரம் எடுத்துட்டேன். இன்னைக்கு காலைல தான் வந்தேன். இன்னும் சார்ஜ் எடுக்கலை. மேலதிகாரி யார்கிட்டயும் இன்னும் ரிப்போர்ட் பண்ணலை. அப்புறமா கூப்பிடட்டுமா'' என்றான்.

''சரி'' என்று ஒற்றை வார்த்தையில் முடித்து அவர் போனை வைத்து விட்டார்.

இவன் எதையும் யோசிக்க விரும்பாதவனாக, விசாரணை கைதிய அழைத்து வரச் சொன்னான்.

விசாரணைக் கைதியை அழைத்துக் கொண்டு அவனோடு இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு கான்ஸ்டபிள்கள் என்று ஒரு கும்பலே வர,

''நான் பார்த்துக்கறேன், நீங்க போங்க'' என்றான் அவர்களைப் பார்த்து, ''சார் தனியா இவனோடயா'' என்று கான்ஸ்டபிள் இழுத்தார்.

''ஏற்கனவே இங்க எப்.ஐ.ஆர். போடறதுக்கு முன்னாடி ஒரு தடவை இங்கயே அடிதடில இறங்கியிருக்கான் சார். நாங்களும் இருக்கோம்'' என்றார்.

''நான் பார்த்துக்கறேன்! நீங்க இவனை என்கிட்ட விட்டுட்டு, வேற வேலை பாருங்க'' என்றான் மறுபடியும்.

''சொன்னா கேட்கறாங்களா, எதுக்கு தேவையில்லாம ரிஸ்க் எடுக்கணும்'' என்று ஆளுக்கொன்றாக அவரவர்களுடைய வாய்க்குள்ளேயே இவன் காதில் விழாதவாறு முணுமுணுத்துக் கொண்டு போனார்கள்.

அவர்கள் செல்லும் வரை அமைதியாக இருந்தவன், எழுந்து போய் சுற்றி ஒரு முறை யாரும் இருக்கிறார்களா என்று பார்த்து வந்தான், வாயிலில் இரு கான்ஸ்டபிள் நிற்க, "நீங்க அந்த பக்கமா போய் நில்லுங்க" என்றவன்,

அவர்கள் அந்த இடத்தை விட்டு அகலும் வரை பார்த்துக் கொண்டு இருந்து, பிறகே உள்ளே வந்தான். இந்த முஸ்தீபுகளை பார்த்த கைதிக்கு பயம் அதிகரித்தாலும் வெளியே காட்டாமல் இருக்க பெரு முயற்சி செய்து கொண்டிருந்தான்.

வந்தவன், கைதியிடம், "உன் பேர் என்ன?" என்றான்.

"சுப்ரமணி" என்றவனிடம், "சுப்ரமணி போய் நம்ம பேசறத யாராவது கேக்கறாங்களா பார்த்துட்டு வா!" என்று அவனையே அனுப்பினான்.

அவன் எழுந்து போய் பார்த்து வந்ததும்,

"யாரும் நம்ம பேசறதை கேக்கலை," "நீயே பார்த்துட்ட, இப்போ சொல்லு என்ன? எதுக்கு? உன்னை இங்க கூட்டிட்டு வந்திருக்காங்க? உங்க மேல என்ன அலிகேஷன்? அதாவது என்ன குற்றச்சாட்டு?" என்று அவனை யோசிக்க விடாதவாறு கேள்விகளாக அடுக்கினான்.

அவன் என்ன இவன் கேட்கிறான்? என்ன சொல்வது? என்பது போல முழிக்க,

"உன்னை எதுக்கு இங்க விசாரணைக்கு கூட்டிட்டு வந்திருக்காங்க" என்றான் மறுபடியும்.

அந்த கைதியின் கேஸ் விவரங்களை படித்துக் கொண்டே தான் கேள்விகளை அடுக்கினான்.

உண்மையைச் சொல்பவன் எத்தனை முறை எப்படி மாற்றி மாற்றி கேட்டாலும் ஒரே பதிலைத் தான் சொல்வான். சிறிது தடுமாறினாலும் மாற்றி உரைத்தாலும் அவன் உண்மையை உரைப்பதை கண்டு கொள்ள முடியும். ஏனென்றால் அவன் உண்மையை, நடந்ததைக் கூறுவான்.



ஆனால் பொய் சொல்பவன் எப்படி தான் தேர்ந்தவனாக இருந்தாலும், மறுபடியும் மறுபடியும் கேள்விகளை மாற்றி மாற்றிக் கேட்கும் போது தடுமாறி விடுவான்.

இதனை கருத்தில் கொண்டே கேள்விகளை அடுக்க ஆரம்பித்தான் ரமணன்.

"ஒரு பஞ்சாயத்து பண்ணப் போனேன்! அங்க கொஞ்சம் அடிதடியாகி, ரெண்டொரு வெட்டு குத்து ஆகிடிச்சி, அதுல முதல் குற்றவாளியா என்னை சேர்த்துக் கொண்டு இங்க கொண்டு வந்துட்டாங்க" என்றான்.

"யாராவது இறந்துட்டாங்களா" என ரமணன் கேட்க,

"அதெல்லாம் இல்லைங்க" என்றான்.

"அப்போ யாராவது சீரியஸா இருக்காங்களா?"

"இல்லைங்க" என்றான்.

"கைகால் போய்டிச்சா" அதற்கும் "இல்லை" என்றான்.

"அப்புறம் என்ன ஆச்சு?"

"கொஞ்சம் காயம். ஹாஸ்பிடல்ல இருக்காங்க" என்றான்.

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?"

இப்போது கைதி தடுமாற ஆரம்பித்தான்.

"கேட்டுத் தெரிஞ்சிகிட்டேனுங்க" என்றான்.

"யாரைக் கேட்டுத் தெரிஞ்சிக்கிட்ட?"

இதற்கு சுப்ரமணி என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினான்.

''நேத்தைக்கு முதல் நாள் நீ அடிதடி பண்ணிட்டு... எங்கயும் போகலை, போலீஸ் வரவரைக்கும் அங்கயே தான் இருந்திருக்க, தகவல் தெரிஞ்சு போலீஸ் வந்த வுடனே உன்னை அரெஸ்ட் பண்ணிட்டாங்க, உடனே இங்க கூட்டிட்டு வந்திருக்காங்க.

''நீ இங்கயும் கலாட்டா பண்ணி உன்னை விசாரிக்க விடாம வேணும்னே உடனே எப்.ஐ.ஆர். போட வச் சிருக்க, நேத்தே கோர்ட்ல ஆஜர் பண்ணி ரிமாண்ட் பண்ணி, மறுபடியும் இன்னைக்கு விசாரணைக்கு பெர் மிஷன் வாங்கிக் கொண்டு வந்திருக்காங்க. அதுக்குள்ள உனக்கு அந்த அடிபட்டவங்களோட நிலைமை எப்படித் தெரியும்.

''உன்னை யாரும் வந்து பார்த்த மாதிரி தெரிய லையே. நீயே பிளான் பண்ணி வேணும்னே அரெஸ்ட் ஆகியிருக்கியா?'' என்றான் அவனையே கூர்மையாகப் பார்த்தபடி, சாதாரணமாக ஆரம்பித்து இப்படி இங்கு அவன் வருவான் என அந்தக் கைதி எதிர்பார்க்க வில்லை.

அதுதான் நடந்தது. சுப்பிரமணி வேறு ஒரு கேசில் மாட்டாமல் இருக்க வேண்டுமென்றே செய்தது தான் இது. இது ஒன்றுமில்லை. நிரூபணமானாலும் ஒன்றிரண்டு வருடத்தில் வெளியே வந்து விடலாம். ஆனால் அதில் மாட்டினால் சிரமம்.

ரமணன் அவனுடைய முகத்தையே பார்த்தவாறு அவனுடைய எண்ணங்களைப் படிக்க முயன்று கொண் டிருந்தான்.



''இல்லை! இல்லை! நான் வேணும்னு எதுவும் பண் ணலை. அது தானா தான் நடந்தது!'' என்றான் சுப்பிர மணி. ''என்ன நடந்தது?'' என்று மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பித்தான் ரமணன்.

கைதி அமைதியாக இருக்க முயற்சித்ததெல்லாம் வீணாக ஆரம்பித்தது. சிறிது சிறிதாக பதட்டப்பட ஆரம்பித்தான்.

ரமணன் விடாமல் கேள்விகளைக் கேட்க, முன்பு என்ன சொன்னோம் என்று நினைவில்லாமல் மாற்றி மாற்றி பதில் சொல்ல ஆரம்பித்தான்.

மூன்று மணி நேரம் விடாமல் ரமணன் கேள்விகளால் அவனை துளைத்தெடுக்க, கைதிக்கு என்ன சொல் கிறோம் என்பதே ஞாபகமில்லை.

சப்-இன்ஸ்பெக்டர் என்னவோ ஏதோவென்று வந்து, வந்து அரை மணிக்கொருமுறை, எட்டி, எட்டிப் பார்த்து போய் கொண்டிருந்தார்.

ஆனால் இருந்த இடத்தை விட்டு ரமணன் அசைய வில்லை. கைதியையும் அசைய விடவில்லை.

எல்லாரும்... ''என்னடா இது? ஒரு சாதாரண கேசிற்கு எதற்கு இப்படி?'' என்று புரியாமல் தலையை உடைத்துக் கொண்டிருந்தார்கள்.

எஸ்.பி. வந்தவர் உள்ளே நுழையப் போக, ரமண னுடைய பார்வையே ''வராதே'' என...

அவருமே வெளியே நின்றார். கேள்விகளாலேயே அந்த கைதியை ஏறக்குறைய அரை மயக்க நிலைக்குப் போக வைத்திருந்தான்.

பார்த்த போலீசார்கள் அசந்து போனார்கள். 'கைதியின் மேல் கையை வைக்காமலேயே இந்த பாடு படுத்திக் கொண்டு இருக்கிறானே, இவன் கையை வைத்தால்?...'

'வந்த முதல் நாள், இன்னும் பதவி கூட ஏற்காத நிலையிலேயே இப்படி என்றால், இன்னும் நாளையிலிருந்து என்னென்ன வருமோ' என்று கைதிகளை விட அவன் சக ஊழியர்களே ஆளுக்கு ஆள் கதைக்க ஆரம்பித்தார்கள்.

## 4

### அன்றைய நினைவுகள்

இழுக்க முடியாமல் ரமணனை வீட்டுக்குள் இழுத்துக் கொண்டு போய் விட்ட வரமஹாலக்ஷ்மி. ''ஹப்பா!'' என்று மூச்சு விட்டாள். ஏதோ வேலை செய்தவள் போல, கையை தட்டுவது போல் தேய்த்தாள், வராவின் பாவனை அவனுக்குப் புன்னகையை வரவழைத்தது.

அவள் இழுக்க முடியாமல் இழுக்கிறாள் என்றவுடனே... அவனே தான் நடந்து வந்தான். அதனால் அவளுடைய இந்த பாவனை அவனுக்கு புன்னகையைக் கொடுக்க, ஒன்றும் சொல்லாமல் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

அவனைத் திரும்பிப் பார்த்து முகத்தைச் சுருக்கியவள், ''நான் அப்பா என்ன வாங்கியிருக்காங்கன்னு பார்த்துட்டு வரேன், நீங்க இங்கேயே உட்கார்ந்துட்டு இருங்க'' என்றவள்... வெளியே போகவும்... அவளுடைய



அன்னையும் தந்தையும் உள்ளே வரவும்... என்ன வாங்கி வந்திருக்கிறார் என்று பார்க்க...

அது கலர் கலராக ஸ்ட்ராப் மாற்றிக் கொள்ளும் படியான வாட்ச், அவளுக்கு வாட்ச்கள் என்றால் மிகவும் பிரியம். அவர் கையில் கொடுத்தவுடனே அதை மாற்றி, மாற்றி, கட்ட முயற்சி செய்ய,

''அப்பா இப்போ தான் வந்திருக்காங்க வரா! நீ அவரைத் தொந்தரவு பண்ணாத! இன்னும் கொஞ்சம் நேரம் போனா அப்பாவைப் பார்க்க யாராவது வந்துடுவாங்க. அப்பா அதுக்குள்ள கொஞ்சம் ஃப்ரெஷ்ஷாகி வரட்டும் விடு.'' என்று அன்னை சொல்ல...

''இப்போவே!'' என்று அடம் பிடித்தாள் வரமஹாலக்ஷ்மி, அதனைப் பார்த்த ரமணன், ''விடுங்க! நான் மாத்தி தர்றேன்'' என்றவன் அவரை எப்படி அழைப்பது என்று தெரியாமல், ''நான் உங்களை எப்படிக் கூப்பிடட்டும்!'' என்றான்.

ராஜேஸ்வரி என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சிவசங்கரனைப் பார்க்க, ''என்னை ஏன் அங்கிள் சொல்லாம! ஐயா சொல்ற!'' என்றார்.

''அப்பா அப்படி தான் கூப்பிடணும் சொன்னாங்க, நீங்க ரொம்ப மரியாதையான பதவியில இருக்கீங்க. அதனால அப்படித்தான் கூப்பிடணும்னு சொன்னாங்க!'' என்றான்.

''உனக்கு எப்படிப் பிரியமோ அப்படிக் கூப்பிடு!'' என்றார், ''அம்மான்னு கூப்பிடவா? என்று அவன் சொல்லும்போதே வரமஹாலக்ஷ்மி, ''எனக்கும் அண்ணாக்கும் மட்டும் தான் அவங்க அம்மா'' என்றாள் வெடுக்கென்று.

பெற்றோர் இதை எதிர்பார்க்கவில்லை, ''வரா!....'' என்று அன்னை அதட்டும் முன்பே, ''பாப்பா!'' என்று தந்தை ஒரு சொல் சொல்லும் முன்பே, ''நீ அப்படி கூப்பிடக் கூடாது'' என்றாள் திரும்பவும்,

''உன் அம்மா தானே, அப்போ வரா அம்மான்னு கூப்பிடவா?'' என்றான் வெங்கட ரமணன்.

''ஏன் இவ்வளவு வாக்குவாதம், அத்தைன்னு கூப்பிடேன்'' என்று சிவசங்கரன் சொல்ல, ''இல்லல்ல அவங்க வரா அம்மா தானே! அப்படியே கூப்பிடட்டும்!'' என்றாள் வரா பெரிய மனுஷியாய்.

தாங்கள் அவளை செல்லம் கொடுத்துக் கெடுக்கிறோமோ என்று பெற்றோரை வருத்தப்பட வைத்துக் கொண்டு இருந்தாள். ஆனாலும் பெற்றோருக்கு அவளை அதட்ட மனமில்லை.

''கண்ணு இப்படி எல்லாம் பேசக்கூடாது'' என்று அவளுக்கு சமாதானம் சொல்லிக் கொண்டிருக்க,

''விடுங்க அத்தை! நான் வரா அம்மான்னே கூப்பிடறேன்'' என்றான் இருவருக்கும் பொதுவாக.

அவன் சமாளித்துக் கொள்வான் என்றுணர்ந்த ராஜேஸ்வரி, ''வாப்பா முகம் கைகால் கழுவி பால் சாப்பிடலாம்'' என்று கூப்பிட... மறுபடியும் வாட்சில் வந்து நின்றாள் செல்ல மகள்.

''நீங்க போங்க அத்தை. ஐயாக்குக் கொடுங்க. நான் வரேன்!'' என்றவன், ''வரா அம்மாக்கு சரியா இது மாட்ட தெரியாது, நான் மாட்டட்டுமா? என்றான் வரமஹாலக்ஷ்மியிடம்...



''சரி'' என்று அவள் தலையாட்ட வாட்ச்சை எடுத்துக் கொண்டு இருவரும் அமர... பெற்றோர் அந்த இடத்தை விட்டு அகன்றனர்.

ராஜேஸ்வரி சிவசங்கரனிடம், ''ரொம்பப் பொறுமையான பையன் இல்லை, நம்ம வராவை நல்லா சமாளிக்கறான்'' என்று சொல்ல சிவசங்கரன் வாய் விட்டுச் சிரித்தார்.

பொதுவாக அவர் எப்படி எல்லாம் சிரிக்க மாட்டார். அபூர்வமாகத்தான் அப்படி சிரிப்பார். அதனால் அவரை ஆச்சரியமாக விழிவிரித்து ராஜேஸ்வரி பார்க்க...

''ஏன் இந்த முழி முழிக்கற'க!... கெட்டது போ!... பய புள்ள பொறுமைசாலியா?'' என்று சொன்னவர் மறுபடியும் சிரித்தார்.

''இப்போ ஏன் அவன் இங்க வந்திருக்கான்னு தெரியுமா, பய ஒருத்தன் மேல கைய வச்சிட்டான், அவன் இப்போ ஹாஸ்பிடல்ல கொஞ்சம் சீரியஸா இருக்கான். உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லை, இருந்தாலும் அண்ணன் கொஞ்சம் பயப்படறார்.

''அவருக்கு வயசாயிடுச்சு. இல்லைன்னா என் உதவியெல்லாம் தேவையில்லை. நான்தான், நான் பார்த்துக்கறேன்... இந்த பிரச்சனையெல்லாம் அடங்கற வரைக்கும், பய நம்ம வீட்ல இருக்கட்டும்னு கூட்டிட்டு வந்துட்டேன்.''

''அண்ணனுக்கு அப்போவும் பையன விட மனசில்லை, ரொம்ப வருஷம் கழிச்சு பொறந்திருக்கான், ஒரே பையன் வேற. அண்ணி தான் பயந்துட்டு, பிடிவாதமா என்னோட அனுப்பி வெச்சிட்டாங்க'' என்றார்.

''சின்ன பையன், அடிதடில இறங்கறானா... பார்த்தா அப்படி தெரியலையே எனக்கு'' என்றார்.

''தப்பா நினைக்காத அவனை ராஜி. ரொம்ப நல்ல பையன். யார் ரத்தம் அவன்? அண்ணனோடது இல்லையா! வந்தவுடனே அவன்கிட்ட என்ன பார்த்த? அந்த பெரியவர் சிரமப்படறார்னு உடனே ஓடினான் இல்லியா, அதுதான் அவனோட பிரச்சினை. யாராவது சிரமப்பட்டா, ஏதாவது பிரச்சனைன்னா உடனே ஓடிட றான்.

''இந்த அடிதடி கூட அவனுக்காக இல்லை. யாரோக் காகதான். அதான் இங்க கூட்டிட்டு வந்துட்டேன்'' என்றார்.

''இங்க ஏதாவது பிரச்சினை பண்ணினா.''

''நம்ம பையன்னா விட்டுடுவோமா! அவனும் நம்ம பையன் மாதிரி தான்! அவங்க அப்பா எனக்கு உதவி யிருக்கலைனா, நானெல்லாம் ஒண்ணுமேயில்லை!

''என்னோட படிப்பு, தொழில், இப்போ இருக்கிற இந்த பதவி அந்தஸ்து! எதுவுமே இல்லை. இத்தனை செஞ்ச வங்க, அது அவங்களால தான் அப்படின்னு தெரிவிச் சிக்க மாட்டாங்க! மத்தவங்களுக்குத் தெரிய விடவும் மாட்டாங்க!''

''அவனைப் பார்த்துக்கறது என்னோட கடமை. அவ னுக்கு இங்க எந்தக் குறையும் வரக்கூடாது. நீ பார்த்துக்கு வேன்ற தைரியத்துல தான், உன்கிட்ட கேட்காம கூட கூட்டிட்டு வந்துட்டேன். பார்த்துக்குவ தானே!'' என்றார்.

''கட்டாயம் பார்த்துக்கறேன்'', என்றார் ராஜேஸ்வரி.



''கோபம் அதிகமா வரும் போல, மத்தபடி நானும் பார்த்தவரைக்கும், எனக்கும் நல்ல மரியாதையான பையன்னு தான் தோணுது'' என்றார் சிவசங்கரன்.

ரமணன் அங்கே வந்து இரண்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டது. அவர்கள் ஊர் கிராமம் என்பதால் நல்ல ஆங்கில வழி கல்வி, அவர்கள் இடத்தில் சற்று சிரமமாக இருந்ததால், அது கிடைக்க அவனை சிறு வயது முதலே அவன் பெற்றோர் அவனை ஊட்டியில் தான் படிக்க வைத்தனர்.

இந்த வருடம் தான் தங்கள் அருகில் வைத்துக்கொள்ள ஆசைப்பட்டு, கூட்டி வர... யாருக்கும் எந்த அநியாயம் நடந்தாலும் உடனே அங்கே ஓடி விடுவான்.

எடுத்தவுடன் அப்படி அடிதடிக்குப் போகும் ரக மில்லை. முதலில் வார்த்தையால் மட்டுமே சொல்லு வான். கேட்காத பட்சத்தில் அது யாராக இருந்தாலும்... கை பேசிவிடும்.

அப்பா பெரிய மிராசுதார் என்பதால் அவனுக்குத் திரும்பப் பிரச்சினை பண்ணுமளவுக்கு யாருக்கும் அங்கே தைரியமில்லை. இப்போதுகூட மனது உறுத்த அவன் தந்தைதான் அவனை அங்கே இருந்து அனுப்பி வைத்தார்.

அங்கே வரமஹாலக்ஷ்மியின் வீட்டில் எந்தத் தொந் தரவும் அவன் கொடுக்கவில்லை. சிறு வயது முதலே ஹாஸ்டலில் இருந்ததால் அவனுக்கு பெற்றோரை விட்டு வேறு இடத்தில் இருப்பது பெரியதாக ஒன்றும் தெரிவிக்கவில்லை.

வராவின் வீட்டில் அவர்களாக அழைத்தால் மட்டுமே அவர்கள் பேச்சில் கூட இணைவான். அன்னை, தந்தை,

அவர்கள் செல்ல மகள் என்று இருக்கும்பொழுது அவர்களுடைய தனிமையில் வரமாட்டான். அனாவசியமாக எந்த விஷயத்திலும் சிறு உரிமை கூட எடுத்துக் கொள்ளவில்லை.

அதனால் தான் வரமஹாலக்ஷ்மி அமைதியாக இருந்தாள் என்று கூறலாம். அவளுக்கு எப்பொழுதுமே தன்னுடைய வீடு! தான் தான் முதல்! போன்ற எண்ணங்கள் அதிகம். அவள் இஷ்டம் தான் அங்கே எல்லாமே.

சிவசங்கரனுமே ரமணனுக்கு எந்த சௌகரிய குறைச்சலும் வைக்கவில்லை. தனி ரூம் எல்லா வசதிகளுடன் அவன் எதற்கும் யாரையும் எதிர்பார்க்காதவாறு... கேட்கத் தேவையிராதவாறு... பார்த்துக் கொண்டார்.

அடுத்த வாரம் அவனை சென்னையிலுள்ள பள்ளியில் சேர்க்க உத்தேசித்து இருக்க... ரமணனுடைய பெற்றோர் வருவதாகக் கூறினர்.

வரமஹாலக்ஷ்மி தன்னுடைய வீட்டில் அவன் புதிதாய் இருப்பதற்கு ஆரம்பத்தில் ஆட்சேபித்தாலும், அவன் எதற்கும் அவளைச் சீண்டுவது இல்லை. அவள் இருக்கும் இடத்தில் இல்லாதவாறு பார்த்துக் கொண்டான்.

அவளாகத் தேடி வந்து வம்பிழுத்தாலும் அவன் பொறுமையாக அவளை கையாண்டு விடுவான். அங்கே அந்த வீட்டின் நிகழ்வுகளோடு அவன் இருப்பதே தெரியாமல் தன்னை அவன் இணைத்துக் கொண்டான்.

அவனுடைய அந்த செய்கைகள் அங்கே ராஜேஸ்வரிக்கும் சிவசங்கரனுக்கும் மிகவும் பிடித்து விட்டது. அவனாக தள்ளித் தள்ளிப் போனாலும் அவர்களாக இழுத்துப் பிடித்து அவனை தங்களுள் இணைத்துக் கொள்வர்.



நாட்கள் நகர ரமணனுடைய அப்பாவும், அம்மாவும் அவனைப் பார்க்க வர, அவர்கள் வந்த விதத்தைப் பார்த்ததுமே... வரமஹாலக்ஷ்மி தன்னுடைய தாயின் பின் ஒளிந்து கொண்டாள்.

அவர்கள் டாட்டா சுமோவில் வர... அவர்களோடு ஒரு டெம்போ நிறைய ஆட்கள் சென்னையைச் சுற்றிப் பார்க்க வென்று வந்தனர். எல்லாம் அவர்கள் பண்ணையில் நிறைய நாட்களாக வேலை பார்க்கும் ஆட்கள்.

ராமநாதன், ரமணனுடைய தந்தை, பார்க்க... கல்யாண சமையல் சாதத்தில் வரும் பழைய நடிகர் ரங்காராவைப் போல் இருந்தார். நல்ல உயரமாக பெரிய மீசை வைத்துக் கொண்டு ஆஜானுபாகுவாக இருந்தார்.

யானை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே என்பது போலே அவர் வரும் முன்னே அவருடைய சிரிப்பு சத்தம் வந்தது. அவருக்கு சற்றும் சம்பந்தமில்லாமல் ரமணனுடைய தாயார் சுந்தரவல்லி இருந்தார். ஒடிசலாக, அளவான உயரத்தில், பார்வைக்கு அழகான, ஆர்ப்பாட்டமில்லாத, அமைதியான பார்வையோடு இருந்தார்.

அவர் வந்தவுடனே தனது தந்தை வேகமாக அவரை அழைக்கப் போன விதத்தைப் பார்த்தவுடனே என்னவோ ஏதோவென்று பயந்து வரமஹாலக்ஷ்மி அன்னையிடம் ஒண்டினாள்.

அவர்கள் வந்து அமர்ந்த பிறகு கூட தனது தந்தை அவர்கள் அருகில் பவ்யமாக நின்று கொண்டே இருப்பதைப் பார்த்தாள். எப்பொழுதும் தனது தந்தையின் முன் தான் மற்றவர்கள் இப்படி நின்றிருப்பதைப் பார்த்திருப்

பவள், இப்பொழுது இதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

இது எதையும் உணராதவராக ராமநாதன் பேச்சை ஆரம்பித்து விட்டு இருக்க, சுந்தரவல்லி சிவசங்கரன் நின்று கொண்டிருப்பதை உணர்ந்தவராக, ''தம்பிய உட்காரச் சொல்லுங்க, நின்னுட்டே இருக்காங்க'' என்று கணவரிடம் மெல்லிய குரலில் கூற,

''ஆமாமில்லை!'' என்று அதற்கும் பெருங்குரலெடுத்து சிரித்தவர், ''தம்பி உட்காருங்க, நம்ம வீட்டம்மா நம்மளை கோபிக்கறாங்க. உங்க பதவிக்கு நான் தான் எழுந்து நிக்கணும்'' என்றபடி அவர் எழப்போக... ''இருங்க ஐயா!'' என்று பதறியவராக சட்டென்று சிவசங்கரன் அமர்ந்தார். ராஜேஸ்வரி அவர்களுக்கு தாகத்திற்கு தண்ணீர் எடுத்து வரப் போக, அவர் சேலையைப் பிடித்துக் கொண்டே வரா சென்றாள்.

அவர்களுடன் வந்தவர்கள், வீட்டிற்குள் ரமணனுடைய பெற்றோர். இங்கு வரும்போது கொண்டு வந்ததைப் பரப்ப... அந்த பெரிய ஹால் நிரம்பி விட்டது. கூடை கூடையாக காய்கள், கனிகள் என்று இருந்தது. ''எல்லாம் நம்ம பண்ணைல விளைஞ்சது'' என்றார் ராமநாதன்.

அவளுடைய அம்மாவின் பின்னே வந்து தண்ணீர் கொடுக்கும் வரை அவர் பின்னே நின்ற வரமஹாலக்ஷ்மி, அவர் போகத் திரும்பியதும் அவளும் திரும்பி அவர் பின்னே சென்றாள். இதைப் பார்த்த ராமநாதன்...

''பொண்ணு பயந்து நிக்குது பாரு! அதை கூப்பிடு வள்ளி!'' என்று ராமநாதன் அழைக்க... அவருடைய சிரிப்பைப் பார்த்து பயந்து போயிருந்த வரா, தனது தந்தையுமே அவரிடத்தில் மரியாதையாக நின்றிருப்பதைப் பார்த்து, இன்னுமே தாயிடம் ஒண்டினாள்.



நடப்பவை எல்லாவற்றையும் அமைதியான பார்வையோடு வெங்கட ரமணன் பார்த்திருக்க... அவனுடைய அன்னை அவனிடம், ''உங்க அப்பா சிரிக்கறத பார்த்தே பொண்ணு பயந்திருப்பா, கூப்பிடு ரமணா அவளை'' என்று சொல்ல...

அவன் எதுவும் சொல்லாமல் தன்னுடைய தாயின் பின் நின்றிருந்த அவளின், அருகே சென்று, அவள் இங்கு ரமணன் வந்தபோது சொன்ன மாதிரியே...

''அம்மாவும் அப்பாவும் சொல்றாங்க இல்லை. கேட்க மாட்டீங்க... நீங்க வாங்க!'' என்று மெதுவாக அவளுக்கு மட்டும் கேட்குமாறு கூறி... அவளைப் போலவே கையைப் பிடித்து இழுத்து வந்தான்.

## 5

### இன்றைய நிகழ்வுகள்

**கை**தியை அரை மயக்க நிலைக்கு தள்ளிய ரமணன் கான்ஸ்டபிளை கூப்பிட்டு கைதிக்கு ஒரு டம்பளர் க்ளுகோஸ் தண்ணீர் மட்டும் கொடுக்கச் சொன்னான். கைதி தன்னை சிறிது ஆசுவாசப்படுத்திக் கொள்ள சமயம் கொடுத்தவன்.

''இன்னும் கொஞ்சம் நேரம் டைம் கொடுக்கறேன், நான் மறுபடியும் கூப்பிடும்போது... எல்லா விஷயத்தையும் என்கிட்ட சொல்லற மாதிரி உன்னை நீ தயார் பண்ணிக்கோ'' என்று மிரட்டலாகவே கூறினான்.

ஒரு வழியா அவன் தன்னுடைய விசாரணையை ஒத்திப் போடவும், உள்ளே எஸ்.பி. வந்தார்.

அவன் மிகச் சிறிய வயதிலேயே உயர் பதவியை அடைந்து விட்டதால், அவனுக்குக் கீழே அடுத்த நிலையில் இருப்பவர்கள் நிறைய வருட சர்வீஸில் இருப்பவர்களாகவே இருப்பார்கள்.

அதனால் அவர்களுக்கு அவர்களுடைய பதவிக்கு மரியாதை கொடுக்கிறானோ இல்லையோ, அத்தனை வருட சர்வீஸ்க்கு கட்டாயம் மரியாதை கொடுப்பான்.

எழுந்து நின்று கைகுலுக்கி அவரை அறிமுகப் படுத்திக் கொண்டான்.

''சார்! நான் தனபால், சுப்பரின்டென்டன்ட் ஆப் போலீஸ்!'' என்று அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு,

அலுவலக விவரங்களை பகிர, அவரிடம் அவனுடைய பேச்சு ஏறக்குறைய ஒரு மணி வரை நீடிக்க... முடித்தவன் மணி பார்த்தால் ஆறு என்றது, எழுந்தவன் மீண்டும் கைதியை அழைத்தான். வேலையை முடிக்கும் வரை நடுவில் சாப்பிடக் கூட எதுவும் எடுக்க மாட்டான். இரண்டு முறை கான்ஸ்டபிள் வந்து டீ அல்லது காபி, கொண்டு வரவா என்று கேட்டபோதுகூட மறுத்து விட்டான்.

''சொல்லு!'' என்று இவன் மறுபடியும் ஆரம்பிக்க, அவன் பயத்தோடு பார்த்தான். ரமணன் இவ்வளவு நேரமாக கேட்ட கேள்விகளை மறுபடியும் கேட்க ஆரம்பித்தான்.

''நீ ஏன் வேணும்னு அரெஸ்ட் ஆன? என்ன பிரச்சனையை திசை திருப்பறதுக்காக, யாரும் இல்லை இங்க, நீ இந்த கேஸ்லயே இரு. உன்னை நான் தொந்தரவு பண்ண மாட்டேன். எனக்கு தேவை உன் பின்னணி மட்டும் தான்!



''உன் பேர் வெளிய வராது! நீ அப்ரூவரா மாறுன்னு சொல்ல மாட்டேன்! ஸ்டேட்மெண்ட் குடுன்னு எதுவும் சொல்ல மாட்டேன். நீ நேரடியா இருந்தேன்னா, அதை நிறுத்திடு!''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டும் சொல்லிக் கொண்டும் இருக்கும்போது ரமணனைப் பார்த்த கைதிக்கு பயம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

''எனக்கு உனக்கு தண்டனை வாங்கிக் கொடுக்கறது முக்கியமில்லை. குற்றம் மேலும் நடக்காம தடுக்கணும், சொல்லு!'' என்றான்.

''உனக்கு இதை விட்டா வேற வழி கிடையாது. நீ என்ன நினைச்சு செஞ்சியோ தெரியாது. ஆனா ஏற்கனவே இங்க நீ ஒரு கலாட்டா பண்ணி உடனே எப்.ஐ.ஆர். போடுற மாதிரி செஞ்சிருக்க, அதையே சாக்கா வெச்சு மறுபடியும் நீ கலாட்டா பண்ணி தப்பிக்கப் பார்த்தன்னு சொல்லி போட்டு தள்ளிடுவேன்!''

கைதிக்கு பயத்தில் அவனுடைய இருதயத் துடிப்பு அவனுக்கே கேட்க ஆரம்பித்தது.

''மிஞ்சிப் போனா என்ன ஆகும் எனக்கு, ஒரு விசாரணை கமிஷன் முன்னாடி பதில் சொல்ல வேண்டி இருக்கும். அது ஒண்ணும் எனக்கு புதுசு இல்லை. ஏற்கனவே நிறைய முறை பதில் சொல்லி இருக்கேன்.''

கைதியின் பயத்தை பூரணமாக உணர்ந்த ரமணன், மிரட்டல் தொனியை சற்று குறைத்து,

''நம்பு! உன் மூலமா தகவல் கிடைச்சதுன்னு யாருக்கும் தெரியாது! உன்னை இதே கேஸ்லயே உள்ளே போட்டுடறேன், எனக்கு தகவல் மட்டும் தான் வேணும்.''

கைதிக்கு சிறிது நம்பிக்கை அளிக்கும் விதமாக, "என்னால உனக்கு என்ன செய்ய முடியுமோ செய்யறேன், சொல்லு!"

"நீ சீக்கிரம் சொல்லிட்டன்னா பரவாயில்லை! இன்னும் எதுக்காக உனக்கு இந்த டார்ச்சர்ன்னு யாருக்கும் தெரியாது. ரொம்ப நேரம் பண்ணினேன்னா வேற ஏதோ விஷயம் போலன்னு சந்தேகம் வரும். நாளைக்கு நானா ட்ரேஸ் பண்ணி கண்டுபிடிச்சா கூட உன் பேர் வரும், இல்லை... நான் ஒண்ணுமே கண்டு பிடிக்கலைன்னா கூட... நீ இப்போ சொல்லலைனா, நீ ஏதோ சொன்ன மாதிரி நான் ப்ரெஸ்ல கூப்பிட்டு சொல்லிடுவேன்! அப்புறம் இந்த போட்டு தள்ற வேலையை நான் பார்க்க வேண்டியதில்லை உன் கூட்டாளிங்களே பார்த்துப் பாங்க! உன்னை போடுவாங்களா, இல்லை உன் குடும்பத்தை போடுவாங்களா, எது வேணா நடக்கலாம் யோசி!"

யோசி! யோசி! என்று அவனை சிறிதும் யோசிக்க விடாமல் விஷயத்தை வாங்க ஆரம்பித்தான்.

இனம் புரியாத பயம் ஆட்கொள்ள கைதி வாயை திறந்தான்.

"சரக்கு சப்ளை மட்டும் தான் என்னோட வேலை, மற்றபடி எங்க இருந்து வருது எனக்கு தெரியாது. ரெண்டு மூணு பெட்டி கடைக்கு ரெகுலரா சப்ளை பண்ணுவேன். நான் பெரியவங்களுக்கு மட்டும் தான் விக்க சொல்லுவேன். அதுல ஒருத்தன் ஸ்கூல் பசங்க ரெண்டு மூணு பேருக்கு குடுத்துட்டான், அவனுங்க அதை ஏத்திக்கிட்டு படுத்திருந்தப்போ மாட்டிகிட்டாங்க."



"யார்க்கு குடுத்தான்? மறுபடியும் சொல்லு!" என ரமணன் கேட்க, அவன் குரலில் ஒலித்த கர்ஜனை 'இன்னைக்கு நம்ம முடிந்தோம்' என்றே கைதியை நினைக்க வைத்தது.

இவன் "ஸ்கூல் பசங்களுக்கு" என்று திக்கித்திணறி பயத்தோடு சொல்ல...

கேட்டுக்கொண்டிருந்த ரமணன், அவன் உட்கார்ந்திருந்த சேரை நோக்கி விட்ட ஒரு உதையில், அவன் சேரோடு தூக்கி எறியப்பட்டு சுவரோடு மோதி விழுந்தான்.

அது எழுப்பிய சத்தமும், கைதியின் ஓலமும், கேட்டு எல்லாரும் ஓடி வர, எல்லோரையும் சைகையாலே வெளியே அனுப்பினான். ஒரு கான்ஸ்டபிளை மட்டும் உள்ளே வர சொல்லி, மறுபடியும் அவனை தூக்கி உட்கார வைக்க சொன்னான்.

"கொஞ்சம் அவனுக்கு குடிக்க தண்ணி குடுங்க! நீங்க வெளில போங்க!" என்றவன்,

"சொல்லு!" என்றான் மறுபடியும்.

"வீட்ல மாட்டியிருந்தான்னா பெத்தவங்க விஷயம் வெளில வராம பாத்துப்பாங்க! அதனால பிரச்சினை வராது! நாங்க பொதுவா மாட்டிக்க மாட்டோம்! இந்த மாதிரி அடிக்கடி நடக்கறது தான்! ஆனா இவனுங்க ஸ்கூல்ல மாட்டிகிட்டாங்க! கடைக்காரன் மாட்டிக்கிட்டான்! என்னை எப்படியும் அவன் சொல்லிடுவான்னு தெரியும்! ஏன்னா சப்ளை எல்லாம் என் மூலமா மட்டும் தான். வேற யார் மூலமாவும் இல்லை. அதனால் எனக்கு மேல இருக்கறவங்க இந்த மாதிரி பண்ணி இங்க வர சொன்னாங்க. அதுக்கு முன்னாடி இங்க வந்துட்டன்னா, அவன் சொல்லியிருந்தான்னா கூட அவன் குடும்பத்தை மிரட்டி அவன்

ஸ்டேட்மென்ட்டை வாபஸ் வாங்க வச்சிடுவாங்க. நான் ஒரு வருஷம் ரெண்டு வருஷம் இருந்துட்டு வெளில வந்துடலாம்னு சொன்னாங்க!''.

''உனக்கு மேல யார் இருக்கா!'' என்று ரமணன் கேட்டவுடனே அழ ஆரம்பித்து விட்டான்.

''சார், நீங்க சொன்ன மாதிரி, என்னை ஏதாவது பண்ணினா கூட பரவாயில்லை! என் குடும்பத்தை ஏதாவது பண்ணிட்டா?'' என்று அவன் அழ,

''உன் குடும்பம் மட்டும் தான் குடும்பமா? அப்போ ஊருக்குள்ள இருக்கறவன் எல்லாம் என்ன பண்ணுவான். காலேஜ் பசங்கன்னா கூட தெரிஞ்சு பண்ணுவாங்கன்னு சொல்லலாம்... நீங்க ஸ்கூல் பசங்களை கூட விட லையே... உன்னை எல்லாம் எப்படிடா உயிரோட விடறது'' என்று அவன் சொன்ன விதம் கைதியின் உயிரை அப்போதே எடுத்து விடுமாறு இருக்க...

''உனக்கு வேற வழியே கிடையாது நீ சொல்றத தவிர, பின்னாடி உன் பேர் வெளில வராம பார்க்க முயற்சி பண்றேன், நான் உன்னோடதை வாக்குமூலமா ரெகார்ட் பண்ணலை. எழுத்து மூலமா வாங்கலை. என்னை தவிர யாருக்கும் தெரியாது. சொல்லு...'' என்று கூற,

வேறு வழியில்லாமல் இப்போது ரமணனின் சொல் கேட்பதை தவிர வேறு வழி கிடையாது என்று... கைதி அவனுடைய வேலையின் ஆதிமுதல் அந்தம் வரை அவனுக்கு தெரிந்த விவரங்களை கூற...

கேட்ட ரமணன் கிரகித்து கொண்டான். ''சரக்குன்னா எதெது?''

''கஞ்சாவும் அபினும் மட்டும் தான் சார். வேற எல் லாம் இன்னும் ரிஸ்க்கு, ஈசியா கிடைக்காது, விலையும்



அதிகம், தப்பா ஏதாவது பசங்க உபயோகிச்சா உயிரை எடுத்திடும்'' என்றான் அந்த நேரத்திலும் அந்தக் கைதி...

''போ!'' என்றவன், ''டேய் விஷயம் என் மூலமா போகாது. நீயே போய் எவன்ட்டாயாவது உளறி வெச்ச. நான் பொறுப்பில்லை. போடா'' என்றவன்,

மறுபடியும், ''இங்க வாடா'' என்றான், ''ஸ்கூல் பசங் களுக்கு சப்ளை பண்ணுவீங்களா'' என்று கோபமாக இரண்டு அறை கொடுத்து, ஒரு உதை விட, மூலையில் சென்று விழுந்தான். ரமணன் விட்ட அறையில் கைதி யின் உதடுகள் பிய்ந்து ரத்தம் கொட்ட ஆரம்பித்தது.

கான்ஸ்டபிளை அழைத்து... ''இவனை பொறுக்கிட்டு போய் விசாரணை ரூம்ல போட்டு வைங்க... சாப்பிட ஏதாவது குடுங்க... யாரும் கை வச்சிடாதீங்க... செத்துற போறான்!'', என்றவன் அவ்வளவு தான் தன் பேச்சு முடிந்தது என்பது போல், அவன் வைத்திருந்த பாக்கெட் டைரியில் கைதி சொன்ன விவரங்களை தனக்கு மட்டும் புரியுமாறு சிறிய ஹிண்டாக எழுதி, ''ஒரு டென் மினிட்ஸ் வெளியே போயிட்டு வரேன்'', என்றான், கைதியை தூக்க வந்த கான்ஸ்டபிள், 'இவன் எங்க சாப் பிடுவான். இன்னும் ஒரு வாரத்துக்கு வாயே தொறக்க முடியாது' என்று நினைத்தவனாக கைதியை தூக்கினான்.

அவனுடன் வந்த காவலர்களை தவிர்த்து, ஜீப் எடுக்க கிளம்பியவர்களை தடுத்து காலாற நடக்க ஆரம்பித்தான்.

எல்லாரும் ஸ்டேசனில் அவனை வித்தியாசமாக பார்த்தனர். எப்போதும் யாருடைய பார்வையையும் பொருட்படுத்தும் வழக்கம் ரமணனிடத்தில் கிடையாது. எந்த பார்வையில் யார் அவனை பார்க்க ஆரம்பித்தாலும் இறுதியில் அவனிடத்தில் ஒரு மரியாதையான ஆச்சர்ய மான பார்வையே நிலைக்கும்.

அவனுடைய வேலை பார்க்கும் ஸ்டைல் வித்தியாச மானது. யாராலும் அனுமானிக்க முடியாது. இந்த விசா ரணையெல்லாம் அவன் செய்ய வேண்டிய அவசிய மில்லை. தனக்கு கீழ் இருப்பவர்களை பணித்தாலே போதும். ஆனால் அப்படியெல்லாம் செய்யாமல் சிறு விஷயம் என்றாலும் அவனுடைய நேரடி பார்வையி லேயே இருக்கும்.

சென்றவன் நடுவில் இருந்த குறுக்கு சந்தில் புகுந்து அடுத்த வீதிக்கு வந்து, ஒரு சாதாரண டீக்கடையில் நின்று டீ சாப்பிட ஆரம்பித்தான். அவன் புதியவன் என்ப தால் யாருக்கும் அவனை தெரியவில்லை, அவன் யுனி பார்மிலும் இல்லை.

அங்கே இருந்த கடை பையனிடம் வாயடிக்க ஆரம் பித்து, அந்த ஏரியாவில் உள்ள நிலவரங்களை அறிந்து கொண்டான். கிளம்பும் போது அவனுக்கு தாராளமா சிறிது டிப்ஸ் கொடுத்து, அவனை பிரண்ட் ஆக்கிக்கொண்டான்.

''வரட்டா வேலு!'' என்று அவனிடம் விடைபெற்று கிளம்பும் போது கடை பையனுக்கு மிகவும் சந்தோஷ மாகி, ''சர்தான் சார், நெக்ஸ்ட் தபா நம்ம ஸ்ஸ்டாலுக்கே வா சார். வரும்போது ஸ்பெஷல் டீ இஞ்சி ஏலக்கா எல்லாம் போட்டு நாயராண்ட தர சொல்லறேன்'' என்று வாயில் இருக்கும் அத்தனை பற்களையும் காட்டி ரமண னுக்கு சலாம் வைத்தான்.

ரமணனுக்கு தெரியும் இது அவனுக்கு கிடைக்கும் மரியாதையில்லை. இன்னும் அவன் யார் என்பதும் இங்குள்ளவர்களுக்கு தெரியாது, இது அவன் பணத்திற்கு கொடுக்கும் மரியாதை என்று.

இது எல்லா இடத்திலும் எழுதப்படாத ஒரு விதியாகி விட்டது. ஏன் கோயிலில் கூட இதை கொடுத்தால் தான்



சுவாமியை அருகில் சென்று தரிசிக்க முடியும். தட்டில் பணம் போட்டால்தான் அர்ச்சகர் பிரசாதம் தருவார்.

முன்பெல்லாம் ஆண்களில் வீரம் என்பது அவன் உடல் பலத்தால் கணக்கிடப்பட்ட ஒன்று. அனால் இன் றைய காலத்தில் வீரம் என்பது ஒரு ஆண்மகன் சம் பாதிக்கும் சம்பாதணையை கொண்டே கணக்கிடுகிறார் கள். சொல்லப்போனால் காலம் மாற மாற வேட்டை யாடும் வீரமான ஆண்களை பெண்கள் விரும்ப ஆரம்பித்து... பின்னர் நல்ல வீரமான போராளிகளாகி... பின்பு நல்ல பதவியில் இருக்கும் கம்பீரமான ஆண்மக னாகி... பிறகு இன்று வீரம் என்பது அவனுடைய சம்பாத் தியம்... என்ற வகையில் நின்று விட்டது.

அதுவே நிறைய குற்றங்களின் அடிப்படை என்றாகி விட்டது. பணமில்லாதவன் தவறு செய்வதை விட அதை இருப்பவன் அதிகப்படுத்திக்கொள்ள செய்யும் தவறுகளின் விகிதம் அதிகமாகிவிட்டது.

இது காலத்தின் கட்டாயம் என்பது போல் தோற்ற மளிக்க ஆரம்பித்துவிட்டது, என்று அவன் எண்ண அலைகள், கரையை தொட்டு செல்லும் அலையின் வேகத்திற்கு இணையாக அடிக்க ஆரம்பித்தது.

இதுதான் அவனின் தலையாய பிரச்சினை. சிறிது தனிமை கிடைத்தாலும் ஏதாவது சமூக சிந்தனைகள் அவனை தின்னத் துவங்கிவிடும். வேறு சிந்தனைகள் அவனாக யோசிக்க முற்பட்டாலும் கூட அவனை அணுகு வதில்லை.

எண்ணங்களை கட்டுப்படுத்தும் விதமாக அவன் ஆபீஸ் வந்திருக்க, நுழையும் முன்னேயே அவனுக்கு தெரிந்து விட்டது, அவனை பார்க்க வந்திருக்கிறார்

என்று, அங்கே இருந்த கட்சி கொடியுடன் இருக்கும் கார்கள், அதுவுமில்லாமல் கமாண்டோ செக்கியூரிட்டி வந்திருப்பது யார் என்று அவனுக்கு தெளிவாக உணர்த் தியது.

## 6

### அன்றைய நினைவுகள்

வராவை கைபிடித்து அழைத்து சென்றவன், அவனுடைய அம்மாவின் அருகில் அமர வைத்தான்.

ராமநாதன் அதற்குள், ''பொண்ணுக்கு வாங்கிட்டு வந்தது எங்க வள்ளி, மாட்டி விடு'' என, ''என்னங்க அண்ணி இதெல்லாம்'', என ராஜேஸ்வரி கேட்டு கொண்டிருக்கும் போதே, ''மஹாலக்ஷ்மியை பார்க்க வரும்போது வெறும் கையோடையா வர முடியும்'', என்றவர், அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய தங்க கடிகாரத்தை அவளுடைய கைகளில் அணிவித்தார்.

இது ரமணனுடைய வேலை என்பது வராவினுடைய பெற்றோருக்கு புரிந்தது. அவள் தினமும் இஷ்டமாக வாட்ச்சை மாற்றி மாற்றி கட்டுவாள். இதை அவன் கவனித்து அவன் அம்மாவிடம் கூறியிருக்க வேண்டும். அதனால் தான் அவர் இந்த பரிசை வாங்கி வந்திருக் கிறார் என புரிந்தது.

அது வராவுக்குமே சந்தோஷத்தை கொடுக்க... தன் னிடம் பேச்சுக்கொடுத்த சுந்தரவல்லியிடம் அவள் பிரியமாக பேச ஆரம்பித்தாள். அவர் பொறுமையாக



அவள் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்ல, ராஜேஸ்வரி ரமணனுடைய வராவை சமாளிக்கும் திறமை யாரிடம் இருந்து வந்தது என்று புரிந்தது.

இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும் போதே ராம் பிர சாத் வரமஹாலக்ஷ்மியின் அண்ணன் வந்தான். ராம நாதன் வருவதால் அவனை சிவசங்கரன் வரச்சொல்லி இருந்தார். தன்னுடைய தந்தையின் உயரத்திற்கு பின் னால் நிற்கும் ஏணி ராமநாதன் என்று ராம் பிரசாத் நன்கு அறிவான்.

அவன் வந்து அவர்களை வணங்க, ''பாரு வள்ளி, பையன் என்னமா வளந்துட்டான். ஹீரோ கணக்கா இருக்கான்'' என்று சொல்லி ராமநாதன் தன்னுடைய சிரிப்பை அரங்கேற்ற... பயத்தில் மறுபடியும் வரா இப் போது பக்கத்தில் இருந்த சுந்தரவல்லியிடம் ஒண்டினாள்.

''நீங்க இங்க இருந்து போற வரைக்கும் சிரிக்கக்கூடாது, மகாலக்ஷ்மி பயப்படுது பாருங்க'' என்று செல்லமாக வைத்தார்.

''என்னை சாப்பிடாம கூட இருக்க சொல்லு வள்ளி இருக்கேன். ஆனா சிரிக்காம இருன்னு சொன்னா என் னால முடியுமா?'' என்று சொல்லி அதற்கும் பெருங்குர லெடுத்து சிரிக்க, ''அப்பா!'' என்ற ரமணனின் ஒரு அதட்டல் வேலை செய்ய சற்று அடங்கினார்.

அன்று தான் ராம் பிரசாத் சிறிது வளர்ந்த பிறகு ரம ணனை பார்க்கிறான். உயரமாக ஒல்லியாக தீர்க்கமான பார்வையோடு இருந்த அவனை ராம் பிரசாத்திற்குமே முதல் பார்வையிலேயே பிடித்துவிட்டது. அவன் அம்மா மூலமாக வேறு அனுதினமும் இந்த ஒரு வாரமாக அவன் புகழை வேறு கேட்கிறான் அல்லவா!

அன்றே அவனுடைய அட்மிஷன் வரா படிக்கும் பள்ளியிலேயே செய்தார்கள். அது மிகவும் புகழ் பெற்ற இருபாலரும் படிக்கும் பள்ளி என்பதால் அங்கேயே அட்மிஷன் செய்தார்கள். சென்ட்ரல் மினிஸ்டர் நேரே வந்து அட்மிஷன் கேட்டதால் உடனே கிடைத்தது.

நாட்கள் வேகமாக நகர்ந்தன என்று சொல்வதை விட ஓடின என்று தான் சொல்ல வேண்டும். போகும்போது இருவரும் சேர்ந்தே பள்ளிக்கு சென்றனர். ஆனால் வரும் போது இருவரும் வேறு வேறு நேரங்களில் வருவர். ரமணன் பெரிய வகுப்பு என்பதால் ஸ்பெஷல் கிளாஸ் இருக்கும். அது முடிந்து ஸ்போர்ட்ஸ் ப்ராக்டீஸ் முடிந்து தான் வருவான். கிட்டதட்ட எட்டு மணிக்கு தான் வருவான். வரும் போது கார் அனுப்ப ராஜேஸ்வரி கேட்டாலும், ''இல்லை அத்தை நான் பஸ்சில் வருகிறேன். அது எனக்கு பிடித்திருக்கிறது'' என்று மறுத்து விடுவான்.

ஏதாவது தேவை என்றால் தான் ராஜேஸ்வரியிடம் கேட்பான். ராம் ஊருக்கு வரும் நாட்களில் மட்டும் அவனுடைய குரல் சிறிது கேட்கும்.

ராம் அப்படியெல்லாம் அவனை ஒதுங்கி இருக்க விடமாட்டான். அவன் வராவிடம் பேசும் நேரங்களும் மிகக் குறைவே. காலையில் இருவரும் சேர்ந்து பள்ளிக்கு போகும் தருணங்களில் மட்டுமே பேச்சுக்கள் இருக்கும்.

அந்த வருடம் முடிந்து அடுத்த வருடம் ஆரம்பிக்க, வரா ஆறாவது வகுப்பிற்கும், இவன் பன்னிரெண்டாம் வகுப்பிற்கும் செல்ல, சற்று விவரம் தெரிய ஆரம்பித்து விட்டதால் வராவின் குழந்தைத்தனமான பேச்சுகளும் விளையாட்டுகளும் குறைந்தன. ஆனால் பிடிவாதம் எல்லோரையும் எடுத்தெறிந்து பேசும் குணம் இஷ்டம் போல் வளர்ந்திருந்தது.



தாயும் தந்தையும் அவளை கண்டித்தாலும் அது சிறிதும் பயனளிக்காது. நான் அப்படித்தான். எனக்கு அதுதான் வேண்டும் போன்றவைகள், அதிகமாக இருக்கும். ராம் பிரசாத்தும் படிப்பை முடித்து வர சென்னையிலேயே அவன் தந்தை ஒரு ஹை கோர்ட் லாயரிடம் ஜூனியராக சேர்த்து விட்டார். ராம் பிரசாத்தும் வராவிற்கு அதிக செல்லமே கொடுப்பான்.

அவள் வீட்டில் யாருக்காவது சிறிது பயப்படுகிறாள், சொல் பேச்சு கேட்கிறாள் என்றால் அது ரமணனுக்கு மட்டும் தான். அந்த பயம் அவளுக்கு அவனுடைய நடவடிக்கைகளை பார்த்து தானாக வந்தது. வீட்டில் அப்பாவும் அம்மாவும் அண்ணனும் அவனுக்கு கொடுக்கும் முக்கியத்துவம். ஸ்கூலில் அவனுக்கு இருக்கும் ஒரு முக்கியத்துவம், தானாக அவன் இருக்கும் இடத்தில் அவன் முக்கியமான ஆள் ஆகி விடுவான்.

ஒரு முறை ஸ்கூல் பக்கத்தில் ஏதோ ஒரு லோக்கல் பெஸ்ட்டிவல் ஸ்கூல் லீவும் விட முடியாத சூழ்நிலை. அந்த சமயத்தில சில பேர் குடித்து விட்டு வந்து அத்து மீறி உள்ளே நுழைந்து கலாட்டா செய்ய, ஸ்கூல் நிர்வாகம் போலீசிற்கு போன் செய்ய... அவர்கள் வருவதற்கு முன்னதாகவே இவர்கள் சத்தம் போட்டு கொண்டு ஆபீஸ் ரூமிற்குள் நுழைய முற்பட, அவர்கள் நிறைய போதையில் இருந்தார்கள்.

கேட்க கூச்சப்படும் வார்த்தைகளை பிரயோகித்து கொண்டிருந்தார்கள். கேட்கப்போன வாட்ச்மேன் மற்றும் ஆபீஸ் அசிஸ்டென்ட் மக்களை அவர்கள் காயமாகும் அளவுக்கு அடிக்க, எல்லாரும் பயந்து பின்வாங்க, என்ன சத்தம் என்று மாணவர்கள் எல்லாரும் கிளாஸ் வாயிலில்

நின்று பார்க்க, சில மாணவர்கள் வந்து பார்க்க, அதில் ரமணனும் இருக்க...

வந்தவன் நிமிடத்தில் அவன் கையில் என்ன இருந்தது என்றே தெரியவில்லை, குடிபோதையில் இருந்த ஆட்களை நிமிடத்தில் அடித்து துவைத்து விட்டான். அவர்களால் திரும்ப தாக்க முடியவில்லை. இவனை பார்த்து வேறு சில மாணவர்களும் வர சரியாக போலீசும் வந்து விட நிலைமை கட்டுக்குள் வந்தது. அன்றிலிருந்து ஸ்கூலில் எல்லோருக்கும் அவன் ஹீரோ. ஆனால் நம் வராவுக்கு... அவன் அடித்ததை வந்து வீட்டில் பெரிய கதையாக வரா சொல்ல, ராம் அவனிடம், "கையில் என்ன வைத்திருந்தே" என்று தனியாக கேட்க, "பென்சில் ஷார்ப் செய்யும் ப்ளேட்" என அவன் சொல்ல...

அன்று அவன் அடித்ததை பார்த்து பயந்தவள் தான் வரா, அன்றிலிருந்து அவனிடம் சிறிது தள்ளியே தான் நிற்பாள். வீட்டிலும் ஏதாவது செய்து விட்டால், "அம்மா!... வெங்கிகிட்ட சொல்லிடாதீங்க..." என்பாள்.

பேர் சொல்லி தான் அழைப்பாள். முன்பு கூப்பிட்டு பழகியது, அப்படியே நின்று விட்டது. அதனால் இவள் வீட்டில் ஏதாவது கலாட்டா செய்தால் கூட ரமணன் கிட்ட சொல்லிடுவேன் என்பது போல் தான் அவளை பயமுறுத்தி கட்டுக்குள் கொண்டு வர முடியும்.

வேகமாக அவனுடைய பன்னிரெண்டாம் வகுப்பு இறுதிதேர்வும் வந்துவிட, ராமநாதனும் சுந்தரவல்லியும் அவனை பரீட்சைக்கும் முன் பார்த்துவிட்டு போக வந்திருந்தனர். ராமநாதன் வருகிறார் என்றால் எந்த வேலையாக இருந்தாலும் தள்ளி வைத்துவிட்டு சிவசங்கரன் வந்து விடுவார்.



அது போல் அன்றும் வந்து பேசிக்கொண்டிருக்க, சிவசங்கரன், "என்ன தம்பி படிக்க விருப்பப்படறீங்க, எதுவாக இருந்தாலும் சொல்லுங்க. சீட்டு வாங்கிடலாம்" என்று சொல்லி கொண்டிருக்க,

ரமணன் அவன் அம்மாவை பார்த்தான். "என்ன அண்ணி நீங்க ஏதாவது சொல்லியிருக்கீங்களா" என்று சிவசங்கரன் கேட்க, அவர் "ஆமாம்பா அக்ரி படிக்க சொன்னேன். எங்களால பார்க்க முடியலை, நிறைய வீணாப்போகுது. மிளகு எஸ்டேட், ரப்பர் எஸ்டேட். எதையும் பார்க்க முடியலை, நானும் ஒத்த பொண்ணாப் போயிட்டேன். அவரும் அவர் வீட்ல ஒரே பையன். சொத்தை கவனிக்க முடியலை. அதுவுமில்லாம இவருக்கும் எனக்கும் வயசாயிடுச்சு, முதல்ல அக்ரி பண்ணி, பின்ன மேனேஜ்மெண்ட் கோர்ஸ் பண்ணினா சௌகர்யமா இருக்கும்னு பார்த்தேன்" என்றார்.

எல்லாரும் அதையே பேசிக்கொண்டிருக்க ரமணனும் தாயின் முடிவில் தான் இருந்தான். அவனுக்குமே தெரியும் அவர்களுடைய பண்ணையின் வருமானம் போல் எந்த தொழிலிலும் வராது என்று. அம்மா சொன்னது போல் இன்னும் மிளகையும் ரப்பர் தொழிலும் கால் பதித்தால் கொள்ள முடியாத வருமானம் பெருக்கலாம் என்று.

அதே யோசனையில் உழன்று கொண்டிருக்க, வரா அவள் அண்ணனிடம் ஏதோ சொல்லி கொண்டிருந்தாள். அதை பார்த்த ரமணனின் தந்தை, "நம்ம பொண்ணு என்னவோ சொல்லுது கேட்போம்" என,

"என்ன?" என்றதற்கு "ஒன்றுமில்லை" என்று அண்ணனும் தங்கையும் ஒரு சேர தலையாட்டினர். ராம் சொல்லாததின் காரணம் பெரியவர்கள் பேசும் போது

அதிகப்பிரசிங்கித்தனமாக நடுவில் நுழையக் கூடாது என்பதால். ஆனால் வரா சொல்லாமல் இருந்தது ரமண னுக்கு பயந்து.

அவளை பார்த்த ரமணன் இவள் தான் ஏதோ சொல்லி யிருக்கிறாள் என்பதை புரிந்து, ''என்ன?'' என்றான்.

அவள் ஒன்றுமில்லை என்று கூறி அண்ணன் பின் ஒண்ட முற்பட, ''எப்போவுமே யாராவது பின்னாடி ஒளிஞ்சிட்டே இருப்பியா! என்னன்னு சொல்லு!'' என்று ஒரு அதட்டல் போட, ''டேய் பொண்ண பயமுறுத்தா தடா'' என்று அவன் அப்பா கூற வராவை அருகில் அழைத்த சுந்தரவல்லி, ''நீ சொல்லு மகாலக்ஷ்மி!'' என,

''அது... அது வந்து...'' என இழுக்க, ''சொல்றியா! இல்லையா!'' என ரமணன் சொல்ல, அப்பாவிடம் ஓடி... ''வெங்கி போலீஸ் தான்பா ஆகமுடியும். எல்லாரையும் எப்போவும் மிரட்டிட்டே இருக்காங்க. என்னை கூட இப்போ மிரட்றாங்க'' என்று குற்றச் சாட்டு படிக்க,

கேட்ட எல்லாரும் சிரித்தனர். ஆனால் சுந்தவல்லி நிஜமாகவே சிந்தித்தார். ''மகாலக்ஷ்மி சொல்றது சரிதான். இவன் எப்போ யார் கிட்ட வம்ப வளர்ப்பானோன்னு பார்த்து கிட்டு இருக்கறதுக்கு பேசாம இவனை போலீஸ் ஆக்கிட லாம்'' என...

''நம்ம பொண்ணு சொல்றது தான் கரெக்ட்'', என ராமநாதனும் கூற ரமணன் வராவை முறைத்து பார்த் தான்.

எல்லாரும் உணவருந்திய பிறகு அவனுக்கு, ''பெஸ்ட் ஆப் லக்!'' கூறி விடை பெற, அவர்கள் சென்ற பிறகு வராவிடம் வந்தவன், ''உனக்கு ஏதாவது ஆகணும்னா,



நீ சொல்லு! அதை விட்டு நான் என்ன ஆகணும்னு நீ ஏன் சொல்லற!'' என்று அதட்டி கேட்க, அவள் அண்ண னிடம் அதை குற்ற பத்திரிகை வாசிக்க ஓடினாள்.

# 7

## இன்றைய நிகழ்வுகள்

உள்ளே நுழைந்தவன் அவன் நினைத்தது போல் வந்தவரை பார்த்தவன் ''வணக்கம் அய்யா'' என்றான்.

''வணக்கம் தம்பி'' என்றார் பதிலுக்கு சிவசங்கரன்.

பத்திரிகைகளில் நியூஸ் சேனல்களில் அடிக்கடி அவரை அவரின் புகைப்படங்களைப் பார்க்க நேர்ந்தாலும் அவரை நேரில் பார்த்து பல வருடமாகி விட்டது.

அவன் அவரை பார்த்த பின்பும் அவரை அளவெடுத்த படி இருந்தாலும் ஒன்றும் பேசாமல், பார்த்திருக்க...

அவரை சுற்றி நிறைய பேர் இருந்தனர். வெளியே எல்லாரும் நின்றிருக்க உள்ளே அவருடன் அவர் பி ஏ மற்றும் சிலரும் நின்றிருந்தனர்.

எல்லாரும் இருக்கிறார்கள் என்றுணர்ந்து அவரின் பதவியின் மரியாதையின் பொருட்டு பேசும் அவசியத்தை உணர்ந்தவனாக, ''எப்படி இருக்கீங்க ஐயா, பேப்பர்ல பார்த்தேன்! நாளைக்கு நீங்க வெளிநாடு போறதா'' என்றான்.

''ஆமாங்க தம்பி, நாளைக்கு கிளம்பறேன்! உங்களை போறதுக்கு முன்னாடி பார்த்துட்டு போலாம்னு வந் தேன்!''

அவனுக்கு தெரியும். இது அம்மாவின் ஏற்பாடாக இருக்கும் என்று, என்ன பேசுவது என்று தெரியாமல் ரமணன் நிற்க, ''வேலை முடிஞ்சதுங்களா, வீட்டுக்கு போகலாமா'' என்றார்.

அவர் தன்னுடைய எல்லா வேலைகளையும் விட்டு இங்கே அவசரமாக கிளம்பி வந்த வேலை அதுதானே!

''ஒரு பத்து நிமிஷம் இன்னும் வேலை இருக்கு! விசாரணைக் கைதி ஒருத்தனை இங்கே வச்சிருக்கோம். அவனை மறுபடியும் ஜெயிலில் அனுப்ப சொல்லிட்டு வந்துடறேன்'' என்றான்.

அவன் எஸ்.பி.யிடம் வேண்டிய தகவல்களை மட்டும் சொல்லி அவனை திரும்ப அனுப்ப சொல்லிவிட்டு வருவதற்குள்...

நிறைய ப்ரெஸ் மக்கள் குழுமியிருந்தனர். புது ஜாயிண்ட் கமிஷனர் பொறுப்பேற்க வந்திருக்கிறார், என்றவுடனேயே காலையிலேயே பத்திரிகையாளர்கள் ரமணனை பார்க்க விருப்பம் தெரிவிக்க...

ஆனால் கமிஷனர் அவராகவே கூப்பிடுவார் என்று சொன்னதால் அமைதியாக இருந்தனர். ஆனால் அவரை பார்க்க மனித வள மேம்பாட்டுத்துறை மத்திய அமைச்சர் வந்திருக்கிறார் என்ற செய்தி பரவ உடனே பத்திரிகை யாளர்கள் வர ஆரம்பித்தனர்.

சிவசங்கரனுக்கு யாரையும் பார்க்க விருப்பம் இல்லை. ''ரமணன் சென்னை வந்திருக்கிறான்! உங்கள் பேச்சை தட்ட மாட்டான். அவன் வேறு இடம் தங்க பார்க்கும் முன் அவனை வீட்டுக்கு கூட்டிச்சென்று விடுங்கள்'' என்று சுந்தரவல்லி சொல்லியதால்...



தன்னுடைய வேலைகள் அத்தனையும் ஒதுக்கி வைத்து அவர் வந்திருக்கிறார். இதில் பத்திரிகையாளர் சந்திப்பை அவர் விரும்பவில்லை.

அவர் என்ன செய்வது என்ற யோசனையில் இருக்க, வெங்கட ரமணன் வேலையை முடித்து வர... வெளியே வந்தால் நிறைய பத்திரிகையாளர்கள்.

''சார் உங்களை பார்க்க காத்திருக்காங்க. உங்களை ரெண்டொரு நாள்ல பார்க்கறேன்னு சொல்லியிருக்காங் கன்னா, அமைச்சர் எல்லாம் வந்திருக்காங்க என்ன விஷயம்னு தெரிஞ்சிக்க ஒரே ஆர்வம். கண்டிப்பா பார்க்கணும்றாங்க!'' என்று கூற...

ரமணன் சிவசங்கரனை பார்க்க... ''எனக்கு யாரையும் பார்க்க விருப்பமில்லை தம்பி'' என்றார். அவரின் நிலை உணர்ந்தவனாக, ''நீங்க இருங்க நான் பார்க்கிறேன்'' என்றவன்.

பத்திரிகையாளர்களை பார்த்தான், ''தயவு செய்து சீக்கிரம் முடித்து கொள்ளுங்கள். இன்று தான் வந்தேன்! அதனால் தான் உங்களை நாளை சந்திப்பதாக கூறி னேன்'' என்றான்.

அதில் ஒருவர், ''சார் வெல்கம் டு சென்னை. உங்களை பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம். உங்களின் கைகளில் எங்களின் சென்னை இன்னும் குற்றங்கள் குறைந்து இருக்க வாழ்த்துக்கள்'' என...

''நன்றி!'' என்றவன், ''எங்களின் சென்னைன்னு ஏன் சொல்றீங்க! நானும் தமிழ் நாட்டை சேர்ந்தவன் தான். சொந்தவூர் கம்பம், எனக்கு சென்னையும் ஒருவகையில் சொந்தம் தான்! நான் படிச்சது இங்கே தான்! என் மனைவியின் ஊரும் இதுதான்!'' என்றான்.

''சார் உங்களை பார்க்க மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் ஏன் வந்திருக்கிறார்'' என்று அடுத்த கேள்வி வர...

''என்னைப் பார்க்க என் மாமனார் வந்திருக்கிறார். ஃபார்சுனேட்லி அவர் அமைச்சராக போய்விட்டார்'' என...

அங்கே எல்லோருக்கும் புதிய செய்தி. ''என்ன? அவர் உங்க மாமனாரா!'' என்று ஆச்சர்யப்பட...

அங்கே கமிஷனர் ஆபீஸ் மக்களுக்குமே இது புதிய செய்தி. அடடா இவனும் ஸ்ட்ரிக்ட். இடமும் பெரிய இடம். இவனை எப்படி சமாளிக்கப்போறோம் என்று அங்கிருந்தவர்களின் யோசனை ஓடிக்கொண்டிருக்க...

இந்த வாக்கியத்தை கேட்ட அமைச்சரின் பி.ஏ அதனை அப்படியே அமைச்சரிடம் ஒப்புவிக்க, அமைச்சரில் இருந்து சிவசங்கரன் ஆன அவருடைய மனநிலை என்ன மாதிரி உணர்ந்தது என்று அவரால் விவரிக்க முடியாது. அவருக்கு அவனை பார்க்க வரும்போது இருந்த டென்ஷன் விலகி அவர் தன்னையே சிறிது ஆசுவாசப்படுத்தி கொண்டார்.

''இதில் ஆச்சர்யப்பட என்ன இருக்கு? நான் அதிகம் தமிழ் நாட்டுக்கு வேலையில் சேர்ந்த பிறகு வரவில்லை. எங்கள் திருமணத்தை கோயிலில் சிம்பிள் ஆக மிக நெருங்கிய உறவினர்கள் முன்னிலையில் மட்டும் நடந்தது.

''கல்யாணம் எல்லாரும் தான் பண்ணிக்கறாங்க, இது எல்லாம் பெரிய விஷயமா என்ன? நான் என் மாமனார் அமைச்சர் என்பதால் என் பணியின் காரணமாக தள்ளியே நிற்பேன். அதுவுமில்லாம எனக்கு கொடுக்கப்பட்ட அசைன்மென்ட் எல்லாம் மிகவும் ஆபத்தானது.



''நானே அதிகம் மீடியாக்களுடன் அதிக தொடர்பில் இருக்க மாட்டேன். அதனால் என்னுடைய பெர்சனல் வாழ்க்கை பற்றி நான் மீடியாக்களிடம் அதிகம் பேசியதில்லை. அதனால் என்னை பற்றி அதிகம் உங்களுக்கு தெரியவில்லை. என்னை என்பது என் மனைவியையும் சேர்த்து தான். அவள் யாருடைய மகளாக இருந்தாள் என்ன?''

''அவர் என்னை மாமனார் என்ற முறையில் மட்டுமே பார்க்க வந்திருக்கிறார். வேறு எந்த காரணமும் இல்லை. அதை விட்டு வேறு ஏதாவது கேட்க வேண்டும் என்றால் கேளுங்கள்!'' என்றான்.

''அப்போ அவர் தான் உங்க ட்ரான்ஸ்பர்க்கு காரணமா'' என்று ஒருவன் கேட்க...

கேட்டவனை சிறிது நேரம் அமைதியாக பார்த்தவன்,

''உண்மையா சொல்லணும்னா இந்த மாதிரி கேள்விகளை தவிர்ப்பதற்காகதான் நான் தமிழ் நாட்டுக்கு வரவேயில்லை! நான் மிக சில வருடங்களில் அடைந்திருக்கும் இந்த பதவி உயர்வுக்கு தேவையில்லாத என்னுடைய மாமனார் அமைச்சர் என்ற காரணத்திற்காக பல சங்கடங்களை நான் சந்திக்க வேண்டியிருக்கும்னு தான் வரவேயில்லை.

''உங்களுக்கு தெரியாததில்லை! என் மாமனார் அமைச்சர்ன்னு நாட்ல நான் இருக்கிற இடத்தில் குற்றம் நடக்காம இருக்குமா? இல்லை குற்றவாளிங்க தானா வந்து சரணடைஞ்சிடுவாங்களா?'' சிறிது இடைவெளி விட்டவன்,

''இவ்வளவு நாளா இல்லாம இப்போ ஏன் வந்தீங்கன்னு கேட்கலாம். இரண்டு காரணங்கள். ஒண்ணு முன்னமே

எனக்கு தமிழ்நாட்டுக்கு ட்ரான்ஸ்பர் வந்தப்போ வேண்டாம்னு மறுத்துட்டேன்.

''அதனால இப்போ ஒத்துக்கிட்டேன். ரெண்டாவது பாருங்க, என் மனைவி தமிழ் நாட்டை விட்டு வர மாட்டேங்கறா. எவ்வளவு நாள் நான் தனியா இருக்க முடியும் சொல்லுங்க! அதான் வந்துட்டேன்!'' என்று சிறு புன்னகையுடன் கூறி,

''ப்ளீஸ் தப்பா எடுத்துக்காதீங்க! நான் நாளைக்கு உங்களை பார்க்கிறேன்! உங்க ஒத்துழைப்பு இல்லைன்னா என்னால பெருசா ஒண்ணும் சாதிச்சிட முடியாது. சாத னைன்னு நான் சொல்லறது என்னோடது இல்லை.

''இங்கே சென்னையின் சேஃப்டி அண்ட் செக்யூரிட்டி. பத்திரிகையில இந்த தப்பு நடந்துடுச்சுன்னு நீங்க போடுற அதே சமயம் எனக்கும் தகவல் குடுங்க, உங்க பத்திரிகை வெளில வர்றதுக்கு முன்னாடி என்ன நடவடிக்கை எடுக் கணுமோ, நான் எடுத்திருப்பேன்.''

''திஸ் இஸ் அ ப்ராமிஸ் வாட் ஐ கிவ் யூ பீபோர் ஐ டேக் சார்ஜ்!. அவன் குரல் கம்பீரமாக ஒலித்தது. அது கேட்பவர் களை கட்டிப் போட்டது.

நான் தான் பெரியவன் என்று இல்லாமல் இருந்த பணிவான பேச்சு, அதே சமயம் குரலில் ஒலித்த திண்மை, கண்டிப்பு எல்லோருக்கும் அவனை நம்பலாம் என்ற உணர்வையே கொடுத்தது.

''அவர் நாளை சுற்றுப் பயணம் போகிறார். என்னை பார்த்துவிட்டு போக வந்திருக்கிறார். அதனால் நான் போனால் தான் அவர் சீக்கிரம் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வார். அதனால் பிறகு சந்திக்கலாம்'' என்று கூறி மேலே யாரும் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக் காமல் கிளம்ப...



அவனோடேயே சிவசங்கரனும் கிளம்பினார். அவ ரிடம் கேள்வி கேட்க பத்திரிகையாளர்கள் முனைய, ''நான் சீக்கிரம் கிளம்ப வேண்டும். உங்களுக்கு தேவை யான என்னுடைய பயண விவரங்களை என்னுடைய பி ஏ கூறுவார்'', என்று கூறி அவரும் எதுவும் கேட்க வாய்ப்பு கொடுக்காமல் விரைவாக கிளம்பினார்.

அதற்கு சற்று முன்னர் தான் அவரின் பி ஏ அவரிடம் ஒப்புவித்ததை அப்படியே தன்னுடைய மனைவியிடம் ஒப்புவித்தார். அதை அவரின் மனைவி ராஜேஸ்வரி அப்படியே ரமணனுடைய அம்மாவிடம் கூற, அவருமே பதட்டம் வடிந்தவராக போனை கையில் வைத்தது வைத்தபடியே சமைந்து நிற்க..

ராஜேஸ்வரி சுந்தரவல்லியிடம் போனில் பேசும்போது இந்த செய்தியை ராம் பிரசாத் கேட்டு அவன் முகம் புன் னகையை பூச, அவனுடைய எட்டு வயது மகனுக்கு பாடம் சொல்லிக்கொடுத்தபடியே இந்த செய்தியை கேட்டுக் கொண்டிருந்த அவன் மனைவி கல்பனா...

சட்டென்று திரும்பி ராம் பிரசாத்தின் மூன்று வயது மகளுக்கு சாதம் ஊட்டிக்கொண்டிருந்த வரமஹாலக்ஷ் மியை பார்க்க, எல்லோர் முகத்திலும் வடிந்த பதட்டம் வராவின் முகத்தில் வேகமாக ஏறிக்கொண்டிருந்தது.

# 8

## அன்றைய நிகழ்வுகள்

அண்ணனிடம் சென்று ரமணன் என்னை மிரட்டு கிறான் என்று அவள் கூறி கையோடு அவனை இழுத்துக்

கொண்டு வந்தாள். "விடு வரா, அப்புறம் கேட்கலாம்" என்று ராம் பிரசாத் சொல்லியும் விடாமல்...

"நீங்க வாங்க அந்த வெங்கி (மனதிற்குள் மங்கி என்றவள்) என்னை மிரட்றான்" என்றவள் ரமணன் முன் ராம் பிரசாத்தை கொண்டு நிறுத்தினாள்.

"என்ன ராமண்ணா, என்று ரமணன் கேட்க... "நீ இவளை மிரட்றியாம்" என்றான் சிறு புன்னகையோடு. "அடிக்காமல் விட்டேன்னு சந்தோஷப்பட சொல்லுங்க! அதிகப்பிரசங்கி! இவளை யார் அம்மா கிட்ட என்னை போலீஸ் ஆக்கணும்னு சொல்ல சொன்னா?" என்றான் கோபத்தோடு.

"நீ என்னை அடிப்பியா போடா!" என்று அவளின் அண்ணனின் பின் வேகமாக ஒளிந்தாள். உட்கார்ந் திருந்த ரமணன் எழுவது போல் பாவனை காட்ட அடித்து விடுவானோ என்ற பயத்தில் அவள் அம்மாவிடம் ஓடினாள்.

"ஹே ரமணன்! ஏன் இவ்வளவு கோபம்! டென்ஷன்! சின்ன பொண்ணு அவ."

"உங்களுக்கு தெரியாது ராமண்ணா, அம்மாக்கு எப் போவும் என்னை பத்தி டென்ஷன்! இங்கே என்னை அனுப்பி வெச்சதும் அவங்க தான். நான் ஏதாவது பிரச் சனையை இழுத்து விட்டுக்கறேன் என்று எப்போதும் பயத்துலயே இருப்பாங்க.

அட்வைஸ் பண்ணியே என்னை கொன்னுடுவாங்க! இவ விளையாட்டுத்தனமா சொன்னது அம்மாக்கு பெரிய ஐடியா மாதிரி ஆயிடுச்சு. இப்போவே இந்த எக்ஸாம் முடிஞ்சவுடனே, அதுக்குரிய என்ன ப்ரீப்ரேஷன் ஆரம்பிச் சிடு அப்படின்றாங்க."



"ஏன் உனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லையா!" என்றான் மென்மையாக,

"நான் அதை யோசிச்சதே இல்லை! அப்பாக்கு நான் கூட இருக்கணும்னு ரொம்ப ஆசை! இப்போவே அவ ருக்கு அரௌன்ட் சிக்ஸ்டி, அம்மாக்கு பிப்டி ஃபைவ்! எனக்கு அவங்களோட போகணும்! இருக்கணும்! அம்மா என்ன சொன்னாலும் கேட்க மாட்டேங்கறாங்க!"

"அது...?" என்று இழுத்த ராம், "நீ ஏதாவது அடிக்கடி கலாட்டா பண்ணிடற! அவங்க என்ன பண்ணுவாங்க. பாரு, ஸ்கூல்ல நீ ப்ளேடு போட்டுருக்க! இங்க நீ அப்பா வோட இருக்கறதால ப்ராப்ளம் இல்லை! இல்லைன்னா, அந்த ஆளுங்க உன்னை சும்மா விட்டிருக்க மாட்டாங்க!"

"என்ன பண்ணிடுவாங்க!" என்று ரமணன் எகிற...

"உன்னோட இந்த கோபம் தான் உங்க அம்மாக்கு பயம். அந்த ரௌடிங்க வந்தாலும் ரமணா, நீ சமாளிப் பேன்றது வேற விஷயம். ஆனா அதே வேலையா இருக்க முடியுமா? உன்னால யாருக்காவது அநியாயம் நடந்தா பார்த்துட்டு இருக்க முடியாது.

"அப்படியிருக்கறப்போ வரா சொல்றது ரொம்ப சரி! உங்க அம்மாவோட பயமும் நியாயமானது!" என... ரமணன் முகத்தில் யோசனையின் சாயல் படிந்தது.

"எனிவே... இன்னும் நிறைய நாள் இருக்கு. முதல்ல உன்னோட பப்ளிக் எக்ஸாம் நல்லா பண்ணு!" என்று தற்காலிகமாக அதற்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

வராவிடமும் சென்று, "பாரு பாப்பா! (அவனும் அவன் தந்தையை போல வராவை பாப்பா என்று தான்

அழைப்பான்) அவனுக்கு பப்ளிக் எக்ஸாம்! தயவு செஞ்சு அவனை டிஸ்டர்ப் பண்ணாத! அப்புறம் அண்ணா இல்லாதப்போ பாப்பாவை அடிச்சிடுவான்!'' என்றான்.

''நீங்க கேட்க மாட்டீங்களா அந்த மங்கிய'' என வரா சொல்ல,

''என்ன பாப்பா! இப்படி பேசறீங்க! இப்படியெல்லாம் பேசக்கூடாது!'' என்று ஒரு அதட்டல் போட, அவளுக்கு அழுகையில் உதடு பிதுங்கியது. பிறகு அவளை சமாதானம் செய்வதற்கே ராமிற்கு வெகு நேரமாகியது.

அவனிடம் சமாதானமாகிவிட்டாலும் அந்த கோபமெல்லாம் ரமணனிடம் திரும்பியது. அவனால்தான் அவளுடைய செல்ல அண்ணன் அவளை அதட்டுகிறான் என்று நினைக்க துவங்கினாள்.

அன்றே ரமணனின் அம்மாவிற்கு போன் செய்து, ''வள்ளிம்மா!'' என்று அழைத்தவள், ஸ்கூலில் அவன் ப்ளேடு வைத்து ரௌடிகளை அடித்ததை கூறிவிட்டாள்.

சுந்தரவல்லிக்கு இன்னும் ரமணனை பற்றிய கவலை அதிகமாகிவிட்டது என்றே சொல்ல வேண்டும். பொதுவாக ரமணனின் செயல்கள் இந்த மாதிரி சில பிரச்சனைகளை உள்ளடக்கி இருக்கும் போது ராமநாதனின் காதுகளுக்கு சுந்தரவல்லி கொண்டு செல்ல மாட்டார்.

சுந்தரவல்லியின் மறு பிறப்பு ரமணன் என்று சொல்லலாம். மிகவும் தைரியமான பெண்மணி. அவராலேயே அவர் கண்முன்னால் நடக்கும் அநியாயங்களை பார்க்க முடியாது. அவனின் நிறைய குணங்கள் அன்னையை கொண்டே இருக்கும்.

அவருக்கு நிறைய நாட்கள் தவமிருந்து கிடைத்த பொக்கிஷம் ''வெங்கட ரமணன், கிட்டதட்ட பதினேழு



ஆண்டுகள் கழித்து, நிறைய சிகிச்சைகளுக்கு பின் சுந்தரவல்லி பெற்றெடுத்த மகவு ரமணன்.

அவனை பெற்றெடுப்பதற்குள் குழந்தையின்மைக்காக அவரும் அவர் கணவரும் மற்றவர்களிடத்தில் வாங்கிய வார்த்தைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

முன்னால் நன்றாக பேசுவர், ''இந்த கோவிலுக்கு போங்கள். அந்த டாக்டரிடம் போங்கள்'' என்பர். பின்னால், ''என்ன பாவம் செஞ்சாங்களோ! இத்தனை சொத்து பத்து இருந்தும் ஆண்டு அனுபவிக்கறதுக்கு குழந்தைங்க இல்லை'' என்று பரிகசிப்பர்.

அதுவும் ஒரு கல்யாணம் காட்சி என்று சென்று வந்துவிட்டால், அன்றைக்கு அவருக்கு ஊண் உறக்கம் எதுவும் இருக்காது. முயன்று அதை அந்த வலியை ஒரே நாளில் தாண்டி விடுவார். எதற்கும் கலங்காத பெண்மணி சுந்தரவல்லி.

இப்படி எல்லாச் செல்வங்கள் இருந்தும் பிள்ளை செல்வம் இல்லாததால் மிகவும் கலங்கியிருந்த ராமநாதனை தன்னுடைய கலக்கங்கள் தெரியாமல் மறைத்து அவரை மற்றவர்களுக்கு உதவும் படியான மனப்பான்மையை வளர்த்து பார்த்துக்கொண்டவர் சுந்தரவல்லி. இந்த சூழலில் அவர்களுடைய நெடுநாளைய வரமாய் கிடைக்க பெற்று வந்தவன் வெங்கட ரமணன்.

அதற்காக சுந்தரவல்லி அவனுக்கு அதிக செல்லமெல்லாம் கொடுத்தாரில்லை. கண்டிப்போடு தான் வளர்த்தார். இல்லை என்றால் அவனை கட்டுப் படுத்துவது சுலபமல்ல. அதற்கு நேர் எதிர் அவனுடைய தந்தை.

நிறைய ஏக்கங்களுக்கு பிறகு பிறந்தவன், அதனால் ராமநாதனுக்கு ரமணன் மேல் நிறைய பாசம். அவனுக்கு

ஏதாவது ஒன்றென்றால் இவர் துடித்து விடுவார். அவனின் செய்கைகளை பார்த்து அவர் பயப்படுவது பிடிக்காமல் தான் ரமணனை சிவசங்கரனிடத்தில் சுந்தரவல்லி அனுப்பி வைத்தார்.

அவனுடைய ப்ளேடு உபயோகித்த செயல் அவருக்கு எத்தனை பதட்டத்தை கொடுத்தது என்று வார்த்தையால் விவரிக்க முடியாது. அந்த செயல் ஸ்கூலில் ஹீரோவாக காட்டி இருக்கலாம்.

ஆனால் அவனுடைய அன்னைக்கு?... எதிராளிக்கு எதுவும் ஆகாத வரையில் பயமில்லை. ஏதாவது ஆகிவிட்டால் அவனுடைய எதிர்காலம் ஒரே நாளில் உருக்குலைந்துவிடும்.

இன்றைய வராவின் கூற்றை கேட்ட பிறகு நிச்சயம் அவனை போலீஸ் துறைக்கு அனுப்புவது தான் சிறந்தது என்று முடிவெடுத்தார்.

''மகாலக்ஷ்மி நான் பார்த்துக்கறேன்! இப்போ அவன் படிக்கட்டும்! பரீட்சை முடிஞ்சதும் நான் ஊருக்கு வரும் போது பார்த்துக்கறேன்!'' என்று அவளிடம் உறுதியளித்து விட்டு அவருடைய பதட்டத்தை தணிக்க கடவுளிடம் சரணடைந்தார்.

இது எதுவும் அறியாத ரமணன் தன்னுடைய படிப்பை மட்டும் பார்க்க, அவனை சிறிதும் யாரும் தொல்லை செய்ய ராம் பிரசாத் விடவில்லை. அவனுடைய பரீட்சை முடியும் வரை தன்னுடைய வேலைகளை ஒதுக்கி விட்டு அவனுடனே நேரத்தை செலவழித்தான்.

அவனுடைய பரீட்சை முடிந்த அடுத்த நாளே சுந்தரவல்லியும் ராமநாதனும் பார்க்க வர, தனியாக அவனை யாரும் அறியாமல் கூட்டிச்சென்று சுந்தரவல்லி



அவனை ஒரு வழி செய்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும். ரமணன் அவனுடைய அன்னையிடம் அவன் பிறந்ததில் இருந்து அவ்வளவு திட்டு வாங்கிருக்க மாட்டான்.

இது யாருக்கும் தெரியாவிட்டாலும் வராவிற்கு தெரிய... அவளுடைய மலர்ந்த முகத்தை பார்த்ததுமே ரமணனுக்கு புரிந்து விட்டது இது அவளுடைய வேலை தான் என்று.

மற்றவர்கள் முன்னிலையில் சுந்தரவல்லி மகனின் தவறுகள் எதையும் காட்டி கொள்ளவில்லை, ஆனாலும் ரமணனின் முகம் தெளியவில்லை.

''இப்போ இருந்தே என்ட்ரன்ஸ் எக்ஸாம் கோச்சிங் கிளாஸும், மற்ற நேரத்தில் யு.பி.எஸ்.சி கோச்சிங்கும் போ! உனக்கு புரியுதோ புரியலையோ போ!'' என்றார். ''அம்மா நான் ஊருக்கு வர்றேன்!'' என்றவனிடம் கூட, ''ரிசல்ட் வரட்டும் அப்புறம் பார்க்கலாம்!'' என்று கூறி விட்டார்.

ரமணனுக்கு வந்த கோபம் அளவிட முடியாதது. அவன் திட்டு வாங்கியது! அவனை அம்மா ஊருக்கு வர வேண்டாம்! என்று சொன்னது எதுவுமே அவனுக்கு பொருட்டில்லை.

ஆனால் அவனுடைய செயல், அவனுடைய அம்மாவிற்கு விளைவித்த வருத்தம், எல்லாம் அவன் வாங்கிய திட்டிலேயே அவனுக்கு தெரிந்தது. திட்டி முடித்து அவர் அழுத அழுகை அவனை அசைத்து பார்த்தது.

இதற்கு எல்லாம் காரணமாயிருந்த வராவின் மேல் காரணமில்லாமல் கோபம் வந்தது. அம்மா சென்ற பிறகு அவளிடம் வந்தவன்...

''என்னை பத்தி எங்கம்மாகிட்ட பேசறதை இதோட விட்டுடு. இனிமே நீ என்னை பற்றி ஒரு வார்த்தை கூட

பேசக்கூடாது, மீறி பேசினே...'' என்று அவள் சிறுபெண் என்பதையும் மறந்து அவன் பார்த்த பார்வை, வராவை காய்ச்சலில் தள்ளியது.

# 9

## இன்றைய நிகழ்வுகள்

காரில் ஏறியதில் இருந்து வீடு வந்து சேரும் வரை எதுவுமே ரமணன் பேசவில்லை. சிவசங்கரனாக அவருடைய பயண கால விவரங்களை சொன்னவர், ''நம்ம வீட்லேயே தங்கிக்கலாம் தம்பி. கவர்மென்ட் அல்லாட் பண்ணினா கூட இங்கேயே இருங்க'' என்றார்.

எதுவுமே அதற்கு அவன் பதிலளிக்கவில்லை. அமைதியாகவே வந்தான்.

வீடு வந்து இறங்கும் முன்னர், டிரைவரையும் அவருடைய பி.ஏ வையும் ஒரு நிமிடம் வெளியே இருக்க சொன்னவன்,

''நீங்க கவலைப்படாம உங்க வேலையை பாருங்க, அவளை பார்க்க கடமைப்பட்டவன் நான் தான். இங்க இருக்க முடிஞ்சா இருக்கேன், இல்லை தனியா இருந்தா பரவாயில்லைன்னு தோணினா தனியா இருக்கேன். எதுவா இருந்தாலும் இனிமே அவளை விட்டுட்டு இருக்க மாட்டேன்! சரிதானே'' என்றான்.

ஒன்றும் பதில் பேசாமல் வெங்கட ரமணனின் கைகளை எடுத்து தன்னுடைய கைகளுக்குள் வைத்து கொண்டவர், ''இந்த ஜென்மத்துல உங்க அப்பாக்கும் உங்களுக்கும்



நான் பட்ட கடமை கொஞ்ச நஞ்சமல்ல! எத்தனை ஜென்மம் நான் எடுத்தாலும் அது தீராது!''

''என்னை வாழ்க்கையில வளர்த்து விட்டவர் உங்க அப்பா, அது நிலை குலையாம காப்பாத்தி விட்டது நீங்க! ஒரு பொண்ணுக்கு அப்பாங்கற முறையில்...'' மேலே, மேலே, அவர் பேசப்போக...

''ஐயா! இவ்வளவு உணர்ச்சி வசப்படாதீங்க! எனக்கு உங்க பொண்ணு தான் வாழ்க்கை! அது என்னைக்கும் மாறாது! இப்படி உணர்ச்சி வசப்பட்டு பேசாதீங்க! சகஜமா இருங்க! அப்போ தான் எல்லாரும் என்னோட சகஜமா இருப்பாங்க, முக்கியமா உங்க பொண்ணு!'' என்றான்.

அதற்குள் 'என்னடா கார், நின்று இவ்வளவு நேரமாகி விட்டதே இன்னுமே யாரையும் காணோமே!' என்று ராஜேஸ்வரியும் ராம் பிரசாத்தும் வெளியே வர... ''நீங்க வாங்க ஐயா! எல்லோரையும் பதட்டப்படுத்தாதீங்க!'' என்றவாறே அவரை அழைத்து ரமணன் இறங்கினான்.

''வாங்க தம்பி!'' என்று ராஜேஸ்வரி அழைத்து, அவனுடைய பொருட்கள் எடுக்க தேட, ''ஒரு பேக் மட்டும் தான் அத்தை!'' மற்ற பொருட்கள் நாளைக்கு தான் வரும்!'' என்றவன்,

ராமை பார்க்க, இருவருமே ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை, சிறு புன்னகை மட்டுமே, ராம் அவன் அருகில் வந்தவன், ''உடனே வர்றேன்னு சொல்லிட்டு ரொம்ப நாள் பண்ணிட்டியேடா, ஐ மிஸ்ட்யு எ லாட்'' என்றான்.

''மீ டூ அண்ணா!'' என்றவன், ராமை மென்மையாக அணைத்து விடுவிக்க அதை லானில் இருந்து பார்த்து கொண்டிருந்த கல்பனா...

''ஐய்யோ! அறிவிருக்கா இவனுங்களுக்கு, எத்தனை வருஷம் கழிச்சு வீட்டுக்கு வர்றான், பொண்டாட்டிய கொஞ்சாம இவனுங்க கொஞ்சிட்டு இருக்காங்க.''

ராமை மனதிற்குள் திட்டியவள்!

'நம்ம மனுஷனுக்கு தான் விவரம் பத்தாதுன்னா, இவன் அதுக்கு மேல இருக்கான்! என்னமா ஆக்ட் குடுக்கறான் பாரு! பொண்டாட்டிய விட்டுட்டு போயிட்டு, ஒரு போன் கூட பண்ணாம, ஏன் பண்ணாம என்ன? அதை எடுத்து பேச கூட செய்யாம! ஒண்ணுமே நடக்காத மாதிரி கொஞ்சறாங்கப்பா' என்று ரமணனையும் திட்டினாள் மனதிற்குள்.

ரமணன் திரும்பி கல்பனாவை பார்த்தவன், ராமை பார்த்து, ''உங்க பாஸ் நிக்கறா! இன்னும் கொஞ்சம் லேட் பண்ணினோம் மனசுக்குள்ள திட்டிட்டு இருக்கறவ வெளிலயே திட்ட ஆரம்பிச்சுடுவா, வாங்க!'' என்றான்.

அவர்கள் அருகில் வந்தவுடன், ''வாங்க மாப்பிள்ளை சார்!, என்று கரம் குவித்து வரவேற்க, அது ராஜேஸ்வரியும் சிவசங்கரனும் இருப்பதால் தான் என்று ராமிற்கும் ரமணனுக்கும் புரிய இவனும் பதிலுக்கு, ''வணக்கம் அண்ணி!'' என்றான்.

''என்னை அடையாளம் கூட தெரியுதா!'' என்றாள் மெதுவாக, அவர்களுக்கு மட்டும் கேட்கும்படியாக...

ரமணன் அவளை பார்க்க... ''இதுவரைக்கும் நான் உனக்கு ஒரு நாளைக்கு நாலு... அப்போ இவ்வளவு வருசமா...'' என்று ஏதோ கணக்கு போட.

''என்ன?'' என்று ராம் அதட்ட,

''இதுவரைக்கும் மொத்தமா இத்தனை வருசத்துல ஒரு ஏழாயிரம் போனாவது பண்ணி இருப்பேன்! ஒண்ணாவது



நீ அட்டெண்ட் பண்ணினியா! இப்போ என்னவோ வந்து கட்டிப் பிடிச்சு கொஞ்சிக்கறீங்க!'' என்றாள் காட்டமாக. (மனதிற்குள் கெட்ட வார்த்தையில் வைதாள்).

அவளுடைய வாயில் வரும் வார்த்தைகளின் தன்மையை அறிந்த ரமணன். ''அது தான், இங்கே தானே இருக்க போறேன்! பொறுமையா திட்டுவியாம்! வா...'' என்றபடி சாவகாசமாக உள்ளே நடந்தான்.

''பெரிய சர்வாதிகாரி இவன்!'' என்று முணுமுணுத்தவாறு அவனை பின் தொடர்ந்தாள் கல்பனா.

உள்ளே நுழைந்தவுடன் அங்கே வரமஹாலக்ஷ்மி இல்லாததை பார்த்த சிவசங்கரன், ''பாப்பா எங்கே? வாசலுக்கு வந்திருக்க வேண்டாமா?'' என்றார் ராஜேஸ்வரியை பார்த்து...

அவர் கேட்ட விதமே இங்கே இல்லாது அவள் எங்கே போனாள். நீ ஏன் அவளை போக விட்டாய் என்ற குற்றச்சாட்டு இருந்தது.

''அது...'' என்று ராஜேஸ்வரி இழுக்க, ''குழந்தைய தூங்க வெக்கறா!'' என்று ராம் சொல்ல...

''ரொம்ப முக்கியமா! ஒருநாள் லேட்டா தூங்கினா என்ன?'' என்று அவர் கடிந்து கொள்ள...

''நான் பார்த்துக்கறேன்னு சொன்னேன் தானே ஐயா, நீங்க இப்படி பதட்டப்படாதீங்க!'' என்று ரமணன் கூறிய பிறகே, அவர் கடிந்து கொள்வதை விட...

''அத்தை! நீங்க அவருக்கு என்ன வேணுமோ பாருங்க! அவருக்கு நைட் டெல்லி போகணும்! நாளைக்கு மறுபடியும் வெளிநாடு போகணும்! அவரை பாருங்க!'' என்று அந்த இடத்தை விட்டு அவர்களை கிளப்பினான்.

ராம் கல்பனாவிடம், ''குட்டி தூங்கிட்டாளான்னு பாரு! இல்லைன்னா அவளை தூக்கிட்டே வராவை வர சொல்லு!'' என்றான்.

''எங்கயிருக்கா?'' என்று ரமணன் கேட்க... ''அவ ரூமில் தான், அது குட்டி அவளோட தூங்கி பழகிட்டாளா, தூக்கத்திற்கு ஒரே அழுகை. ரொம்ப நேரம் சமாளிச்சோம் முடியலை. இப்போ தான் தூங்க வைக்கிறேன்னு போனா!'' என்று தயங்கி தயங்கி ராம் கூற,

''ஏன் இவ்வளவு நாள் பார்க்காம இருந்தாங்கள்ள! இப்போ ஒரு பத்து நிமிஷத்துல என்ன குறைஞ்சா போய்டு வாங்க! நீங்க எதுக்கு சமாதானம் சொல்றிங்க! அவங்க குழந்தையை தூங்க வெக்கற வயசுல, அண்ணன் குழந்தையை தூங்க வெக்கறா! அதுக்கு நீங்க பில்ட் அப்பு!'' என்று ராமிற்கு பரிந்து வர...

''ஆத்தா!... இப்பத்திக்கு நான் இங்க தான் இருக்க போறேன்! நீ என்னை டைம் ஷெட்யுல் போட்டு வைவியாம்! மலை இறங்கு, இல்லையா உன்கிட்ட திட்டு வாங்கறதுக்கு தான் இவர் லைசென்ஸ் வாங்கியிருக்காருள்ள இவரை கவனி!'' என்று ராமை பார்த்து சிரிக்காமல் சீரியசாக கூற,

ராம் வெகு நாட்களுக்கு பிறகு மனம் விட்டு சிரிக்க... அதையே ரசனையோடு கல்பனா பார்த்திருக்க... இவன் மேலே ரூமிற்கு சென்றான்.

# 10

## அன்றைய நிகழ்வுகள்

ரமணனின் ஒரு பார்வை, வராவை படுத்தி எடுத்து விட்டது. காய்ச்சலில் விழுந்தவள், ஒரு வாரம் ஹாஸ்



பிடல் வாசத்தை அனுபவித்த பிறகே வீட்டிற்கு வர முடிந்தது.

அது ரமணனால் தான் என்று யாருக்கும் தெரிய வில்லை. பரீட்சை முடிந்ததில் இருந்து ரமணன் ஸ்பெஷல் க்ளாசஸ் போகும் சமயம் தவிர மற்ற நேரங்களில் ராம் பிரசாத்தோடு தான் இருப்பான். ராமிற்கே வராவின் காய்ச்சலின் காரணம் ரமணன் என்று தெரியவில்லை.

ஆனால் அதை ரமணன் உணர்ந்தான். அதனால் வராவை அதன் பிறகு அவன் எந்த தொந்தரவும் செய்ய வில்லை. அதே சமயம் முன்பு போல் பேசவும் இல்லை. வராவுமே சிறுமி அல்லவா! இவனால் தான் காய்ச்சலில் விழுந்தாள் என்பதை எப்பொழுதும் போல் மறந்து போனாள்.

ரமணனிடம் பயம் இருந்தாலும் ஒரே வீட்டில் இருக்கும் பொழுது பேசாமல் இருக்க முடியாது. அதனால் அவ ளாக பேசும் சந்தர்ப்பங்கள் வரும் பொழுது இவனிடம் பேசினாலும் சரியாக இவன் பதிலளிக்க மாட்டான். அதனால் அதிகம் அதன்பிறகு வராவும் அவனிடம் பேசவில்லை.

சின்ன விஷயம், ரமணன் செய்ததை அவன் அம்மா விடம் சொல்லிவிட்டாள். அதுமட்டுமில்லாமல் இப் பொழுது அம்மா கோச்சிங் அது இது என்று தன்னை வருத்தி எடுக்கவும் வராதான் காரணம் என்று அவளிடம பேசுவதை அவன் தவிர்த்து விடுவான். அவன் வீட்டில் இருக்கும் நேரம் மிக குறைவு என்பதால் யாருக்கும் தெரியவில்லை.

சிவசங்கரன் ராமநாதனுக்கு என்ன மரியாதை கொடுப் பாரோ, அவ்வளவு மரியாதை ரமணனுக்கும் கொடுப்

பார். அவருக்குமே பயம். நம்மை நம்பி பையனை அனுப்பி வைத்திருக்கிறார்கள், ஜாக்ரதையாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்று.

அவன் வீடே தங்குவதில்லை. கோச்சிங் அது இது என்று முழு நேரமும் வெளியே சுற்றுகிறான் என அறிந்து அவராக ஒரு நாள் ரமணனிடம்,

''எங்கே தம்பி ஆளையே பார்க்க முடியலை, ரொம்ப ஸ்ட்ரைன் பண்ணாதீங்க'' என்க... ''ராமண்ணா கிட்ட கேளுங்க மாமா! என் ஷெட்யுல் அவங்களுக்கு தெரியும்'' என்று விடுவான்.

ராமை பார்த்தால், ''எனக்கு அவன் எங்க போறான்? என்ன பண்றான்னு தெரியும்பா! ஃப்ரீ டைம் என்னோட தான் இருப்பான்'' என்றான். அதனால் கவலை அகன்றவராக அவர் சென்றார்.

பரீட்சையின் முடிவுகள் வர நல்ல மதிப்பெண் எடுத்திருந்தான். என்ட்ரன்ஸ் எக்ஸாம்மிலும் நல்ல மதிப்பெண்கள். மெடிசின் ப்ரீ சீட் கிடைக்கும் அளவுக்கு கட்டாஃப் இருந்தது. அவன் அது எதையும் செலக்ட் செய்யவில்லை.

அவன் அம்மா அவனிடம், ''நீ என்ன வேண்டுமானாலும் படி! உன் விருப்பம், ஆனால் கட்டாயம் ஐ பி எஸ் ட்ரை செய்ய வேண்டும், எந்த டிகிரி என்றாலும் உன் விருப்பம். ஆனால் கல்லூரி மட்டும் சென்னையில் தான்'' என்று விட...

சட்டம் படித்தவர்கள் மத்தியில் இருந்ததாலோ என்னவோ? சட்டத்தை தேர்வு செய்து சென்னை சட்டக் கல்லூரிக்குள் நுழைந்தான்.



கல்லூரி திறப்பதற்கு இன்னும் நாள் இருந்ததால், அவனுடைய அன்னையும் தந்தையும் அவனை வற்புறுத்தி அவனை ஊருக்கு அழைத்துச் சென்றனர்.

ஒரு முறை அம்மாவிடம் கேட்டு அவர் பரீட்சை முடியட்டும் பிறகு பார்க்கலாம், என்று சொன்ன பிறகு அவனாக ஊருக்கு வருகிறேன் என்று கேட்கவேயில்லை. மிகுந்த ரோஷக்காரன்.

ஒருவாறாக அவனை நிறைய சமாதானம் செய்து அவன் அம்மா அவனை ஊருக்கு கிளப்பினார்.

ஊரில் அவனுடைய பழைய நண்பர்களை பார்த்து உற்சாகம் மேலிட இருந்த ஒரு மாதமும் அங்கேயும் ஊர் சுற்றல், தந்தையிடம் ஒரே கொஞ்சல்.

ராமநாதனையும் வெங்கட ரமணனையும் ஒரு மாதம் சமாளித்து மறுபடியும் அவனை சென்னை கிளப்புவதற்குள் அவன் அன்னைக்கு போதும் போதும் என்றாகி விட்டது.

அந்த உற்சாகத்தோடு வந்ததினாலோ என்னவோ அவனாகவே சென்று வராவிடம் பேசினான்.

அவள் டி.வி. பார்த்துக்கொண்டிருந்த போது வேண்டுமென்றே அருகில் அமர்ந்து, ''பாப்பா என்ன பண்ணுது!'' என்றான்.

வராவிற்கு கோபம் வந்தாலும், ரமணனிடம் அதை காட்டுவதற்கு அவளுக்கு பயம்.

''நான் உனக்கு பாப்பா இல்லை! அப்பாக்கும் அண்ணாக்கும் தான் பாப்பா! இனிமே அப்படி கூப்பிடாதீங்க.'' அவள் முகம் கோபத்தில் சிவப்பது அவனுக்கு பார்ப்பதற்கு அழகாக தோன்றியது!

அவளின் பதிலை கேட்டவன், உதடு பிதுக்கி, ''ம்!!! நான் கூட நீ... பெரிய பொண்ணா வளர்ந்துட்டேன்னு பாப்பான்னு கூப்பிட வேண்டாம்னு சொல்றன்னு நினைச்சேன்! அது இல்லையா! நீ இன்னும் பாப்பா தானா! நான் மட்டும் தான் கூப்பிடக்கூடாதா!'' என்று ஒன்று தெரியாதவன் போல் அவளை கடுப்படிக்க, அவளுக்கு அவனை எதிர்த்து பேச பயம்.

அவளுக்கு தெரியும் தனியாக மாட்டினால்தான் அவன் சீண்டுவான் என்று. ஒன்றும் பேசாமல் அந்த இடத்தை விட்டு அகன்று அவனை திட்டுவதற்காக அவன் அண்ணனை தேடிப் போக அவனை காணவில்லை.

கோபத்தை அடக்கி கொண்டு அவள் அண்ணன் வருவதற்காக காத்திருந்தவள், ராம் பிரசாத் வந்ததும் அவனிடம் பொறியத் தொடங்கினாள்.

''அண்ணா! அந்த வெங்கி இல்லையில்லை மங்கி!'' என்று கூறி சற்று நிறுத்தியவள், ராம் தன்னை திட்டுவான் என்றுணர்ந்து...

''இல்லையில்லை! மகாகனம் பொருந்திய... ஸ்ரீமான் வெங்கட ரமணன் அவர்கள்!'' என்று அவள் அபிநயம் பிடித்து ஆரம்பித்த போதே, அவள் பின்னால் ரமணன் வந்து நின்று கொண்டான்.

அதனை அவள் அறியவில்லை. அவள் கூறிய விதம் ராமிற்கும், ரமணனுக்கும் புன்னகையை வரவழைத்தது. தான் இங்கே நிற்பதை அவளுக்கு உணர்த்தவேண்டாம், என்று சைகையால் ராமிற்கு ரமணன் உணர்த்த, ராம் புன்னகையை அடக்கி அமைதியாகவே நின்றான்.

''அது என்ன பாப்பா? மகாகனம் பொருந்திய ஸ்ரீமான் வெங்கட ரமணன்'' என்றான் ராம்.



''அதுவா உங்களுக்கு நான் அவனை மங்கினு சொன்னா கோபம் வரும்! அதனால தான் இது. மகாகனம் எதுக்குன்னா அவனுக்கு தலைகனம் ஜாஸ்தி!'' என்றாள் கோபமாக.

''சரி என்ன இப்போ அதுக்கு?''

''அண்ணா அவன் கிட்ட சொல்லி வைங்க! அவன் என்னை வம்புக்கு இழுக்கறான்! எனக்கு கோபம் வந்தது...'' என்று அவள் இழுக்க...

''வந்தது...'' என்று பின்பாட்டு பாடினான் ரமணன்.

அதை உணராதவளாக, ''என்ன செய்வேன்னு...'' என்று மிரட்டுவது போல் நிறுத்த,

''அவளுக்கே தெரியாது!!!'' என்று மறுபடியும் பின்பாட்டு பாடினான் ரமணன்.

இதையெல்லாம் ஒரு புன்னகையோடு பார்த்த ராம், ''பாப்பா! நீ இதை ஏன் அவன் கிட்டயே சொல்லக் கூடாது'' என்று கேட்க...

''வேண்டாம்! நீயே அவன் கிட்ட சொல்லிடு!'' என்க,

''கொஞ்சம் திரும்பி நீயே சொல்லிடு பாப்பா! அவன் உன் பின்னாடி தான் நிக்கறான்!'' என்று ராம் சொல்ல...

''அம்மாடி!!!'' என்று சத்தம் எழுப்பியவள், ''நீ போடா!!!'' என்று அவளுடைய அண்ணனை ஒரு அடி வைத்து விட்டு அவள் ஓடினாள்.

''பாப்பா ஓடாத நில்லு! அண்ணன் இருக்கேன்! அவனை ஒரு கை பார்க்கலாம்!'' என்று ராம் கத்த கத்த ஓடியே போனாள்.

பார்த்த ரமணன் பெருங் குரலெடுத்து சிரிக்க, ''ரமணா! ஏற்கனவே அவளுக்கு உன்னை பார்த்து பயம்! நீ இப்படி

அவளை பார்த்து உன்னோட அப்பா மாதிரி சிரிச்சேன்னு வை! நான் பாவம், என்னை ஒரு வழி பண்ணிடுவா! ப்ளீஸ் இப்படி சிரிக்காத!'' என்றான்.

நாட்கள் விரைவாக இப்படியே செல்ல... வராவின் பயம் மட்டும் ரமணனிடம் சிறிதும் குறையவில்லை. ரமணனும் சீரியஸ் பெர்சனா என்பதால் அவனாக எல்லோரிடத்திலும் சிரித்து பேசுவது அபூர்வம்.

வரமஹாலக்ஷ்மியின் வீட்டில் எல்லோருக்கும் அவன் குணம் தெரியுமாதலால் அவனை அட்ஜஸ்ட் செய்ய பழகிக்கொண்டனர்.

மாதம் ஒரு முறை சுந்தரவள்ளியும் ராமநாதனும் ரமணனை பார்க்க வருவர். இல்லையென்றால் அவனை வரவழைத்து கொள்வர். அவர்கள் வரும் பொழுது வரா அவர்களிடம் இந்த ஒரு மாதமாக நடந்த ரமணனின் கதையை முழுவதுமாக ஒன்று விடாமல் அவளுக்கு தெரிந்ததை கூட்டி, குறைத்து, ஏற்றி, இறக்கி, சொல்லி விடுவாள்.

வராவிற்கு அதிக செல்லம் அவர்கள் குடும்பத்தினர் கொடுப்பதை உணர்ந்த சுந்தரவல்லி... ராஜேஸ்வரியிடம் எப்பொழுதும் கடிந்து கொள்வார்.

''இப்படி அவளுக்கு செல்லம் கொடுக்காத ராஜேஸ்வரி, அவளை பொத்தி பொத்தி வைக்காத! எல்லோருடையும் ஃப்ரீயா பழக விடு. பொண்ணுங்க தைரியமா வளரணும். இவ சின்ன விஷயத்துக்கு கூட பயப்படறா பிடிவாதமா இருக்கா!'' என்று வரும் போதெல்லாம் சொல்வார்.

ஏனோ அவருக்கு வராவை பார்த்தால் உலக நடப்பு தெரியாமல் வளரும் சிறு பெண் போலவே தோன்றினாள்.



வெங்கட ரமணனை பார்த்துக்கொள்ளும் முழு பொறுப்பும் ராம் பிரசாத்திடம் வந்தது. ரமணனும் வழக்கறிஞ சருக்கு படித்ததால் காலேஜ் நேரம் போக மீதி நேரம் ரமணனுடயே இருப்பான்.

இப்படியே நாட்கள் செல்ல, வரா பன்னிரெண்டாம் வகுப்பில் இருக்க, ரமணன் தன்னுடைய சட்டப் படிப்பை முடித்தான். இப்போதெல்லாம் அவன் வராவிடம் முட்டி மோதுவதில்லை, பயமுறுத்துவதில்லை.

வரா பெரிய மனுஷியான போது வந்த அவனுடைய அன்னை அவனிடம், ''முன்பு போல் நீ அவளுடன் ரகளை செய்யக் கூடாது'' என்று தெளிவாக கூறி சென்றிருக்க, அவன் அவளிடம் கலாட்டா செய்வதோ பயமுறுத்துவதோ இல்லை.

ஆனால் தனியாக என்று அவளிடம் எந்த கலாட்டாவும் செய்ய தேவையில்லை, அவன் வெளியில் செய்யும் அடிதடிகளே நாளொரு மேனி பொழுதொரு வண்ணமுமாக வராவிடம் ரமணனை பற்றிய பயத்தை அதிகரித்து கொண்டிருந்தது.

ரமணன் காலேஜ் செல்வது ராயல் என்பீல்ட் புல்லட்டில் தான். அதுவும் சைலன்சர் எடுத்து விட்டு வைத்திருப்பான். அதனால் சத்தம் அதிகமாக வரும். அந்த புல்லட்டில் அவன் வீட்டை விட்டு கிளம்பினால் அது கிளப்பும் சத்தம் எல்லோரையும் அவனைத் திரும்பிப் பார்க்க வைக்கும்.

நிறைய தடவை டிராபிக் போலீஸிடம் மாட்டியிருக்கிறான். ஆனால் ஒரு முறை கூட அமைச்சரின் பெயரை உபயோகித்ததில்லை. பணம் என்ற பெரிய மனிதன் நம்மிடம் இருக்கும் போது வேறு எந்த பெரிய மனிதனும்

தேவையில்லை என்றுணர்ந்தவனாக, அத்தனை பேருக்கும் வெள்ளையப்பரை தள்ளியே சமாளித்து விடுவான்.

ராம் கூட, "உங்கம்மா உன்னை போலீஸ் ஆக்கணும்னு சொல்லிட்டிருக்காங்க! நீ என்னடா இப்படி பார்க்கறவங்களுக்கு எல்லாம் லஞ்சமா தள்ளற!" என...

"அதுக்காகத்தான் ராமண்ணா! இப்போவே எல்லா கலாட்டாவையும் பண்ணறேன்! நம்ம போலீஸ் ஆயிட்டா இதெல்லாம் செய்ய முடியாதில்லை! நம்ம கரக்டா நடந்துக்கணும்" என்பான்.

இந்த ஐந்து வருடங்களாக அவன் சட்டம் படித்து கொண்டே யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எக்சாமிற்கும் படித்து கொண்டு தான் இருந்தான். இங்கே சட்டப் படிப்பின் இறுதி படிப்பை முடித்தவுடனே அவனுடைய அம்மா அவனை டெல்லிக்கு ஸ்பெஷல் கோச்சிங்கிற்கு பேக் செய்து அனுப்பிவிட்டார்.

சுமார் எட்டு மாத காலம் அவன் கோச்சிங் முடித்து ப்ரிலிமினரி பாஸ் செய்து மெயின் எக்சாமிற்கு அப்பியர் ஆக தான் மறுபடியும் வராவின் வீட்டிற்கு வர, இந்த குறுகிய காலத்திலேயே வராவிடம் நிறைய வித்தியாசம் அவனுக்கு தெரிந்தது.

வரா...! அழகான, மிக! மிக! அழகான, பார்ப்பவர் யாராயினும் திரும்பப் பார்க்க வைக்கும் பெண். தன்னை கவனித்து அழகு படுத்தி கொள்ள மாட்டாள். தன்னுடைய தோற்றத்திற்கு மிகவும் கவனிப்பு கொடுக்க மாட்டாள்.

ஆனால் இப்போது அவனுக்கு தோன்றியது! அவள் தன்னை அழகுபடுத்தி கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவது போல அவனுக்கு தோன்றியது.



கல்லூரியில் அடி எடுத்து வைத்திருந்தாள். சென்னையில் இருந்த ஒரு புகழ் பெற்ற தனியார் பெண்கள் கல்லூரியில் பி பி ஏ சேர்ந்திருந்தாள். படிப்பில் சுமார் தான் வரா. ஒரு ஆவரேஜ் ஸ்டூடென்ட். அதனால் வேறு தொழிற் கல்வி எதற்கும் அவளை சேர்க்காமல் ராம் பிரசாத் இதில் சேர்த்தான்.

ராமிற்கும் இருபத்தி ஒன்பது வயதாக, அவனுக்கு மும்முரமாக பெண் பார்த்து கொண்டிருந்தனர். வக்கீல் தொழில் பார்த்தாலும், அவன் தந்தையை போலவே அரசியலிலும் இருந்தான். பார்க்கும் பெண்களை எல்லாம் அவன் வேண்டாம்! வேண்டாம்! என்று சொல்லி கொண்டிருந்தான்.

சுந்தரவல்லி மூலமாக இந்த விஷயத்தை அறிந்த ரமணன், "ஏன் ராமண்ணா! இப்படி பார்க்கறவங்களை எல்லாம் வேண்டாம்னு சொல்றிங்க!" என்று ரமணன் கேட்க, "எனக்கு பிடிக்கலை!" என்றான்.

"ஏன்??" என்றவனிடம், "போட்டோ பார்த்தா எப்படி தெரியும்?" என்றான்.

"நேர்ல பாருங்க!" என்றதற்கு,

"நேர்ல பார்த்து பிடிக்கலைன்னா?... நான் வேண்டாம்னு சொன்னா அவங்களுக்கு மனசு கஷ்டப்படாதா?" என்றான்.

"இதுக்கு என்ன செய்ய முடியும். உங்களுக்கு எப்படி தான் வேண்டும்!" என்று ரமணன் கேட்க...

"அதுதான் எனக்கே தெரியலையே!" என்று ராம் அசடு வழிந்தான்.

அந்த நேரம் பார்த்து வரா கல்லூரியில் இருந்து வர, ரமணன் வந்ததில் இருந்து அவளிடம் பேசவேயில்லை.

அவனை பார்த்தாலே ஏதோ வேலை இருப்பது போல் ஓடிக்கொண்டிருந்தாள்.

வித்தியாசமாக ஏதோ அவளிடம் தெரிய என்ன என்று அவனுக்கு புரியவில்லை. ''பாப்பா! இங்க வாங்க!'' என்றான் ரமணன் வேண்டுமென்றே அவளை பார்த்து.

அவளை ''பாப்பா என்று அழைத்ததற்கு எப்போதும் கோபப்படுவாள்! ஆனால் இப்பொழுது அமைதியாகவே வந்து அமர்ந்தவள், ''சொல்லுங்க வெங்கி!'' என்றாள்.

''நான் உன்னை பாப்பான்னு கூப்பிட்டேன்! நீ ஏன் கோபப்படலை!''

ஒரு புன்னகை மட்டுமே பதிலாக கிடைக்க,

தற்பொழுது கூப்பிட்டது முக்கியமாக பட, ''உங்க அண்ணன் வர்ற பொண்ணை எல்லாம் வேண்டாம்னு சொல்றான்! ஏன்னு கேட்க மாட்டியா?'' என்றான்.

கேட்டதும் விழித்தாள், ''நான் என்ன பண்றது'' என்றாள்.

''ம்!!! அண்ணனுக்கு பிடிக்கிற மாதிரி பொண்ணு பார்க்கிறது.''

''நானா நான் எப்படி பார்க்க முடியும்! அவங்கவங்களுக்கு பிடிச்சதை அவங்க அவங்க தானே பார்க்கணும்!'' என்றாள்.

இப்போது விழிப்பது வெங்கட ரமணனின் முறையாயிற்று.

## 11

### இன்றைய நிகழ்வுகள்

மேலே சென்றவன் அவளுடைய ரூமிற்கு செல்ல அவள் அங்கே இல்லை.



அது ஹை ரூபிங் செய்யப்பட்ட ஹால். அதனால் அங்கே இருந்தே எட்டி பார்த்தவன், ராமும் கல்பனாவும் இருக்கும் இடத்தை பார்த்து, ''அவ ரூம்ல இல்லை'' என்றான்.

''விளங்கும்'' என்ற கல்பனா, ''உன் ரூம் தான் அவ ரூம்'', என விளக்க, ''எப்போ இருந்தது'', என்றான் பதிலுக்கு,

''ம்ம்ம்ம்!!! அவளுக்கு எப்போ எல்லாம் தோணுதோ! அப்பப்போ!'' என்றாள் கடுப்பாக.

அவனிடம் இப்படி கடுப்பாக பேசும் தைரியம் உள்ள வள், கல்பனா மட்டும்தான். புன்னகைக்க ஆரம்பித்த இதழ்களுடன் அவனுடைய ரூமிற்குள் நுழைய கதவு திறக்கும் ஒலி கேட்டு, கதவிற்கு எதிர் புறம் படுத்திருந்த வரா எழுந்தாள்.

''நானே வர்றேன், அவர் வந்துட்டாரா!'' என்று கேட்ட படியே எழுந்தாள். அவுளுடைய அம்மாவோ அண் ணியோ அழைக்க வந்திருப்பார்கள் என்றெண்ணி.

உடனடி பதில் வராததில் இருந்தே, வந்தது யார் என்பதை உணர்த்த சட்டென்று திரும்பினாள்.

புன்னகை முகத்தோடு வந்த ரமணன், அதை முகத்தி லிருந்து விலக்காது அப்படியே நின்றான்.

அவனைப் பார்த்த வரா பார்த்தது பார்த்தபடியே நின் றாள். நிறைய மாதங்களுக்கு பிறகு வரும் நேரடியான தனிமை சந்திப்பு. ரமணன் திருமணத்திற்கு பிறகு சென்னை வரவேயில்லை.

அவ்வப்போது இவன் அம்மா அப்பாவை பார்க்க செல்லும் பொழுது அம்மா இவளை வரவழைத்து

விடுவார்கள். சொல்லாமல் சென்றாலும் இவன் கிளம்புவதற்குள் அவளை வரவழைத்துக்கொள்வார்கள். அதனால் அங்கே தங்கும் படியாக செல்ல மாட்டான். காலை செல்பவன் இரவு கிளம்புவது போல் பார்த்து கொள்வான்.

அவள் மட்டுமே வருவாள். அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி, என்று யாரையும் உடன் அழைத்து வந்து அவனை சங்கடத்திற்கோ யாருடைய கேள்விக்கும் பதில் சொல்லும் நிலைக்கோ தள்ள மாட்டாள்.

வரும்பொழுது எந்த மாதிரியான மனநிலையில் வருகிறானோ என்ற சஞ்சலத்தில் இருந்தவளை அவன் புன்னகைத்த முகம் பெரும் ஆசுவாசத்தை கொடுத்தது.

அவனுடைய பார்வையில் என்ன இருந்தது என்ற ஆராய்ச்சியோடு அவள் பார்க்க அதே வேலையை தான் அவனும் செய்து கொண்டிருந்தான்.

இருவரின் பார்வையும் மற்றவருக்கு விளங்கவில்லை. பார்வையின் ஆராய்ச்சியை விட்டு, இருவருமே என்ன மாற்றம் மற்றவரிடம் என்ற ஆராய்ச்சியில் இறங்கினர்.

வரமஹாலக்ஷ்மியின் பார்வைக்கு வெங்கட ரமணன் நிறம் மங்கி கறுத்து விட்டது போல் தோன்றியது. நிறைய வேலை செய்கிறானோ தன்னை கவனிப்பது இல்லையோ என்று யோசித்தாள்.

அவனின் தோற்றத்தில் கம்பீரம் அதிகரித்திருப்பது போல் அவளுக்கு தோன்றியது. அவனுடைய தந்தை பெரிய மீசை வைத்திருப்பார். எப்பொழுதும் ரமணனுக்கு அது பிடிக்கும்.

வேலையில் சேர்ந்த போது தன் மீசையை அவர் போல தான் வைத்து கொண்டு இருப்பான். அது கம்பீரமாக இருந்தாலும், ஒரு தமிழ்நாட்டுத் தோற்றத்தை பார்த்தவுடனே அளிக்கும்.



இப்பொழுது புதியதாக அந்த மீசையை கீழே இறக்கியிருந்தான். அது அவனுக்கு சற்று மாடர்னான தோற்றத்தை கொடுத்து கம்பீரத்தோடு சற்று ஸ்டைலையும் சேர்த்து கொடுத்திருந்தது.

மற்றபடி வேறு எந்த மாற்றமும் இல்லாமல் மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பு எப்படி பார்த்தாளோ, நடுவில் மூன்று நான்கு முறை அவன் ஊருக்கு வந்தபோது வள்ளிம்மா அழைத்து அவள் போனபோது அவனை பார்த்ததும் பார்க்காமல் பார்த்த மாதிரியே இருந்தான்.

அப்படியே தான் இருந்தான். முக்கியமாக அந்த பார்வை. அவளையே அளவெடுப்பது போல் பார்த்துக்கொண்டிருந்த அந்த பார்வை அவளுக்கு அவனிடம் எப்பொழுதும் பயத்தை கொடுக்கும்.

அந்த பார்வையில் எந்த மாற்றமும் இல்லை. சொல்லப் போனால் அந்த பார்வையின் வீரியம் தாங்காமல் முயன்று ஏதோ எடுப்பது போல் பாவனை செய்து வேறு புறம் திரும்பினாள்.

அவனின் பார்வையை தாங்க முடியாமல் தான் திரும்புகிறான் என்றுணர்ந்த ரமணன் அவளை எப்படித்தான் பார்ப்பது என்று யோசித்தபடியே பார்த்தான்.

நிறைய தோற்றத்தில் மாற்றம் இருந்தது அவளிடம். என்ன என்று அவனுக்கு சொல்லத் தெரியவில்லை. ஆனால் அவனுக்கு என்னவோ பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல தோன்றியது.

பாலைவனத்தில் தண்ணீரை பார்த்தது போல் கண்களுக்கு குளிர்ச்சியாக தோன்றினாள். அவளுடைய அழகு நிறைய கூடியிருப்பது போல அவனுக்கு தோன்றியது.

பொதுவாக பெண்களை அதிக நேரம் ரமணன் பார்க்கவே மாட்டான். தானாக கருத்தில் பதிந்தால் ஒழிய அவனாக பதிய வைக்க ஆர்வத்துடன் பார்க்க மாட்டான். அப்படி அவன் கவனத்தை கவர்ந்தால் பார்க்க தயங்கியதும் இல்லை.

மிக சில பெண்கள் மட்டுமே அவனை திரும்பி பார்க்க வைத்திருக்கிறார்கள். வராவோட வளர்ந்ததினால் அவளிடத்தில் அவனுக்கு அவன் அம்மாவை, அத்தையை, அவன் வீட்டு பெண்களை பார்ப்பது போன்ற பார்வை தான் இருக்கும்.

இந்த சில வருடங்களில் அவளிடம் மாற்றத்தை உணர்ந்த பிறகு தான் அவளை கவனித்து பார்க்க ஆரம்பித்ததே. அப்போதும் அவளுடனான திருமணத்திற்கு முன்... ஆராய்ச்சி பார்வை தான் இருக்கும்.

திருமணத்திற்கு பின் முயன்று அவளை தன் மனைவி என்ற உரிமையோடு பார்க்க நினைத்தாலும் அப்படி தான் பார்க்கிறானா என்றே தெரியவில்லை.

அவளாக கூப்பிடும் வரை தமிழ் நாட்டுக்கு வரக்கூடாது என்ற முடிவோடு தான் இருந்தான். ஆனால் அவள் கூப்பிடுவது போல் தெரியவில்லை. அம்மாவும் அப்பாவும் ஒரு புறம் இங்கே வருமாறு வற்புறுத்தி கொண்டிருக்க, இங்கே சிவசங்கரன், ராஜேஸ்வரி, ராம், கல்பனா, எல்லோரும் கேட்டு கொண்டே இருந்தனர்.

அவன் போன் எடுக்க மாட்டான் என்று தெரிந்தும் சலிக்காமல் கூப்பிடுவர். அபூர்வமாக அவன் அதனை எடுக்கும்பொழுது சிறிது கூட அவன் எடுக்காததன் கோபத்தை காட்டாது அவன் நலத்தை விசாரிப்பார் சிவசங்கரனும் ராஜேஸ்வரியும். இந்த மாதிரியான அவர்களுடைய



நடத்தைகள் தான் அவனுக்காக இல்லாவிட்டாலும் அவர்களுக்காகவாவது இங்கே வர வேண்டும் என்று தோன்ற வைத்தது.

அப்பொழுதும் அதற்கான முயற்சியை அவன் எடுத்ததானில்லை. திடீரென்று இந்த ட்ரான்ஸ்பர் வரும் பொழுதே இது அவர்களுடைய வேலை என்று தெரியும். அதனால் தான் மறுத்திருக்க முடிந்திருந்தாலும் மறுக்காமல் வந்துவிட்டான்.

வயது ஏறிக்கொண்டே போவதும் மற்றொரு காரணம். போன தடவை அவனை தொடர்பு கொண்ட போதே அம்மா மிகவும் வருத்தப்பட்டார்கள்.

அம்மா இல்லாத போது தனியாக தொடர்பு கொண்ட அப்பா, சிறிது நேரம் ஒன்றுமே சொல்லாமல் இருந்தவர், ''என்னப்பா சொல்லுங்க!'' என்று ஊக்கியவுடன்...

''வந்துடுப்பா!, என்னை மாதிரி நீயும் ரொம்ப வயசான பிறகு குழந்தை பெறப்போறியா... என்னால உனக்கு ஆக்டிவா ஏதாவது செய்ய முடிஞ்சதா. தானா உருவாகலன்ன பரவாயில்லை! நாமா தள்ளி போடக்கூடாது...''

''அதது நடக்க வேண்டிய நேரத்துல நடக்கணும், நானும் உங்க அம்மாவும் நீ பொறக்கறதுக்குள்ள பட்ட கஷ்டம்... மறுபடியும் குழந்தைங்க இல்லைன்ற பேச்சு... நம்ம குடும்பத்துக்கு தொடர வேண்டாம்!'' என்றார் பளிச்சென்று.

பேசும் போது அவர் குரலில் இருந்த கலக்கம் அவனையறியாமல், ''சீக்கிரம் வந்துடறேன்பா...'' என்று பதில் சொல்ல வைத்தது.

முதன் முறையாக சமூக சிந்தனையிலிருந்து விடுபட்டு தன்னுடைய வாழ்க்கையை பற்றி அவன் சிறிது சிந்திக்க ஆரம்பித்ததே, அதன் பிறகு தான்.

''அப்படி என்ன நம்மால் வேலையையும் குடும்பத்தையும் ஒரு சேர பார்க்க முடியாதா? என்ன செய்து கொண்டிருக்கிறோம் நாம்?'' என்று அவன் யோசிக்க ஆரம்பித்த பொழுது இந்த ட்ரான்ஸ்பர் வர, அதை பற்றி அவளா? நானா? பார்த்துக்கொள்ளலாம்! என்ற முடிவோடு தான் வந்தான்.

இருந்த இடம் அசையாமல் நின்றிருந்தவனை, தயங்கி மெதுவாக, ''வாங்க!'' என்றாள் ஒற்றை சொல்லாக...

அவளையே பார்த்திருந்தவன் சிறிது கோபம் தலை தூக்க,

''உன் போன் நம்பர் இதுதானே!'' என்று ஒரு நம்பரை சொல்லி கேட்க....

ஆம், என்பது போல் தலையாட்டினாள்.

''என் போன் நம்பர் சொல்லு!'' என்றான் பதிலுக்கு,

எதற்கு என்று புரியாவிட்டாலும் சொன்னாள்.

''அப்போ! என் போன் நம்பர் உனக்கு நல்லா ஞாபகருக்கு. ஆனா ஒரு தடவை கூட நீயா கூப்பிடலை. நான் தான் போன் பண்றேன்னு தெரியும்! ஒரு தடவை கூட எடுக்கலை!'' என்றான் கைகளை கட்டியபடியே அவளையே பார்த்தவாறு.

என்ன பதில் சொல்வது என்று தெரியாத வரமஹாலக்ஷ்மி வாய் பேசாது அப்படியே நின்றாள். பிறகு துணிந்து ''தேவைன்ற போது உங்களை தவிர நான் வேற யாரையும் கூப்பிடளையே'' என்றாள்.

அது உண்மைதானே. அதனால் வேறு ஒன்றும் ரமணன் பேசவில்லை.

அவன் இங்கே வருகிறான் என்ற செய்தி அறிந்தவுடனே இனி தன்னை விட்டு விலகமாட்டான் என்று



அவளுக்கு தெரியும். வருகிறான் அவனோடு இயல்பாய் பொருந்த வேண்டும். தன்னுடைய மனவுளைச்சல்களை அவனை அண்ட விடக் கூடாது! வேண்டிய நேரம் எடுத்தாகி விட்டது என்றுணர்ந்தவள்,

அவனை நேர்கொண்டு பார்த்தாள். அவன் முகம் களைப்பில் இருப்பது போல் தோன்ற, ''சாப்பிட்டீங்களா!'' என்ற கேள்விக்கு, 'இல்லை!' என்று தலையாட்டினான், ''சாப்பிடுவோமா!'' என்றாள்.

''சரி'' என்பது போல் அவளை பார்த்து தலையசைக்க, பதிலே பேசாமல் குழந்தை கீழே விழுந்து விடாமல் இருக்க தலையணையை வைத்தவள், ''முகம் கைகால் கழுவிட்டு வாங்க'' என்றாள்.

''குளிக்கணும்'' என்றான், அமைதியாகவே டவல் எடுத்து கொடுத்தவள், போன் வர எடுத்தவள், ''வள்ளிம்மா...'' ''வந்துட்டாங்க வள்ளிம்மா'', ''இன்னும் சாப்பிடலை'', ''பேசறீங்களா'', ''ம்... சரி'', என்று வைத்துவிட ''சாப்பிட்டுட்டு கூப்பிட சொன்னாங்க'', என்றாள் இவனை பார்த்து.

பதில் பேசாமல் இவளை ஒரு பார்வை பார்த்து ரமணன் குளிக்கப் போக, நன்றாக சிரித்த முகத்தோடு தானே வந்தான், இப்பொழுது எதற்கு இப்படி பார்க்கிறான், என்று புரியாமல் மனதோடு குழம்பினாள்.

## 12

### அன்றைய நிகழ்வுகள்

''அவங்கவங்களுக்கு பிடிச்சதை அவங்கவங்க தான் பார்க்கணும்'' என்ற வராவின் கூற்றை கேட்டவன்,

''எதை'', என்றான் ஒற்றை சொல்லாக...

அவளும் சளைக்காமல், ''எல்லாத்தையும்'' என்றாள். இப்படி அவனிடம் பதில் பேசும் வரா புதியவள். சிறு வயதில் வாயடித்ததுடன் சரி பிறகு ஒரு வயது வந்தவுடன் இப்படி வாயடிக்க மாட்டாள் பயத்துடன் தான் பார்ப்பாள்.

தற்பொழுது உடனுக்குடன் பதிலளிக்க அவனுக்கு புதியதாய் தெரிந்தாள். எது கொடுத்தது இந்த தைரியம்.

''எல்லாத்தையும்ன்னா கரெக்டா, எதைன்னு சொல்லு!'' என்றான் சற்று குரலை உயர்த்தி...

இவன் இப்படி அதிகாரமாக கேட்கவும், புதியதாய் பிறந்த தைரியம் சற்றே குறைய பதில் பேசாமல் எழுந்து கொள்ள போனாள்.

மறுபடியும் ஏதோ ரமணன் சொல்லப்போக, ''இப்போ தானே காலேஜ்ல இருந்து வந்தா விடு!'' என்று அவள் அண்ணன் பரிந்து வர,

''ஏன் காலேஜ்ல இருந்து வந்தா பதில் சொல்ல வாய் வலிக்குமா! சொல்லுங்க மங்கி, இல்லையில்ல வெங்கின்னு என்னை என்னவோ இன்னைக்கு தான் புதுசா பார்க்கிற மாதிரி பெரிய இவ மாதிரி வந்து உட்கார்ந்தா!'' என்று அவனை பார்த்து அந்நியனை போல் அமர்ந்ததற்கு, ரமணன் பொறிய...

எதற்கு இப்படி கோபப்படுகிறான் என்று ராமிற்கு புரியவில்லை.

குறைந்த தைரியம் மறைந்தே விட்டது வரமஹாலக்ஷ்மிக்கு. இவர்கள் பேசிக்கொண்டிருப்பதை பார்தத வரா இதுதான் சமயம் என்று இடத்தை விட்டு அகன்றாள்.



ஏதோ சரியில்லை என்று உணர்ந்த ரமணன் பிறகு பார்க்கலாம், தற்பொழுது அம்மா சொன்ன விஷயம் முக்கியம் என்று நினைத்து, ''அம்மாவும் அப்பாவும் ஒரே வரன் சொன்னாங்களே உங்களுக்கு ஏன் பிடிக்கலை!'' என்றான்.

''எந்த வரன்'' என்றவனிடம், ''எதுன்னு கேட்கிற அளவுக்கு உங்களுக்கு க்யூல நிக்குதோ!'' என்றான்.

''அட உனக்கு ஏன்பா என்மேல இத்தனை காண்டு!'' என்றான் ராம் பிரசாத். ''அதுவா உன்னை உயிரை எடுக்கறாங்க பொண்ணு வீட்டுக்காரங்க அதுதான்!'' என்றான்.

''உன்னை ஏன்பா உயிரை எடுக்கறாங்க!''

''உங்க கிட்ட சிபாரிசு பண்ண சொல்லி!''

''இது என்னப்பா புது கதை!, என்ற ராமிடம், ''நான் என்ன கதையா சொல்றேன்!'' என்று ரமணன் கோபப்பட, ''பொறுமை! பொறுமை!'' என்று ராம் பிரசாத் சொல்ல...

ரமணன் முறைத்தான். ''விஷயத்தை சொல்லுடா'' என்றாம் ராம் மறுபடியும் பொறுமையாகவே.

''எங்கம்மா வோட ஒண்ணு விட்ட அண்ணன் பேத்தி! ஏன் வேண்டாம்னு சொன்னீங்க!'' என்றான்.

''பேர சொல்லுப்பா! எங்கம்மா ஒரு வாரத்துல மூணு நாலு பொண்ணு போட்டோ காட்டுவாங்க விவரம் சொல்லுவாங்க எனக்கு எதுவும் மனசுலையே நிற்காது'' என்ற ராமிற்கு,

''கல்பனா!'' என்றான் ரமணன்.

''டேய்! பொண்ணு கருப்புடா!'' என்றான் ராம்.

''என்ன இது ராமண்ணா! கலர் கம்மின்னு சொல்லுங்க, என்று கடிந்தவன் ''கருப்பெல்லாம் உங்களுக்கு போட்டோலேயே தெரியுதா???

''இல்லை சொன்னாங்க!''

''மாநிறத்துக்கும் கொஞ்சம் கம்மி அவ்வளவு தான். ஆனா பார்க்க லட்சணமா இருப்பா'' என்றான் ரமணன் பதிலுக்கு,

''உனக்கு அவளை தெரியுமா!''

''எங்கம்மா வோட அண்ணா பேத்தி. எனக்கு எப்படி தெரியாம இருக்கும்! உங்களுக்கும் தெரியும்! என்கூட காலேஜ்ல பார்த்ததில்லை! என்னோட கிளாஸ் மேட்! நான் இங்கே படிக்கறேன்னு அவளை பார்த்துக்க வசதியா இருக்கும்னு இங்க சேர்த்தாங்க!

''உங்க கிட்ட கூட சொல்லியிருக்கேன். உங்க ஆபீஸ்க்கு என் கூட வர்றதுக்கு கேட்டதுக்கு கூட, பொண்ணுங்க எல் லாம் எனக்கு சரி வரா மாட்டாங்கன்னு சொல்லிட்டீங்க.''

''ஞாபகமில்லைடா!'' என்றான் பரிதாபமாக...

''நான் இங்க படிக்கறேன், அவளை பார்த்துப்பேன்னு தான் இங்க காலேஜ்ல கொண்டு வந்து சேர்த்தாங்க! உங்க கிட்ட கூட சொல்லியிருக்கேன்! உங்க கூடவே தானே இருந்தேன்! இது கூட தெரியாதா!'' என்றான் மறுபடியும் எரிச்சல் இழையோட.

இப்பொழுது ராம் பிரசாத் அவனை பார்த்து முறைத் தான். ''டேய்! உங்க அப்பா, உங்க ஊர்ல இருக்க பொண்ணுங்களையெல்லாம் தைரியமா இந்த படிப்புக்கு சேருங்க! என் பையன் அங்க தான் படிக்கிறான்! அவன் பார்த்துப்பான் சொல்லி, எங்கப்பாவோட தேர்தல் வாக்குறு திய விட அதிகமா கொடுத்து ஒரு நாலஞ்சு பேரை யாவது சேர்த்திருக்க மாட்டார்.''

''பசங்களையே கவனிச்சுக்கலாம் போல! அதுங்க பண்ண கலாட்டா கொஞ்சமா நஞ்சமா! அதுகளை



கவனிக்கறேன்னு நீ இழுத்துக்கிட்ட பிரச்சனையே அதிகம். இதுல யாரை எனக்கு ஞாபகம் இருக்கும்'' என்றான் கடுப்புடன்.

''எல்லாரும் என் ஜூனியர்ஸ்! இவ மட்டும் தான் என் கிளாஸ் மேட்!'' என்றான்.

''ஞாபகமில்லைடா! இப்போ கூட இந்த பேர் சொல்லி கொஞ்சம் நிறம் கம்மினாங்க! நான் அதுக்கப்புறம் பார்க்கவேயில்லை! விவரம் கேட்கலை! அது லாயர்ன்னு கூட எனக்கு தெரியாது!''

''நீங்க அவளை பார்த்திருக்கீங்க ராமண்ணா!'' என்றவன்,

''ஒரு தடவை கல்பனா ஸ்கூட்டியை ஒரு கார்காரன் இடிச்சிட்டு நிறுத்தாம போய்ட்டான்னு சொல்லி, கார் பின்னாடியே போய் கார் நின்னவுடனே அதோட கண்ணா டியை கல்லெடுத்து அடிச்சி, உடைச்சி, பிரச்சினையாகி, நம்ம போனோமே ஞாபகமில்லையா!'' என்றான்.

''அதுவா எனக்கு ஞாபகமில்லயே! நான் பேசிட்டு இருக்கும் போதே இன்னொரு கண்ணாடியையும் உடைப்பேன்னு கத்திட்டு இருந்துச்சின்னு, நீ அவசரமா ஒரு ஆட்டோ பிடிச்சி அனுப்பிட்டு! அப்புறம் அதுக்கு அஞ்சாயிம் ரூபா நீ கட்டினியே அதுவா?...'' ''சரியா! பார்க்கலைடா.''

''இன்னொரு தடவை கூட போனீங்க ராமண்ணா! நான் கூட இல்லை! அவங்க பிரண்ட்ஸ் ஹோட்டல் சாப்பிட போனப்போ, ஏதோ பிரச்சனை ஆகி அவ பேரரை அடிச்சு, அவன் அழுதுட்டு இருந்தான்னு. பின்ன கண்ணாடியை உடைச்சு போலீஸ் வந்து நீங்க அவசரமா போனீங்களே!''

அவனுக்கு சட்டென்று ஞாபகத்திற்கு வந்தது. அவன் அந்த நிகழ்ச்சியை யோசித்தவாறே இருக்க, இவனுக்கு இன்னும் ஞாபகமில்லை போல் என்று இன்னும் அவளின் அருமை பெருமைகளை ரமணன் சொல்ல வர,

''ஞாபகமிருக்கு!'' என்றான் ராம். ''ஏன்டா சொல்றது எல்லாம் இப்படி கலாட்டாவா சொல்லற! அதை உடைச்சா இதை உடைச்சான்னு சொல்ற! அதை ஏன் வேண்டாம்னு சொன்னீங்கன்னு கேட்கற!''

'இல்லைன்னா என் மண்டையை உடைச்சிடுவாளே!' என்று மனதிற்குள் நினைத்த ரமணன்.

''கொஞ்சம் அடாவடியான ஆளு! மத்தபடி நல்ல பொண்ணு! என் சொந்தம்ன்றதால சொல்லலை. என் கூட அஞ்சு வருஷம் படிச்சிருக்கா, ஐ நோ ஹெர். நல்ல பொண்ணு. கலர் கொஞ்சம் கம்மி மற்றபடி பார்க்க நல்லா இருப்பா. உங்க ஸ்டேட்டஸுக்கு சமமா வசதி வாய்ப்பிருக்கு. மதுரைக்காரங்க... யோசிங்க! பார்க்கணும்னா என் எக்சாம் முடிச்சு பார்க்கலாம். எனக்கு இப்போ படிக்கணும் இன்னும் இரண்டு நாள் தான் இருக்கு'' என்றவன்,

வராவையும் ராம் பிரசாத்தையும் மறந்தவனாக படிப்பில் ஆழ்ந்தான். பரீட்சை முடியும் வரை எல்லாரும் கண்ணில் பட்டாலும் யாரும் கவனத்தில் பதியவில்லை.

பரீட்சை முடிந்து அவன் தன்னை ரிலாக்ஸ் செய்த பிறகு தான் சுற்றுப் புறத்தை கவனித்தான். பிறகு யோசித்த போது தான் புரிந்தது அன்றைய அவனுடைய வரா விடமான சந்திப்பிற்கு பிறகு அவளை சந்திக்கவேயில்லை என்றுணர்ந்தான். தனக்கு பெஸ்ட் ஆப் லக் சொல்லக் கூட அவள் ஏன் வரவில்லை என்று புரியவில்லை.

அவனிடம் ஒரு அசட்டு துணிச்சலோடு பேசியதாகவே பட்டது. எது கொடுத்தது இந்த அசட்டு



தைரியம், துணிச்சல், யோசனையாக இருந்தது அவனுக்கு.

நேரடியாக அவளுடைய ரூமிற்கு சென்றவன் அவளை பார்க்க டீ.வி பார்த்து கொண்டிருந்தாள், இவன் வந்ததை கூட கவனிக்காமல் ஆழ்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். வரா என்று இவன் அழைப்பிற்கு துள்ளி திரும்பினாள்.

மிக சில நேரங்களில் மட்டுமே அவன் ரூமிற்கு வருவான். இப்போது எதற்கு வந்திருக்கிறான் என்ற பதட்டமும் முகத்தில் ஏறியது.

'அமைதியாக அவளை கையாள வேண்டும். என்ன? என்று கண்டுபிடிக்க வேண்டும். ஏதோ சரியில்லை!' அவன் உள்மனது சொல்லியது. அவனுடைய கணிப்பு நிறைய நேரங்களில் சரியாக தான் இருக்கும். அதனால் அதனை அவனால் ஒதுக்க முடியவில்லை.

என்ன பார்த்துக் கொண்டிருந்தாள் என்று பார்க்க ஏதோ பேஷன் சேனல், ராம்ப் வாக் ஓடிக்கொண்டிருந்தது.

''எங்க உன்னை பார்க்கவே முடியலை. நேத்து எனக்கு எக்சாம். விஷ் பண்ணுவ எப்பவும். நேத்து அதுக்கு கூட என்னை பார்க்கலை. நானும் அவசரத்துல கவனிக்கலை, இல்லைனா நானே பார்த்திருப்பேன்.''

அவளுக்கு நன்றாக ஞாபகமிருந்தது, இருந்தாலும் என்னவோ அவன் முன்னிலையில் அடிக்கடி செல்ல பயம். அதனாலேயே தவிர்த்து விட்டாள்.

தற்போது அவனுக்கு விஷ் செய்திருக்க வேண்டும் என்ற குற்றவுணர்ச்சி மேலோங்க, என்ன சமாதானம் சொன்னாலும் கண்டு பிடித்து விடுவான் என்றுணர்ந்து.

''சாரி'' என்றாள் ஒற்றை வார்த்தையாக...

''எப்படி இருக்கு காலேஜ்?'' என்று ஆரம்பித்து அவளிடம் சகஜமாக பேச்சுக் கொடுக்க துவங்கினான்.

சரளமாக அவளை பேச வைத்தான். பேசியதில் அவனுக்கு வித்தியாசமாக எதுவும் தெரியவில்லை. நன்றாக தான் பேசினாள்.

ஒன்றுமில்லாததை தானாக ஏதாவது நினைத்துக்கொண்டிருக்கிறோமா என்பது போல் உணர்ந்தவன், அவளிடம் அவன் மீது இருந்த பயத்தை அதிகரிப்பது போல் எதுவும் செய்யாமல் சகஜமாக பேசினான். அவளையும் பேச வைத்தான்.

''உங்கண்ணாக்கு பொண்ணு பார்க்கலாமா?''

''உங்களுக்கு ஏன் இவ்வளவு ஆர்வம்!''

''எனக்கில்லை, பொண்ணுக்கு!... என்னோட ரிலேடிவ் பிளஸ் என்னோட கிளாஸ் மேட். என்னோட நிறைய தடவை உங்க அண்ணனை பார்த்திருக்கா. இப்போ ஜாதகம் வரவும் இவன் தான் அவன்னு தெரிஞ்சவுடனே, அவளுக்கு ஓர் ஆர்வம். உங்கண்ணன் வேற அவளை நேரே பார்க்காம, போட்டோ பார்த்து... யார்னு தெரியாம வேண்டாம்னு சொல்லிட்டான்.

''கல்பனா, என்கிட்ட ஏன் என்னை வேண்டாம்னு சொன்னான். நீ தானே என் கூட இருந்தே!, என்னை பத்தி என்ன சொன்ன நீ! இப்படின்னு என்னை ஒரே டார்ச்சர். நான் ஒண்ணுமே சொல்லலைனா நம்ப மாட்டேங்கறா! என்னை அவரோட பேசவை! ஏன் என்னை வேண்டாம்னு சொன்னாங்கன்னு நானே கேட்கறேன்னு சொல்லறா!.

''என்ன செய்யலாம் ஒரு ஐடியா சொல்லு!'' என்றான்.

''ரெண்டு பேருமே உங்களுக்கு வேண்டியவங்கன்னா, நீங்க இதுல தலையிட வேண்டாம்! அவங்களே



பேசிக்கட்டும். அண்ணன் வேண்டான்னு சொன்ன அவனே சொல்லட்டும்! ஏன் வேண்டான்னு சொன்னான்னு கல்பனாக்கு கேட்கணுமா அவங்களே கேட்கட்டும்.''

அதுவே ரமணனுக்கும் சரியென்பது போல் பட, ''அந்த மாதிரியே ஏதாவது செய்யறேன், என்றான்.

பிறகும் அவளிடம் தானாகவே நிறைய நேரம் பேசிக்கொண்டிருந்து, ''நாளை ஊருக்கு செல்கிறேன், என்று அவளிடம் கூறிக் கொண்டிருந்த போது... ராமும் வர அவர்களை பார்த்தவன்,

''என்னடா இது உலகத்தின் எட்டாவது அதிசயம், நீ அவளை எரிச்சல் பண்ணாம பேசிக்கிட்டிருக்க, அவளிடம் உன்கிட்ட பயமில்லாம பேசிக்கிட்டிருக்கா...'' என்றபடியே அவர்களின் பேச்சில் ஐக்கியமாக...

திரும்பவும் அவர்கள் பேச்சு இழுத்துக்கொண்டே போக, ராஜேஸ்வரி அவர்களை சாப்பிட அழைக்க வந்த போது அவரையும் அவர்களுடைய பேச்சில் இணைத்துக் கொள்ள, மாலை ஐந்தரை மணிக்கு பேச ஆரம்பித்தவர்களின் பேச்சு இரவு பத்தரை வரை நீடிக்க...

அங்கே ஒரு குதூகல சூழ்நிலை நிலவ... ரமணனிடம் பயம் இருந்தாலும் ஒரு நட்புணர்வுடன் கூடிய நம்பிக்கை அவனிடம் வரமஹாலக்ஷ்மிக்கு தோன்றுமாறு செய்தான்.



## 13

### இன்றைய நிகழ்வுகள்

குளித்து விட்டு வந்தவனை, ''எதுக்கு அப்படி பார்த்தீங்க...?'' என்று வினவினாள்.

''எப்படி பார்த்தேன்?''

''நான் வள்ளிம்மா கிட்ட பேசும்போது பார்த்தீங்களே!''

''ஏன் அவங்க என்கிட்ட பேசமாட்டாங்களா! உனக்கு போன் பண்றாங்க!''

''ஷ்... இதுதானா என்னவோன்னு பயந்துட்டேன்!'' என்றாள் இதெல்லாம் ஒரு விஷயமா என்பது போல்...

''என்னன்னு பயந்த?''

''தெரியலை!'' என்றாள் ஒற்றை வார்த்தையாக... வரா குரலில் என்ன இருந்தது என்று புரியவில்லை.

அவளருகே வந்தான், பார்த்துக்கொண்டே இருந்தாள். இன்னும் அருகில் இடித்து கொண்டு நிற்பது போல் வர... பின்னால் நகர்வாள் என்று எதிர்பார்க்க அப்படியேதான் நின்றாள்.

''நான் இவ்வளவு கிட்ட வர்றனே படபடப்பா இல்லை!'' என்றான்.

அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். ''இப்படி மேல இடிச்சா எதுவும் ஆகலை!'' என்றபடியே அவளை இடித்துக்கொண்டு உராய்வது போல் நிற்க...

மெதுவாக தயங்கி, ''ஒண்ணும் ஆகலை!'' என்றாள். ''பார்த்தாலே என்னவோ ஆகும்! தொட்டா மின்சாரம் பாயற மாதிரி இருக்கும்ன்னு நிறைய வர்ணனைகள் படிச்சிருக்கேன்! நிறைய நாளா எனக்கு டெஸ்ட் பண்ணணும்னு ஒரு ஆசை! அதான் டெஸ்ட் பண்ணினேன்! என்று ஆசையாக சொல்ல நினைத்து அதையும் சீரியசாகவே சொல்லி வைத்தான்.

''என்ன காரணம் உனக்கு ஏதாவது தெரியுமா!'' என்றான் பாவம் போல் முகத்தை வைத்த. இப்பொழுது இருவருக்கும் சிரிப்பு எட்டி பார்த்தது.



அவள் சிரித்த விதமே மனதில் என்னவோ நினைத்தாள் என்று காட்டி கொடுக்க, ''என்ன நினைச்ச சொல்லேன்'' என்றான் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன்.

'சொல்ல மாட்டேன்' என்பது போல் தலையசைத்தாள்.

''ப்ளீஸ்!'' என்றான். இரண்டு மூன்று முறை வற்புறுத்தி கேட்டவுடன், ''நம்ம ரெண்டு பேருக்கும் ஹார்மோன் ரியாக்சன் சரியில்லைன்னு நினைச்சேன்'' என்றாள் புன்னகையுடன்.

''உனக்கு சரியில்லைன்னு சொல்லு! எனக்கும் ஏன் சேர்த்துக்கற! எனக்கு என்னென்னவோ ஆச்சே! நீ என்னன்னு கேட்டா சொல்றேன்!'' என்றான்.

அமைதியாகி விட்டாள்.

''சகஜமா இரு வரா! என்கிட்ட நீ என்ன வேணும்னாலும் பேசலாம் பதட்டப்படாதே! ''சிறிது இடைவெளி விட்டவன், ''நான் இருக்கும் போது நீ எதுக்கும் பயப்படக்கூடாது! என்கிட்டயும் பயம் வேண்டாம்!'' என்றான்.

ஒரு தலையசைப்பு மட்டுமே அவளிடம்.

யோசித்துக்கொண்டே இறங்கினான். ஒரு ஒரு வார்த்தை தான் பேசுகிறான் தன்னிடம் மட்டுமா எல்லோரிடமுமா...

அவளோடு சாப்பிட இறங்க, அவளும் அவனும் படியிறங்கும் காட்சியை டைனிங் டேபிளில் அமர்ந்து ராம் பிரசாத் கண்களில் நிறைத்து கொண்டிருந்தான்.

பக்கத்தில் அமர்ந்திருந்த கல்பனா,

**பார்த்த விழி பார்த்தபடி பூத்து இருக்க**
**காத்திருந்த காட்சி இங்கு காணக்கிடைக்க...**

என்று ஒரு ஸிச்சுவேசன் பாட்டை எடுத்து விட...

அதை ஒரு புன்னகையோடு கேட்டிருந்தான் ராம்.

அவர்கள் காதிலும் சன்னமாக கேட்டது. அதைக் கேட்ட ரமணன்...

''அம்மா தாயே ஆரம்பிச்சிட்டியா உன் கத்தலை, பாடறேன்னு சொல்லி கத்தி கத்தியே எல்லோரையும் ஒரு வழி பண்றதை நீ இன்னும் நிறுத்தலையா...

''ராமண்ணா! உங்களுக்கு எதையும் தாங்கும் இதயம், ஆனா எல்லாரும் அப்படின்னு சொல்ல முடியாது. எனக்கு கொஞ்சம் ஹார்ட் வீக்கு... உங்க பொண்டாட்டிய நான் இல்லாதப்போ மட்டும் கத்த... கல்பனாவின் முறைப்பை பார்த்தவன், ''இல்லையில்லை பாட சொல்லுங்க... என்றான்.

இதை ரமணன் சிரிக்காமல் சொல்ல... ராம் சிரிக்க... கல்பனாவின் முகத்தில் புன்னகை அரும்ப...

''அறிவிருக்கா உங்களுக்கு?'' என்றாள் கோபமாக ரமணனை பார்த்து வரமஹாலக்ஷ்மி, என்ன வென்று புரியாமல் அனைவரும் விழிக்க அதற்குள்,

கிளம்புவதற்காக வராவின் அப்பா சிவசங்கரன் வர, இவர்கள் பேச்சு நின்று, அவரை வழியனுப்புவதில் மும்முரமாக,

அவர் போனவுடனே, கல்பனா வராவை பார்த்து, ''நான் எதுவும் ஹர்ட் பண்ணிட்டேன்னா... ஏன் அப்படி கோபப்பட்ட'' என்றாள்.

''இல்லைண்ணி ஒண்ணுமில்லை!... நான் உங்க மூடை ஸ்பாயில் பண்ணிட்டேனா ஐ அம் சாரி'' என்றாள்.

''இல்லையில்லை நீ எதுக்கு கோபப்பட்ட''

அப்போது சட்டென்று கோபம் வந்தது. இப்போது நினைத்தால் சற்று அசட்டுத்தனம் போல் தோன்ற...



ஆனாலும் சொல்லாவிட்டால் கல்பனா என்னவோ ஏதோ வென்று நினைத்து கொள்வாள் என்பதற்காக சொன்னாள்.

''அது அவங்க லூசு மாதிரி ஹார்ட் வீக்னு சொன்னாங்களா! எனக்கு ஏனோ அது அபசகுனமா பட்டது! அதனால் தான் அவங்களை திட்டினேன்.

''ஜோக்ன்னு தெரியும்! ஆனா டக்குன்னு வாயில் வந்துடுச்சு!'' என்றாள் ஒரு தர்மசங்கடமான புன்னகையோடு.

தான் பாடியது பிடிக்கவில்லையோ? அதனால் கோபப்பட்டாளோ என்று நினைத்திருந்த கல்பனா முகம் தெளிந்து,

''நான் சொன்னா தப்பா எடுத்துக்காத வரா, இப்போ இந்த நிமிஷம் வாழற வாழ்க்கை தான் நிஜம்! நாளைக்கு எப்படின்னு நமக்கு தெரியாது. அதனால கடந்தவைகளை நினைச்சு நிகழ்காலத்த சிரமமாக்கிக்கக் கூடாது. வாழ்க்கையை அனுபவிக்கணும்! அதுவும் சில விஷயங்கள் அந்த அந்த வயசுல அனுபவிக்கணும்!.

''மனசளவுல துணை ரொம்ப முக்கியம். அதே தான் உடலளவுளையும்! நீ புரிஞ்சிப்பேன்னு நினைக்கிறேன். நம்ம மனைவி, நம்ம கணவன், அப்படின்ற ஒரு எண்ணம் மனசுல பதிஞ்சுட்டா மனைவியோ கணவனோ என்ன தப்பு செஞ்சாலும் அது அடுத்தவங்களுக்கு பெருசா தோணாது! கணவன் மனைவிக்குள்ள என்னைக்கும் ஈகோ வரவே கூடாது!.''

''நீ விட்டு குடுத்து நடந்துப்பியோ இல்லை, அவனை விட்டு கொடுக்க வைப்பியோ, எல்லாம் உன் கையில்! இதையெல்லாம் நான் ரமணன் கிட்ட பேச முடியாது. ஒரு சமயம் ரமணன் நல்லா பேசினாலும் ஒரு சமயம் உன் வேலையை பாருன்னு திட்டிடுவான். சந்தோஷமா

இரு! அந்த சந்தோஷத்தை ரமணனுக்கும் கொடு. ஹி டிசெர்வ்ஸ் தி மோஸ்ட் அவுட் ஆப் யூ!!'' என்று சொல்லி அவள் நிறுத்த...

''ஐ அண்டர்ஸ்டான்ட்'' என்றாள் ஒற்றை வார்த்தையாக...

'இவ்வளவு பேசியிருக்கேன். ஒரு வார்த்தைல பதில் சொல்றா! சரியான கல்லுளிமங்கி! புருஷனும் பொண்டாட்டியும் இந்த விஷயத்துல மேட் பார் ஈச் அதர் தான்' என்று மனதிற்குள் கல்பனா அவள் வேலையை செய்ய ஆரம்பித்தாள்.

ரமணனும் ராமும் வர சாப்பிட எல்லோருக்கும் கல்பனா வைக்க ஆரம்பித்தாள், வரா நிற்க... ''நீயும் அவங்களோட உட்கார்ந்து சாப்பிடு!'' என்று அதட்டியவள், ''நீங்களும் உட்காருங்கத்தை'' என்று ராஜேஸ்வரியையும் அமர சொன்னவள் எல்லோருக்கும் பரிமாறினாள்.

''நீங்களும் உட்காருங்க அண்ணி!'' என்ற வராவிடம், ''இல்லை நான் அப்புறம் சாப்பிடறேன்!'' என்றாள்.

''ராமண்ணா உங்க பொண்டாட்டி ரொம்ப பொறுப்பா மாறிட்டா போல!'' என்று அவன் காதோடு ரமணன் சொல்ல... ''யார் ட்ரைனிங்!'' என்று பெருமையடிப்பது போல ராம் சொல்ல...

அவர்கள் மெதுவாக பேசினாலும் மற்றவர்கள் காதில் விழ, ''நிச்சயம் உங்க ட்ரைனிங் இல்லை! சாப்பிடுங்க!'' என்றாள் கல்பனா.

சாப்பிட்டு முடித்தவுடன் ராம் பிரசாத்தும், வெங்கடரமணனும், பேசிக்கொண்டு அமர்ந்திருக்க, ''குட்டியை தூக்கிட்டு வந்துடறேன்!'' என்று கல்பனா சொல்ல...

''இருக்கட்டும் அண்ணி, தூக்கத்துல எழுந்தா என்னை தேடுவா!'' என்று வரமஹாலக்ஷ்மி இவ்வளவு



நாட்கள் அவள் தன்னோடு தானே தூங்கினாள் என்று பதிலளிக்க...

திரும்பி அவளை முறைத்த கல்பனா, ரமணனை காட்டி... ''குட்டியை விட அவன் உன்னை தூக்கத்துல இவ்வளவு நாளா நிறைய தேடியிருப்பான். அப்படி இதுவரைக்கும் தேடியிருக்கலைன்னா! இனிமே தேட வை!, என்று அவளிடம் சொல்லிய படியே குழந்தையை தூக்கிக் கொண்டு சென்றாள்.

அவளையே பார்த்த வரா, வாய் வரை திருப்பி பேச வந்த வார்த்தைகளை மென்று விழுங்கினாள், ''ஏன் அவன் தான் தேடியிருப்பானா! நான் தேடியிருக்க மாட்டேனா!'' என்று...

''வள்ளிம்மா பேச சொன்னாங்க!'' என்று ரமணனுக்கு வரா ஞாபகப்படுத்த, அவன் போனை கையில் எடுக்கும் போதே அது அடிக்க ஆரம்பித்தது.

''எப்போ?...'' கிளம்பிட்டேன் என்றபடியே அவசரமாக ரமணன் எழ...

எல்லாரும் அவனையே பார்க்க... ''சிறையில கைதிங்களுக்கு இடையில் அடிதடி. நான் போகணும்'', என்றபடியே யூனிபார்ம் மாட்ட சென்றான்.

வரா பார்த்தபடியே நிற்க... ''போ வரா! ஹெல்ப் பண்ணு போ!'' என்று அவளை விரட்டினாள் கல்பனா.

அவள் மேலே செல்வதற்கு ஆன ஓரிரு நிமிடங்களுக்குள்ளேயே யூனிபார்ம் அணிந்திருந்தவன், ''எப்போ வருவேன்னு தெரியாது! தூங்கு வெயிட் பண்ணாத!'' என்று கூறி அவசரமாக செல்ல...

''இவ்வளவு நாட்களாக இவனில்லாமல் தானே தூங்கினோம், இந்த பக்கம் எட்டிக் கூடப் பார்க்கலை! நான்

போன் எடுக்கலைனா, என்னை விட்டுடுவானா!! இன்னைக்கு வந்து போன் பண்ணினா, நான் எடுக்கலைன்னு ரூல்ஸ் பேசறான்.

'சென்னை வந்து என்னை பார்க்க வரவேயில்லை. நான் இவனை பார்க்க கம்பத்துக்கு போனா, என்னவோ பேயை பார்த்த மாதிரி அவனோட அப்பா அம்மாவை பார்க்க வந்ததை கூட விட்டுட்டு உடனே அவசரமா ஓடிப் போயிடுவான். நானா இவனை என்னை கல்யாணம் பண்ணிக்கோன்னு அழுதேன். இடியட்!' என்று மனதுக்குள் அவனை நிற்க வைத்து பொரியத் துவங்கினாள்.

'நான் இவனை கூப்பிட்டா தான் வருவானா! வேணும்னா வரட்டும்! இன்னைக்கு வந்து பெரிய இவன் மாதிரி எனக்கு இன்ஸ்ட்ரக்சன் குடுக்கறான்! விட்டா எல்லாரும் இவனுக்கு கோயில் கட்டி கும்பிடுவாங்க போல!' என்று எண்ணியபடியே உறங்க முயற்சித்தாள்.

இத்தனை வார்த்தைகள் அவள் மனதில் ஓடினாலும், ரமணன் முன் பேசும் துணிவு அவளுக்கு இதுவரை வந்ததேயில்லை. என்றும் போல் மனதில் அவனை திட்டிக் கொண்டு தன்னை கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்து தூக்கத்தை வருவாயா? மாட்டாயா? என்று சண்டைக்கு அழைத்து கொண்டிருந்தாள்.

## 14

### அன்றைய நிகழ்வுகள்

வராவின் அவன் மீதான பயத்தை சற்று குறைத்து, தோழமை உணர்வை ஏற்படுத்தி கொண்டே ரமணன் ஊருக்கு சென்றான்.



அவன் அம்மா அங்கே "பெண் வீட்டார் பேச சொல்கிறார்கள், என்ன செய்யலாம்?" என்று கேட்க, "ராமநாதன் யாரையும் எதற்கும் கட்டாயப்படுத்தக் கூடாது" என்றார்.

"பார்த்தால் தானே அப்பா பிடிக்குதா இல்லையான்னு தெரியும். நான் ராமண்ணா கூடவே இருந்ததால, என்னை ஏன்னு கல்பனா கேள்வி கேட்கறா அப்பா?, நான் தெரியாதுன்னு சொன்னாலும், நம்ப மாட்டேங்கறா! அவளுக்கு தெரியும்பா நானும் ராமண்ணாவும் க்ளோஸ்ன்னு" என்றவனை...

"ஏன் பிடிக்கலைன்னு காரணம், பொண்ணுக்கு எல்லாம் சொல்வாங்களா?, என்றவரிடம், "இல்லைப்பா, பிரண்ட்ன்னு என்கிட்ட உரிமையா கேட்கறா" அவ்வளவு தான்.

"நானும் அவளோட பிரண்ட் தானேப்பா, எனக்கு தெரிஞ்சது அவளுக்கு தெரியணும். வேண்டான்னா விட்டுட்டு வேற பார்ப்பாங்க இல்லை கல்பனா வீட்ல! இப்படி இதை பிடிச்சு தொங்கிட்டு இருக்க மாட்டாங்க தானே!

"எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை ரமணா! எந்த பிரச்சனையும் நாளைக்கு வந்துடக்கூடாது. பொண்ணு விஷயம், ரொம்ப ஜாக்கிரதை! யார் மனசும் நம்மால சங்கடப்படக்கூடாது."

"என்னை நம்புங்கப்பா, நான் பார்த்துக்கறேன்!" என்றவனை... 'செய்' என்றது போல் ஒரு பார்வை மட்டுமே பார்த்தவர், அவரை வாயால் சொல்லாமல் செல்ல...

'இந்த பெருச சமாளிக்கறதுக்குள்ள ஒரு வழியா யிட்டோமே! இன்னும் ரெண்டு பேர் வேற இருக்காங்

கள்ள!' என்று மனதிற்குள்ளேயே என்ன செய்வது என்று யோசித்தான்.

பிறகு, 'ஏதாவது சர்டிபிகேட் வாங்க வேண்டும் என்று கல்பனாவை சென்னை வரவழைப்போம். அங்கே இருவருக்கும் தெரியாமல் பார்த்துக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுப்போம். பிடிக்கவில்லை என்றால் விட்டு விடுவோம்' என்று யோசித்தவன் மனது ஒரு பக்கம்...

''இது உனக்கு தேவையா! யாரோ என்னவோ செய்து கொள்கிறார்கள்! உனக்கு என்ன? அவன் வேண்டாம் என்று சொன்னால் அவன் இஷ்டம்! நீயேன் பார்ப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கிறாய்!'' என்று அவனை திட்ட...

இரண்டிற்கும் நடுவில் நடனமாடி, முடிவில் அவனுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை என்றாலும் சந்திக்க வைப்பது என்று முடிவெடுத்தான்.

சென்னையில் இறங்கியவுடன், காலேஜ் செல்வதற்கு முன், இவனும் கல்பனாவும் காபி அருந்துவது போல் காபி ஷாப்பிற்கு செல்ல... அங்கே ஏதோ வேலையிருப்பது போல் ராம் பிரசாத்தை வரவழைத்தான்.

ஒரு மனது உனக்கு இது தேவையா என்று இடித்து கொண்டிருக்க, ''விடுடா! டேய் விடுடா!'' என்று அவனுக்கு அவனே சமாதானம் சொல்லிக் கொண்டிருக்க...

அப்பொழுது பார்த்து கல்பனா ஏதோ சொல்ல... ''சும்மா தொணதொணங்காத காபியை சாப்பிடு!'' என்று எறிந்து விழுந்தான் ரமணன்.

கல்பனா முழித்தாள், 'என்னவாயிற்று இவனுக்கு, பேசாமல் எழுந்து சென்று விடலாமா!' என்று யோசித்து



கொண்டிருக்கும் போதே ''யார்கிட்டடா இப்படி கத்திட்டு இருக்க!'' என்று கேட்ட படியே ராம் வர...

திரும்பிப் பார்த்த கல்பனா, ''ஓஹ் இந்த திருவாளர் வர்றதுக்கு தான் இந்த ரீயாக்ஷனா!'' என்று நினைத்த படியே எழுந்து கிளம்பப் போனாள்.

''எங்க போறே?'' என்றான் ரமணன். ''இவனை மீட் பண்ண தான் கூட்டிட்டு வந்தியா!'' என்றாள்.

''அவனை இவனைன்னே பிச்சிடுவேன். எனக்காக தான் வந்திருக்காங்க! உன்னை விட பெரியவங்க! மரியாதையா பேசு!'' என்று அதட்டினான்.

''உன்னை பார்க்க் வந்தா என்னை ஏன் இருக்க சொல்லற?'' என்றாள் கல்பனாவும் பதிலுக்கு சூடாக...

''நீதானே என்னை ஏன் வேண்டாம்னு சொன்னாங்கன்னு... நீ என்னை பத்தி என்ன சொன்னன்னு... சண்டைக்கு வந்த! அதுதான் இந்த மீட்டிங்!'' என்று சரியாக திருப்பி கொடுக்க,

''ஆமா நீ என் பிரண்ட் நினைச்சு என்ன ரீசன்னு கேட்டேன், அது தப்பா'' என்றாள்.

அவள் குரல் அவளையும் மீறி கலங்கியது. ''அதுக்காக என்கிட்ட சொல்லாம இப்படி செய்வியா!'' என்றாள்.

''எப்படி செஞ்சேன்?'' என்றான் ஸ்ருதி இறங்கியவனாய் ரமணன்,

இவர்கள் இருவரும் வார்த்தையாடிக் கொண்டிருந்த போது கல்பனாவை தான் ராம் பிரசாத் கவனித்தான். நேரில் பார்க்கும் போது அவள் கலர் அவனுக்கு ஒரு பெரிய குறையாக தெரியவில்லை.

பார்க்க லட்சணமாக அட்ராக்டிவாக இருந்தாள். முன்பே நிறைய முறை பார்த்திருக்கிறான், ஆனால் அவனுக்கு போட்டோவில் தெரியவில்லை.

அவள் கலங்கியபோது ரமணனை திட்ட வேண்டும் போல் எழுந்த உந்துதலை கஷ்டப்பட்டு அடக்கினான். ரமணன்... அவன் அப்படி ஏதாவது செய்தால் தொலைத்து விடுவான் என்று தெரியும்.

ரமணன் அருகில் அமர்ந்தவன், ''எல்லாரும் உங்களையே பார்க்கிறார்கள்! என்ன செய்யறீங்க ரெண்டு பேரும்?'' என்றான் பொதுவாக,

சட்டென்று அமைதியான கல்பனா இருவரையும் பார்க்காமல் முகத்தை வேறு புறம் திருப்பினாள்.

ராம் பிரசாத்தை பார்த்த ரமணன், ''ஏற்கனவே அப்பாக்கு நிறைய சமாதானம் சொல்லி உங்க ரெண்டு பேரையும் பார்க்க ஏற்பாடு செஞ்சிருக்கேன்...''

''பிடிச்சிருந்தா பிடிச்சிருக்குன்னு சொல்லுங்க! பிடிக்கலைன்னா ஏன்னு சொல்லிடுங்க! ஐந்து நிமிஷம் டைம் தர்றேன்!'' என்றவனை,

'ரொம்ப தாராள மனசு' என்று மனதிற்குள் ராம் நினைக்க...

''இதை நீ தாத்தாகிட்ட வேற சொன்னியா! தொலைஞ்சேன்!'' என்றாள் பதட்டத்துடன் கல்பனா.

''தாத்தாவா யார் அது?'' என்று ராம் கேட்க... ''எங்கப்பா அவளுக்கு தாத்தா முறை ஆகணும்'' என்றான் ரமணன்.

பிறகு அவன் எழுந்து சென்றுவிட... ராம் கல்பனாவை பார்க்க... அவள் மறுபடியும் முகத்தை வேறு புறம் திருப்பி கொண்டாள்.

பீச் கலர் சுடிதார் அணிந்திருந்தாள். அது அவளுடைய நிறத்திற்கு பொருந்தியது. அவளை அழகாக காட்டியது. கொஞ்சம் நல்ல ட்ரெஸ்ஸிங் சென்ஸ் இருக்கும் போல என்று நினைத்தான் ராம்.



இப்படி யோசித்து கொண்டு அவளையே பார்க்க, சட்டென்று அவள் எழுந்திருக்க போக கை பிடித்து நிறுத்தினான். திடீரென்று கை பிடித்தவுடன், ''ஐயோ... என்ன பண்றீங்க விடுங்க!'' என்றாள் பதட்டமாக...

''அப்போ உட்கார்!'' என்றான் அமைதியாக. அமர்ந்தவளை, ''சாரி பார்க்காம பிடிக்கலைன்னு சொல்லிட்டேன்! இப்போ பார்த்தவுடனே பிடிச்சிருக்கு!'' என்றான்.

''இதை ஏன் என்கிட்ட சொல்றிங்க! யார் கிட்ட பிடிக்கலைன்னு சொன்னீங்களோ அவங்க கிட்ட சொல்லுங்க!'' என்றாள்.

அவள் எவ்வளவு கட்டுப்படுத்தியும் முகத்தின் மலர்ச்சியை மறைக்க முடியவில்லை.

பிறகு கல்பனாவும் பேசவில்லை, ராமும் பேசவில்லை. ஐந்து நிமிடத்திற்கு முன்னமே ரமணன் வந்துவிட, ''டேய் தாராள பிரபு! இன்னும் ஐந்து நிமிஷம் ஆகலைடா!'' என்றான்.

''எனக்கு இதுக்கு மேல பொறுமையில்லை. ஏன் பிடிக்கலைன்னு சொல்லிட்டியா!'' என்றான் ரமணன்.

''என்ன பிடிக்கலையா? நான் எப்போடா அப்படி சொன்னேன்!'' என்று ராம் கேட்க...

அவனை முறைத்த ரமணன், ''நான் சொல்லலை! நீ சொன்னன்னு, இவ சொன்ன!'' என்று கல்பனாவை காட்ட...

''அவ சின்ன பொண்ணு! தெரியாம சொல்லியிருப்பா!''

''அவ என்ன சின்ன பொண்ணா? பொண்ணு கருப்புன்னு யாரோ என்கிட்ட சொன்னாங்க...'' என்று ரமணன் போட்டு கொடுக்க, கல்பனாவின் பார்வை ராமை நோக்கி திரும்பியது...

''டேய்! கலர் கம்மின்னு சொல்லுடா!'' என்றான் ராம் பரிதாபமாக...

''அடாவடின்னு யாரோ சொன்னாங்க!''

''எவ்வளவு அமைதியா உட்கார்ந்திருக்கா பாருடா!'' என்றான்.

உண்மையாகவே கல்பனா அவள் இயல்பையும் மீறி அமைதியாக இருந்தாள். ராம் அவளை பிடித்திருக்கிறது என்று சொன்னதை அனுபவித்து கொண்டிருந்தாள்.

''அண்ணா! உங்களுக்கு நிஜமாவே பிடிச்சிருக்கா! எனக்கு இவளை பத்தி கவலை இல்லை! ஏன்னா நீங்க என்னை பார்க்க காலேஜ் வரும்போதே இவ செமையா லுக் விடுவா. ஆனா நான் அதை சீரியஸா எடுத்ததில்லை! நீங்க பயங்கர ஹான்ட்சம். இவ உங்க பக்கத்துல கொஞ்சம் கம்மி தான். யோசிச்சிக்கோங்க!'' என்றான்.

ஏதானாலும் ராம் பிரசாத்தின் வாய்வழியாக கேட்பதற்காக தான் மறுபடியும் மறுபடியும் ஏதாவது சொல்லி கொண்டிருந்தான் ரமணன். இந்த விஷயத்தில் குளறுபடி செய்தான் என்று தெரிந்தால் ராமநாதன் தொலைத்து விடுவார் என்று தெரியும். அப்பா சொல் தட்டாத மகன் வெங்கட ரமணன்.

''ரமணா! சொதப்பாத! எனக்கு அவளை பிடிச்சிருக்கு! போதுமா! அவளுக்கு என்கிட்ட அவ்வளவு சப்போர்ட் பண்ணிட்டு! இப்போ ஏன் மாற்றி பேசுற!'' என்றான் ராம் பிரசாத்.

''ஏய் அடாவடி! என்ன பண்ண நிமிஷத்துல அண்ணா மனசு மாறிட்டாங்க!'' என்ற ரமணனின் கூற்றிற்கு...

''ம்ம்!!!!! சொக்குப்பொடி போட்டேன்! கூப்பிட்டுட்டு வந்து, என்னை இவ்வளவு டென்ஷன் பண்ணிட்டு, இப்போ மனசு மாறிட்டாங்கன்னு என்ன கதைவிடற!



நான் கிளம்பறேன். நீ வந்தா வா... வராட்டி போ...'' என்று கல்பனா கோபமாக எழுந்து போக...

''டேய் ரமணா போறாடா!'' என்று ராம் சொல்ல...

''உங்களுக்கு வேணும்னா நீங்க கூட போங்க... நைட் எட்டு மணிக்கு ரயில்வே ஸ்டேஷன் கூட்டிட்டு வந்துடுங்க. நான் வீட்டிற்கு போறேன்!'' என்றவாறு ரமணன் கிளம்ப...

''டேய் படுத்தாதடா! எனக்கு வேலையிருக்கு!'' என்றான் ராம்.

''அதை உங்கம்மா கிட்ட சொல்லி, அவளை வீட்டுக்கு கூட்டிட்டு வந்து விட்டுட்டு போங்க. நான் கூட்டிட்டு வந்தேன்னு தெரிஞ்சது! எங்கம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க! ஆனா எங்கப்பா... பிச்சுடுவார் பிச்சு! என்னை!...'' என்ற படியே அமர்ந்த இடத்திலேயே அவன் அமர்ந்திருக்க, ராம் கல்பனாவின் பின்னோடு ஓடினான்.

வீட்டிற்கு ரமணன் செல்ல... அங்கே ராஜேஸ்வரி மட்டுமே இருந்தார். ரமணன் அவரிடம் எல்லாவற்றையும் கூறி, ''என்னுடைய பிரண்ட் அத்தை கல்பனா'' என...

இதற்கு மேல் அவருக்கு எந்த வார்த்தையும் தேவையிருக்கவில்லை, சுந்தரவல்லியிடம் பேசி... பெண் வீட்டாரிடம் பேசி... பெண் பார்ப்பதற்கு, நாள் குறித்து, அன்றே ஒப்பு தாம்பூலம் மாற்ற முடிவு செய்தனர்.

பிறகு ராமிற்கு போன் செய்து, கல்பனாவை அங்கே இங்கே அலைய வைக்காமல், வீட்டிற்கு கூட்டி வர சொல்ல... அவர்களும் வர எல்லாம் இனிதே நடந்தது.

மாலை ஆறு மணியாகியும் வரமஹாலக்ஷ்மி வீட்டிற்கு வரவில்லை. ''எங்கே??, என்று ரமணன் கேட்க... ராஜேஸ்வரி. ''டான்ஸ் கிளாஸ்'' என்றார்.

''இது எப்போ இருந்து?'' என்று ரமணன் கேட்க... ''கடந்த இருபது நாட்களாக!'' என்றார்.

போனும் நாட் ரீச்சபல் என்று வந்தது. அவர்கள் கிளம்பும் வரை வரா வரவில்லை. ரமணனுக்கு அவளை பார்க்காமல் கிளம்ப மனமில்லை. ஆனால் கல்பனாவை அழைத்து வந்திருப்பதால் ஊருக்கு அவளை கூட்டிப் போக வேண்டிய கட்டாயத்தில் இருந்தான்.

மனமில்லாமல் சென்றான். மனம் நிலைகொள்ளாமல் தவிக்க, வராவை சுற்றியே மனம் வட்டமிட்டது.

காலை கல்பனாவை வீட்டில் விட்ட அடுத்த நிமிடம், திரும்பவும் சென்னை கிளம்பினான்.

அவன் சென்ற போது மாலையாக, நேரே வீட்டிற்கு போய் நின்றான். ராஜேஸ்வரி, ''என்ன தம்பி? அதுக்குள்ள வந்துட்டீங்க... என்ன விஷயம்?'' என்றார் கலக்கமாக...

காலையில தான் எனக்கு தெரிஞ்சது அத்தை! இந்த வாரம் ரிசல்ட்ன்னு சொன்னாங்க, எல்லமே இந்த அட்ரெஸ் தான் எனக்கு! அதான் வந்துட்டேன்!'' என்றான்.

அது உண்மையும் கூட, ரிசல்ட் வந்தபிறகு வரலாம் என்றிருந்தான். ஆனால் தற்பொழுது வராவை பார்க்க வேண்டும் போல தோன்ற வந்தே விட்டான்.

''எங்க அத்தை வரா?'' என்றான். ''இன்னும் கிளாஸ்ல இருந்து வரலை தம்பி!'' என்றார்.

''எங்க இருக்கு கிளாஸ்? நான் போய் பார்த்துட்டு கூட்டிட்டு வரேன்!'' என்றான். அவர் இடம் சொல்ல... அங்கே போய் நின்றால்...

''அம்மாடி!'' என்று இருந்தது அவனுக்கு. ஏதோ காலேஜ் காம்பஸ்க்குள் நுழைந்த உணர்வு அவனுக்கு. டான்ஸ் கிளாஸ் என்றவுடன் அவன் கிளாசிகல் என்று நினைத்திருக்க அது வெஸ்டர்ன்.



ரூம் ரூமாக எல்லாவற்றிலும் ஆண்களும் பெண்களும் இருந்தனர். எல்லாரும் பிஸியாக அவரவர் மூவ்மென்ட்ஸ்ஸை சரி பார்த்துக்கொண்டிருந்தனர்.

சிலவற்றில் மாஸ்டர்கள் கிளாஸ் எடுத்து கொண்டிருந்தனர். எங்கே போய் இவளை தேடுவது என்று அறியாதவனாக, அங்கேயே அமர, சிறிது நேரம் கழித்து வரமஹாலக்ஷ்மி ஒரு பெரிய ஹால் உள்ளிருந்து வந்தாள்.

டைட் டி-ஷர்ட், டைட் பேண்ட் அணிந்திருந்தாள். அவளுக்கு பொருந்தியது. ஆனால் ரமணனுக்கு அந்த உடையில் அவளை பிடிக்கவில்லை. அவளோடு பேசியபடியே இன்னும் ஒரு யுவனும் யுவதியும் வர, இருவரையும் பார்த்தால் வேற்று கிரக வாசிகள் போல் அவன் கண்களுக்கு தோன்றியது.

அந்த யுவன் ஹேர் கலர் செய்து... ஹாஃப் பேண்ட் போல ஏதோ அணிந்திருந்தான். அந்த யுவதி பார்க்கவே வித்தியாசமாக தெரிந்தாள். ஷார்ட் ஸ்கிர்ட் அணிந்திருந்தாள். இதை அணிந்து கொண்டு இவள் எப்படி டான்ஸ் செய்திருப்பாள் என்று அவனுக்கு யோசனையாக இருந்தது.

இவன் அமர்ந்திருப்பதை பார்க்காமல் மிகவும் சுவாரஸ்யமாக ஏதோ பேசியபடி செல்ல... இவனும் வராவை அழைக்காமல் அவள் பின்னோடு சென்றான்.

அப்பொழுதும் அவள் கவனித்தாளில்லை, இவனுக்கு எரிச்சலாக வந்தது. அப்படி என்ன பின்னோடு யார் வருகிறார்கள் என்று கவனிக்காமல் பேச்சு என்று.

எப்போது தான் பார்க்கிறாள் என்று பார்ப்போம் என்று நினைத்தவனாக அவர்கள் செல்லும் போது பின் சென்றான். சிறிது தூரம் சென்றவுடனே நின்று பேசினர். அவனும் நின்றான். பின் நடந்தனர் அவனும் நடந்தான்.

இப்படியே ஒரு ஹாலை கடந்து... ரிசப்ஷனை கடந்து... வாயில் படி இறங்க... சுத்தமாக அரைமணி நேரம் ஆனது.

இதற்கு மேல் பொறுக்க முடியாது என்று வரா என்றவளை அழைக்க வாய்' திறக்க, ''டேய் மச்சி! உன் ஆளுடா!'' என்ற சத்தம் கேட்க... நின்று திரும்பிப் பார்க்க...

அங்கே இரண்டு மூன்று பேர் நின்றிருந்தனர். அவர்கள் சொன்னது சத்தமாக... நிச்சயம் சுற்றுப் புறத்தை உணர்ந் திருந்தால், அவள் காதில் விழுந்திருக்கும். ஆனால் அவள் திரும்பவில்லை.

''டேய் கஜினி முகமது மாதிரி நீயும் தினமும் படை எடுக்கற. ஒரு நாள் கூட... திரும்பிகூட பார்க்கலையே மச்சான்!'' என்று இன்னொருவன் கூற...

''எங்கடா போய்டப் போறா! அவளை மடக்கி காட்றனா இல்லையா பாருங்கடா!'' என்று சவால் விட... ரமண னுக்கு ஓங்கி அவனை ஒரு அறை விட வேண்டும் என்று கால்கள் அவன் பக்கம் இழுத்து செல்ல, திரும்பி இவளை பார்த்தால் இவள் காரில் ஏறி கொண்டிருப்பது தெரிந்து...

''வரா...!'' என்று கூப்பிட வாய் திறக்கும் முன்னே கார் பறந்திருந்தது.

## 15

### இன்றைய நிகழ்வுகள்

வெங்கட ரமணன் யூனிபார்ம் அணிந்தவுடனே அவ னிடத்தில் தானாகவே வரமஹாலக்ஷ்மியின் நினைவுகள்



விடைபெற்று, என்ன கலவரம்? என்ன செய்வது? என்பது மாதிரியான சிந்தனைகள் அவனை அறியாமல் ஆட் கொண்டன.

அங்கே சென்றால் அவன் நினைத்ததற்கும் அதிக மாகவே சூழல் இருந்தது. அடிதடி பலமாக இருந்தது போல... அங்கங்கே ரத்தம் வழியும் முகத்துடனோ கைகால் களில் அடிபட்டோ நிறைய பேர் அமர வைக்கப் பட்டு இருந்தனர்.

காவலர்களும் பத்து பேருக்கு மேல் அடிபட்டு இருந்தனர். மருத்துவமனைக்கு சில பேர்களை முன்னால் அனுப்பி வைத்திருப்பதாகவும் பாக்கி உள்ளவர்களை கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் வரச்சொல்லியிருப்பதாக அங்கிருந்த ஜெய்லர் சொல்ல...

நிலைமையின் தீவிரத்தை ஆராய முற்பட்டான். ''என்ன பிரச்சினை?, என...

''தெரியலைங்க சார். எப்பவும் போல நைட் சாப்பாடு டைம்... சாப்பாடு வாங்கிட்டு போயிக்கிட்டு இருந்தாங்க... என்ன நடந்ததுன்னே தெரியலை! ஒருத்தர் மேல ஒருத்தர் சாப்பாடு ப்ளேட் வீசிக்கிட்டு அடிதடில இறங்கிட்டாங்க. அவங்களுக்குள்ள யார் முன்ன வாங்கறது... பின்ன வாங்கறதுன்னு... பிரச்சனைன்னு நினைக்கிறேன்?'' என்றார்.

'அதுக்கெல்லாம் இவ்வளவு பெரிய அடிதடி வராது' என்று மனதிற்குள் நினைத்தவனாக அவரிடம் சொல் லாமல், ''அங்க ட்யூட்டி இருந்த ஆட்களை கூப்பிடுங்க, என்றவாறு சுற்றுப்புறத்தை ஆராய, அவர்கள் வந்த போது பார்த்தால் அவர்களுக்கும் அடிபட்டிருந்தது.

''என்ன நடந்தது?'' என கேட்க... ''தெரியலைங்க சார்! நல்ல பேசிட்டு சிரிச்சிட்டு இருந்தானுங்க. நாங்க கூட சத்தம் போட்டோம் அமைதியா போங்கன்னு...''

''நான் பார்த்துட்டே இருக்கறப்பவே... திடீர்னு தட்டை தூக்கி வீசி ஒருத்தனை பலமா தாக்கிட்டாங்க. அவனோட ஒரு ரெண்டு மூணு பேர் நின்னுட்டு இருந்த வங்க திருப்பி வீச ஆரம்பிச்சிட்டாங்க...'' என்றான்.

''அப்படியே ஒருத்தர் மாத்தி ஒருத்தர் மேல விழ, அடிதடியாகி, எங்களால கண்ட்ரோல் பண்ண முடியாத அளவுக்கு பெரிசாகிடுச்சு சார்!'' என்றான்.

அங்கேயே இருந்து... அடிபட்டவர்களை மறுபடியும் ஒரு ட்ரிப் ஹாஸ்பிடல் அனுப்பி விட்டு, பாக்கி உள்ள கைதிகளை தனியாக சந்தித்து ஏதாவது அறிந்து கொள்ள முடியுமா என்று பார்த்தான்.

எல்லாரும் சொன்ன பதில், ''அடிச்சிக்கிட்டாங்க... எங்க மேலயும் பட்டது, திரும்ப அடிச்சோம்'' என்பதே.

அடிபட்ட கைதிகளை பார்த்த பிறகு முடிவு செய்ய லாம் என்று நினைத்தவன், இதிலேயே கிட்ட தட்ட இரண்டு மணி நேரம் கடந்து விட்டிருக்க, நேரமும் பதி னொன்று என்று காட்ட வீட்டிற்கு போகலாமா என்று யோசித்தபடியே வண்டியில் ஏறி அமர்ந்தான்.

ஆனாலும் அவனுக்கு ஒரே யோசனையாக இருந்தது ஏதோ தான் விடுவது போல்...

வீட்டை நெருங்கும் சமயம் ஜீப்பை ஹாஸ்பிடல் நோக்கி திருப்ப சொன்னான், கைதிகளை பார்த்து விட லாம் என்று.

ஜி.ஹெச். அந்த நேரத்திலும் கைதிகளின் அட்மிஷ னால் பரபரப்பாக இருந்தது. விஷயம் கேள்வி பட்டு பத் திரிகையாளர்கள் வர துவங்கி இருந்தனர். அங்கிருந்த போலீசாருக்கு அவர்களை சமாளிப்பதே பெரும் பாடாக இருந்தது.



இவனை பார்த்தவுடனே எல்லாரும் இவனை நோக்கி படையெடுக்க...

சரமாரியான கேள்விகள், ''என்ன நடந்தது?, கைதி களுக்குள்ள தகராறா? இல்லை போலீசார்க்குள்ளும் கைதிகளுக்குள்ளும் அடிதடியா?, இல்லை யார் மீதாவது குறி வைத்து தாக்கப்பட்டதா?, உயிர் சேதம் ஏதாவது இருக்கா?'' என ஆளாளுக்கு கேட்க...

''எனக்கும் தெரியாது. கொஞ்சம் நேரம் முன்னாடி தான் இன்சிடன்ட் நடந்திருக்கு. சிறைச்சாலைக்கு போய் பார்த்துட்டு இப்போ தான் இவங்களை பார்க்க இங்கே வரேன். உடனடியா எதுவும் சொல்லமுடியாது. வெயிட் பண்ணுங்க! நிலைமையை பார்த்துட்டு சொல்லறேன்'' என்று அவன் சொல்லி கொண்டிருக்கும் போதே...

சட்ட அமைச்சரும், ஹோம் செக்ரட்ரியும் வர நிலைமை சீரியசாக மற்றவர்களுக்கு தோற்றமளிக்க ஆரம்பித்தது.

அவர்களோடு சேர்ந்து ஒரு கும்பலே வர, எல்லோரை யும் வாயிலிலேயே நிறுத்த சொல்லி, சட்ட அமைச்சரை யும் ஹோம் செக்ரட்ரியையும் இவனே அழைத்து சென்றான்.

அங்கே கிட்ட தட்ட இருபது பேர் அட்மிட் ஆகியிருந் தனர். அதில் ஒருவன் ''சுப்பிரமணி, விசாரணைக் கைதி. அவன் மருந்தின் உதவியோடு உறக்கத்தில் இருந்தான். இவனுக்காக நடத்தப்பட்டதோ இது என்று ரமணனுக்கு சந்தேகமாக இருந்தது.

அவர்கள் மட்டுமல்லாமல் சிறைச்சாலையில் அங்கேயே காயங்களுக்கு முதலுதவி நடந்து கொண்டிருந்தது. அப்படி ஒரு முப்பது நாற்பது பேர் இருந்தனர்.

அமைச்சர் விவரம் கேட்க, ''இப்போ தான் என்ன நடந்தது தெரிஞ்சிக்க முயற்சி பண்ணிட்டு இருக்கேன்'' என்றான்.

அதற்கு சட்ட அமைச்சர், ''நாளைக்கு சட்ட சபை கூட்டம் இருக்குது. எல்லாரும் என்ன நடந்ததுன்னு கேள்வி கேட்பாங்க... என்ன சொல்லட்டும்? இத்தனை பேர் அடிபட்டிருக்காங்க'' என்றார்.

''சட்டம் தன் கடமையை செய்யும்ன்னு சொல்லுங்க சார்!'' என்றான்.

''என்னங்க இப்படி பேசறீங்க...'' என்று அவர் கேட்க... ''வேற என்ன சார் சொல்ல முடியும். தெரிஞ்சா தானே சொல்ல முடியும்!'' என்றான்.

'இவன் என்னடா இப்படி பேசுகிறான், அதுவும் ஒரு அமைச்சரான தன்னிடம்' என்று நினைத்த அவர்... 'இவனிடம் கடுமையாக பேசுவதா... எனக்கு தெரிஞ்சாகணும், உடனே ஆக்ஷன் எடுங்க என்று பேசுவதா...' என்று தடுமாறினார்.

''சார்! பார்த்துட்டீங்கன்னா கிளம்புங்க, நீங்க இங்க ரொம்ப நேரம் இருந்தீங்கன்னா, நான் உங்களோடயே இருந்தா... வேற வேலை பார்க்க முடியாது. அதுவுமில்லாம அதுக்கு அடிதடின்னு தெரியலை, உங்களை யாராவது தாக்கிட்டா, ரிஸ்க் எடுக்க முடியாது சார்...''

''நாளைக்கு நான் சொன்னதுக்கு அப்புறம் வந்து பாருங்க'' என்று அவரை இடத்தை விட்டு கிளப்ப, ஹோம் செக்ரட்ரி, ''என்ன கேட்பது?'' என்று தெரியாமல் அவருமே குழம்பினார்.

அவ்வளவு தான் என் பேச்சு முடிந்தது என்பது போல... ''வாங்க சார்!'' என்று இருவரையும் அழைத்து கொண்டு... கார் வரை வந்து அவர்களை ஏற்றி...



''நாளைக்கு காலைல எனக்கு ஏதாவது தெரிஞ்சு, அதை வெளில சொன்னா பிரச்சினை இல்லைன்னு, நீங்க பீல் பண்ணினா... உங்களுக்கு சொல்றேன்!'' என்று உள்ளே சென்று விட்டான்.

'இவன் என்னடா இப்படி சொல்கிறான்' என்று அமைச்சரும் செக்ரட்ரியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

அவன் உள்ளே செல்லும் வரை பார்த்திருந்த பத்திரிகையாளர்கள் இவர்களை சூழ, ''இன்வெஸ்டிகேஷன் போயிட்டு இருக்கு... நிலைமை கட்டுக்குள் இருக்கு...'' என்று சொல்லிய படியே அவர்களும் கிளம்பினர்.

## 16

### அன்றைய நினைவுகள்

'முதலில் அந்த கலாட்டா செய்த பையன்களை நாலு தட்டு தட்டலாமா' என்று நினைக்க... பிறகு 'பசங்க இப்படி தான் கமெண்ட் செய்வார்கள் நாம் தான் ஜாக்ரதையாக நடந்து கொள்ள வேண்டும். இப்படி தன்னை சுற்றி யார் என்ன பேசுகிறார்கள், யார் வருகிறார்கள் என்று தெரியாமலேயே, இந்த வரா நடந்து கொள்ளலாமா?' என்று வரமஹாலக்ஷ்மியின் மேல் கோபம் வந்தது.

அந்த இடத்தை விட்டு எந்த சலசலப்பும் செய்யாமல் அகன்றான்.

வீட்டிற்கு வரா வந்தவுடனே, ராஜேஸ்வரி... ''எங்கே ரமணன்?'' என்று கேட்க இவள் புரியாமல் முழித்தாள்.

''ரமணன் தம்பி உன்னை கூட்டி வர்றேன்னு வந்தாங்களே...'' என...

''இல்லையேம்மா!! நான் அங்கே இருந்து தான் வர்றேன்!'' என்றாள் வரா.

''எங்கே போயிருப்பாங்க? இப்போ ஒரு அரை மணி நேரம் முன்னாடி நான் டான்ஸ் கிளாஸ்ல இருக்கேன், வரா வந்துட்டாளான்னு போன் பண்ணினாங்களே!'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே ரமணன் வந்து விட...

''இவளை பார்க்கலையா தம்பி!'' என்றார் ராஜேஸ்வரி.

''நான் பார்த்தேன்! அவ பார்க்கலை!'' என்றான் ரமணன் வராவையே பார்த்தவாறு, அவள் பதில் பேசும் முன்னரே...

''அப்படி என்ன அரட்டை! சுற்றி யார் இருக்காங்க, என்ன பேசறாங்கன்னு தெரியாம, நீ என்ன சாதாரணமான பிரஜையா? மத்திய அமைச்சரோட பொண்ணு இப்படி தான் உன் நடவடிக்கை இருக்குமா, நீ இன்னும் சின்ன பொண்ணு இல்லை, இப்படி எல்லாம் நடந்துக்க...

''உன் கூட ரெண்டு ஜந்துக்கள் இருந்ததே, அவங்க யாரு?'' என்றான்.

பதில் பேசாமல் நின்றிருந்தாள். அவனும் நிற்க வைத்து தான் கேள்வி கேட்டு கொண்டிருந்தான்.

அவள் முகம் அவமானம், கோபம், அவனை எதிர்த்து பதில் பேச முடியாத இயலாமை, என்று அனைத்து பாவங்களையும் காட்டியது.

இருந்தாலும் ஸ்ருதி இறக்காமல் அவளை பார்த்து ரமணன் கேள்வி கேட்டு கொண்டிருந்தான். ராஜேஸ்வரி



ஏதோ நடுவில் பேச வர அவளையும் பார்வையாலேயே அடக்கினான்.

என்ன செய்வது என்று தெரியாமல் அவரும் நின்றிருந்தார்.

''உன்கூட இருந்த ரெண்டு பேரு யாருன்னு கேட்டேன்?'' என்று மறுபடியும் ஒரு சத்தம் போட... அவள் உடம்பு தூக்கி போட்டது என்றே சொல்ல வேண்டும்.

'நீ யார் என்னை கேள்வி கேட்கறதுக்கு உன் வேலையை பார்த்துட்டு போடா...' உதடுகளின் நுனி வரை வந்த இந்த வார்த்தைகளை உதடுகள் உச்சரிக்கும் வேலையை செய்யவே இல்லை.

ரமணன் செய்த தவறு... இளையதலைமுறையினர் அவர்களை திட்டினால் பொருத்துக்கொள்வர், ஆனால் அவர்களின் நண்பர்களை திட்டினால் பொங்கி எழுவர். அந்த வயதுக்கே உரிய இயல்பு அது.

அழுகையை அடக்கியவாறே, ''என் பிரண்ட்ஸ் என்றால். பார்க்கவே கண்றாவியா இருக்காங்க! அவங்க ஸ்டைலும் ட்ரஸ்சும் பார்க்கவே சகிக்கலை! கலர் கலரா தலையிலயும் உடம்புலயும் என்னத்தையோ அப்பிட்டு இருக்காங்க. அவங்க உன் பிரண்ட்ஸ்ஸா, எப்படி பழக்கம்?''

''டான்ஸ் கிளாஸ் மூலமா?'' என...

''என்ன அத்தை பண்றீங்க நீங்க?... ராம் அண்ணா என்ன பண்றாங்க? எங்க கிளாஸ் போறா, யாரோட பழகறா, பார்க்க வேண்டாமா...'' என்று தன் கோபத்தை அவர்கள் மேல் திருப்ப...

இது தான் சமயம் என்ற வரா வழக்கம் போல் அந்த இடத்தை விட்டு ஓடிப்போனாள்.

அவள் சென்ற பிறகு ராஜேஸ்வரி, ''இல்லை தம்பி, இவ கேட்டான்னு ராம் போய் பார்த்து தான் சேர்த்து விட்டான்'' என்றார்.

ராம் பிரசாத் வந்தவுடன் அவனையும் ஒரு பிடி பிடித்தான்.

''என்ன செஞ்சிட்டு இருக்கீங்க வீட்ல எல்லாரும், அவ என்ன பண்றா? எங்க போறா? யார் கூட பழகறா? எதுவுமே பார்க்கறது இல்லையா...

''என்ன டான்ஸ் ஸ்கூல் அது? கத்துக்கணும்னா வீட்டுக்கு வரவைக்கக் கூடாதா.

''இவ நண்பர்கள்ன்னு ரெண்டு பேர் கூட பேசிட்டே நம்ம வீட்டு ஹால்ல இருந்து வாசல் தூரத்தை அரைமணிநேரம் நடக்கறா. எனக்கு அதுங்க ரெண்டு பேர் ஸ்டைலும் பார்த்தா வாமிட் வருது.

''அந்த பொண்ணு மினி ஸ்கர்ட் போட்டுட்டு டான்ஸ் கிளாஸ் வருது. அதை போட்டுட்டு டான்ஸ் பண்ணின்னா பசங்க எல்லாம் வாயை தொறந்துட்டு பார்ப்பாங்க. அந்த பொண்ணோட இவ சுத்துனா இவளையும் பார்க்க செய்வாங்க.

''இந்த வயசுல பொண்ணுங்க எல்லாம் சென்டர் ஆப் அட்ராக்‌ஷனா இருக்கக் கூடாது. எத்தனை பிரச்சினை வரும் தெரியுமா.''

''வெளில வரும்போதே ரெண்டு பேர் நின்று மடக்கி காட்றேன் மச்சின்றான் இவளை பார்த்து... ஆனா அது கூட இவளுக்கு தெரியலை.

''இப்படி என்ன நடக்குது தன்னை சுற்றின்னு தெரியாம பொண்ணுங்க இருக்கலாமா? இவளுக்கு



என்ன தெரியும்னு நீங்க அவளை தனியா டிரைவிங் வேற விடறீங்க? பறக்கறா...

''அப்பா மினிஸ்டர்ன்றப்போ மத்தவங்களை விட நாம இன்னும் ஜாக்ரதையா இருக்கணும். சின்னதா இவ ஏதாவது பண்ணின்னா கூட அவர் மேல ரிஃப்ளக்ட் ஆகும்.

ராம் பிரசாத்திற்கு திரும்ப பேசும் சந்தர்ப்பத்தையே வெங்கட ரமணன் கொடுக்கவில்லை.

மிகவும் டென்ஷனில் ரமணன் இருப்பது புரிந்து, ''சரி நீ எப்படி சொல்றியோ பார்த்துக்கலாம்'' என்ற அவனை சமாதானப்படுத்தி, அவன் தங்கையை பார்க்க சென்றான்.

தன்னிடமே இப்படி பேசுபவன் அவளையும் கட்டாயம் பேசியிருப்பான் என்று தெரிந்து உள்ளே போக...

அழுது கொண்டிருந்தாள் வரமஹாலக்ஷ்மி, அவள் அன்னையும் அங்கே தான் இருந்தார் அவளை சமாதானப் படுத்தி கொண்டு,

ராமை பார்த்ததும் அவளுக்கு அழுகை, கோபம், ஆத்திரம், எல்லாம் ஒரு சேர பொங்கியது.

''யார் அவன் என்னை கேள்வி கேட்க?... யார் அவன்?'' என்று ஆத்திரமாக கத்தினாள்.

''என்னோட அப்பா, அம்மா, அண்ணா யாரும் கேட்கறது கிடையாது. என்னை பேசறது கிடையாது. இவன் யார் என்னை திட்றதுக்கு. யார் குடுத்தா அந்த உரிமையை?''

''எப்போ பார்த்தாலும் பெரிய இவன் மாதிரி என்னை திட்டுறது இல்லைனா மிரட்டறது.''

''முதல்ல இவன் எதுக்கு என்னோட கிளாஸ்க்கு வந்தான். என்னை உளவு பார்க்கறானா, இடியாட்டிக் ஃபெல்லோ, நான் என்ன சின்ன பொண்ணா என்னை பார்த்துக்க எனக்கு தெரியாது. அப்படியே ஏதாவது பிரச்சனைன்னா நான் ஃபேஸ் பண்ணிக்கறேன், இவனை யாரு கூப்பிட போறா...

''என் பிரண்ட்ஸ் பார்த்து ஐந்துங்கறான். இவன் கூட தான் பார்க்க சகிக்கலை. இவனை நாம நம்ம வீட்ல வெச்சிருக்கலை! இவனோட பேசலை! அவனவன் அவன் வேலையை பார்க்கணும்! கலர் கலரா அப்பியிருக்காங் கலாம். இவன் நம்ம மேல பட்டா இவன் கலரே மை மாதிரி அசிங்கமா நம்ம மேல ஒட்டிக்கும். எவரையும் காயப்படுத்தும் வார்த்தைகள் இவை.''

அப்படி பிழிய, பிழிய அழுகையோடு சேர்த்து கத்தி கொண்டிருந்தாள். ''எங்க வீட்ல வந்து இருந்துட்டு, என் உயிரை எடுக்கிறான். பேசாம என்னை எங்கேயாவது ஹாஸ்டல்ல கொண்டு போய் சேர்த்துடுங்க, நான் போயிடறேன்'' என்று தேம்ப...

அந்த நேரத்தில் அவளை தேற்றுவதே அவளுடைய அன்னைக்கும் அண்ணனுக்கும் முக்கியமாக தோன்ற, ''விடு பாப்பா பார்த்துக்கலாம்'' என்று அவளை தேற்றி கொண்டிருந்தனர்.

இது அத்தனையையும் வெங்கட ரமணன் கேட்டு கொண்டிருந்தான் என்பது அவர்கள் அறியாதது.

வரமஹாலக்ஷ்மி அழுது கொண்டே போனதை பார்த்தான். பிறகு பின்னோடு ராஜேஸ்வரியும் ராமும் போவதை பார்த்தவன், அவளை சமாதானப்படுத்த என்று இவனும் அங்கே வர, அவள் குரலில் ஒலித்த



ஆத்திரம் அவனை வெளியே நிறுத்த... இதையெல்லாம் கேட்க நேர்ந்தது.

என்ன மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரிய வில்லை. அவளுடைய, ''யார் அவன் என்னை கேள்வி கேட்க'' என்ற வார்த்தை அவனை மிகவும் காயப்படுத் தியது.

அத்தனையிலும் ராமும், அவன் அன்னையும் மறுத்து ஒரு வார்த்தை பேசாமல் அவளை சமாதானப்படுத்தி கொண்டு இருப்பதை பார்த்தவுடன் அந்த கேள்வி அவனை மறுபடியும் மறுபடியும் தாக்கியது.

''யார் அவன் என்னை என் வீட்டில் இருந்து கொண்டு கேள்வி கேட்க...''

உள்ளே போகாமல் அமைதியாக திரும்ப வந்தவன்...

சிறிது நேரம் கழித்து ராமும் ராஜேஸ்வரியும் வர, ''அத்தை இப்போ தான் சொன்னாங்க, ரிசல்ட் இன்னும் ஒரு மாதம் தள்ளி போகுமாம். அதனால நான் ஊருக்கு கிளம்பறேன்'' என்று கூறியவன்,

முகத்தில் எதையும் காட்டாது, ''அவளை பார்த்துக் கோங்க! ரொம்ப திட்டிட்டேன்! சாரி கேட்டேன்னு சொல்லுங்க!'' என்றபடியே கிளம்பினான்.

ராம் பிரசாத், ''நாளைக்கு போகலாண்டா'' என்ற போது கூட ''இல்லை அண்ணா, அப்பாவோட பேசினேன், வான்னு சொன்னாங்க!'' என்று விட்டான்.

ராமநாதனின் எந்த முடிவுக்கும் வார்த்தைக்கும் எதிர்த்து பேசும் தைரியம் யாருக்கும் கிடையாது. ''நான் வருகிறேன் டிரெயின் ஏற்றி விட'' என்ற போது கூட... ''வேண்டாம்! நான் போயிக்கறேன்'' என்று யாரையும் கூப்பிடாமல் கிளம்பி விட்டான்.

ராமிற்கு சந்தேகமாக இருந்தது. ஒரு வேளை வரா பேசியதை கேட்டிருப்பானோ என்று, அவனிடம் எப்படி கேட்பது என்று தெரியவில்லை.

ஸ்டேஷன் போனால் இன்னும் ட்ரெயின் வர இரண்டு மணிநேரம் இருந்தது. அமைதியாக அமர்ந்து கொண்டான். என்ன செய்தாலும் மனம் ஆறுவது போல் தெரியவில்லை.

''இவன் யார் என்னை கேள்வி கேட்க?'' என்ற வரா வின் கேள்வியே அவனை தாக்கியது, அவனை யோசிக் கவும் வைத்தது, ''அவன் யார் அவளுக்கு'' என்று.

மறுபடியும் அதே யோசனை அவனிடம் சொன்னது, ''அவன் அவளுக்கு யாருமில்லாமல் போய்விட்டான்... ''யார் அவன் என்னை கேள்வி கேட்க...'' என்று சொன்ன போது, ''அவள் மட்டும் அவனுக்கு என்னவாகிவிட முடியும்?'' என்று...

ராம் பிரசாத்தும் ஒன்றும் பேசவில்லை. அந்த வார்த்தைக்கு ராஜேஸ்வரியும் ஒன்றும் பேசவில்லை. அதுவே சொல்கிறதே, ''நீ யாருமில்லை அவளுக்கென்று'' என்று மனம் எடுத்துரைக்க,

இன்னொரு புறம் அதே மனம், ''நீ என்ன எதிர் பார்த்தாய்'' என்று சாட தலையை பிடித்துக் கொண்டு அமர்ந்தவன், ட்ரெயின் வரும் வரையில் சுய அலசலில் இருந்தான். ஆனால் விடை காண விருப்பமில்லாத சுய அலசல்.

விடை தெரிந்தது, புரிந்தது, அவளை பிடித்திருந்தது. ஆனால் அது அவனுக்கே அப்பொழுது பிடிக்க வில்லை.



திடீரென்று தன்னையே தொட்டு அழுத்தி இழுத்து பார்த்தான், மை போல ஏதாவது வருகிறதா என்று. கண்களில கண்ணீர் வந்து விடுமோ என்று அவனுக்கே பயமாக இருந்தது.

ட்ரெயின் வரும் வரையில் அமைதியாக அமர்ந் திருந்தவன், ட்ரெயின் வந்தவுடன் முயன்று தன்னுடைய தாக்கத்திலிருந்து வெளியே வந்தான். அவனுக்கு தெரியும் அவனுடைய சிறு முக சுணக்கமும் அவனுடைய அன் னைக்கும் தந்தைக்கும் வருத்தத்தை கொடுக்கும் என்று...

வீட்டிற்கு வர ராம் பிரசாத் கல்பனாவின் திருமணத்தை பற்றிய பேச்சுகளே இருக்க...

இவனுடைய வித்தியாசம் யாருக்கும் தெரியவில்லை. இவனும் வித்தியாசத்தை காட்டவில்லை. இரண்டு மூன்று முறை ராம் போனில் அழைத்த போது கூட நன் றாகவே பேசினான்.

ராமாக வரமஹாலக்ஷ்மியின் பேச்சை எடுத்தபோது கூட, ''அவளுக்கு விவரம் பத்தாது அண்ணா நன்றாக பார்த்து கொள்ளுங்கள்'' என்று முடித்து வேறு பேச்சை எடுத்து திசை திருப்பி விடுவான்.

ரிசல்ட் ஓரிரு தினங்களிலேயே வர, ஐ.பி.எஸ் காடரில் முதல் ஐந்து இடங்களில் வந்திருந்தான். எல்லாரும் சந்தோஷத்தை அனுபவிக்க அவனால் தன்னுடைய இத்தனை வருட உழைப்பின் வெற்றியை அனுபவிக்க முடியவில்லை.

அதுவும் இந்த மாதிரி நல்லதனமாக நடந்துக்கொள் ளவே முடியவில்லை. தன்னுடைய கோபத்தை வரா மீது... அதை கேட்டு கொண்டிருந்தவர்கள் மீது காட்ட

வேண்டும் என்று தோன்றினாலும், அது சிவசங்கரனுக்கு மிகுந்த வருத்தத்தை கொடுக்கும் என்றுணர்ந்து... இதனை தெரிந்தால் தனது தந்தையும் அவர்களோடான உறவை தொடர்வாரா இல்லையா தெரியவில்லை?

சிவசங்கரனுக்கு தன்னுடைய தந்தை எத்தனை முக்கியமானவர் என்று அவன் அறிவான். அதனாலேயே அமைதியாக விட்டுவிட்டான். அதுமல்லாமல் கல்பனாவுடன் ராமின் திருமணம் வேறு நெருங்கியது. சில தினங்களே இருந்தது.

அதற்குள் இன்டர்வியூ வர இவன் டெல்லி கிளம்ப... இவன் சென்னை வராததால் சிவசங்கரன் தன்னுடைய குடும்பத்தை அழைத்து கொண்டு இவனை பார்த்துவிட்டு அப்படியே கல்யாண வேலைகளையும் ஆரம்பித்து வைக்க வந்தார்.

முயன்று ராமோடும் ராஜேஸ்வரியோடும் பேசினாலும் வராவோடு பேசவே முடியவில்லை. அவள் உணர்ந்து பேசியிருக்க மாட்டாள் கோபத்தில் பேசியிருப்பாள் என்று அவனை அவனே சமாதானப்படுத்தி கொண்டாலும் முடியவேயில்லை.

வரா அவன் முகத்தை அடிக்கடி, அவன் வந்து பேச மாட்டானா என்று பார்ப்பது போல தோன்றியது.

வரா தன்னை பார்க்கும் பொழுது, அவன் அவள் புறம் திரும்பவேயில்லை. ஆனால் அவள் பார்க்காத பொழுது அவளை மட்டுமே பார்த்தான்.

எல்லோரிடமும் சொல்லி கொண்டு கிளம்ப தன்னிடம் சொல்வானா என்று வரா பார்ப்பது போல தோன்றினாலும்... அது நிஜமா பொய்யா என்று அவள் கண்களுக்குள் பார்க்க அவனுக்கு விருப்பமில்லை. கிளம்பிவிட்டான்.



வரமஹாலக்ஷ்மிக்கு அவனை பார்த்து ஒரு ஆல் தி பெஸ்ட் சொல்ல வேண்டும் போல தோன்றினாலும் அவன் பார்வையே வராவை அவனை நெருங்க விடவில்லை.

டெல்லி சென்று இன்டர்வியூ அட்டென்ட் செய்து வந்தான். அவனுக்கு கிடைக்கும் என்று அவனுக்கு நன்றாகவே தெரியும். அதனால் எந்த டென்ஷனும் இன்றி நன்றாகவே மிக நன்றாகவே செய்தான்.

அந்த சந்தோஷத்தை அனுபவிக்க முயன்றபடியே வந்து ராம் பிரசாத் கல்பனாவின் திருமணத்தில் கலந்து கொண்டான். அவன் இயல்பே மிக சில நேரங்களில் தான் சிரிப்பான். அவன் தந்தைக்கு நேர் எதிர்.

இப்போது அதுவும் காணாமல் போய் இருந்தது. ஐ பி எஸ் ஆகும் முன்னே அதன் லட்சணங்கள் பல அவனிடம் தோன்றி எல்லோரையும் அவனிடத்தில் இருந்து தள்ளி நிறுத்தியது.

திருமணம் மதுரையில் ரிசப்சன் சென்னையில் என்றிருக்க... இவன் திருமணத்தை மட்டுமே அட்டென்ட் செய்ய முடியும். இவன் ஐ பி எஸ் செலக்ஷன் வந்திருந்தது.

ஹைதராபாத்தில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் அகாடமியில் இரண்டு வருட ட்ரைனிங். சுந்தரவல்லிக்கு மிகவும் சந்தோஷம். ஆனால் ராமநாதன் அவன் மிகவும் பொறுப்பான ஒரு பதவிக்கு போகப்போகிறான் என்றுணர்ந்து சற்று கவலையில் இருந்தார்.

அவனிடம் தனியாக... ''ரமணா எக்ஸாம் எழுதி உங்கம்மா இஷ்டப்படி செலக்ட் ஆகிட்ட.

''ஆனாலும் உனக்கு போகணும்னு எந்த கட்டாயமுமில்லைப்பா. இஷ்டமிருந்தா போ, இல்லைன்னா இருந்

துக்கோ, நான் உங்க அம்மாவை சமாளிச்சிக்கறேன்'', என்றார்.

''இல்லைங்கப்பா, முதல்ல அம்மாவோட கட்டாயத்துக்காக தான் பா இதுல இறங்கினேன். இப்போ எனக்கு இது பிடிச்சிருக்கு பா, எப்போ எந்த நிமிஷம் என் மனசுல இது வேண்டாம்னு தோணினாலும் உடனே வந்துடுவேன்'' என்று வாக்கு கொடுத்தபடியே கிளம்பினான்.

எல்லாரும் திருமணத்தில் பிஸியாக இருக்க... இவன் தனியாக இருக்கும் சந்தர்ப்பம் பார்த்து வரமஹாலக்ஷ்மி இவனோடு பேச வந்தாள்.

ராம் பிரசாத் அவளிடம் கூறியிருந்தான், ''அன்னைக்கு நீ பேசுனதை ரமணன் கேட்டிருப்பான் போல'' என்று...

உண்மையை சொல்லப்போனால், அன்றைக்கு அவள் என்ன பேசினாள் என்றே அவளுக்கு ஞாபகமில்லை. அவளுக்கு இருந்த கோபத்தில் ஆத்திரத்தில் கத்தினாள்.

எப்படி பேச்சை ஆரம்பிப்பது? என்ன சொல்லி சாரி கேட்பது? என்றே புரியவில்லை. இவள் என்ன பேசினாள் என்பதும் இவள் நினைவில் இல்லை. அதை கேட்டானா என்றும் அவளுக்கு தெரியாது.

ரமணன் அவன் அம்மாவோடு ஏதோ எடுப்பதற்காக மண்டபத்தில் அவர்கள் இருந்த ரூமிற்கு போக. சுந்தரவல்லி இருக்கிறார் என்று தைரியமாக அவனை விஷ் செய்யும் நோக்கத்தோடு வரமஹாலக்ஷ்மி போக...

அவளுடைய நேரம் சுந்தரவல்லி ராமநாதன் அழைக்கிறார் என்று உடனே அந்த ரூமை விட்டு வெளியேற... வந்தவர் இவளை பார்த்து ''இரு மகாலக்ஷ்மி வந்துடறேன்'' என்று போனார்.



இவளை பார்த்த ரமணன் ஒன்றும் பேசாமல் ஏதோ எடுத்து வைத்துகொண்டிருக்க, ''கன்க்ராட்ஸ்'' என்றாள்.

அவன் திரும்ப எதுவும் பேசாமல் அவன் வேலையிலேயே மும்முரமாயிருக்க, அவளுக்கு இருக்கவா போகவா என்று தோன்ற...

திரும்ப போனாள்... ''இங்க வாடி'' என்று ரமணனின் குரல் கேட்க, வேறு யாராவது இருக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அவளின் செய்கையை பார்த்திருந்தவனின் கோபம் அதிகமாக... ''உன்னை தான் இங்க வாடி'' என்றான்.

ரமணன் இந்த மாதிரி பேசி வரா கேட்டதில்லை என்பது ஒரு புறமிருக்க, யாருமே வராவிடம் இந்த மாதிரி பேசியதில்லை.

நடுக்கம் எடுக்கும் போல இருந்தது அவளுக்கு. அவளால் அந்த இடத்தை விட்டு அசையக் கூட முடியவில்லை. ரமணனே அவள் அருகில் வந்தான்.

''நீ என்ன சுவர் கிட்டயா பேசின? என்னவோ வெங்கி மங்கின்னு ஸ்டைலா கூப்பிடுவியே... உனக்கு தெரியாதவங்களை எல்லாம் இப்படி தான் கூப்பிடுவியா...''

''என்னவோ பெரிய இவ மாதிரி உங்க அண்ணனை பார்த்து கேட்டியே இவன் யாரு என்னை கேள்வி கேட்கன்னு... ஆமா நான் யாருடி உனக்கு?'' என்றான்.

வரமஹாலக்ஷ்மி மூச்சு விடும் சத்தம் கூட கேட்குமோ என்று அஞ்சி மெதுவாக மூச்சு விடுபவள் போல இருந்தாள்.

''நான் தொட்டா மை அப்பிக்குமா? எங்க என்னை தொடுடி அப்புதான்னு பார்க்கலாம்.''

கண்களில் வராவுக்கு நீர் திரண்டது. ''ஏய்'' என்றவன்.. ''கண்ல தண்ணி வந்தது, என்ன பண்ணு வேன்னு தெரியாது'' என்று மிரட்டினான்.

பின்பு அவள் கையை பிடித்தவன், அவளுடைய கையின் மேற்புறத்தை தன்னுடைய இன்னொரு கையில் மேல்புறத்தில் வைத்து தேய்த்தான்.

அதை பட்டென்று விடுவித்தவன் ''பாரு, ஏதாவது மை ஒட்டியிருக்கான்னு'' என்றவன்...

''ஆனா பாரு, உன் கையில் இருந்து வெள்ளையா ஏதாவது ஒட்டியிருக்கான்னு. நான் அப்புனாலாவது அது மை மாதிரி தெரியும். ஆனா நீ அப்புனா அது... அவளை எப்படியாவது காயப்படுத்தி விடும் நோக்கத்தில்... ''எச்சில் மாதிரி இல்லைனா வெண் குஷ்டம் மாதிரி தோணும்'' என்றவன்... அந்த வார்த்தைகளின் தாக்கத்தில் இருந்து அவள் வெளி வரும் முன்னரே...

''என் முன்னாடி நிக்காத! போடி, போ!'' என்று அவன் குரலை உயர்த்தாமலேயே அவளை பார்த்து கர்ஜித்தது, அவளை அந்த இடத்தை விட்டு உடனே போக சொல் லியது, மறுபடியும் அவளை ஒரு மோசமான ஜீவ மரண போராட்டத்தோடு கூடிய காய்ச்சலில் தள்ளியது.

## 17

### இன்றைய நிகழ்வுகள்

சட்ட அமைச்சரையும், ஹோம் செக்ரட்ரியையும் அனுப்பி வைத்து உள்ளே நுழைந்தால் அவனுக்கு சீஃப்



மினிஸ்டரின் செகரட்ரியிடம் இருந்து போன். ''சார்! ஜெயில்ல ஏதோ ப்ராப்ளம்...'' என்று அவர் ஆரம்பிக் கும் போதே...

''நான் ஜெயில் பார்த்துட்டேன்! அங்க இப்போ கண்ட்ரோல்ல தான் இருக்கு. இப்போ ஹாஸ்பிடல்ல இருக்கேன். என்ன காரணம்னு இன்வெஸ்டிகேஷன் பண்ணிட்டு இருக்கோம். தெரிஞ்ச உடனே சொல்ல றேன்'' என்றான்.

''நான் இப்போ சீப் மினிஸ்டர்கிட்ட என்ன சொல் லட்டும்?''

''நான் சொன்னதையே சொல்லுங்க, நாளைக்கு நான் ஐயாவை வந்து நேர்ல பார்த்து சொல்றேன்னு சொல் லுங்க.''

''இல்ல, இப்போவே அவரோட என்னை பேச வைங்க! நான் சொல்றேன்!'' என்றான்.

''நான் சொல்றேன் சார்! இப்போவே அவர் பேசணும்னு சொன்னா போன் பண்ணி குடுக்கறேன், இல்லைன்னா, நாளைக்கு நீங்க எப்போ வந்து பார்க்கறதுன்னு கேட்டுக் கறேன்'' என்றார்.

அவரிடம் பேசி வைத்தவுடனே மறுபடியும் கைதி களிடம் ஒரு ரவுண்டு வந்து என்ன நடந்தது என்று தெரிந்து கொண்டான், சுப்பிரமணி கண்விழிப்பதற்காக காத்திருந்தவன்...

அவன் கண் விழிக்கவும் எல்லா கைதிகளிடமும் பேசியபடியே அவனிடமும் நெருங்கியவன் மெதுவாக அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில், ''இது உனக்காக நடத்தப்பட்டதா?'' என்று கேட்க...

ஏற்கனவே ரமணன் அடித்த அடியில் உதடுகள் கிழிந்து பேச முடியாத நிலையில் இருந்த அந்த கைதி, ''ஆமாம்'' என்பது போல் தலையை மட்டும் அசைக்க, வேறு எதுவும் பேசாமல் இடத்தை விட்டு அகன்றவன், தனது தொலைபேசியை எடுத்து எழில் வேந்தனை அழைத் தான்.

''எழில் ரெண்டு டீமா வாங்க! உங்களுக்கு நம்பிக்கை யான ஆளா பார்த்து இன்னொரு டீம்க்கு ஹெட் பண்ண கூப்ட்டுக்கங்க. கையில் நீங்க பிடிச்ச டிரக்ஸ் ஏதாவது இருந்தா எடுத்துக்கங்க! கமிஷனர் ஆபீஸ் வாங்க!''

ரமணனுக்கு தெரியவில்லை, அவனிடம் கைதி விஷ யத்தை சொல்லிவிட்டான் என்று தெரிந்து தாக்குதல் நடத்தப்பட்டதா... இல்லை சொல்லிவிடுவான் என்று தாக்குதல் நடத்தப்பட்டதா என்று. எதுவாக இருந்தாலும் காலம் கடத்த முடியாது விரைந்து செயல்பட வேண்டும் என்று நினைத்தவனாக...

அதே சமயம் யாரை நம்பலாம், யாரிடம் சொல்ல லாம் விஷயம். சம்பந்தப்பட்டவர்களின் காதுகளுக்கு செல்லும் முன்னே கைது செய்யப்படவேண்டும், இல்லையென்றால் தப்பி விடுவார்கள் என்றுணர்ந்தவ னாக விரைந்து செயல் பட்டான்.

அதுதான் வெங்கட ரமணன். குற்றவாளிகளுக்கு யோசிக்க சிறிது அவகாசம் கூட கொடுக்கமாட்டான். என்ன செய்ய போகிறான் என்றும் யாராலும் அனுமானிக்க முடியாது.

கமிஷனர் ஆபீஸ் அந்த இரவு பன்னிரெண்டு மணிக்கு மீண்டும் பரபரப்பானது. எஸ் பி யையும் அந்த நேரத்தில் வரவழைத்தவன் இன்னும் ஒரு அஸிஸ்டெண்ட் கமிஷனரை யும் வரவழைத்தான்.



எல்லாரும் வர காத்திருந்தவன், அவர்கள் வந்தவுட னேயே அவரவர் செல்ல வேண்டிய ஏரியா சொன்னவன், அவர்களிடம் யாரை கைது செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை.

அங்கே சென்று கூப்பிடுங்கள் என்று நால்வரையும் தனித்தனியாக அனுப்பினான். வேறு விவரம் தெரிவிக்க வில்லை. என்ன விஷயமாக சொல்கிறார்கள்... யாரை கைது செய்ய போகிறார்கள்... எதற்கு? என்று யாருக்கும் தெரியவில்லை. அவனுடைய முகத்தில் இருந்த கடுமை யாரையும் அவனிடத்தில் கேள்வி கேட்க விடவில்லை.

நான்கு ஏரியாக்களுக்கும் நால்வரும் தங்களுடைய குழுக்களுடன் செல்ல... அங்கே அவர்கள் அரெஸ்ட் செய்ய வேண்டிய ஆட்களின் வீடுகளை சொன்னான்.

''வீட்டில் தேடுங்கள் ஏதாவது சரக்கு கிடைத்தால் அதை வைத்து அரெஸ்ட் செய்யுங்கள்! இல்லையென் றால் கையில் நீங்கள் கொண்டு செல்வதை யாருக்கும் தெரியாமல் அவர்கள் வீட்டில் எடுத்த மாதிரி காட்டி அரெஸ்ட் செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

''சார் சர்ச் வாரன்ட், அரெஸ்ட் வாரன்ட், ஏதாவது கேட் டாங்கன்னா?'' என்று ஒரு ஆபீசர் இழுக்க...''வந்து எங்க கமிஷனர் கிட்ட கேளுடான்னு இழுத்துட்டு வாங்க சார். எதுன்னாலும் நான் பார்த்துக்கறேன்'' என்றான்.

குற்றவாளிகளிடத்தில் எந்த நீதி நேர்மையும் பார்க்க மாட்டான். செய்ய வேண்டியதை செய்வதற்கு எந்த அளவுக்கும் செல்வான்.

காவலர்களுக்கே எங்கே செல்கிறோம், என்ன விஷய மாக செல்கிறோம், என்று தெரியவில்லை. அந்த ஏரியா விற்கு சென்ற பிறகு தான் இந்த ஆள் என்று

அடையாளம் காட்டப்பட்டு, யாரும் தப்பிக்க முடியாமல் அடுத்தவருக்கு தகவல் தெரிவிக்க முடியாமல் ஒரே சமயத்தில் வெவ்வேறு ஆட்களால் கைது செய்யப்பட் டனர்.

யாருக்கும் தப்பிக்க அவகாசம் இல்லை, இவ்வளவு சீக்கிரம் கைது படலம் நடக்கும் என்று அவர்கள் எதிர் பார்க்கவில்லை.

சுப்பிரமணி எந்த விவரமும் தெரிவிக்கும் முன் அவனை போட்டு தள்ளிவிட இவர்கள் நினைக்க, அதற்கு முன் ரமணன் விரைந்து செயல்பட்டு ஒருவருக்கொரு வர் தகவல் தெரிவிக்க கூட முடியாதபடி அனைவரையும் ஒரே நேரத்தில் அரெஸ்ட் செய்தான்.

அவர்களை கமிஷனர் ஆபீஸ் கொண்டு வராமல் நேரே மேஜெஸ்ட்ரேட் வீட்டிற்கு அந்த இரவு நேரத்தி லேயே அழைத்து சென்று அவர்களை ரிமாண்ட் செய்தான்.

அவன் ரீமாண்ட் செய்வதற்கு விவரம் தெரிவிக்கும் போது தான் மற்றவர்களுக்கே விவரம் தெரிய வந்தது. வந்த முதல் நாளே எத்தனை பெரிய வேலை செய்திருக் கிறான். ஆனால் அதற்கான ஒரு சந்தோஷம், ஒரு கர்வம், எதையோ சாதித்துவிட்ட உணர்வு, எதுவும் அவ னிடத்தில் இல்லை.

ஜெயிலுக்கு கொண்டு செல்லுமுன் பத்திரிகையாளர் களையும் அழைத்து, ''இவர்களால் தான் கலவரம் ஜெயிலில்... காரணம் டிரக் டிராஃபிகிங்'' என்றவன் ''மற்ற விவரங்கள் மெதுவாக தெரிவிக்கப்படும்'' என்று கூறி...

''இது டீம் வொர்க்'' என்று கூறி... அந்த டீம் ஹெட் நால்வரையும் முன்னிறுத்தி அவர்கள் டீம் பத்திரிகையில் வருமாறு பார்த்துக்கொண்டவன்,



''என்னை பற்றி அதிகம் தெரிவிக்க வேண்டாம், சிறிது நாட்கள் நான் சென்னைக்குள் சுதந்திரமாக என்னுடைய அடையாளம் தெரியாமல் உலாவ வேண்டும். அப்போது தான் என்னால் ஈஸியாக குற்றவாளிகளை அடையாளம் காண முடியும்'' என்றான்.

அங்கே இருந்த அனைவருக்குமே தெரிந்தது, இது அவன் ஒருவனுடைய வேலை. ஆனால் அவன் அதை மற்ற எல்லோருக்கும் பரிசளித்து, ''இதற்கு மேல் உங்கள் வேலை பார்த்து கொள்ளுங்கள்'' என்று அவர்களை பணித்து வீட்டிற்கு கிளம்பினான்.

அங்கே இருந்த காவலர்கள் அனைவருக்குமே அவன் ஹீரோ ஆகிவிட்டான் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் காவல் துறை மட்டுமல்ல, எந்த துறை யிலும் அடுத்தவர் வெற்றியை கூட தனதாக்கி காட்டும் உலகில், அல்லது அடுத்தவர் சாதிக்கும் போது அது தன்னால் தான் என்று சொல்லும் உலகில், அவனுடைய வெற்றியை அடுத்தவருடையது என்று அடையாளம் காட்டி சென்றான்.

எய்தவன் அவன், அவர்கள் வெறும் அம்பு தான். ஆனால் வெற்றியை அவர்களுடையதாக்கி சென்றான். இத்தனை வேலைகளையும் செய்து முடிக்கும் பொழுது மணி அதிகாலை மூன்று என்று காட்டியது.

வீட்டிற்கு வந்த போது அவனையறியாமல் சோர்வும் தூக்கமும் அவனை ஆட்கொள்ள, ரூமிற்குள் சென்று பார்த்தால் வரா நல்ல தூக்கத்தில் இருந்தாள். சிறிது நேரம் நின்று அவள் உறங்கும் அழகை கண்களில் நிரப்பிக் கொண்டான். பசித்தாலுமே சாப்பிட ஏதாவது தேடினால் வரா எழுந்து கொள்வாள் என்றுணர்ந்து...

அவள் பக்கத்தில் படுத்துறங்குவதை மிஸ் செய்ய விரும்பாதவனாக சத்தம் செய்யாமல் வராவின் பக்கத்தில் படுத்து... முயன்று தைரியத்தை வரவழைத்து, கடவுளை கண்மூடி ஒரு நிமிடம் வணங்கி,

திருமணமாகி இத்தனை வருடங்களில் அவள் உறக்கம் கலைந்து விடாமல் மென்மையாக... ஏன் முதன் முறையாக அவளை அணைத்தபடி உறங்க ஆரம்பித்தான்.



## 18

### அன்றைய நிகழ்வுகள்

ராம் பிரசாத் கல்பனாவின் திருமணம் முடிந்த ஒரு திருப்தியான மனநிலையை யாராலும் அனுபவிக்க முடியவில்லை.

காய்ச்சல் வராவை படுத்தி எடுத்து விட்டது. சென்னையில் ரிசப்சன் வேறு இருக்க... வராவின் அம்மா செய்வதறியாது திகைக்க... அவளுடைய அப்பாவிற்குமே என்ன செய்வது என்று தெரியவில்லை. ரிசப்சன் பெரிய அளவில் ஏற்பாடு செய்திருந்தார். கட்சி தலைவர் பெயர் போட்டு அவரின் தலைமை என்று ஏற்பாடு செய்திருந்தார்.

சுந்தரவல்லி ''நான் பார்த்துக்கொள்கிறேன், நீங்கள் ஊருக்கு சென்று நிகழ்ச்சியை முடித்து வாருங்கள்'' என்று தைரியப்படுத்தி அனுப்பினாலும் அரை மனதாகவே கிளம்பி சென்றனர். புதிதாக மணமான ராமிடம் திருமண உற்சாகம் சற்று குறைவாகவே காணப்பட்டது வராவினால்.



அவள் அப்படி காய்ச்சலில் இருக்கும் பொழுது அவனுக்கு எதுவுமே ஓடவில்லை. வராவே கட்டாயப்படுத்தி அவளுடைய அண்ணனை அனுப்பி வைக்கும் படி ஆயிற்று.

இத்தனையிலும் அவளுடைய திடீர் காய்ச்சலின் காரணம் யாருக்கும் தெரியவில்லை என்பதை விட அதற்கு ஏதாவது காரணம் இருக்கும் என்று யாரும் நினைக்கவில்லை, ஆராய முற்படவில்லை.

வராவும் வாயை திறக்கவில்லை, தன்னுடைய நிலையை நினைத்து அவளுக்கு சோர்வாக இருக்க, அம்மா, அண்ணன், அப்பா, என்று அனைவரும் சென்னை அவளை விட்டு செல்ல...

மனமில்லாவிட்டாலும் கட்டாயத்தால் விட்டு செல்ல... சுந்தரவல்லி அவளை நன்றாக பார்த்து கொண்டார். இருந்தாலும் வராவிற்கு நினைத்த நேரம் அழுகை வந்து அவளுடைய அம்மாவை மனம் தேடியது.

இதெல்லாம் ரமணனுக்கு எதுவும் தெரியவில்லை, ஹைதராபாத் சென்றவுடன் சுந்தரவல்லியிடம், ''வந்து சேர்ந்துவிட்டேன்'' என்று கூறியவன் இரண்டு நாட்களாக அழைக்கவில்லை,

அம்மா அழைத்தாலும் எடுக்கவில்லை, எடுத்தாலும்... ''பிறகு அழைக்கிறேன்'' என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்து வைத்துவிட்டான்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து அவனாகவே அவனது அம்மாவை அழைக்க, ''நான் ஹாஸ்பிடலில் இருக்கிறேன்'' என்று அவன் அம்மா சொன்ன பிறகே, ''என்ன?'' என்று கேட்க அவனுக்கு விவரம் தெரிய வந்தது.

அவள் வேண்டுமென்றே பேசியிருந்தால் கூட தான் இந்த மாதிரி பேசியிருக்க வேண்டாமோ என்று சற்று குற்றவுணர்ச்சியாக உணந்தான்.

அவன் அம்மாவிடம அதன் பிறகு ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை அழைத்து, ''என்ன? எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டவனுக்கு அவளுக்கு அழைக்க மனம் வரவில்லை. அவன் அம்மா, ''பேசுகிறாயா?'' என்றபோது கூட ஏதாவது பேசி பேச்சை மாற்றி விடுவான்.

வராவும் பார்த்துக்கொண்டே தான் இருந்தாள், அவன் அம்மாவிடம் ரமணன் அடிக்கடி பேசியதையும், அவளை பற்றி தெரிந்து கொள்வதையும். ஆனால் தன்னிடம் அவன் பேச முயற்சி செய்யாததை அவள் உணர்ந்தே இருந்தாள்.

ரமணன் மேல் மிகுந்த கோபம் வந்தது. 'என்ன பேசினேன் என்றே எனக்கு தெரியவில்லை. என்னை சாரி கேட்கவும் இவன் விடவில்லை. இவன் என்ன பெரிய இவனா?' என்று மனதிற்குள் அவனை திட்டியவாறே இருந்ததினால் அவள் நினைவுகளில் பெரும்பான்மை நேரம் அவனுடனே இருந்தது.

இன்று டிஸ்சார்ஜ், நாளை அவள் சென்னை செல்கிறாள் என்று தெரிந்தவுடன், அவளுக்கு ஒரு பொக்கே வந்தது, ''don't get your health spoiled for anything. keep mind activities not to affect body. ரமணன் என்று கீழே எழுதியிருக்க, அதன் கீழே அவனுடைய போன் நம்பர் இருந்தது.

''என்னுடன் பேச வேண்டுமென்றால் நீ அழைத்து பேசு'' என்ற நினைவுடன் அவன் அனுப்பியிருக்க...



''வேண்டுமென்றால் நீ பேசு'' என்று அவளும் அழைக்கவில்லை.

ஆனால் நிறைய முறை அந்த நம்பரை போனில் லோட் செய்து டையல் செய்ய போகும் போது வேண்டாம் என்று விட்டுவிடுவாள். அதனால் அந்த நம்பர் அவள் நினைவில் நன்றாக நின்று விட்டது.

இயல்பு வாழ்க்கை திரும்பியது. இத்தனை பிரச்சனைக்கும் காரணமான டான்ஸ் கிளாசின் புறம் அவள் மறுபடியும் திரும்பிக் கூட பார்க்கவில்லை. அதன் பிறகு. வராமஹாலக்ஷ்மி அவனுடைய பேச்சுகளை நாளடைவில் மறந்தும் கூட விட்டாள். அவள் இயல்பு நடந்தவைகளை மறந்து போவது. அதை அவள் செய்து விட்டாள்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் தற்போது அவளுடைய தந்தை எம் பி மட்டுமே. அவருடைய கட்சி ஆட்சியில் இல்லாததால் அவர் அமைச்சர் பதவியில் இல்லை.

ரமணன் எதையும் அவ்வளவு சீக்கிரம் மறக்கும் இயல்புடையவன் அல்லன். தனியாக இருக்கும் சமயங்களில் அவளுடைய பேச்சுகள் அவன் காதில் ஒலிப்பது போல் தோன்றும். அதனால் அது தெரியாமல் இருக்க அவனுக்கு கொடுக்கப்பட்ட பயிற்சிகளில் கடுமையாக ஈடுபட்டான்.

அவளை மறக்க நினைத்து... அவனை அறியாமல் அவளையே நினைத்து நினைத்து... அவள் மேல் உள்ள கோபத்தை அவனையறியாமல் வளர்த்து கொண்டான்.

கோபம் வளர அவள் நினைவும் வளர்ந்தது.

நாட்கள் மாதங்களாக... வருடம் முடிந்து... மறுபடியும் வருடம் நெருங்கிய போது... மறுபடியும் வரா விழுந்தால், இந்த முறை காய்ச்சலில் அல்ல காதலில்.

ஸ்ரீதர்... வராவின் காலேஜ் பிரண்ட் பத்மாவின் அண்ணன். அவர்களுடையது தமிழகமெங்கும் கிளைகள்

உள்ள நகைக்கடை, துணிக்கடை மற்றும் சில தொழில் களும் உண்டு.

மிகவும் பாரம்பரியமான குடும்பத்தை சேர்ந்தவர்கள், பரம்பரை பணக்காரர்கள், தங்கள் குல பெருமையை வாய் ஓயாமல் பேசும் வழக்கம் உடையவர்கள்.

சற்று பெரிய குடும்பமும் கூட... அண்ணா, தம்பி, அக்கா, தங்கை, எல்லாரும் ஒன்றுக்குள் ஒன்றாக பெண் எடுத்து கொடுத்து பக்கம் பக்கமாக வசித்து வருபவர்கள். இதுநாள் வரை அவர்கள் அன்னியத்தில் பெண் எடுத்ததோ, கொடுத்ததோ, கிடையாது.

பத்மாவின் நகைக்கடைக்கு ஒரு முறை வரமஹா லக்ஷ்மி தன்னுடைய அம்மாவின் பிறந்தநாளுக்கு பரி சளிப்பதற்காக என்று அவருக்கு தெரியாமல் பத்மா வுடன் அவர்களுடைய ஜுவல்லரி ஷோ ரூமிற்கு சென்ற போது தான் அவர்களுக்குள் முதல் அறிமுகம்.

யாரோடும் சீக்கிரமாக பழகிவிடும் தன்னை கொண் டவன் ஸ்ரீதர். மிக சிலருக்கு மட்டுமே இருக்கக் கூடிய குணம் அது. எந்த அர்த்தமுமில்லாமல் இல்லாமல் பேசியே எதிராளியை வசியப்படுத்தி விடுவான். அவனுக்கு பார்த்த முதல் பார்வையிலேயே வரா அவனை வசீ கரித்து விட்டாள்.

''அண்ணா என்னோட பிரண்ட் சிவசங்கரன் எம் பி யோட பொண்ணு, நகை செலக்ட் பண்ண வந்திருக்கா, எங்களுக்கு ஹெல்ப் பண்ணேன்'' என்றபடி ஸ்ரீதரை பத்மா அழைக்க... அவன் கேபின் விட்டு எழுந்து வந்தவன் வரமஹாலக்ஷ்மியை பார்த்து முதல் பார்வையிலேயே தடுமாறினான்.

பார்க்க பார்க்க அவனால் கண்களை அகற்ற முடிய வில்லை. எத்தனை அழகான பெண்களை பார்த்திருக்



கிறான், ஆனால் யாரும் வராவைப்போல் அவனை வசீ கரித்தது இல்லை. வரமஹாலக்ஷ்மி அழகான பெண். பார்க்க கண்களுக்கு குளிர்ச்சியாக ரசிக்கும்படியாக ஒரு புன்னகை முகத்தோடு இருப்பாள்.

சொல்லப்போனால் அவன் பணக்காரன், பாரம்பரிய மான குடும்பத்தை சேர்ந்தவன், திருமணமாகாதவன், பார்க்கவும் அழகன், அவனை பார்க்கும் பொழுது நிறைய பெண்களின் கண்களில் ஆர்வம் தொனிக்கும். அதனால் அவன் மேல் ஏறி விழுந்து பழகும் பெண்கள் அதிகம்.

அவனும் அப்படி ஒன்றும் ஒதுங்கியிருக்க மாட்டான். இவர்களால் தனக்கு பெரிதாக பிரச்சினை வராது என்று தெரியும் பெண்களுடன் தாராளமாகவே பழகுவான். தினம் ஒரு பெண்ணுடன் சுற்றுவது அவன் வட்ட ஆட்கள், நண்பர்களிடையே அது ஒரு ப்ரஸ்டீஜியஸ் மேட்டர்.

வாழும் வாழ்க்கையை அதிக கோட்பாடுகள் வைத்து கொள்ளாமல் அதன் போக்கில் அனுபவிப்பவன், வராவை பார்த்த அவன், முதல் பார்வையிலேயே கவிழ... அதன் அடையாளங்கள் சிறிதும் இல்லாமல் வரா அவனை பார்த்து, ''ஹலோ'' என்றாள்.

''ஹலோ மிஸ்...'' என்று கையை நீட்டியபடியே அவன் வராவின் பேரை தெரிந்து கொள்வதற்காக இழுக்க...

மென்மையாக ஒரு புன்னகையை சிந்தி, ''வரமஹா லக்ஷ்மி, என்றபடி அவன் கையை பற்றி குலுக்கினாள். ஸ்ரீதருக்கு கையை விடவே மனசில்லை. விண்ணில் பறந்தான்.

ஸ்ரீதர் தன்னுடைய பேரை சொல்வதற்காக வாயை திறக்கும் முன்னரே, ''டிசைன்ஸ் பார்க்கலாமா'' என்றபடி

வேலையில் இறங்கினாள். அவனை பார்த்தவுடன் நிறைய பெண்களின் கண்களில் தோன்றும் ஆர்வம் அவளிடத்தில் சிறிதும் இல்லை.

மிகவும் சாதாரணமான பார்வையே அவனை பார்த்து வைத்தாள். எந்த பாவமும் அவள் கண்களில் தென்படவில்லை.

''எதை பார்க்கறீங்க'' என்று அவன் கேட்டதற்கு... ''எல்லாமே'' என்றாள்.

அவன் புரியாமல் பார்க்க... ''செட்டா ஆரம், நெக்லஸ், வளையல், தோடு, எல்லாமே'' என்றாள்.

அவள் சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவள் தொலைபேசி அழைக்க ராம் அழைத்து கொண்டிருந்தான்.

''அண்ணா உள்ளே தான் இருக்கேன், வாங்க'' என்றவள் பத்மாவிடம் திரும்பி, ''அண்ணாவும் அண்ணியும் வராங்க'' என்றாள்,

உள்ளே கல்பனாவுடன் ராம் நுழைய அவர்கள் கைகளில் ஒரு வயது நிரம்பிய ரோஹித் பிரசாத் இருந்தான். அருகில் வந்ததும் அவன் அத்தையை பார்த்தவுடனே அவள் கைகளுக்கு தாவ அவனை வாங்கி அணைத்து உச்சி முகர்ந்த வராவை கண்களில் முழுவதுமாக நிரப்பிக்கொண்டான் ஸ்ரீதர்.

பார்த்தவுடனே கடைக்கு வரும் கஸ்டமர்களை தன்னுடைய வசீகரமான பேச்சால் கவர்ந்து விடும் ஸ்ரீதருக்கு அன்று வார்த்தையே வரவில்லை. பத்மா...''அண்ணா பார்க்கலாமா?'' என்றபடி மறுபடியும் அழைத்தபிறகே நிகழ்வுக்கு வந்தவன்,



''ஹாய் ஐ அம் ஸ்ரீதர்'' என்று கைகுலுக்க, ''நான் ராம் பிரசாத். இவ என் மனைவி கல்பனா'' என்று அறிமுகப் படுத்தி நகை செலெக்ட் செய்வதில் மும்முரமாக... ஸ்ரீதர் வரா கவனிக்காத போது அவளை கவனித்தவன், தன்னை அவள் கவனிக்கிறாளா என்று பார்க்க, ''ம்கூம்'' அவள் திரும்ப கூட இல்லை.

கல்பனா தான் ஸ்ரீதரிடம் ஆயிரத்தெட்டு கேள்விகள் கேட்க... ராம் கூட இரண்டொரு வார்த்தை பேசினான். ஆனால் வரா வாயைத் திறக்கவேயில்லை. அவள் அண்ணி செலெக்ட் செய்யும் டிசைன்கள் அத்தனையையும் கண்களாலேயே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

''வரா! நீயும் எடுக்க மாட்டேங்கற, நான் செலெக்ட் பண்றதும் ரிஜெக்ட் பண்ணற!'' என்று கல்பனா சலிப்பாக பேச...

''ஏதோ எங்க அண்ணனை செலெக்ட் பண்ணியிருக்கீங்களே நல்ல டேஸ்ட் இருக்கும்னு நினைச்சா, சுத்த வேஸ்ட் அண்ணி நீங்க'' என்று கல்பனாவுக்கு மட்டும் கேட்கும்படியாக முணுமுணுத்தவள், குழந்தையை ராமின் கையில் கொடுத்து, ஒன்றை தேர்வு செய்ய... அது அழகாக புது விதமாக இருந்தது.

ராம் கல்பனாவை பார்க்க அவள் அவனை முறைத்த முறைப்பிலேயே வரா கல்பனாவை ஏதோ சொல்லியிருக்கிறாள் என்றுணர்ந்த ராம். 'இந்த வரா எப்பொழுது தான் வாயை அடக்குவாளோ, இன்று தனக்கு சரியான மண்டகப்படி' என்று நினைத்தவன், யாரையும் எதுவும் கேட்காமல் பரிதாபமாக நிற்க...

''அண்ணி! பார்த்துட்டு பில் பண்ண சொல்லுங்க'' என்று கல்பனாவிடம் கூறிவிட்டு பத்மாவிடம்

பேசத்துவங்க, ''ஒரே அதிகாரம் தான்!'' என்று வாய்க்குள்ளேயே பேசிய கல்பனா, ''பில் பண்ணுங்க'' என்று ஸ்ரீதரிடம் கூற...

அவன் வேறொருவரை அழைத்து பில் பண்ண சொன்னவன், எப்படி வராவிடம் பேசுவது என்று யோசனையிலேயே இருக்க... அவர்கள் நிமிடத்தில் பில் செட்டில் செய்து கிளம்பிவிட்டனர்.

மரியாதை நிமித்தம் கல்பனாவும் ராமும் ஸ்ரீதரிடம் சொல்லிக் கொண்டு கிளம்ப... வராவின் பார்வைக்காக ஸ்ரீதர் அவளையே ஆவலோடு பார்த்திருக்க... வரா அவனை பேச்சு மும்முரத்தில் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை பத்மாவிடம் பேசியபடியே கிளம்பி சென்று விட்டாள்.

அவளுடைய அந்த செய்கை எப்படியாவது அவளை தன் பின்னால் சுற்ற வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஸ்ரீதரின் மனதில் தோன்ற செய்தது.

ஆனால் அது எவ்வளவு கடினம் என்பதை ஸ்ரீதர் உணரவில்லை. தினமும் தனது தங்கையை அவனே காலேஜிற்கு ட்ராப் செய்தான். வராவின் கார் வரும்வரை நின்றிருப்பான்.

கார் வந்தவுடன் அவளை அது இறக்கிவிடும் வரை அங்கே இருந்து அவளை பார்த்த பிறகே செல்வான். ஆனால் அவளோட பேச முயற்சி செய்ய மாட்டான். மீண்டும் காலையும் இந்த காட்சி நடக்கும்.

ஆனால் வரா எப்பொழுதும் சுற்றுப் புறத்தை உணர்ந்தாளில்லை. முன்பு ரமணன் அவளை கண்டித்ததும் அதற்கே. தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்று அவள் கவனிப்பதில்லை என்பது தான்.



இப்பொழுதும் அதே தவறை மீண்டும் வரா செய்தாள். கிட்டதட்ட பத்து நாட்களாக இது நடக்க... இது எதையும் அவள் அறியவில்லை. தனக்காக ஒருவன் தினமும் வந்து நிற்கிறான் என்று அறியவில்லை.

அவள் அறியாததினால் உலகம் அறியாமல் போகுமா என்ன? சக தோழியர் இதனை பார்த்து அவன் வராவுக்காக தான் வந்து நிற்கின்றான் என்றுணர்ந்து...

யார்? எவரென்றே தெரியாத போதும், மிகவும் சாதாரணமாக கல்லூரியில் காலம் காலமாக சொல்லப்படும் வார்த்தையான... ''உன் ஆளு நிக்கராண்டி'' என்று வராவின் கவனத்தை ஸ்ரீதரின் பால் திருப்பினர்.

'என் ஆளா எவன் அவன்?' என்று எண்ணியவாறே திரும்பிய வரா... அன்று தான் ஸ்ரீதர் அங்கே நிற்பதையே பார்த்தாள். பார்த்தவளுக்கு அவனை சட்டென்று அடையாளம் தெரியவில்லை.

'யார் இவன் எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே...' என்று எண்ணியவாறே திரும்பி திரும்பி பார்த்தவாறே காரில் ஏறினாள்.

முதன் முறையாக இந்த பத்து நாட்களில் வரா அவனை திரும்பி பார்த்த சந்தோஷத்தில் ஸ்ரீதர் அவளை பார்த்து புன்னகைத்தவன், ''ஹாய்'' என்றபடி அவளை நோக்கி கையசைத்தான்.

'யாருடா இவன் நமக்கு தெரிந்தவனா, நம்மை பார்த்து இப்படி கையசைக்கிறான்' என்ற குழப்பத்தில் வரா காரில் ஏற தாமதப்படுத்த, அதற்குள் அவளை நெருங்கிய ஸ்ரீதர் மறுபடியும் ஒரு ஹாய் சொன்னவன்,

''ஹப்பாடா! ஒரு வழியா என்னை திரும்பி பார்த்துட்டீங்க!'' என்று கூறி ஒரு வசீகரமான புன்னகையை அவளை நோக்கி புரிந்தான்.

அப்பொழுதும் யார் இவன் என்ற கேள்வியை கண்களில் தாங்கியபடி குழப்பத்தோடு வரா பார்த்திருக்க... அவளுக்கு தன்னை அடையாளம் தெரியவில்லை என்றுணர்ந்த ஸ்ரீதர் கண்களில் தவிப்போடு, ''என்னை உங்களுக்கு தெரியலையா?'' என்றான்.

'இல்லை' என்பது போல் வரா தலையசைக்க, ''நான் பத்மாவோட அண்ணன், நீங்க அன்னைக்கு எங்க ஷோ ரூம்க்கு வந்தீங்களே'' என்று அவளுக்கு நினைவுபடுத்த, இப்பொழுது ஞாபகம் வந்தவளாக வரமஹாலக்ஷ்மி அவனை பார்த்து, ''ஓஹ் சாரி மறந்துட்டேன்! ஹாய்!'' என்றாள்.

''என்னங்க இப்படி சொல்லிட்டீங்க! பத்து நாளா நான் வரமஹாலக்ஷ்மி தாசன் ஆகி உங்க நினைவாகவே உங்க பின்னாடி சுற்றி உங்க கடைக்கண் பார்வைக்காக ஏங்கிட்டு இருக்கேன். இப்படி என்னை தெரியலைன்னு சொல்லிட்டீங்களே!'' என்று பாவனையோடு சொல்ல வராவிற்கு சிரிப்பு வந்தது.

''ஏன் இப்படி உளர்றீங்க?'' என்று சிரிப்போடு கேட்க...

''நோ ஐ அம் சீரியஸ்! ஐ அம் இன் லவ் வித் யூ!'' என்றான்.

ஒரு கனம் அதிர்ந்த வரா, ''பட் ஐ அம் நாட்'' என்று சொல்லி காரில் ஏற...

''ஸோ வாட்? நான் உங்களை லவ் பண்றேன், பண்ணுவேன், பண்ணிட்டே இருப்பேன்!, நீங்க பண்ணினாலும் பண்ணலைன்னாலும் அது என்னை பாதிக்காது. ஐ லவ் யூ!'' என்றான்.

கேட்ட வரா பதில் பேசாமல், ''லூசாடா நீ'' என்று ஒரு பார்வை பார்த்தபடியே கிளம்பி சென்றாள்.



ஆனால் இதற்கெல்லாம் ஸ்ரீதர் அசரவில்லை. தினமும் நாள் தவறாமல் காலையும் மாலையும் வந்துவிடுவான். அவளை தொந்தரவு செய்யாமல் அவளை பார்த்தபடியே நிற்பான்.

கிட்டதட்ட ஆறுமாதம் இது தொடர, வராவிற்கு டென்ஷன் ஏறியது. முதலில் அலட்சியப்படுத்தினாலும் யாரே ஒருவன் தனக்காக தினமும் வந்து நிற்பது அவளை சற்று ரெஸ்ட்லெஸ் ஆக்கியது.

பத்மாவிடம் கூட கூறினாள்'' இது சரியல்ல'' என்று. பத்மாவும் அவள் அண்ணனிடம் கூற... ''அண்ணா, அவளுக்கு தான் பிடிக்கலையே விட்டுடேன்! நம்ம வீட்டுக்கு தெரிந்தாலும் பிரச்சினை ஆகிடும் அண்ணா!'' என்று சொல்ல...

''உன் வேலையை பார்! எனக்கு அவளை பிடிச்சிருக்கு! எனக்கு அவதான்!'' என்றான் தீர்மானமாக.

அதை அப்படியே பத்மா வரமஹாலக்ஷ்மியிடம் சொல்ல, வராவே அன்று மாலை நேரடியாக ஸ்ரீதரிடம் பேசினாள், ''ப்ளீஸ் என்னை தொந்தரவு பண்ணாதீங்க! எனக்கு ரொம்ப டிஸ்டர்பன்சா இருக்கு!'' என்றாள்.

''நான் உங்களை ஒண்ணும் டிஸ்டர்ப் பண்ணலையே! என்ன பண்ணினேன்?'' என்றான் பதிலுக்கு.

''நீங்க தினமும் நின்று என்னை பார்க்கறீங்க! அது எனக்கு பிடிக்கலை! நான் அப்பாவிடம் இல்லை அண்ணா கிட்ட சொன்னா உங்களுக்கு தான் பிரச்சினை'' என்றாள்.

''என்ன பிரச்சினை வந்தாலும் உனக்காக ஃபேஸ் பண்ணுவேன்... பார்க்கறதே உனக்கு தொந்தரவா

இருக்குன்னா... இந்த ஆறு மாசமா உன்னை பார்த்ததுல இருந்து, எனக்கு உன்னை தவிர வேறு ஞாபகமில்லை.''

''என்னை என்ன பண்ண சொல்ற! ஐ கான்ட் டூ எனி வொர்க் அதர் தன் திங்கிங் ஆஃப் யூ... என்னை நீ கொஞ்சம் கொஞ்சமா பைத்தியமாக்கிட்டு இருக்க. ஐ லவ் யூ'' என்றான் மறுபடியும்.

அவன் குரலில் இருந்த தீவிரம் அவன் சொல்வது அத்தனையும் உண்மை என்று சொல்லியது.

''உனக்கு தெரியாது வரமஹாலஷ்மி எனக்கு நிறைய கேர்ள் பிரண்ட்ஸ் இருந்தாங்க, ஆனா உன்னை பார்த்த நாள்ல இருந்து நான் யாரையும் பார்க்கலை பேசலை. எனக்கு உன்னை தவிர யாரையும பார்க்க பிடிக்கலை! ஐ லவ் யூ!'' என்றான் மறுபடியும்.

''நீங்க தப்பா நினைச்சுட்டு இருக்கீங்க, அழகான பொண்ணை பார்த்தா இந்த மாதிரி பேசத்தோன்றது சகஜம் தான். தூர இருந்து பார்த்தா எல்லாமே கண்களுக்கு அழகா தான் தெரியும். அப்படி இத்தனை மாசமா நான் உங்களை பார்க்கறதுக்காக இல்லை நீங்க என்னை பார்க்கறதுக்காக வந்து நிற்கறது சுத்த பைத்தியக்காரத் தனம்!'' என்றாள்.

''அது தானே நானும் சொல்றேன்! நீ என்னை பைத்தியமாக்குறே'' என்று...

'ப்ச்... இவனுக்கு என்ன சொல்லி புரிய வைப்பது' என்று எண்ணியவளாக ஒன்றும் பேசாமல் வரா கிளம்பி செல்ல...

ஸ்ரீதர் அவளையே பார்த்தபடி நின்றிருந்தான்.



இதை பார்த்திருந்த பத்மா, ''அண்ணா இது சரி வராது! நம்ம வீட்டு ஆளுங்க பத்தி உனக்கு தெரியாதா. முதல்ல வரா உன்னை லவ் பண்ணுவான்னு தோணலை! அவ லவ் பண்ணினாலும் இதை நம்ம வீட்டு ஆளுங்க நடத்த விடமாட்டாங்க. உனக்கும் நம்ம அத்தையோட பொண்ணு சித்ராவுக்கும் தான் கல்யாணம் பண்றதுன்னு பேசிட்டு இருக்காங்க. இதை விட்டுடுங்க'' என்றாள்.

அவளை திரும்பி பார்த்தவன் பதில் பேசாமல் அவளை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றான்.

இதற்கிடையில் வெங்கட ரமணன் அவனுடைய ட்ரைனிங்கை முடித்தான். எழுத்து தேர்வு, உடற்தேர்வு, பயிற்சியில் என்று அனைத்தையும் முதலிடத்தில் முடித்து சர்தார் வல்லபாய் பட்டேல் விருது வாங்கினான்.

ட்ரைனிங் காலத்தில் கொடுக்கப்படும் மிக உயர் விருது. ட்ரைனிங் செல்லும் அனைவரின் கனவு. அதை வாங்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலேயே வாங்கினான்.

அவனுக்கு தமிழகத்திலேயே போஸ்டிங் கிடைத் திருக்கும். ஆனால் அவனாகவே வேறு மாநிலம் விருப் பப்பட அவனுடைய போஸ்டிங் புனேவில் கிடைத்தது.

பணியில் சேரும்முன் தமிழகம் வர, ராமநாதன் அவனிடம் அவன் திருமணம் செய்து கொள்வதை பற்றி பேச... ''இப்பொழுது வேண்டாம் பா'' என்று தீவிரமாக மறுத்தான்.

''சரி இப்போ வேண்டாம்! ஆனா நிச்சயம் பண்ணிட லாமா!'' என்றார். அப்பொழுதுதான் தன் தந்தை

யாரையோ மனதில் வைத்து பேசுகிறார் என்றுணர்ந்த ரமணன், ''பொண்ணே பார்க்காம நிச்சயம் பண்ணுவீங்களாப்பா'' என்று கேட்க...

''பொண்ணா எதுக்கு பார்க்கணும். நம்ம மகாலக்ஷ்மி இல்லை!'' என்று கூற இதை ரமணன் எதிர்பார்க்கவில்லை...

மனதில் மகிழ்ச்சி எட்டி பார்க்க துவங்கினாலும்... அறிவு... ''டேய் அவளுக்கு உன்னை பிடிக்கலை. உன் தோற்றம் பிடிக்கலை. விட்டுடு!'' என்று சொல்ல... அன்றைய அவனை அழவைக்கும் வரை கொண்டு சென்ற நினைவுகள் நினைவில் வர...

''வராவா? அது சரி வராதுப்பா!'' என்றான்.

''ஏம்பா?'' என்று அவர் கனிவாக கேட்க... ''வேண்டாம்பா! எனக்கு அவளை சின்ன வயசுல இருந்தே தெரியும்! எனக்கும் அவளுக்கும் சரி வராது.''

''இன்னும் கொஞ்ச நாள் போகட்டும், வேற பொண்ணு பாருங்க!'' என்றான் முடிவாக, சுந்தரவல்லியும் அவனிடத்தில் எவ்வளவோ எடுத்து கூறியும் அவன் ஒத்துக் கொள்ளவில்லை.

வரா படிப்பை முடிக்கப்போகும் சமயம் அது. சிவசங்கரன்னு வெங்கட ரமணனை மனதில் வைத்திருந்ததால் தான் அவளுக்கு மாப்பிள்ளை பார்க்காமல் இருந்தார்.

ஆனால் ரமணன் முடிவை அவனின் தந்தை மூலமாக அறிந்தவர் ஏமாற்றமாகவே உணர்ந்தார். பின்பு தீவிரமாக வரமஹாலக்ஷ்மிக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தார்.



வேலையில் சேருவதற்கு முன் சிவசங்கரனிடம் சொல்லிவிட்டு செல்வது தான் மரியாதை என்று ராமநாதனும் சுந்தரவள்ளியும் சொல்லிவிட...

வேறு வழியில்லாமல் சென்னை, வரமஹாலக்ஷ்மியின் வீட்டிற்கு வந்தான்.

அவனுக்கு சங்கடமாக இருந்தது தான் வேறு வரானை நிராகரித்து விட்டோம் இப்பொழுது அவர்களை எப்படி எதிர் கொள்வது என...

ஆனால் அவனுடைய சங்கடத்திற்கு அவசியமே இல்லாது போனது. அந்த விஷயம் சிவசங்கரனுக்கு தவிர மற்ற யாருக்கும் தெரியாததால் எல்லாரும் சகஜமாகவே பழகினர்.

ராமிற்கும் கல்பனாவிற்கும் மிகுந்த சந்தோஷம். வரா அவன் பேசுவானா என்று பார்த்தபடியே நிற்பது புரிந்தது.

வெண்மை நிறத்தில் டாப்ஸ் அணிந்து ப்ளூ ஜீன்ஸ் ஸ்கர்டில் பார்ப்பதற்கு தேவதை போல் இருந்தாள். ராஜேஸ்வரி அவன் வந்ததினால் தடபுடலாக விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

'இவளை வேண்டாம் என்று சொல்லி தப்பு செய்து விட்டோமோ' என்று ரமணன் மனதில் எண்ணம் உதிக்க... அவள் பேசிய வார்த்தைகள் ஞாபகத்தில் வந்து, ''நீ சொன்னது தான் சரி'' என்று அவனுக்கு கூறியது.

எல்லோரும் அவரவர் வேலையாக சற்று நகர... இவனும் வராவுமே இருந்தனர். அவன் பேசுவானா? பேசுவானா? என்று அவன் முகத்தையே வரா பார்த்துக் கொண்டிருப்பது புரிய, அதற்கு மேல் பொறுக்க முடியாமல்,

''என் போன் நம்பர் சொல்லு'' என்றான்.

எதற்கென்று புரியாவிட்டாலும் சொன்னாள்.

''என் நம்பர் தெரியும்! ஆனாலும் நீ என்னை கூப்பிடலை!'' என்றான்.

'ஏன் நீங்க கூப்பிட மாட்டீங்களா?' என்று வாய் வரை வந்த வார்த்தை எப்பொழுதும் போல் வார்த்தையாக வெளி வரவில்லை. அவனையே பார்த்துக்கொண்டு நிற்க... அதற்குள் எல்லாரும் வர சொல்லிக்கொண்டு கிளம்பினான்.

சென்றவன்... தன்னுடைய டிக்கெட்டை டைம் பார்ப்பதற்காக எடுத்ததை டேபிள் மேல் வைத்தது ஞாபகம் வர, திரும்ப வந்தால்... எல்லாரும் வெளியே நிற்க வரா உள்ளே நிற்பது தெரிந்தது.

டிக்கெட்டை எடுத்துக் கொண்டு திரும்பியவன்... என்ன நினைத்தானோ அவள் அருகில் வந்து, ''எதுன்னாலும், எந்த டைம் நாளும் என்னை கூப்பிடு! தயங்காதே!'' என்று கூறி சென்றான்.

ஏன் அந்த வார்த்தைகளை கூறினான்? என்ன எதிர்பார்த்துக் கூறினான்? என்று அவனுக்கே தெரியவில்லை. ஆனாலும் கூறி சென்றான்.

வேண்டாம் என்று சொன்னாலும் வராவின் நினைவுகள் அவனை துரத்திய வண்ணம் இருந்தன. ஒரு முறை அவள் தன்னை போனில் அழைத்து விட்டாலும் உடனே திருமணத்திற்கு சரியென்று விடலாம் என்று நினைக்கும் அளவிற்கு ரமணன் மாறிப்போனான்.

நாட்கள் அதன் போக்கில் செல்ல... ஸ்ரீதர் கல்லூரி வாசலில் தினம் தவறாமல் அவளை பார்ப்பதற்காக வந்து நிற்பது மட்டும் நிற்கவேயில்லை.



ஸ்ரீதரை பற்றி நினைக்கவேண்டாம் என்று நினைத்தாலும்... சமீப காலமாக வரா கல்லூரிக்குள் நுழையும் போதும், வெளியே வரும் போதும் அவளையறியாமல் ஸ்ரீதர் நிற்கிறானா என்று பார்வை தேடியது.

வீட்டில் அவள் அப்பா ஒரு நாள் ராம் பிரசாத்தோடு பேசிக்கொண்டிருப்பதை கேட்க நேர்ந்தது.

''ராம் வராக்கு காலேஜ் முடியப்போகுது. நல்ல மாப்பிள்ளையா பார்க்கணும்பா! தரகர் கிட்ட சொல்லலாமா இல்லை ஊர்பக்கம் நம்ம அந்தஸ்துக்கு தகுந்த மாதிரி யாராவது இருக்காங்களான்னு உன் மாமனார் வீட்ல சொல்லி பார்க்க சொல்றியா!'' என்றார்.

ராம் பிரசாத் தயங்கி, ''ஏன் அப்பா வெளில பார்க்கணும! நம்ம ரமணனுக்கு பார்க்க கூடாதா!'' என...

''அது என்று'' அவர் ஆரம்பிக்கும் போதே, முக்கியமான தொலைபேசி அழைப்பு வர அதை அட்டெண்ட் செய்தார்.

அவர் பதிலுக்காக ராம் காத்திருக்க... இதைக் கேட்டு கொண்டிருந்த வரமஹாலக்ஷ்மி என்ன பதில் சொல்ல போகிறார் என்று ஆவலோடு எதிர்பார்த்து நின்றிருந்தாள்.

அவள் இதயத் துடிப்பின் ஓசை அவளுக்கே கேட்டது. சிவசங்கரன் போன் பேச எடுத்துக் கொண்ட சில நிமிடங்கள் அவளுக்கு யுகங்களாக தோன்றின.

''அது...'' என்று ஆரம்பித்த சிவசங்கரன் ராமை பார்த்து, ''எனக்கும் அதே எண்ணம் தான்பா. ஆனா ரமணன்

இதுக்கு ஒத்துக்கலை! அவனுக்கு இஷ்டமில்லைன்னு சொல்லிட்டான்.''

கேட்டுக்கொண்டிருந்த வராவிற்கு மிகுந்த ஏமாற்றமாக இருந்தது. 'என்னை வெங்கி வேண்டாம் என்று சொல்லி விட்டானா? ஏன்? ஏன்?' என்ற கேள்வி அவளுடைய மூளைக்குள்ளும் மனதுக்குள்ளும் ஓட ஆரம்பித்தது. கண்களில் கண்ணீரும் ஓட ஆரம்பித்தது.

''நான் வேணா பேசட்டுமாப்பா?'' என்று ராம் கேட்க... ''வேண்டாம் ராமநாதன் அண்ணனும், சுந்தரவல்லி அண்ணியும், ரொம்ப கேட்டும் பிடிவாதமா மறுத்துட்டான்.

''இதுக்கு மேல கேட்டா... நமக்கு மரியாதையில்லை. நம்ம வேற பார்க்கலாம்'' என்று விட்டார்.

இரண்டு நாட்கள் கல்லூரிக்கும் செல்லவில்லை... யாரோடும் பேச பிடிக்கவில்லை. வரமஹாலக்ஷ்மி ரூமிற்குள் அடைந்து கிடந்தாள்.

பின்பு கடைசி செமஸ்டர் பரீட்சை நெருங்கி விட்டதால் வேறு வழியில்லாமல் காலேஜ் செல்ல... இறங்கும் போது ஸ்ரீதர் நிற்கிறானா என்று அவளையறியாமல் கண்கள் தேட... ''ஏன் இரண்டு நாட்களாக வரவில்லை'' என்ற கேள்வியோடு ஸ்ரீதர் அவளருகில் வந்தான்.

எப்பொழுதும் நிற்காமல் போய்விடும் வரா... ரமணன் தன்னை நிராகரித்த கோபத்திலும் ஆற்றாமையிலும் இருந்தவள் ''எனக்கு உடம்பு சரியில்லை'' என்று நின்று பதிலளிக்க...

இப்படியே அவள் வரும் போதும், போகும் போதும், இரண்டொரு வார்த்தை பேசுவதில் ஆரம்பித்து...



தினமும் காலேஜ் முடிந்தவுடன் தனியாக அரைமணி நேரம் பேசும் அளவிற்கு வளர்ந்து.... ஸ்ரீதரின் ஐ லவ் யூ விற்கு வரா பதில் சொல்லாவிட்டாலும்...

அவனுடைய பேச்சுகள் அவளை வசியப்படுத்த ஆரம்பித்து... அவனோட செலவிடும் அந்த அரைமணி நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்து... யு.ஜி முடிந்தவுடன் மறுபடியும் பி.ஜி யும் அதே காலேஜில் அவளை சேர வைத்தது.

இரண்டு வருடங்கள் இறக்கை கட்டி ஓட... வராவிற்கு வீட்டிலும் வரன் அமையாமல் தள்ளி தள்ளி போக... வரா அவளுடைய இயல்புக்கு திரும்பியிருந்தாள்.

ரமணன் அவன் வேலையில் மிகவும் ஒன்றிப் போயிருந்தான். வராவின் நினைவுகள் இருந்தாலும் அவள் அழைப்புக்காக காத்திருந்தான். ஒரு முறை இவன் அழைத்திருந்தால் எல்லாம் சரியாகியிருக்குமோ என்னவோ?

ஆனால் அவன் அழைக்க தயங்க...

அவள் பி ஜி முடிக்கும் சமயம், ஸ்ரீதர், ''ஐ லவ் யு'' என்ற தன் வார்த்தைக்குரிய பதிலான...

''ஐ அம் ஆல்சோ இன் லவ் வித் யு!'' என்ற வார்த்தையை வராவிடம் இருந்து வாங்கியே விட்டான்.

''வீட்டிற்கு வந்து எங்கப்பா கிட்ட கல்யாணத்துக்கு பேசறீங்களா! உங்க வீட்ல சொல்லிட்டீங்களா!'' என்று வராவை அவனைப் பார்த்து கேட்க வைத்து விட்டான்.

ஸ்ரீதரின் மனம் உற்சாகத்தில் பறந்தது. ''கண்டிப்பா நான் எங்க வீட்ல இன்னைக்கே பேசறேன்!'' என்றான்.

# 19

## இன்றைய நிகழ்வுகள்

வெங்கட ரமணன் வரமஹாலக்ஷ்மியின் மீது கைபோட்டு அணைத்தவாறு படுத்தவுடனேயே, வராவிற்கு உறக்கம் கலைந்து விட்டது. பயந்து, உடல் விறைத்து, என்ன இது என்று அவள் உணர்ந்து, அவள் பார்க்க...

அவளை சுற்றி ரமணன் கைகள் என்றுணர்ந்து பயம் வடிந்து அவளை அறியாமல் ஒரு நிம்மதி பெருமூச்சு எழுந்தது.

புதிதாக அந்த அணைப்பு, அவனுடைய அருகாமை அவளுக்கு கூச்சத்தை கொடுக்க... கையை எடுத்து விட வேண்டும் என்று பரபரத்த மனதை முயன்று அடக்கி அப்படியே இருந்தாள். ரமணன் உறங்க கண்மூடினாலும் அவள் உடலின் அதிர்வு, வெளியேறிய பெருமூச்சு...

விழித்துகொண்டாள் என்றுணர்த்த ''சாரி! எழுப்பிட்டேனா'' என்று கேட்க... ''மறுபடியும் தூங்கிடுவேன்!'' என்றாள் வரா.

'என்னடா பதில் இது? இவ பதில் எனக்கு புரியவே மாட்டேங்குது. இவளை என்னால புரிஞ்சிக்க முடிஞ்ச அளவு இவ பதில் புரிய மாட்டேங்குது. இவ பதிலுக்கு அவனுங்க பதிலே பரவாயில்லை போல' என்று மனதிற்குள் அவன் குற்றவாளிகளிடம் நடத்தும் விசாரணையோடு ஒப்பிட...



அவன் மனமே அவனை சாடியது. ''டேய் மடையா! பொண்டாட்டிய கொஞ்ச ட்ரை பண்ணுடான்னா... இப்போவும் ஏன்டா கேசு விசாரணைன்னு சொதப்பற.''

அவன் மனதில் ஓடிய எண்ணங்கள் அவனை அறியாமலேயே அவனுக்கு சிரிப்பை வரவழைக்க... அவனின் உடலில் அதிர்வை கண்டு எழுந்தமர்ந்த வரா அவனை பார்க்க அவன் சிரித்துக்கொண்டு இருப்பது தெரிந்து,

''என்னடா இது உலக அதிசயம் இவன் சிரிக்கிறான். நான் சிரிக்கற மாதிரி என்ன சொல்லிட்டேன்'' என்று யோசனையோடு பார்க்க...

அவளை புரிந்தவனாக... தான் வராவோடு சகஜமாக பேசினால் ஒழிய அவள் தன்னோடு பேசமாட்டாள் என்று உணர்ந்தவனாக... தான் அவளோடு அதிகமாக உரிமையோடு பேசவேண்டிய கட்டாயத்தில் இருப்பதை அறிந்தவனாக...

தான் நெருங்கினால் மட்டுமே அவள் தன்னோடு நெருங்க முயலுவாள் என்று தெரிந்தவனாக... ''நீ ஒண்ணும் சொல்லலை! நான் தான் வேற யோசனையில் இருந்தேன்'' என்று கூற...

அந்த பதில் இன்னுமே அவனுக்கு சொதப்பலாக தெரிந்தது.

''சொதப்பரேனா?'' என்றான் புன்னகையோடு...

''ரொம்ப இல்லை! ஆனா கொஞ்சம்!'' என்று வரா கூற...

அந்த பதில் அவன் முன்பு நினைத்ததையே ரிவ்யு செய்ய, வந்த தூக்கம் பறந்து போக முகம் மீண்டும் புன்னகையை பூச எழுந்தமர்ந்தான்.

அவள் முகம் பார்க்க பார்க்க, காலையில் இருந்து கைதியிடம் விசாரணை, பின்பு ஜெயில் கலவரம், பின்பு கைது படலம் என்று தன் வேலையின் டென்ஷன் அத்தனையும் நிமிடத்தில் வடியக் கண்டான்.

மனதிற்குள், 'yes I love her a lot. she has the control over my mood, என்னை கோபப்படுத்தவும் இவளால தான் முடியுது, கூல் பண்ணவும் இவளால தான் முடியுது' என்று நினைத்தவாறே அவளையே பார்த்திருக்க...

அவன் முன்னால் கைகளை ஆட்டி, ''என்ன?'' என்று கேள்வியாக சைகையில் கேட்க...

''ஒன்றுமில்லை'' என்பது போல் தலையாட்ட... ''ஏதோ இருக்கு'' என்றவாறே அவள் விடாது அவனை பார்க்க... ''எப்போ நமக்குள்ள ஹார்மோன் ரியாக்சன் சரியாகும்?'', என்றான்.

''அட லூசே'', என்பது போல் பார்வையால் அவனை அளந்த வரா அப்போது தான் அவனை நன்றாக பார்த் தாள், ''என்ன இது?'' என்றாள் பதட்டமாக...

''என்ன?'' என்றான் புரியாமல்... ''டிரெஸ் சேஞ் பண் ணலை, சாக்ஸ் கழட்டலை, எங்க எங்க போனீங்களோ? அழுக்கு boy. முதல்ல போய் சேஞ் பண்ணுங்க'' என்றாள்.

''ம், நான் உனக்கு boy ஆ. எல்லாம் நேரம். நான் ஹார்மோன் ரியாக்ஷன் பத்தி பேசிட்டிருந்தா நீ என்னை பாய்ன்ற'' என்றவன் பெருமூச்சை வெளியேற்றி அப்ப டியே தூங்கறேனே'' என்றான் சலிப்பாக...

அவனையே பார்த்திருந்தவள், ''அப்படியே தூங்கினா... என்னோட தூங்க முடியாது, பரவாயில்லையா?'' என்று கேட்க...



பதிலுக்கு வாயடிக்காமல் சேஞ் செய்ய எழ, அவன் நகர ஆரம்பித்தவுடனே ''இது பத்தாது அட்லீஸ்ட் கை கால் கழுவியாவது சேஞ் பண்ணுங்க'', என்றவள்...

அவன் திரும்பிப் பார்த்து முறைக்கும் முன்னராக போர் வையை எடுத்து தலை மேல் போர்த்த... அவளுடைய செய்கையை பார்த்து சிரித்தவாறே சென்றான்.

அவன் சென்றிருப்பான் என்று போர்வையை எடுத் தவள், மூடிய குளியலறை கதவையே பார்த்தாள், ''இவன் இல்லாவிட்டால் நான் என்னவாகி இருப்பேன்'', என்று நினைக்கையிலேயே கண்களில் நீர் நிரம்பியது.

வந்தவன்... அவளை பார்க்க கண்களில் கண்ணீரை துடைத்திருந்தாலும் அவள் அப்செட் என்பது தெரிய...

''என்ன ஆச்சு'', என்று கேட்க...

அமைதியாகவே இருந்தாள், ''இந்த மாதிரி நீ எதை யாவது நினைச்சு மனசை போட்டு குழப்பி, சுய பட்சாதாபத்துல இருக்கன்னு தான் நான் உனக்கு நிறைய டைம் குடுத்து இங்க வரவேயில்லை. இனிமேலும் நீ இப்படி கண்ணை கசக்குனா எனக்கு கோபம் தான் வரும் வரா... அப்புறம் நான் மறுபடியும் போயிடுவேன்'', என்றான் சீரியசாக...

அந்த வார்த்தை அவளுள் கோபத்தை கிளப்ப,

''என்ன மிரட்றியா... போயிடுவியா நீ... போ! எனக்கென்ன. ஆனா நீ திரும்ப வரும் போது, நான் இந்த உலகத்துல இருக்க மாட்டேன்'' என்றாள் தீவிரமாக.

''ஏய் என்னடி! இப்படி மறுபடியும் உளற ஆரம்பிச் சிட்ட, இந்த மாதிரி பேசக்கூடாதுன்னு உனக்கு நான்

நிறைய தடவை சொல்லிட்டேன் திருந்தவே மாட்டியா நீ!'' என்று கோபமாக அவள் அருகில் வர...

எப்பொழுதும் அவன் பார்வைக்கே பயப்பட்டு காய்ச்சலில் விழும் வரா இப்பொழுது சிறிதும் பயப்படாமல் அவனை எதிர்கொண்டாள்.

''நான் என்ன நினைச்சேன்னு உங்களுக்கு என்ன தெரியும். நீங்களா ஏதாவது நினைச்சா... இன்னைக்கு தான் வந்திருக்கீங்க அதுக்குள்ள நீங்க போறதை பத்தி பேசுனா... நான் இப்படிதான் பேசுவேன்...'' என்றாள் பயப்படாமல்.

தன் தவறை உணர்ந்தவன். ''சாரி, என்றான்.

''நானும் சாரி'' என்றவள். என்ன ஏது என்று கேட்காமல் படுத்துறங்க...

''வரா...'' என்று இரண்டு முறை கூப்பிட பதிலே இல்லை. ''பாப்பா! ப்ளீஸ் தப்பு தான் நான் பேசினது'' என்றான், எதற்கும் அசைவில்லை.

''மெதுவாக முருகா என்னை காப்பாற்று'' என்று மறுபடியும் கடவுளை துணைக்கு அழைத்து அவள் மேல் கையை போட்டு அணைத்தான்.

வராவிற்கு ஏதோ செய்தது ஆனாலும் அசையவில்லை. கைகள் அவளை அணைக்க மட்டுமல்லாது வேறு சிலதும் செய்ய விழைய... ''ப்ச் தூங்கு வெங்கி'' என்றாள். அவன் தன்னை விட்டு போய்விடுவேன் என்ற சொன்ன வார்த்தையின் தாக்கத்தினால்.

''வெங்கி'' என்று அவள் அழைத்த ஒரு சொல்லே அவனுக்கு மிகுந்த மனசாந்தியை அளிக்க அப்போதைக்கு



பிறகு பார்த்து கொள்ளலாம் என்று உறங்க ஆரம்பித்தான்.

காலை வேகமாக விடிந்தது. வராவும் இரவு விழித்து மறுபடியும் உறங்கியதால் எட்டு மணியாகியும் எழவில்லை. ரமணன் இரண்டு நாட்களாக உறக்கம் கெட்டது அவனும் எழவில்லை...

கண்விழித்ததும் அத்தையை தேடிய கல்பனாவின் மூன்று வயது மகள், ''அத்தை'' என்று போய் ரூம் கதவை தட்ட...

கல்பனா வந்து பார்த்து தடுக்கும் முன் தன் பிஞ்சு கரங்களால் கையில் ஒரு ப்ளேட் வைத்து கொண்டு தட்டி கொண்டு நின்றாள்.

அந்த சத்தம் ரமணன் உறக்கத்தை கலைக்க... இன்னொரு புறம் தொலைபேசி அலற ரமணனின் பிஸி காலை ஆரம்பித்தது.

கதவை திறந்தவாறே போன் பேச ஆரம்பித்தான் ரமணன், முதல் அமைச்சரின் செகரட்டரி அழைத்திருந்தார்.

''சார்! பத்து மணிக்கு உங்களுக்கு முதல் அமைச்சர் அப்பாயிண்ட்மென்ட் குடுத்து இருக்கிறார்.''

''சுயூர் சார்! நான் அங்க பத்து நிமிஷம் முன்னாடியே இருப்பேன்'' என்று சொல்லி போனை வைத்து திரும்ப பார்க்க... குழந்தை அவள் அத்தை மேல் ஏறி படுத்திருந்தாள். அவளை அணைத்தவாறு உறக்கத்தில் தான் வரா இருந்தாள்.

குழந்தையும் அவள் அத்தையை எழுப்பாமல் சமர்த்தாக அவள் மேல் படுத்து கொண்டு ரமணனையே பார்த்து கொண்டிருந்தாள்.

குழந்தையை தூக்க வேண்டும் என்ற ஆசை உந்த...

''ஹலோ குட்டி பாப்பா! என்ன பண்றீங்க?'' என்ற வாறே ரமணன் குழந்தை அருகில் போக... குழந்தை அவள் அத்தையை எழுப்ப ஆரம்பித்தாள்.

''அத்தை!!'' என்று அவள் பிஞ்சு கரங்களால் அவள் முகத்தை வருட ஆரம்பிக்க,

''குட்டிம்மா அத்தை தூங்கறேன் ப்ளீஸ்!'' என்று வரா அவளிடம் கண்திறக்காமலேயே கெஞ்ச... ''அத்தை!!!, என்று அவள் காதில் கத்த ஆரம்பித்தாள் குட்டி.

''குட்டி பிசாசே!'' என்று அவளிடம் பதிலுக்கு கத்திய வாறே வரா எழுந்து அமர்ந்தாள். இதையெல்லாம் வேடிக்கை பார்த்தவாறே ரமணன் நின்றிருப்பதை பார்த் தவள், இரவு அவனோடு சண்டையிட்டதை மறந்தவ ளாக அவனை பார்த்து புன்னகைக்க, அவர்கள் நெருக்கம் அவனுக்கும் புன்னகையை வரவழைத்தது.

''இவளை என்னோட பேசவைய்யேன்'' என்றான் ரமணனும் குழந்தையை காட்டி.. ''குட்டிம்மா அது உங்க மாமா போய் பேசுங்க'' என்று குழந்தைக்கு வரா சொல்லி கொடுக்க...

குழந்தை யோசிக்க ஆரம்பிக்கும் போதே வரா பாத்ரூமிற்குள் நுழைந்தாள், குட்டிம்மா போய் பாத்ரூம் வாசலில் நின்று தன் அத்தை வருவதற்காக காத்திருக்க...

''உங்க பேர் என்ன? சொல்லுங்க!'' என்று ரமணன் குழந்தையிடம் பேச்சை வளர்த்தான்.

''ஸ்ருதி ராம் பிரசாத்'' என்றாள் தெளிவாக...

''என் பேரு கேட்கமாட்டீங்களா! நானே சொல்றேன்!'' என்றவன், ''வெங்கட ரமணன்'' என்றான்.



அப்போது கதவை திறந்து வரா வெளியில் வர, ''வெங்கட ரமணன், என்று தானே சொல்லிக் கொண் டிருந்த ஸ்ருதி, அவள் அத்தை அவளை தூக்கியவுடன் அவள் அத்தையின் மோவாயை திருப்பி, ''மாகாகணம் பொருந்திய ஸ்ரீமான் வெங்கட ரமணன், என்று கண் களை அகல விரித்தாள்.

சின்ன பெண்ணாக இருக்கும் பொழுது வராவிற்கு கோபம் வரும்பொழுது அப்படி தான் சொல்லுவாள். அதை குழந்தைக்கு சொல்லி கொடுத்திருப்பாள் போல அது அப்படியே சொல்லியது.

''ஷ்'' என்று வரா வாயில் விரல் வைக்க... ''ஷ்'' என்று திருப்பிய ஸ்ருதி ''சொல்லக்கூடாது!'' என்றாள்.

பார்த்த வராவிற்கும் ரமணனுக்கும் சிரிப்பு வர... அந்த காலையில் தன் மனைவியோடான அந்த க்ஷணத்தை பரிபூரணமாக அனுபவித்தான் ரமணன்.

தான் நேற்று காலையில் தான் சென்னை வந்தோம். நேற்று இரவு தான் பல மாதங்களுக்கு பிறகு வராவை பார்த்தோம். எல்லாம் ரமணனுக்கு மறக்க அவளோடு ஜென்மமாய் இருக்கும் ஒரு உணர்வை உணர்ந்தான்.

அது கொடுத்த உந்துதல் யோசிக்காமல் அவன் வாயிலிருந்து தானாக வந்தது, ''இந்த மாதிரி எனக்கும் ஒண்ணு வேண்டுமே!'' என்றான்.

வரா புரியாதவளாக, ''எது?'' என்றாள்.

ரமணன் ஸ்ருதியை காட்டி, ''இந்த மாதிரி ஒரு குழந்தை!'' என்றான்.

லேசாக வெட்கம் வர வாய்க்குள் ஏதோ பேசியவாறு வரா வெளியே போக போக... ''நான் கேட்டேன்

ஒண்ணுமே சொல்லலையே பாப்பா!'' என்றான் மென்னகையுடன்.

ரூம் வாசல் வரை பதில் சொல்லாமல் சென்றவள், ஸ்ருதியிடம், ''மாமாகிட்ட சொல்லிட்டு வாங்க'' என்று ஏதோ சொல்லி அனுப்ப...

பக்கத்தில் வந்த ஸ்ருதி, ''அது அத்தையால் மட்டும் தனியா முடியாதாம், மாமாவும் வேணுமாம்'' என்று சொல்லி செல்ல...

''நிறைய தைரியம் வந்து விட்டது இந்த வராவுக்கு, ச்சே ச்சே இப்படியா பேசுவாள்'' என்று ரமணனுக்கு வெட்கம் எட்டிப்பார்த்தது. அவன் வராவை பார்க்க... லேசாக கண்ணடித்து விட்டு சென்றாள்.

அந்த நினைவு தந்த இனிமைகளுடன் குளித்து ரெடியாகி வந்தான். வரா ஸ்ருதிக்கு இட்லி ஊட்டிக்கொண் டிருப்பதை பார்த்தவன்,

''இப்படி தான் எனக்கு போட்டியா உன் பொண்ணை ரெடி பண்ணி வைப்பியா'' என்று கல்பனாவை பார்த்து கேட்டவாறே வந்தமர்ந்தான்.

''நேத்து தான் வீட்டுப் பக்கம் எட்டி பார்த்துட்டு, என் பொண்ணை போட்டின்றயா நீ, சீக்கிரமா அவளுக்கு போட்டியா நீ ஒண்ணை ரெடி பண்ணு'' என்றாள்.

''என்னடா இது? இந்த பொண்ணுங்களுக்கு எல்லாம் இப்படி பேசறாங்க'' என்று ரமணன் கப்பென்று வாயை மூடிக்கொண்டான்.

''வரா அவளை அவங்கம்மா கிட்ட குடுத்துட்டு சீக்கிரம் ரெடியாகு! நான் முதல் அமைச்சரை பார்க்க போறேன். நீயும் வரணும்!'' என்றவாறே பேப்பரை பார்த்து கொண்டே டீவிய போட்டுக்கொண்டே அமர்ந்தான்.



''நானா நான் எதுக்கு? என்றாள்.

''இது அஃபிசியலா போகலை, சும்மா மரியாதைக் காக பார்க்க போறேன். நீயும் வா!'' என்றான்.

தயங்கியவளை, ''கிளம்பு பாப்பா! லேட் பண்ணாத!'' என்று சற்று சீரியசாக சொன்னான்.

''ராம் அண்ணா எங்கே?'' என்று கல்பனாவிடம் கேட்க...

''இன்னும் ஒரு வாரத்துக்கு அவங்க காலைல பிஸி'' என்றாள்.

புரியாமல் பார்த்தவனிடம், ''நீ இங்க வர்றதுக்காக, இருக்கிற அத்தனை சாமியையும் டிஸ்டர்ப் பண்ணிட்டு இருந்தாங்க. இப்போ தாங்க்ஸ் சொல்ல போயிருக்காங்க'' என்றாள்.

இதற்கு என்ன சொல்லுவான், அவன் வேலையை பார்க்க துவங்கினான்.

வரா கால் மணிநேரத்தில் ரெடியாகி வந்தாள்.

பச்சை பட்டில் இருந்தாள். மிகவும் அழகாக இருந்தாள். பார்க்க பார்க்க கண்களை எடுக்க முடியவில்லை. ஆனால் கடமை அழைத்தது.

அதற்குள் அப்பாவிடம் பேசி... அம்மாவிடம் பேசி... எழில் வேந்தனை அழைத்து, சில விஷயங்கள் செய்ய சொல்லி, அஸிஸ்டென்ட் கமிஷனர் அழைத்து, அவருக்கும் சில வேலைகள் பணித்தான்.

சாப்பிட்டுவிட்டு கிளம்பினர், தங்களுடைய காரிலேயே சென்றவர்கள், ''வெயிட் பண்ணு!'' என்று

அவளை காரிலேயே இருக்க வைத்து ஆபீஸ் சென்றான்.

அதுவரை இருந்த அவன் முக பாவம் அப்படியே மாறிவிட்டது. சிரித்து, ஜோக்கடித்து, காதல் பார்வை பார்த்து, அப்படி எல்லாம் அவன் இருக்கவில்லை தான். இருந்தாலும் ஒரு சகஜ முக பாவம் இருந்தது.

இப்பொழுது அப்படியே சீரியசாக மாறிவிட்டதை பார்த்து கொண்டு தான் இருந்தாள்.

'எப்படி இவன் கீழ் எல்லாரும் வேலை செய்கிறார்களோ' என்று யோசித்தவாறே காரிலேயே பொறுமையாக அரை மணி நேரம் காத்திருந்தாள்,

சரியாக அரைமணி நேரம், வந்தவன் காரை கிளப்ப... அவன் வேகத்தை பார்த்து பயந்தாள். ''மெதுவா போங்க! எதுக்கு இவ்வளவு வேகம்'' என கேட்க... ''உனக்காக தான் மெதுவா போறேன்'' என்றவனிடம்.

''இன்னும் மெதுவா போ, எனக்கு வேகமா போனா பயமா இருக்கு'' என்றாள்.

அமைதியாக ஓர் இடத்தில் நிறுத்தியவன், ''நான் உன்கூட இருக்கும்போது வேற எந்த நினைவும் உனக்கு இருக்கக் கூடாது. பயம் அது நிச்சயம் இருக்கக் கூடாது,'' என்றவன்... அவள் முகம் தெளியாததை கண்டு அவள் முகத்தை இரு கைகளாலும் அருகில் இழுத்தான்.

அருகில் பார்க்கும் பொழுது அந்த முகம்... அவனுக்கு, ''வராமல் வந்த தேவதை...'' என்ற வார்த்தையை ஞாபகப்படுத்த, எத்தனை வருட நினைவின் தாக்கம் அவள்.

திருமணம் முடிந்த பிறகும் நினைக்க மட்டுமே வைத்து கொண்டிருந்தவளின் முகம் கைகளில் இருக்கவும் முதலமைச்சர் சந்திப்பையே மறந்தான்.



அவள் அப்பொழுதும் பயத்தோடு கூடிய பார்வை பார்க்க... அவள் பார்க்க பார்க்க... மிக மென்மையாக அவள் முகத்தில் தன் முத்திரையை பதித்தான்.

அவள் பயம் போய் வேறு உணர்வுகளுக்கு ஆட்படுவது புரிய... தன் முத்திரையை அவள் முகமெங்கும் அழுத்தமாக எழுத ஆரம்பித்தான்.

இருவருமே தன் உணர்வில் இல்லை. அப்பொழுது பார்த்து அவன் கிளம்பி விட்டானா என்று கேட்க தொலைபேசி அழைக்க... உணர்வுக்கு வந்தவன் காரை கிளப்பினான்.

மயக்கத்திலிருந்து விடுபட்டு இருக்கும் இடம் பொருள் உணர்ந்து சட்டென்று இருவருமே தங்களை சமணப்படுத்தினர்.

ஒரு காலத்தில் எப்படி வேகமாக இந்த வரா கார் ஓட்டுவாள் என்று எண்ணியபடியே இருக்க, C.M. இருப்பிடம் வந்தது.

அவனோட சென்றது, C.M.மை பார்க்க காத்திருந்தது, எல்லாமே அவளுக்கு ஒரு பெருமையை கொடுத்தது. அடிக்கடி அவளையறியாமல் அவன் முகத்தை பார்த்தபடியே இருந்தாள். ஆனால் அவன் கருமமே கண்ணாயினான். முகத்தில் சிந்தனை மட்டுமே.

உள்ளே செல்ல, அங்கே முதல் அமைச்சரும். அவர் பி.ஏ மட்டுமே இருந்தனர்.

''வணக்கம் ஐயா! நான் வெங்கட ரமணன்!'' என்று அவன் அறிமுகப்படுத்தி கொள்ளும்போதே...

''வாப்பா! வாப்பா!'' என்றார் அவர். அருமையான ரெகார்ட்ஸ் வச்சிருக்கிறே நீ... இந்த சின்ன வயசுல ஒரு

தமிழன் அடுத்த மாநிலத்துல சாதிச்சு இருக்கியேப்பா! உன் ரெகார்ட்ஸ் தான் பார்த்துட்டு இருந்தேன், வாழ்த்துக்கள்!'' என்றார்.

''நன்றி ஐயா!'' என்றவன், பின்பு தன் மனைவியையும் அறிமுகப்படுத்தி தன் விவரம் தெரிவிக்க... ''அட! கம்பம் ராமநாதன் அண்ணன் பையனா நீ! எப்படி உன்னை எனக்கு இத்தனை நாளா தெரியாம போச்சு'' என்று பேசி இருக்க...

சிறிது நேரம் குடும்ப விவரங்களை கேட்டவர், பிறகு வராவிடமும் சிறிது நேரம் பேசினார்.

''உங்க அப்பா உன் அண்ணன் கல்யாணத்துக்கு எல்லாம் என்னை கூப்பிட்டாங்க, ஆனா உன் கல்யாணத்துக்கு கூப்பிடலைமா அது தான் எனக்கு தெரியலை!'' என்றார்.

''நான் உங்க கிட்ட தனியா பேசணுமே அய்யா'' என அவன் கேட்க... ''சரி'' என அவர் தலையசைத்ததும்,

வராவை சிறிது நேரம் வெளியே இருக்க சொன்னவன், பி.ஏ வையும் வெளியே நிறுத்தி அவரிடம் பேசத் துவங்கினான்.

## 20

### அன்றைய நிகழ்வுகள்

ஸ்ரீதர் தன் வீட்டில் காதலை பற்றி பேச... அங்கு புயல் பூகம்பம் அத்தனையும் ஒரு சேர கிளம்பியது.



ஸ்ரீதர் எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்த்தான் தான். ஆனால் எக்ஸ் மினிஸ்டர், தற்போது எம்.பி, இப்படி வரமஹாலக்ஷ்மியின் தந்தை பதவியில் இருப்பதால் அந்தஸ்து கண்டாவது எப்படியாவது சம்மதிக்க வைத்து விடலாம் என்று நினைத்திருக்க... அவன் நினைத்தது எதுவும் நடக்கவில்லை.

அவன் தந்தை சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. ''ஏதோ வயசுக்கோளாறு பொண்ணுங்களோட சுத்திகிட்டு இருக்கன்னு நினைச்சா... நீ என்னடா கல்யாணம் பண்ணி வைங்கன்னு வந்து நிக்கற. அதெல்லாம் முடியாது! அவங்கப்பன் என்னவா வேணா இருந்துட்டு போறான். அது பிரச்சனையில்லை. அவன் நம்மாளு இல்லை!''.

''அரசியலுக்கு வந்துட்டா அவன் பெரியாளா? நம்ம வசதி அந்தஸ்து முன்னாடி நிக்க முடியுமா!. நம்ம ஜாதி சங்கத்துக்கு உங்க சித்தப்பா தான் தலைவர். நம்ம வேற ஜாதில பொண்ண கட்டினா எவண்டா நம்மள மதிப்பான். அப்படி செஞ்சவங்கள இது நாள் வரைக்கும் நாங்க மதிச்சதே இல்லைடா.''

''இத்தனை நாள் வாய் ஓயாம பேசுனீங்களே, எங்க இனம் அது இதுன்னு. எங்க போச்சு அதெல்லாம். உங்க வீட்ல என்ன நடக்குதுன்னு, அவனவன் எங்களை பார்த்து கைகொட்டி சிரிப்பாண்டா! நாங்க வெளில தலை காட்ட முடியாது!''

''நீங்க என்ன சொன்னாலும் எனக்கு அவ வேணும்பா, நான் அவளை தான் கல்யாணம் பண்ணிப்பேன்'' என்றான்.

அவன் வார்த்தையை கொண்டே மடக்கினார். "வேணும்னா வச்சிகிடுறா, அதுக்கு ஏன்டா கல்யாணம் கட்டணும்ன்ர. உனக்கு முன்னாலயே தெரியும், உனக்கும் சித்ராக்கும் தான் கல்யாணம்ன்னு நாங்க முடிவு பண்ணி யிருக்கோம்னு...

"இப்போ வந்து அவளை கட்டுவேன், இவளை கட்டுவேன்னா! வெட்டி பொலி போட்டுருவோம்டா! சாதாரணமா நினைக்காத இதுல நம்ம கௌரவம் மரியாதை அத்தனையும் அடங்கியிருக்கு.

"இத்தனை பேசுனவங்க... நம்ம ஜாதி நம்ம ஆளுங் கன்னு இருந்தவங்க... இன்னைக்கு அரசியல்ல இருக்கிற கொஞ்சம் வசதியானவங்க வந்தவுடனே அப்படியே திரும்பிட்டாங்கன்னு எல்லாரும் பேசுவாங்க... அதை யெல்லாம் என்னால பொருத்துக்கவோ கேக்கவோ முடியாது. அதுக்கா... இந்த பேச்சு கேக்கவா நாங்க இருக் கோம்.

"இப்பவும் நாங்க அந்த பொண்ணோட பழகா தேன்னு சொல்லலை. உனக்கு அவ தான் வேணும்னா, பழகு. அனுபவி.அது உன் திறமை. ஆனா கல்யாணம் அது நடக்காதுடா!!, என்று ஆவேசமாக கத்தினார்.

"அப்பா!!!!" என்று பதிலுக்கு இவனும் கத்தினான். "இப்படி அசிங்கமா பேசாதீங்க" என்றான்.

"அப்படி தாண்டா பேசுவோம்! இதுமட்டுமில்லை இன்னும் கூட பேசுவோம்! நானாவது உன்கிட்டே தான் பேசுறேன், ஆனா நம்ம பயளுவளுக்கு தெரிஞ்சா அந்த பொண்ணு கிட்டயே பேசுவாங்க. அதுவும் உங்க அத்தைக்கு நீ சித்ராவ கட்ட மாட்டேன்னு தெரிஞ்சது.



அந்த பொண்ணு வீட்டுக்கே போய் மானத்தை வாங் கிடுவா.

"வீணா நீ அந்த பொண்ணுக்கு பிரச்சினை கொடுக் காத! அவளை கழட்டி விட்டுடு!" என்றார்.

"அப்பா ப்ளீஸ் பா!" என்று கெஞ்சலில் இறங்கினான். "நான் அவளைதான்பா கல்யாணம் பண்ணிக்குவேன்" என...

"நீ வாழ்க்கை பூராவும் கல்யாணம் பண்ணிக்க லைன்னா கூட பரவாயில்லை! ஆனா இந்த கல்யாணம் நடக்காது. ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் பண்ண என் உடம்புல உசுரு இருக்குற வரைக்கும் விடமாட் டேண்டா.

"உனக்கு நாங்க எதுலடா குறை வெச்சோம். பிறப்பி லேயே நீ கோடீஸ்வரன்டா, உன்னை சொத்து சம்பாரிக்க சொல்றோமா... உனக்கு குடும்பத்தை காப்பாத்த வேண் டிய நிர்பந்தம் இருக்கா... அக்கா தங்கச்சிக்கு கல்யாணம் பண்ணனுமா... என்னடா உன் நிர்பந்தம்...? எதுவுமே கிடையாது...

"உன்னை நாங்க இதுவரைக்கும் எதுவும் சொன்னது கூட கிடையாதுடா, குடிக்கறியா குடி, கூத்தடிக்கிறியா கூத்தடி, பொண்ணுங்க சகவாசமா, அனுபவி... எதுவுமே சொல்றது கிடையாது.

"ஆனா நாங்க இத்தனை வருஷம் கட்டி காத்த பெருமையை உனக்காக விடமுடியாது. நீ நம்ம ஜாதில எவளையாவது இழுத்துட்டு வா... உங்க அத்தையை சமாதானப்படுத்தி கல்யாணத்தை கூட செஞ்சி வெக்கிறேன். ஆனா ஜாதி விட்டு ஜாதி நான் செத்ததுக்கு

அப்புறம் கூட நடக்க விட மாட்டேண்டா'' என்றார் ஆவேசமாக.

சண்டையிட்டு பார்த்தான்.... கெஞ்சி பார்த்தான்... மிரட்டி பார்த்தான்... ''நான் இந்த வீட்டை விட்டு போய் விடுகிறேன், எனக்கு உங்கள் சொத்து எதுவும் வேண் டாம்'' என்று சொல்லி பார்த்தான், எதற்கும் அங்கிருந்த யாரும் அசையவில்லை.

அவன் குடும்பத்தில் ஒருவர் கூட அவனுக்கு சப்போர்ட் இல்லை.

பத்மாகூட... ''நான் அன்னைக்கே இது சரி வராதுன்னு சொன்னேன். நீ கேட்கலை'' என்று குற்றம் சாட்டினாள். அதே சமயம் அவன் அப்பாவையும் சாடினாள்...

''நான் அன்னைக்கே உங்க கிட்ட சொன்னேனே அப்பா! நீங்க தான் வயசுப்பையன் அப்படி இப்படி இருக்கறது சகஜம்னு சொல்லி என் வாயை அடைச்சிட் டீங்க! இப்போ இது எங்க கொண்டு நிறுத்தி இருக்கு பாருங்க. நானும் வரமஹாலக்ஷ்மி ஒத்துக்க மாட்டான்னு அலட்சியமா இருந்துட்டேன். இல்லைன்னா அட்லீஸ்ட் அவகிட்டயாவது இது நடக்காதுன்னு சொல்லியிருப் பேன்!'' என்றாள்.

அவன் அன்னை அதற்கும் மேலே... அவரால் ஜீரணிக்கவே முடியவில்லை. ''நடக்காதுன்னு தெரிஞ் சும் நீ செஞ்சா, அதுக்கு யார் என்ன பண்ண முடியும். இத்தனை வருஷம் கண்ணுக்கு கண்ணா வளர்த்த நாங்க உங்க கண்ணுக்கு தெரியலை. அப்ப நீங்க மட்டும் எதுக்குடா எங்க கண்ணுக்கு தெரியணும். எங்க சம்மத மும் கிடைக்காது, உன்னையும் செய்ய விடமாட்டோம்!'' என்றார் தீர்மானமாக.



''நம்ம ஆளுங்களுக்கு தெரியாம பார்த்துக்கடா, தெரிஞ்சா அந்த பொண்ணு வீட்டுக்கு போய் கலாட்டா செஞ்சிடுவாங்க'' என்று மிரட்டல் வேறு விடுத்தார்.

மிரட்டல் மட்டுமல்ல, அது தான் உண்மையும் கூட.

ஸ்ரீதருக்கு கண்ணை கட்டி காட்டில் விட்டது போல் இருந்தது. அவனுக்கு என்ன செய்வது என்றே தெரிய வில்லை.

அவன் அப்பா அதற்குள் வேலையை ஆரம்பித்து இருந்தார். தன்னுடைய தம்பியை கூப்பிட்டு, ''அந்த பொண்ணு வீட்டுக்கு நீயே போய் விவரம் சொல்லு! இது நடக்காதுன்னு. அவங்களுக்கு விவரம் தெரியுமோ தெரியாதோ. பொண்ணை பத்திரமா பார்த்துக்க சொல்லு. நாம நம்ம பையன பார்த்துக்குவோம்னு சொல்லு!

''மீறி இனிமே ஏதாவது அந்த பொண்ணு நம்ம பைய னோட சுத்துனா... நடக்கற எதுவுக்கும் நாமா பொறுப் பில்லைன்னு சொல்லு. அவங்கப்பன் அரசியல்ல இருந்தா நமக்கென்ன! ஒழுங்கா பொண்ணை பார்த்துக்க சொல்லு!'' என்றார்.

வரா ஸ்ரீதரை பார்த்து... ''ஐ அம் ஆல்சோ இன் லவ் வித் யூ'' என்ற வார்த்தையை சொல்லி மூன்று மணி நேரத்திற்குள் அவள் வீட்டு முன் இரண்டு டாட்டா சுமோ நிறைய ஆட்களை கொண்டு, ஸ்ரீதரின் சித்தப்பா சிவசங்கரனை பார்க்க வந்தார்.

சிவசங்கரன் அப்பொழுது வீட்டில் இருந்தார். இவர்கள் ஏதோ அரசியல் வேலை காரணமாக வந்திருக்கிறார்கள் என்று அவர் நினைத்திருக்க... ''நான் உங்களிடம் தனியாக பேசவேண்டும்'' என்றார் ஸ்ரீதரின் சித்தப்பா.

அவர் குரலே ஏதோ சரியில்லை பிரச்சனை செய்ய வந்திருக்கிறார்கள், என்றுணர்த்த... எல்லோரையும் அனுப்பிவிட்டு ராமை மட்டும் கூட வைத்து கொண்டு, ''சொல்லுங்க இவன் என் பையன் தான்!'' என்றார்.

''உங்க பொண்ணு...'' என்று ஆரம்பித்த ஸ்ரீதரின் சித்தப்பா விவரம் கூற...

''எங்க பொண்ணு... உங்க பையனோட சுத்துறாளா... அவன் அவளை தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு சொல்றானா...?'' என்றார் நம்பாத குரலில் சிவசங்கரன்.

''பின்ன உங்க முன்னாடி பொழுது போகாம வந்து கதையடிச்சிட்டு இருக்கேன்னு நினைக்கிறீங்களா'' என்று ஸ்ரீதர் சித்தப்பா எகிற... அதற்கு பதில் அளிக்க வேண்டும் என்ற உணர்வு கூட சிவசங்கரனிடமும் ராமிடமும் இல்லை.

திடீரென்று தங்கள் வீடு தேடி வந்து, தங்கள் செல்லப் பெண்ணின் மீது இப்படி ஒரு பழி சொல்லை ஒருவர் போட... இருவரும் அதிர்ந்த நிலையிலேயே இருந்தனர்.

''இருங்க நான் என் பொண்ணை கேட்கிறேன்'' என்றார் சிவசங்கரன் இன்னுமே செய்தியை ஜீரணிக்க முடியாதவராக...

அவளை அழைத்து பொறுமையாக கேட்டார்.

''பாப்பா! உனக்கு இவங்க பையனை தெரியுமா?'' என்றார்.

யார்? என்று தெரியாமல் வரா தடுமாற.. அதை உணர்ந்த ராம்... ''ஸ்ரீதர்'' என்று எடுத்து கொடுத்தான்.

'தெரியும்' என்கிற மாதிரி தலையசைத்தாள்.



''நீ இவங்க பையனோட ஊர் சுத்தறியாம். இவங்க பையனை காதலிக்கிறியாம் உண்மையா?'' என்றார்.

'இல்லை' என்று தன் மகள் சொல்லிவிட வேண்டும் என்று வேண்டியபடியே அவளை பார்க்க...

அவள் தடுமாறினாள், ராம் அருகில் நின்றிருக்க ஆதரவிற்கு அவன் கையை பிடித்தவள், ''அப்பா! ஸ்ரீதர்...'' என்று அவள் ஆரம்பிக்க...

''பாப்பா! அவங்க பையனை பற்றி நமக்கு தேவையில்லாதது, நீ உன்னை பற்றி மட்டும் பேசு'' என்றார்.

தடுமாறினாள் வரா... ''ஸ்ரீதரை காதலிக்கிறாளா?'' என்று கேட்டால் உண்மையாக அவளுக்கு பதில் தெரியாது. அவனுடைய அருகாமையை அவள் ரசித்தாள்.

ஸ்ரீதரை அவளுக்கு பிடித்தது. அதை விட அவள் மேல் அவன் வைத்திருந்த காதல் பிடித்தது. தன்னை பார்த்த பிறகு தன்னுடைய ப்ளே பாய் இமேஜ் விட்டு தனக்காக தன்னையே மாற்றி கொண்ட குணம் பிடித்தது.

இந்த இரண்டரை வருடமாக அவளுக்கு அவனை தெரிந்த நாள் முதல் ஸ்ரீதர்... ''அவளையன்றி ஏதுமில்லை இவ்வுலகில்...'' என்ற மாதிரியான ஒரு அன்பை, செய்கையை தான், அவளுக்கு உணர்த்தி கொண்டிருந்தான்... காட்டி கொண்டிருந்தான்.

எந்த வகையிலும், 'நீ என்னை தான் காதலிக்க வேண்டும்' என்று அவளை கட்டாயப்படுத்தியது கூட கிடையாது.

அவன் காதலை சொல்லிய பிறகு... தான் அதை உணர்ந்த பிறகு... இத்தனை நாட்கள் அவனுடன் பழகிய

பிறகு... தான் அவனிடம் பதிலுக்கு காதல் சொல்லாதது. ஏதோ தவறு போல தோன்றவே... அதை சொன்னாள்.

சொன்னவுடனேயே... அதன் பொருட்டே... அதை திருமணமாக மாற்ற எண்ணி... திருமணமானால் தன்னுடைய யோசனைகளுக்கு தேவையிருக்காது என்றே... ''அப்பாவிடம் திருமணம் குறித்து பேசுகிறீர்களா'' என்றாள்.

'காதல் சொல்லி வந்து சில மணித்துளிகளே ஆன நிலையில்... இவர் வந்திருப்பதை பார்த்தால் திருமணம் பேச வந்திருக்கிறார்களா... இல்லை ஏதாவது பிரச்சனையா...' என்று எண்ண அலைகள் வேகமாக தாக்க...

''கேக்கறாங்க இல்லை, சொல்லு பாப்பா!'' என்றான் அவள் அண்ணனும்...

ஆமாம், என்பது போல் தலையாட்டியவள், அதை வாய் வார்த்தையாக சொல்லாமல், ''நான் தான்பா உங்க கிட்ட கல்யாணம் பேச சொல்லி சொன்னேன்!'' என்றாள்.

'இதை நான் உன்னிடம் எதிர்பார்க்கவில்லை' என்று அவர் பார்வை குற்றம் சாட்டியது.

''அவங்களுக்கு விருப்பமில்லையாம். உங்க பொண்ண ஒழுங்கா இருக்க சொல்லுங்க! எங்க பையன நாங்க பார்த்துக்குறோம்! இந்த கல்யாணமெல்லாம் நடக்காதுன்னு, சொல்ல வந்திருக்காங்க! நான் என்ன சொல்லட்டும்!'' என்றார்.

வரமஹாலக்ஷ்மி வந்ததில் இருந்து ஸ்ரீதரின் சித்தப்பா அவளை தான் பார்த்து கொண்டிருந்தார்.

அழகான மென்மையான பெண் அவளை பார்த்தவுடனே ஸ்ரீதரை இவளிடமிருந்து பிரிப்பது கடினம்



என்றே உணர்ந்தார். பிரித்தாலும் இப்படி ஒரு அழகான பெண்ணை தேடுவது என்பது இயலாத காரியம் என்றே தோன்றியது.

ஒரு நிமிடம் மனக்கண்ணில் தங்களுடைய தங்கை மகள் சித்ரா வந்து போக... இவள் பக்கத்தில் நின்றால் அவள் பார்க்க சகிக்க கூட மாட்டாள் என்றே தோன்றியது.

இருந்தாலும் இவர்கள் தாங்கள் ஜாதி அல்லவே... அவருள்ளும் இப்படி யோசனை ஓடியபடியே இருக்க...

''சொல்லு பாப்பா!'' என்று சிவசங்கரன் குரலுயர்த்த... ''நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படி சொல்றேன்பா'' என்றாள்.

''எங்க பொண்ணு இனிமே உங்க பையனோட எந்த பேச்சு வார்த்தையும் வெச்சுக்காதுங்க, அதுக்கு நான் பொறுப்பு!'' என்றவர்.

ஒரு பெண்ணின் தந்தையாக அடுத்த நிமிடம் அவரிடம்... ''இது நமக்குள்ளேயே இருக்கட்டுமே! அவளால எந்த தொந்தரவும் வராது! நான் பார்த்துக்கறேன். பொண்ணு பேரு எங்கயும் வெளில வரவேண்டாமே!'' என்றார்.

''நாங்களும் பொண்ண பெத்தவங்க தான்! இந்த மாதிரி நடக்க வாய்ப்பேயில்லை அப்படின்றதால் தான், அண்ணன் பேச சொல்லி அனுப்பிச்சாங்க. பையன நாங்க பார்த்துக்குவோம்! இருந்தாலும் இளரத்தம் இல்லையா... சொன்ன பேச்ச கேட்க தோணாது, மீற தான் தோணும்! அதனால தான் உங்க கிட்ட பேச வந்தோம்.''

''ஸ்ரீதர் உங்க பொண்ண தேடி வரதுக்கான வாய்ப்புகள் அதிகம். இந்த கல்யாணம் நடக்க வாய்ப்பே

யில்லை! எங்க சம்மதத்தோட மட்டுமில்லை, எங்களை மீறியும் நடக்க வாய்ப்பில்லை... சொல்லிட்டோம்! வளராம பார்த்துக்குங்க...'' என்றபடி எழுந்து சிவசங்கர னின் பதிலுக்கு கூட காத்திராமல் சென்றுவிட்டார்.

ராம் பிரசாத் எதுவும் பேசாமல் நின்றிருந்தான்.

''இந்த காதல் கன்றாவியெல்லாம்... எப்போ இருந்து பாப்பா'' என்றார் சிவசங்கரன் கடுமையான குரலில்... இந்த மாதிரி என்றுமே அவர் வராவிடம் பேசியதில்லை. அந்த த்வனியே அவளுக்கு கண்களில் நீர் வரவழைத் தது.

''அப்பா!...'' என்றாள்.

பதில் வேண்டும் என்று அவர் பிடிவாதமாக இருக்க...

''ரெண்டு மூணு வருஷமா ஸ்ரீதரை தெரியும் அப்பா! இன்னைக்கு தான்...'' அதை சொல்லவே தன் தந்தை யிடம் தடுமாறினாள். ''இன்னைக்கு சாயந்திரம் தான் அவரோட காதலை ஒத்துக்கிட்டு, உங்க கிட்ட கல் யாணத்தை பத்தி பேச சொன்னேன்.''

குரல் கமறியது. அவள் அண்ணன் அவள் கைகளை ஆதரவாக பற்றினான்.

தன்னுடைய செல்ல மகளை திட்ட மனமில்லாமல் யாரிடம் கோபத்தை காட்டுவது என்று தெரியாமல் ராமை நோக்கி....

''நீங்கள்லாம் வீட்ல என்னடா பண்றீங்க? அவ எங்க போறா? எங்க வர்றா? யாரோட பழகுறா? எதுவுமே பார்க்கறது இல்லையா?''

ரமணன் முன்பு ராம் பிரசாத்தை பார்த்து கேட்ட அதே கேள்வி, இதை கேட்டவுடன் அண்ணனுக்கும் தங்கைக்



கும் சம்பந்தமே இல்லாமல் வெங்கட ரமணன் நினைவு வந்தது.

''அவளுக்கு என்னடா தெரியும்! சின்ன பொண்ணு. காதல் சொல்லி மூணுமணி நேரத்துல ரெண்டு வண்டி நிறைய ஆளுங்களோட வந்து மறைமுகமாக மிரட்டிட்டு போறான்.''

''இத்தனை வருஷமா நம்ம பொண்ணோட அந்த பையன் பழகறது நமக்கு தெரியலை, அவனுங்களுக்கு தெரியாமையா இருக்கும். கல்யாணம்ன்னு சொன்ன வுடனே எப்படி கிளம்பி வந்துட்டாங்க பாரு...''

''அவனுங்களுக்கு இனப்பற்று அதிகம்டா... வேற ஜாதி பொண்ணை எல்லாம் வீட்ல வேலைக்கு கூட வெச்சிக்க மாட்டாங்க. நம்ம சாதாரணமான ஆட்களா இருந்தாலே பொண்ணுங்க விஷயம் தீயா பரவிடும்.''

''இப்போ நான் போஸ்ட்ல இருக்கேன். எம்.பி, எக்ஸ் மினிஸ்டர். எல்லாரும் நம்மளை எப்படி கவனிப்பாங்க! பொண்ணு பேரை நிமிஷத்துல கெடுத்துருவாங்கடா! ஏதோ நான் பதவியில் இருக்க போகவும், வீடு தேடி வந்து பொண்ணை பார்த்துக்கங்கன்னு சொல்லிட்டு போறான்.... இல்லைன்னா ரோட்ல நின்னு கத்துற ஆளுங்கடா அவங்கள்லாம்.''

''எந்த கட்சி வந்தாலும் போனாலும் அவங்களை பாதிக்காது. ரொம்ப பெரிய தொழில் சாம்ராஜ்யம். நம்ம னால அவங்க முன்னால் நிக்க முடியாது.''

''பாப்பா பார்த்து நடந்துக்கோங்க. அவங்க சகவாசம் வேணாம் சரிவராது. எங்க பேர் கெட்டுடும் அப்படின் றதை விட, நம்ம நிம்மதி போய்டும். உன்னை நிம்மதியா

இருக்க விடமாட்டாங்க. இப்படி பண்ணிட்டீங்களே பாப்பா... கொஞ்ச நாள் காலேஜ் போறதை கூட நிறுத் திடுங்க. அப்புறம் பார்க்கலாம்'' என்று மேல பேச முடி யாதவராக சென்றார்.

அவள் அண்ணன் எதுவும் பேசவில்லை. ''ஏன் இப்படி செய்தாய்? ஏன் காதலித்தாய்? அது தவறு!'' என்பது போல எதுவும் சொல்லவில்லை. வராவின் கண்களில் கண்ணீர் வந்து கொண்டே இருக்க அவளை சமாதானப் படுத்தும் பொருட்டு...

''கொஞ்ச நாள் ஆறப்போடலாம் பாப்பா! இப்போ இதை பத்தி மேல என்ன செய்யறதுன்னு யோசிக்காத... வா!'' என்றான்.

கல்பனா ஊரில் இல்லை, இரண்டாவது குழந்தை வயிற்றில். அது அவளுக்கு ஏழாம் மாதம், தனது தந்தை வீட்டிற்கு சீராட சென்றிருந்தாள். அங்கே ஏதோ விசேஷ மென்று அவள் மாமியார் ராஜேஸ்வரியும், தன் பேரன் ரோஹித் பிரசாத்தோடு சென்றிருந்தார்.

இந்த நிகழ்வுகள் எல்லாம் ராஜேஸ்வரிக்கும் தெரிய வில்லை, கல்பனாவுக்கும் தெரியவில்லை. தங்களுடைய செல்லத்தின் செய்கையை தங்களுடைய வாழ்க்கை துணையிடம் கூட பகிர அவர்களுக்கு விருப்பம் இல்லை.

தூக்கமில்லா இரவாக வரமஹாலக்ஷ்மிக்கு அன்று ஆனது.

'என்ன செய்வது...? யாரிடம் சொல்வது? தான் ஸ்ரீத ரிடம் சொன்னது சரியா...? இனி என்ன பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்...? தன்னால் அது முடி யுமா... தன்னால் தன்னுடைய தந்தைக்கு அவப்பெயரா...



தான் இதைதான் தன் தந்தைக்கு தேடிக் கொடுத் தோமா... தான் கெட்ட பெண்ணா...?'

'ஸ்ரீதரிடம் இது சரி வராது என்று சொல்லிவிடலாமா... அது தான் அவனை ஏமாற்றியது போல் ஆகாதா... தான் காதலித்து ஏமாற்றிவிட்ட சுயநலப் பெண்களின் வரிசையில் சேர்ந்து விடுவோமோ... அப்பொழுது தான் சுகமான வாழ்க்கையை தான் அவனிடம் எதிர்பார்த் தோமா? அது இல்லாத பட்சத்தில் தான் அவனை விட்டு விலகுகிறோமா!... தான் கெட்ட பெண்ணா...?

ஏன் தான் அவனிடம் பழகினோம். என்னவாயிற்று தனக்கு. வெளியில் தெரியும் பொழுது தன்னை எல் லாரும் அவனுடன் சேர்ந்து சுற்றினாள் என்று பரிகசிப் பார்களா... தன்னை பற்றி அசிங்கமாக பேசுவார்களா... தான் கெட்ட பெண்ணா?

இந்த காதல் தனக்கு தேவையா? இதை சொல்லி அரை நாளில் தனக்கு இத்தனை துன்பமா... இப்பொழுது வேண்டாம் என்று சொன்னால், தான் கெட்ட பெண்ணா...?'

யோசித்து யோசித்து... தலை சுழன்றது. இவை மட்டு மின்றி ஏதேதோ எண்ணங்கள் அவளை தாக்க...

தானாக கைகள் வெங்கட ரமணின் தொலைபேசி எண்ணை அழுத்தின... நேரம் அப்பொழுது பண்ணி ரெண்டை நெருங்கி கொண்டிருந்தது.

வெங்கட ரமணன் அப்பொழுது தான் உறங்க ஆரம் பித்து இருந்தான். சிறு சத்தத்திற்கும் விழித்து விடும் இயல்பினன் என்பதால், ஒரே ரிங்கில் எழுந்தவன் போன்... ''பாப்பா காலிங்'' என்று காட்ட...

வரா தன்னை அழைக்கிறாளா... எதற்கு என்று மன தில் சிறு பதட்டம் தோன்ற எடுத்து, ''பாப்பா'' என...

அந்த பக்கம், "நீ ஏன் என்னை வேண்டாம்னு சொன்ன?" என்றாள் அழுகையோடு கூடிய குரலில் வரா.

அதிர்ந்தான், "என்ன வரா கேட்கற நீ..."

"ஏன் என்னோட கல்யாணம் வேண்டாம்னு சொன்ன, அதனால நான் கெட்ட பொண்ணு ஆயிட்டேன் பார்த்தியா" என்றாள் மறுபடியும் அழுகையுடன்.

அவள் குரலில் என்ன இருந்தது என்று அறிய ரமணன் முற்பட அவனுக்கு விளங்கவேயில்லை. கோபமா... அழுகையா... ஆத்திரமா... வருத்தமா...

அவனுக்கு அந்த குரல் பத்து வயதில் அவளை முதன் முதலில் பார்த்த போது, அவளுடைய விளையாட்டில் தலையிட்டு அவளை கோபப்படுத்தி "மை பிரண்ட்ஸ் கால் மீ வெங்கி" என்று சொல்ல...

"ஐ அம் நாட் யுவர் பிரண்ட்" என்று உதடு துடிக்க சொன்ன வரா ஞாபகத்திற்கு வந்தாள்.

மறுபடியும், "என்னை கெட்ட பொண்ணு ஆக்கிட்ட தானே" என்றாள்.

"பாப்பா என்ன பேசறீங்க நீங்க... எப்போவும் வரா பாப்பா யாருக்கும் கெட்ட பொண்ணு ஆகமாட்டீங்க, உங்களால அது முடியாது!" என்றான்.

"யூ ஆர் தி பெஸ்ட்" என்றான் உணர்ந்து.

தன்மையாக பேசினால் ஒழிய, தன்னால் விஷயத்தை வாங்க முடியாது என்னுணர்ந்தவன், பத்து வயது வராவை சமாதானப்படுத்துவது போல் சமாதானப்படுத்தினான்.

"அப்போ நான் நல்ல பொண்ணுன்னா நீ ஏன் வேண்டாம்னு சொன்ன?" என்று மறுபடியும் அதிலேயே நிற்க...



இதற்கு என்ன பதிலளிப்பது என்று சில வினாடிகள் தயங்க... அந்த சில வினாடிகள் அவளுக்கு போதுமான தாக இருக்க...

"நான் கெட்ட பொண்ணு தானே, உனக்கு கெட்ட பொண்ணா இருந்தாலும் பரவாயில்லை. அட்லீஸ்ட் ஸ்ரீதர்க்கு நல்ல பொண்ணா இருக்கேன்" என்று கூறி போனை வைத்து விட்டாள்.

பதட்டம், என்னவென்று தெரியாத பதட்டம், "யார் பெயரை சொல்லுகிறாள்? என்ன செய்கிறாள்? ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொண்டாளா? எவன்டா அந்த ஸ்ரீதர்?" பதறிய ரமணன்,

அந்த நேரத்திலும் தயங்காது ராம் பிரசாத்திற்கு உடனே ரமணன் அழைக்க... உறக்கம் வராது இருந்த ராமும் முதல் ரிங்கிலேயே எடுக்க...

"ராமண்ணா வராக்கு என்ன பிரச்சினை?" என்றான் ரமணன் எடுத்தவுடனேயே.

ராம் தயங்க... "அண்ணா, என்ன பண்ணிட்டு இருக்கீங்க நீங்க எல்லாம் அங்கன்னு எனக்கு தெரியலை. என்னன்னு சொல்லுங்க, யார் அந்த ஸ்ரீதர்?" என்று அதட்ட...

ராம் அத்தனையையும் கடகடவென ஒப்பிக்க... வெங்கட ரமணன் நேரில் இருந்தால் தன்னை அடித்திருப்பானோ என்று எண்ணும் அளவுக்கு கோபமாக ஒலித்தது ரமணன் குரல்,

"நான் உங்ககிட்ட முன்னமே சொல்லியிருக்கேன், அவ எங்க போறா? எங்க வர்றா? யாரோட பழகறா? எல்லாம் பாருங்கன்னு, என்ன பிரச்சனையை இழுத்து விட்டிருக்கான்னு தெரியலையே?" என அவனை கடிந்து கொள்ள...

பதில் சொல்லாத ராமின் அமைதி... அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை என்று ரமணனுக்கு உணர்த்த, வரா போன் செய்த பிறகு எனக்கென்ன என்று இருக்க வெங்கட ரமணனால் முடியவில்லை.

''நான் அங்கே காலையில இருப்பேன்!'' என்று மட்டும் சொன்னவன் அந்த நேரத்தில் எந்த ஃப்ளைட் இருக்கிறது என்று பார்த்து கிளம்பி வர...

அப்படியும் அவன் சென்னை வந்து சேர காலை பத்து மணியாகி விட்டது. வந்து பார்த்தால் அதிர்ச்சி மேல் அதிர்ச்சி...

ராம் பிரசாத்தை காணவில்லை...

வரமஹாலக்ஷ்மியை காணவில்லை...

இருவரையும் வேறு வேறு நேரத்தில் காணவில்லை.

சிவசங்கரன் என்ன செய்வது என்று தெரியாமல் சென்னையில் திகைத்து கொண்டிருக்க...

அங்கே மதுரையில் ராம் பிரசாத்தை காணவில்லை என்ற செய்தியை கேள்விப்பட்ட ஏழு மாத கர்ப்பிணி யான கல்பனா மாடிப்படியில் இருந்து நிலை தடுமாறி கீழே படிகளில் உருள...

வயிற்றில் அடிபட்டு சீரியஸான நிலைமையில் கல் பனா ஹாஸ்பிடலில் அட்மிட் ஆக...?

டாக்டர் அந்த பெண் மிகவும் சீரியசாக இருக்கிறாள் அவள் கணவன் வந்தால் பரவாயில்லை என்று கூற...

வெங்கட ரமணனுக்கு கண்ணை கட்டி காட்டில் விட்டது போல் ஆனது யாரை தேடுவது முதலில் வராவையா...?, ராம் பிரசாத்தையா...?



# 21

## இன்றைய நிகழ்வுகள்

வராவையும், பி.ஏ.வையும் வெளியே இருக்க வைத்து, C.M.மிடம் பேசத்துவங்கினான்.

''ஐயா, நேற்று ஜெயில் கலவரம்'', என்று ஆரம்பித்து, அங்கே நடந்தவைகளை சொன்னவன், பின்கைதி சொன்னது, அவன் நான்கு பேரை கைது செய்தது பற்றி கூறியவன்,

''அவங்க கைதும் கைதியோட வாக்கு மூலம் வைத்து தான் நடந்தது ஐயா, ரிமாண்ட் பண்ணிட்டேன்.''

''என்றாலும் இன்னும் தெளிவாக விசாரித்த பிறகு குற்ற பின்னணி முடிவு பண்ணுவோம். இவ்வளவு அவசரமான கைதுக்கு காரணம் அவர்கள் போதை பொருட்களை மாணவர்கள் மத்தியில் உலவ விடுவது தான்.''

''மாணவர்களா?'', என்று அதிர்ச்சியாக வினவினார் முதல் அமைச்சர்.

''விரிவா இன்னும் இரண்டு நாட்களில் உங்களுக்கு சொல்கிறேன் ஐயா'', என்றவன்.

''இன்னும் இரண்டு பேர் இருக்காங்க ஐயா, இவங்க கைது நடந்தவுடனே அவங்க தப்பி போய் இருக்கலாம். இல்லைன்னா... பழிய யார் மேலயாவது போட தயாரா இருக்கலாம் இல்லைன்னா... முன் ஜாமீனுக்கு கூட முயற்சி பண்ணலாம்.''

''உங்க கிட்ட கேட்காம நடவடிக்கை எடுக்க கூடாதுன்னு தான் இங்க வந்தேன் ஐயா'' என்றான்.

ஏன் என்பது போல் பார்த்தவரிடம்,

''ஒருவர் உங்கள் கட்சி, மற்றவர் எதிர் கட்சி'' என்றான்.

''நாட்டுக்காக கட்சி பாகு பாடு இல்லாம உழைக்க சொல்லுங்க... யாரும் முன் வர்றதில்லை. ஆனால் குற்ற பின்னணி வரும் பொழுது எந்த கட்சி பாகுபாடும் யாருக்கும் தெரிவதில்லை...'' என்றார் வருத்தத்துடன்.

''உங்க கட்சி கூட பெரிய பிரச்சனை இல்லை ஐயா, ஆனால் எதிர்கட்சி ஆளை கைது செய்தால் நீங்கள் வேண்டுமென்றே செய்ததாக சலசலப்பு வரும், அதற்கு தான் உங்களையே கேட்டுக்கொள்ளலாம் என்று வந்தேன்.''

''எப்படியும் செய்துவிடுவேன், ஆனால் உங்களிடம் முன்பே சொல்வது பரவாயில்லை என்று தோன்றியது என்று வந்தேன்.''

''சட்டம் என்ன சொல்கிறதோ, அதை செய்யுங்கள்'' என்றார்.

மெதுவாக புன்னகைத்தவன், ''ஐயா நீங்கள் தவறாக நினைத்து கொள்ளாவிட்டால்... இதை நான் சொல்வது தவறு தான் இருந்தாலும்... சட்டப்படி தான் நடக்கிறேன்... இருந்தாலும்... சில விஷயங்களில் சட்டத்தை மீறி செய்வேன் என்று சொல்ல முடியாது... ஆனால் சட்டம் அவர்களுக்கு தண்டனை கட்டாயம் கொடுக்குமாறு செய்வேன்...'' என்றான்.

வார்த்தை பிரயோகம், வார்த்தை ஜாலம் செய்பவர்களிடமே... புரியாமல் பார்த்தவரிடம், ''அந்த மாதிரி ஏதாவது கட்டாய சூழ்நிலைகள் வரும் பொழுது உங்களுக்கு



கட்டாயம் தெரிவிப்பேன், ஆலோசனை கேட்பேன், உத்தரவு கேட்பேன், அதன் பொருட்டே உங்களை நேரில் பார்க்க வந்தேன்.''

''எனக்கு... தகவல்கள் யார் மூலமாகவும் பரிமாறாமல், நானே உங்களை நேரடியாக தொடர்பு கொள்வது போல் இருந்தால்... விஷயங்கள் வெளியேறாது. உங்களுக்கு முடிவெடுக்கவும் சுதந்திரம் இருக்கும். என்னவாக இருந்தாலும் குற்ற பின்னணி இருந்தால், அதை கட்டுப்படுத்துவது போலவோ அல்லது ஒடுக்குவது போலவோ... என்ன மாதிரியான நடவடிக்கையும் உங்கள் ஒரு சொல்லில் எடுப்பேன்.

முதல் அமைச்சர் அவனை கண்டு சிறிது அசந்து போனார். மிகவும் தைரியமானவன். அதே சமயம், 'நான் இப்படி தான்' என்று ரூல்ஸ் பேசாமலேயே தான் வேண்டியதை நிறைவேற்றி கொள்ளும் தைரியம் இருப்பதை உணர்ந்தார்.

தவறு செய்பவர்களிடம் உள்ள தடுமாற்றம் இல்லை. பதவி வேண்டி அதிக பணிவோ, அதீத மரியாதையோ இல்லை.

அவனுடைய செல்வ நிலையை அவன் தந்தையை அறிந்தவுடனே அறிந்து கொண்டார். பணத்தை கொண்டு அவனை பணிய வைக்க முடியாது. அதற்கு அவசியமில்லாதவன்.

அதுவே இந்த நிமிர்வை இந்த திமிரை கொடுக்கும். அவன் தந்தை அவனுக்கு கொடுப்பது எந்த மகனுக்கும் பெருமையையும் கர்வத்தையும் கொடுத்து, யாரையும் மதித்து நடக்க வேண்டிய அவசியமில்லாத தன்மையையும் கொடுக்கக்கூடியது.

அவருடைய அனுபவத்தில் எத்தனை ஆட்களை பார்த்திருப்பார். சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டியவன் என்றே உணர்ந்தார்.

''என்ன செய்ய வேண்டும் நான்'' என்றார். அவர் அந்த மாதிரி கேட்பது என்பது அரிது என்பதை விட கிடையாது என்று தான் சொல்ல வேண்டும்.

ஆனால் அந்த பதிலுக்கு ரமணன் முகத்தில் திருப்தியோ, சந்தோஷமோ, இல்லை மாறாக அவனுக்கு கொடுக்கப்படும் பொறுப்பு புரிந்த தன்மையே இருந்தது. நான் அதை நிறைவேற்றுவேன் என்ற உறுதியும் தெரிந்தது.

அவரிடம் அவன் ஆலோசிக்க வேண்டியதை பேசினான், கேட்டு கொள்ள வேண்டியதை கேட்டு கொண்டான், சொல்ல வேண்டியதை சொன்னான்.

அவனுடைய பேச்சும்... கேள்விகளும்... பதில் சொல்லும் விதமும்... முதல் அமைச்சருக்கு மிகுந்த திருப்தியை அளித்து, இந்த கேள்வி பதில்களையும் தாண்டி அவர்கள் பேச்சு வேறு பல திசைகளில் சென்று முடிய கிட்ட தட்ட ஒன்றரை நேரம் ஆனது.

பேச்சின் முடிவில் மறுபடியும் வராவை அவன் உள்ளே அழைத்து விடைபெற...

''நைஸ் மீட்டிங் யூ மை பாய்'' என்று முதல் அமைச்சர் கூறி விடைகொடுக்க... 'பாய்' என்ற வார்த்தையை கேட்டு வரமஹாலக்ஷ்மி அவளையும் மீறி புன்னகைத்தாள். அது மரியாதை நிமித்தமான புன்னகையாக அடுத்தவர்களுக்கு தோற்றமளிக்கக் கூடியது. ஆனால் அது ரமணனை பாய் என்று கூறியதால் தோன்றிய புன்னகை. அதை உணர்ந்த வெங்கட ரமணன் முகம் மாறாமல் காக்க மிகுந்த சிரமப்பட்டான்.



முதல் அமைச்சரோடான சந்திப்பு, அசட்டுத்தனங்கள் அதில் கூடாது என்று மிகுந்த பிரயத்தனப்பட்டு முகம் மாறாமல் காத்து கம்பீரமாகவே விடைபெற்று வந்தான்.

காக்கி சட்டையில் இருக்கும் பொழுது இவளோடு நாம் முடிந்தவரை வெளியே வரக்கூடாது. ஹப்பா நம் சிந்தனையை இவள் ஆட்கொள்ளுகிறாள்.

இத்தனை நாட்களில் அவன் வேலையில் சேர்ந்தபிறகு எப்பொழுதும் இந்த மாதிரி ஆனதேயில்லை. எப்பொழுதும் சீரியஸ் தான். காலையில் அவளை பார்த்ததும் தடுமாறி அவனையறியாமல் வசமிழந்தான். இப்பொழுது சிறிது அசந்திருந்தால் கூட அவன் சிரித்திருப்பான்.

இப்படி சீரியஸாக அவன் யோசித்துக் கொண்டே வந்தாலும் அவன் முகத்தில் இருக்கும் கடினத்தன்மை குறைந்திருக்க அதை அவ்வப்போது கவனித்தபடியே நடந்து கொண்டிருந்தாள்.

நிறைய பேர் அவனோடு பேசுவதற்கு ஆர்வம் காட்டி பேசிக்கொண்டே வந்தனர்.

அதற்குள் அவனுக்கு தொலைபேசி அழைப்பு வர பேசினவன், ''வரா நீ வீட்டுக்கு போயிடறியா, நான்... கொஞ்சம் அவசர வேலையிருக்கு. ஆபீஸ் போகணும்'' என்று கேட்க,

''நான் மட்டுமா'' என்று இழுத்தாள்.

''நீ மட்டும் தான் வரா'' என்றவன், ''முன்னே எப்படியோ? ஆனா இனிமே நீ என் மனைவி, என்பது எல்லோருக்கும் தெரியும் போது, உன்னோட அசைவுகள்ள பயம் என்பதே கொஞ்சம் கூட இருக்கக் கூடாது.''

''கமிஷனர் மனைவி நீ பயந்தா... மற்ற பெண்கள் என்ன நினைப்பாங்க'' என்றான்.

''எனக்கு பயம்னு நான் சொன்னேனா?'' என்றாள்.

பதில் பேசாமல், நீயே பேசு என்று ரமணன் பார்த்திருக்க...

''சும்மா உன்னோட இருக்கற நேரம் குறையுதேன்னு நான் நினைச்சா, எனக்கு பயமா?'' என்று அவனை நோக்கி திரும்பினாள்.

அதற்கு ரமணன்... ''இது இன்னும் கஷ்டம் பாப்பா, நான் நேரம் காலம் பார்க்காமல் தான் சுத்துவேன். அதுவும் இப்போ தான் நான் சென்னை வந்திருக்கேன். என்னோட கண்ட்ரோல்ல தான் இருக்குன்னு எனக்கு த்ருப்தியாகுற வரைக்கும்...'' என்று பேசி முடிக்கும் முன்னரே...

''ஷ்'' என்றவள், ''நோ அட்வைஸ் மழை. கிளம்புங்க, எதுவா இருந்தாலும் பார்த்துக்கலாம்'' என்றவாறே காரில் ஏறி அமர்ந்தாள்.

''எப்படி போவீங்க? நான் ட்ராப் பண்ணட்டுமா'' என்று வரா கேட்க...

''இல்லை, நான் பஸ்ல போகிறேன்!'' என்றான்.

''என்னது? சென்னை சிட்டி கமிஷனர் பஸ்லயா'' என்று அவள் விசித்திரமாக பார்க்க... ''ம், எஸ் இன் பஸ்'' என்றான் ரைமிங்காக.

''அவசரம்னு சொன்னது பொய்யா... என்னை அனுப்பறதுக்காக சொன்னதா?''

''ப்ச் பாப்பா, கிளம்பு எனக்கு போகணும்ன்னா வண்டியா இல்லை. அப்படி திரும்பி பார்த்தன்னா பத்து வண்டி நிற்கும். நான் ஏன் செய்யறேன், எதுக்கு செய்யறேன்,



இதெல்லாம் சொல்ல முடியாது. கிளம்பு... போடி!'' என்றான் முகத்தில் எரிச்சலை காட்டியபடி.

''கிளம்பு, போடி'' என்று உதடு அசைத்தவள்,

''சரி வாங்க பஸ் ஸ்டாப் வரைக்கும் விடறேன்'' என்க...

''விடமாட்டியே நீ'' என்றவாறு அவள் சொன்னதை செய்தவன், பஸ் ஸ்டாப் வந்தவுடன் இறங்கினான். ''ஓகே, பை'' என்றவன். அவன் வேலையை பார்க்க ஆரம்பித்தான். சுற்றுப் புறத்தில் என்ன நடக்கிறது என்று.

உடனே கிளம்பாமல் கார் கண்ணாடியை ஏற்றி விட்டபடி அவனையே வரமஹாலக்ஷ்மி பார்த்திருக்க...

உணர்ந்தவன், ''கிளம்பு வரா'' என்று போனில் அழைத்து கூறினான்.

''கொஞ்சம் நேரம் பார்த்துட்டு போறேனே!'' என்று வரா கூற...

''ஹேய், நான் என்ன சினிமாவா காட்டப்போறேன். பஸ் ஏறி போலீஸ் ஸ்டேசன் போறேன். படுத்தாம கிளம்பு'' என்று சற்று குரலுயர்த்தி கூற...

இன்னும் நின்றால் நிறைய திட்டுவான் என்று தெரிந்து, ''சரிங்க கமிஷனர் சார்'' என்றபடியே கிளம்பினாள்.

'இவன் பஸ்ல போய் நாளைக்கு பேப்பர்ல தான் சென்சேஷன் கிளப்ப போறான், என்னை விட்டுட்டு லைஃப்ப என்ஜாய் பண்றான். இப்படி எல்லாம் பண்ணினா சென்னைக்கே ஹீரோ ஆயிடுவானே. சும்மாவே திமிர், இன்னும் நிறைய திமிர் பண்ணுவான்' என்று மனதிற்குள் அவனை திட்டியபடியே காரை ஓட்டினாள்.

பழைய வரா திரும்ப, தன் அண்ணனை தொலைபேசியில் அழைத்தவள் ரமணன் சிறு வயதில் தன்னிடம் ஏதாவது செய்யும் போது தன் அண்ணனிடம் அவன் குறை சொல்லுவாள்.

அதை இப்பொழுது செய்தாள், ''அண்ணா இந்த வெங்கி இல்லை...'' என்று ஆரம்பித்தவள், ''ரொம்ப சீன் போடறான்...'' என்று வம்பு வளர்த்துக் கொண்டே சென்றாள். பிறகு பக்கத்தில் யாரும் இல்லையே என்று உறுதி படுத்திக்கொண்டு வைத்தாள்.

இவள் எப்பொழுது இதை விடுவாள், என்று மனதிற்குள் சிரித்துகொண்டே ராம் தொலைபேசியை வைக்க...

''யாரு?'' என்று கேட்டபடியே கல்பனா வர,

''பாப்பா'' என்றவனிடம்.

''என்னவாம் உங்க தங்கச்சிக்கு?''

''சும்மா கூப்பிட்டா'' என்ற படியே ராம் எழுந்து போக,

எல்லா விஷயங்களையும் கல்பனாவிடம் பகிர்ந்து கொள்ளும் ராம், அவளிடம் ஆலோசித்தே காரியங்களை செய்யும் ராம், தன் தங்கை விஷயம் என்று வந்து விட்டால் வாயே திறக்க மாட்டான்.

கல்பனா கூட கேட்பாள், ''நான் என்ன உங்களையும், உங்க தங்கச்சியையும் பிரிச்சிடுவேன்னு நினைக்கறீங்களோ'' என்று...

அப்படி எல்லாம் இல்லை, என்று அவன் கூறினாலும், ஏதோ சில விஷயங்கள் வரமஹாலக்ஷ்மியை பற்றி அவன் பகிர்ந்து கொள்ளாதது போலவே தான் கல்பனாவுக்கு தோன்றியது.



இவனாவது பரவாயில்லை வெங்கட ரமணன் தன் மனைவியை விட்டு தூரத்தில் இருந்தாலும், ஒரு வார்த்தை அவளை பற்றி பேசமாட்டான்.

வராவிடம் பேசமாட்டான், சந்தர்ப்பம் கிடைத்தால் அவளிடமே அவளை திட்டுவான். ஆனால் மற்றவர்களிடம் ஒரு வார்த்தை கூட பேசமாட்டான்.

இப்படி ஒரு அண்ணன், கணவன் கிடைக்கப்பெற்ற வர ஹாலக்ஷ்மி மிகவும் அதிர்ஷ்டசாலி என்றே கல்பனா உணர்ந்தாள்.

# 22

## அன்றைய நிகழ்வுகள்

இந்த பக்கம் ஸ்ரீதரின் சித்தப்பாவை வரமஹாலக்ஷ்மியின் வீட்டிற்கு அனுப்பி வைத்த ஸ்ரீதரின் தந்தை, அந்த பக்கம் அவனுடைய அத்தையை அழைத்து அவனுக்கும் சித்ராவிற்கும் நிச்சயம் பண்ணி விடலாம் என்று சொல்லி நாள் பார்த்தார்.

அடுத்த நாளே நல்ல நாள் என்று தெரிய... அன்றே செய்யலாம் என்று முடிவெடுத்து... நிச்சயத்திற்கு மிக நெருங்கிய உறவுகளை அழைக்கலாம் என்று வேறு இருவரை அனுப்பி வைத்தார்.

மற்றவர்களுக்கு நிச்சயத்திற்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து வேலையை ஜரூராக ஆரம்பித்தனர்.

இரவு ஸ்ரீதரின் சித்தப்பா வந்து அவன் தந்தையிடம் அவர் வரமஹாலக்ஷ்மியின் வீட்டிற்கு சென்று வராவின்

தந்தையிடம் பேசியதையும், அவர் சொன்னதையும் சொல்லிக்கொண்டிருக்க... கேட்ட ஸ்ரீதருக்கு ரத்தம் கொதி நிலையை அடைந்தது என்றே சொல்ல வேண்டும்.

''என்ன சித்தப்பா சொல்றிங்க. யாரை கேட்டு நீங்க அவங்க வீட்டுக்கு போனீங்க. உங்களுக்கு ஏதாவது சொல்லணும்னா என்கிட்ட தான் சொல்லணும். அதை விட்டு உங்களுக்கு அவங்க வீட்டுக்கு போய் பேசற தைரியத்தை யார் கொடுத்தது.''

''சும்மா ஜாதி, அது, இது, கொன்னுருவோம், இதையெல்லாம் பேசி என்னை உங்க யாராலையும் கட்டுப் படுத்த முடியாது. எங்க அப்பாவுக்கும் சேர்த்து தான் சொல்றேன்.''

''அவ வீட்டுக்கு போய் நீங்க எதுவும் கலாட்டா பண்ணிட கூடாதுன்னு தான் சாயந்தரம் என் அப்பா பேசினதுக்கு பொறுமையா இருந்தேன்.''

''அங்கேயே போய் பேசிட்டு வந்துட்டீங்க. இனி எனக்கென்ன பயம். நீங்க பொறந்த ஜாதில தான் நானும் பொறந்திருக்கேன். உங்களால வெட்ட முடியும்னா என்னாலயும் முடியும்.''

''வீட்ல எங்க அம்மாவும், தங்கச்சியும், இவ்வளவு பேசும் போது என்னால ஒண்ணும் பண்ண முடியாதுன்னு நினைக்கிறீங்களா?''

''இது ஒண்ணும் நீங்களும் எங்கப்பாவும் சேர்ந்து சம்பாதிச்ச சொத்து இல்லை, பரம்பரை சொத்து. சும்மா பூச்சாண்டி காட்டுகிற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம்.''



''யாராவது வரமஹாலக்ஷ்மிய தப்பா பேசினீங்க, நீங்க சொன்ன அதே வார்த்தை தான். நடக்கற எதுக்கும் நான் பொறுப்பில்லை.''

''நாளைக்கு இந்த நிச்சயம் நடக்காது. தேவையில்லாம ஏற்பாடு பண்ணி அசிங்கப்பட்டுக்காதீங்க'' என்று பேசினான்.

''டேய், என்ன பயமுறுத்துறையா! இந்த நிச்சயம் நடக்கும்டா! நீயா நாங்களா பார்த்துறலாம். நீ மட்டும் இந்த நிச்சயத்துக்கு சம்மதிச்சு உட்காரலை, அந்த பொண்ணு வீட்டை ஒரு வழி பண்ணிடுவோம்'' என்று ஸ்ரீதர் அப்பா மிரட்ட...

''என்ன அப்பா யாரோ சாதாரண ஆளை பற்றி பேசற மாதிரி பேசறீங்க! அவங்கப்பா எம்.பி, எக்ஸ்-மினிஸ்டர். அவர் அதிகமா வம்புக்கு போறதில்லைன்னு பேசறீங்களா. யாரையும் சாதாரணமா நினைக்காதீங்கப்பா, என்ன நடக்கும்னு யாருக்கும் தெரியாது'' என்று இவன் ஒரு பக்கம் கத்த,

அவன் அப்பா ஒரு பக்கம், ''என்னடா நீதாண்டா இப்போ பூச்சாண்டி காட்டற! நடத்தறண்டா இந்த கல்யாணத்தை! நீ என்ன செஞ்சாலும் அவங்களை தாண்டா பாதிக்கும். அப்புறம் ஒண்ணும் பண்ண முடியாது.''

ஆளுக்கு ஒரு பக்கம் கத்திக்கொண்டும், மிரட்டிக் கொண்டும் வீடே மினி போர்க்களமாக மாறியது.

பேசினவன் வரமஹாலட்சுமியை சமாதானப்படுத்தும் பொருட்டு அழைக்க... முதலில் யாரோடோ பேசிக் கொண்டு இருக்கிறாள் என்று பிஸி டோன் காட்ட, நேரத்தை பார்த்தால் இரவு பன்னிரெண்டு என்றது.

அதற்கு பிறகு அவளை அழைத்தால் ரிங் போனது. ஆனால் அவள் எடுக்கவில்லை. பிஸி டோன் சிறிது நேரத்திற்கு முன் தான் வந்ததால் அவள் உறங்கியிருக்க வாய்ப்பில்லை என்று உணர்த்தியது.

இது காட்டுவது ஒன்றே தான் அவளுக்கு அவனோடு பேச விருப்பமில்லை என்று தெரிந்து கொண்டான். மறுபடியும் மறுபடியும் அழைக்க அது எடுக்கப்படவே யில்லை.

நேரத்தை பார்த்தால் ஒன்றை காட்டியது. ஒரு மணி நேரமாக தான் அழைக்கிறோம் அவள் எடுக்கவில்லையா?

எத்தனை நாட்கள் பின்னால் சுற்றி, மெதுவாக அவளோடு நட்பை ஏற்படுத்திக்கொண்டு, இன்றைக்கு தான் காதல் என்ற வார்த்தையை அவளிடம் வாங்கி இருந்தான்.

மூன்று மணி நேரத்தில் தன்னுடைய இரண்டரை வருட காதலை இவர்கள் அழிப்பதா...

என்ன செய்வது யோசிக்க ஆரம்பித்தான். நாளை சித்ராவுடன் நிச்சயம் நடக்காவிட்டால் வராவுக்கு தொந்தரவு கொடுப்பார்கள். அவர்கள் நிச்சயத்திற்கு அடி போட்டால் நாம் ஏன் திருமணத்தை நடத்தி விட கூடாது.

அதன் பிறகு யார் என்ன செய்ய முடியும். யார் என்ன செய்தாலும் அதன் பிறகு பார்த்து கொள்ளலாம்.

முடிவு எடுத்தவுடனேயே அவன் தன் தந்தையின் மகனென்று காட்ட, அவர் எப்படி மாலையில் இருந்து வேலைகளை ஜரூராக செய்தாரோ அதற்கு சற்றும் குறையாமல் ஸ்ரீதர் அந்த நேரத்தில் வேலைகளை ஆரம்பித்தான்.



இதற்கு வரா ஒத்துக்கொள்வாளா என்பதை பற்றி இம்மியளவும் யோசிக்கவில்லை, அவனுக்கு காரியத்தை முடிக்கும் உத்வேகம் மட்டுமே இருந்தது.

அந்த நேரத்தில் தன்னுடைய நண்பனை அழைத்தான். அவனிடம் என்ன செய்ய வேண்டும் என்று சொன்னான். பிறகே அவனால் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது.

காலை எப்பொழுதும் போல காத்திருக்காமல் விடிய...

நேற்று இரவு இருந்து கல்பனா அழைத்துக்கொண்டே இருக்க... ராம் தனக்கிருந்த மனவுளைச்சலில் எடுக்கவில்லை.

தன் தங்கையை பற்றி அவளிடம் சொல்ல விருப்பமில்லை. பேசினால் சொல்லாமல் இருக்க முடியாது. அதனால் தொலைபேசியை எடுக்கவில்லை.

தன் மன உளைச்சலால் அவனை அறியாமலேயே கல்பனாவுக்கு கவலையை கொடுக்க ஆரம்பித்தான், அவள் கர்ப்பிணி என்பதை மறந்து.

அவன் நேற்றிலிருந்து எடுக்காததை உணர்ந்த கல்பனா காலையில் வீட்டிற்கு லேண்ட் லைனுக்கு அழைத்தாள்.

எடுத்த வேலையாள், அவனுடைய விசுவாசத்தை கல்பனாவிடம் காட்ட வேண்டி... முதல் நாள் இரவு நடந்தது என்ன என்று தெரியாத போதும்,

நேற்று இரவு இரண்டு வண்டி நிறைய ஆட்கள் வந்தார்கள். அய்யாவிடம் கோபமாக பேசியது போல் தான் தோன்றியது எல்லா ஆட்களையும் வெளியே அனுப்பி விட்டு அவர்கள் மூவர் மட்டும் பின்பு பேசிக் கொண்டு இருந்தனர்.

''நேற்று இரவு சமைத்ததை யாரும் சாப்பிடவில்லை'' என்று சொன்னான்.

''சரி, நான் இன்னும் கொஞ்சம் நேரம் கழிச்சு கூப்பிட றேன். என்ன நடக்குதுன்னு சொல்லு?'' என்றவாறு தொலைபேசிய வைத்த கல்பனா,

நடந்ததை அவள் மாமியாரிடம் கூற, கவலையான அவர் சிவசங்கரனுக்கு அழைக்க அதுவும் எடுக்கப்பட வில்லை.

இரவு வராவை பற்றி கேள்விப் பட்டது, சிவசங்கரனை பாடாய்ப் படுத்த, நெடு நேரம் உறக்கம் வராமல் இருந் தவர், தூக்கமாத்திரையின் உதவியை நாடியிருக்க... அது தன் வேலையை வஞ்சனையில்லாமல் செய்து கொண் டிருந்தது.

அவர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். தொலைபேசி யின் சத்தம் அவர் காதுகளுக்கு எட்டவேயில்லை.

பின்பு கல்பனாவும் ராஜேஸ்வரியும் வராவை அழைக்க, இரவு ரமணனிடம் பேசிய பிறகு, ஸ்ரீதர் அழைத்து கொண்டே இருப்பதை பார்த்த வரா அவனிடம் பேச விரும்பாமல் போனை சைலேன்ட் மோடில் போட்டு உறங்கிக்கொண்டிருந்தாள், அதனால் அவர்கள் அழைப்பது அவளுக்கும் கேட்கவில்லை.

சிறிது சிறிதாக கல்பனாவுக்கு டென்ஷன் ஏற ஆரம் பித்தது. அப்போதும் ராஜேஸ்வரி அவளை சமாதானப் படுத்தி கொண்டு தானிருந்தார்.

''எல்லாரும் தூங்கறாங்கன்னு இப்ப தானே வேலை பார்க்கறவங்க சொன்னாங்க. எதுக்கு இவ்வளவு பதட்ட படற. அமைதியா இரு!'' என்று கூறிக்கொண்டுயிருக்க,



அதற்கு கல்பனா, ''இல்லை, அத்தை. எனக்கு மனசே சரியில்லை. ஒரு மாதிரி இருக்கு. எனக்கு அவரை பார்க்கணும் போல இருக்கு. அவரை வரச்சொல்றீங்களா? இல்லை நாம போகலாமா?'' என்று நச்சரிக்க துவங்கி னாள்.

''அவசரப்படாத முதல்ல நாம அவங்க கிட்ட பேசலாம். பின்ன முடிவு பண்ணலாம், மணி ஏழு தான் ஆகுது. இன் னைக்கு ஞாயிறு இல்லையா? தாமதமா எழுந்திரிப் பாங்க. எட்டு மணிக்கு மேல கூப்பிடலாம்'' என்று சமா தானப்ப!டுத்தி கொண்டிருந்தார்.

விடிந்ததில் இருந்து வராவிற்கு மறுபடியும் ஸ்ரீதர் போன் செய்து கொண்டிருக்க... தாமதமான உறக்கம் சைலேன்ட் மோட் அவளை தொலைபேசி எடுக்க விட வில்லை.

எட்டு மணியாகிவிட்டிருக்க பொறுமையிழந்தவன் கிளம்பி அவள் வீட்டிற்கே வந்தான்.

வாசலில் இருந்த காவலாளியிடம், தான் ஸ்ரீதர், வராவின் நண்பன். அவனை இன்று வீட்டிற்கு அழைத் திருப்பதாக கூற... உள்ளே அனுமதித்த காவலாளி, ''கொஞ்சம் நேரம் காத்திருங்க. உள்ளே இருந்து வரு வாங்க'' என்றான்.

உள்ளே லானில் நின்று கொண்டிருக்க... வேலை யாள் வந்து கேட்க... ''வராவை பார்க்க வேண்டும்'' என்றான்.

''தூங்கறாங்க'', என்றவன், ''நீங்க போயிட்டு கொஞ்ச நேரம் கழிச்சி வாங்க!'' என்றான்.

''ஒரு தடவை நான் இருக்கேன்னு சொல்லுங்க. பார்க்கலைன்னா போயிடறேன்'' என்றான் ஸ்ரீதர்.

'என்னடா இவன் காலையில் வந்து உயிரை எடுக்கிறான். யாரும் இன்னும் எந்திரிக்கலை. யார் கிட்ட போய் கேட்பேன். ஒரு வேளை ரொம்ப வேண்டியவனா இருந்தா பாப்பா கத்துமே! ஒரு தடவை அவங்க சிநேகித பசங்கள காக்க வச்சதுக்கு ரொம்ப கோபிச்சுகிச்சே' என்று யோசித்தபடியே,

''இருங்க'' என்று சொல்லிவிட்டு சென்றான்.

அவன் உள்ளே செல்லவும் வரா கீழே வரவும் சரியாக இருக்க வேலையாள், ''உங்களை பார்க்க ஒரு தம்பி வந்திருக்கு'' என்றான்.

'என்னை பார்க்க யாராக இருக்கும்' என்று யோசித்தபடியே செல்ல... ஸ்ரீதரை பார்த்தவள் அதிர்ந்தாள்.

''என்ன ஸ்ரீதர் இங்க?'' என்று அதிர்ச்சியாக கேட்க...

அவள் அவ்வளவு அதிர்ச்சியாக கேட்கும் பொழுது, 'உன்னை கல்யாணம் பண்ணிக்க கூட்டிட்டு போக வந்திருக்கேன்' என்று எப்படி சொல்வது என்று தெரியாமல் விழித்தான்.

''அது... உங்க வீட்டுக்கு நேத்து சித்தப்பா வந்து பேசிட்டு போனாங்க...'' என்று ஸ்ரீதர் சொல்லும்போதே நேற்றைய நினைவுகள் ஞாபகத்திற்கு வர...

''அச்சச்சோ! அப்பா உன்னை இங்க பார்த்தா என்னை கோபிப்பாங்க. நாம அப்புறம் பேசலாம்'' என்றவள். ''இல்லையில்லை, நான் உன்கிட்ட பேசமாட்டேன்னு அப்பா கிட்ட சொல்லியிருக்கேன். நீங்க போங்க'' என்றாள்.

''போங்கன்னா! நமக்குள்ள அவ்வளவு தானா. அப்போ என்னை கல்யாணம் பேச சொன்னதெல்லாம்?''



''அது...'' என்று தற்போது வரா விழித்தாள்.

தெரியாம சொல்லிட்டேன் என்றா சொல்ல முடியும். தான் சொன்ன வார்த்தை தற்போது அவளுக்கே உவப்பாக இல்லை எனும்போது அதை என்னவென்று சிந்திப்பது என்றே தெரியவில்லை.

''அப்பா உங்க வீட்ல திட்டுனதுனால வேண்டாம்னு சொல்லிட்டாங்க'' என்றாள்.

''நம்மளோடது அரேஞ் மேரேஜ் இல்லை வரா. லவ் மேரேஜ். உங்க வீட்டு சம்மதமும் எங்க வீட்டு சம்மதமும் அவ்வளவு முக்கியம் இல்லை'' என்று அவன் சொல்லி கொண்டிருக்கும்போதே,

ஏதோ சத்தம் கேட்பது போல் தோன்ற... ''நீ போயேன். நம்ம அப்புறம் பேசலாம். அண்ணா அமைதியா யிருன்னு சொல்லியிருக்காங்க! ப்ளீஸ்!'' என்று அவள் சொல்ல...

அங்கே ஒரு கோயிலில் திருமணத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் தன் நண்பர்களிடம் சொல்லி செய்ய சொல்லிட்டான். இப்பொழுது இவளிடம் திருமண விஷயத்தை சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டாள் என்றுணர்ந்து...

''நான் வெளியே நிக்கறேன். நீ ஒரு அஞ்சு நிமிஷம் வா! பேசிட்டு அனுப்பிடறேன்'' என்றான்.

''என்ன பேசணும்? இப்போ வேண்டாம்!'' என்று அவள் கூற...

''எனக்கு இப்போ பேசணும்! நீ வரலைன்னா நான் இங்கேயே உட்காருவேன்!'' என்று சொல்லி உட்கா

அப்போது பார்த்து தந்தையின் கட்சி ஆட்கள் இரண்டு மூன்று பேர் முன்பிருந்த ஆபீஸ் திறப்பதற்கு வந்தனர்.

''நீ வெளியே வெயிட் பண்ணு. நான் வர்றேன்!'' என்று வரமஹாலக்ஷ்மி அவனை அனுப்பினாள்.

அங்கே ஸ்ரீதர் வீட்டில் அவனை காணாமல் அவனை தேட... ஆளுக்கொரு பக்கம் செல்ல, வரமஹாலக்ஷ்மி யின் வீட்டிற்கு ஒரு நான்கைந்து பேர் கிளம்பினர்.

இங்கே வாசலில் ஸ்ரீதர் காத்திருக்க... ஐந்து நிமிடங் களில் வரா வர,

''வெளியே எல்லாரும் பார்ப்பாங்க! காரில் உட்காரு பேசலாம்!'' என்று சொல்ல... காரில் வரா ஏறி அமர்ந் தாள்.

இதை வாசலில் இருந்த காவலாளி பார்த்து கொண்டு தான் இருந்தான்.

அவள் உள்ளே அமர்ந்த ஒரு நிமிடத்தில் கார் கிளம்பி வேகமெடுக்க,

''இது என்ன நம்ம கிட்ட சொல்லாம கூட போறாங்க'' என்று காவலாளி கார் சென்ற திசையையே பார்த் திருக்க...

அவன் சென்ற ஒரு மணி நேரத்திற்கெல்லாம் ஸ்ரீதரை தேடி வந்தவர்கள், ''இங்கே ஸ்ரீதர் என்று யாராவது வந்தார்களா?'' என்று விசாரிக்க...

''வந்தாங்க, கொஞ்சம் நேரம் முன்னாடி. எங்க வீட்டு வராம்மா கூட அவங்க கூட போனாங்க'' என்று காவலாளி சொன்ன உடனேயே,

ஸ்ரீதரின் அப்பாவிற்கு சொல்ல... ''நாம இவ்வளவு சொல்லியும் பொண்ண விட்டுட்டாங்களா, வீட்ல யாராவது இருந்தா தூக்கிட்டு வாங்கடா...''



''அவங்களை புடிச்சா தான், ஸ்ரீதரை வீட்டிற்கே வரவழைக்க முடியும்'' என்று கூற...

அவர்கள், ''அய்யாவை பார்க்க வேண்டும்'' என்று உள்ளே நுழைந்தனர்.

அங்கே அப்போது தான் எழுந்த ராம் பிரசாத் வெளியே வர, அவனை அப்படியே தூக்கினர்.

''என்ன நடக்கிறது, என்று அங்கே இருப்பவர்கள் உணர்ந்து, அவர்களை பிடிக்க வர... அதற்குள் அவன் கழுத்தில் கத்தியை வைத்து, அவன் வாயை கட்ட ஆரம் பித்து இருந்தனர். திமிறிய அவன் கால்களை இருவர் பிடிக்க கைகளை ஒருவன் பிடிக்க, தூக்கி ஓடினர்.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் ராம் பிரசாத் கடத்தப் பட்டான். அவன் கழுத்தில் கத்தி வைத்திருந்ததால் பார்த்த இவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அவசரமாக உள்ளே சென்று சிவசங்கரனை எழுப்ப,

அந்த நேரம் தொலைபேசி அடிக்க, அதை முன்பு எடுத்த வேலையாள் எடுத்தான்.

அந்த புறம் கல்பனா என்று உணர்ந்ததும், ''நம்ம ராம் அய்யாவ கழுத்துல கத்திய வச்சு நாலஞ்சு பேர் தூக் கிட்டு போயிட்டாங்கம்மா,'' என்று சொல்ல...

மாடிப்படி அருகே நின்று பேசிக்கொண்டிருந்த கல்பனா, ''என்ன??? என்று அதிர்ந்தவள்,

அவளையறியாமல் பின்புறம் படி இருப்பதை உண ராமல் கால் வைக்க, அப்படியே பின்புறமாகவே படியில் உருள ஆரம்பித்தாள்.

எட்டு மணிக்கு ஸ்ரீதர் வந்தவன், எட்டரை மணிக்கு வராவை கொண்டு செல்ல,

ஒன்பது மணிக்கு ராம் கடத்தப்பட, கீழே உருண்ட கல்பனா வலியால் துடிக்க, ஒன்பதரைக்கு ஹாஸ்பிடலில் அட்மிட் ஆக...

பத்து மணிக்கு ரமணன் வந்த போது... பையனையும் பொண்ணையும் காணாமல், மருமகளையும், அவள் வயிற்று குழந்தையும், சீரியசாக இருக்க, சிவசங்கரன் ஓய்ந்து போய் அமர்ந்திருந்தார்.

வரா, அவள் இஷ்டப்பட்டு போன ஒரு தோற்றம் தான் கொடுத்தது.

காவலாளி, ''காலையில் ஒருத்தர் வராம்மாவை பார்க்க வந்தாங்க. அவங்களோட கொஞ்சம் நேரம் கழிச்சு இவங்க போனாங்க. என்கிட்ட ஒண்ணும் சொல்லலை'' என்றான்.

அந்த பையனோடு அவருடைய பாப்பா போய்விட்டாள் என்ற செய்தியை ஜீரணிக்க முடியாமல், யாரிடம் சொல்வது என்று தெரியாமல் ராமநாதனை அழைக்க,

விவரத்தை தெரிந்து கொண்டவர், ''அந்த பையன் வீட்ல தான்பா நம்ம ராம்ம கொண்டுபோய் இருப்பாங்க. ஒண்ணும் பண்ண மாட்டாங்க. பயப்படாத. இப்போ நம்ம பாக்க வேண்டியதெல்லாம் நம்ம பொண்ணையும், கல்பனாவையும் தான்.''

''போலீஸ் போனா, நாளைக்கு காலையில பேப்பர்ல எம்.பி பொண்ணு ஓடிப்போச்சு, பையனை கடத்திட்டாங்கன்னு நியூஸ் போட்டுடுவாங்கப்பா, ஒரு ரெண்டு நிமிஷம் குடு. என்ன செய்யலாம்னு யோசிக்கலாம். பொண்ணு விஷயம்'' என்று சொல்லி அவர் வைக்க.



ராமநாதன் உடனே வெங்கட ரமணனை அழைத்தார். ''நான் சென்னைல இருக்கேன்பா. வீட்டுக்கு போயிட்டு இருக்கேன்'' என்று அவன் சொல்ல,

''போனவுடனே என்ன செய்யலாம்னு சொல்லு'' என்று மட்டும் கூறி, அவர் வைக்க...

குழப்பத்தோட வீட்டிற்கு வந்தவன், ராமை தேடுவதா? வராவை தேடுவதா? என்று விழித்தான்.

# 23

## இன்றைய நினைவுகள்

ரமணன் வராவிடம் சொல்லிக் கொண்டு இறங்கிய பிறகு, சிறிது நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

கண்கள் மட்டும் சுற்றுப் புறத்தை அளவெடுக்க, அவன் அருகில் ஒரு கார் வந்து நின்றது.

காரை பார்த்தவன் ஏறி அமர்ந்தான்.

உள்ளே இருந்தவன், ''என்ன அண்ணா நேத்து சென்னை வந்து இருக்கீங்க! எனக்கு சொல்லவேயில்லை?''

''நானா தெரிஞ்சிட்டு போன் பண்ணற வரைக்கும், நீங்க என்னை கூப்பிடவேயில்லை'', என்று குறைபட...

''என்னடா பண்ணட்டும், நேத்து வீட்டுக்கு போற வரைக்கும் எனக்கு வராவை பார்க்கிற டென்ஷன். அங்கே போய் ஒரு ரெண்டு மணிநேரத்துலே ஜெயில் கலவரம்.''

''நான் என்ன பண்ணட்டும். காலையில எழுந்ததுல இருந்து உன்னை கூப்பிடணும்னு நினைச்சிட்டு தான் இருந்தேன். உனக்கு கொஞ்சம் வேலை வெச்சிருக்கேன். செய்யறியா?'' என்றான்.

''என்ன கேள்வி அண்ணா இது? நீங்க சொல்லி நான் செய்யாம இருக்கிறதா! சொல்லுங்க'' என்றான்.

சொன்னவன் அறிவழகன். ஒரு ஆதரவில்லாத அன்னைக்கு பிறந்து, அவளையும் சிறு வயதிலேயே இழந்து, வழி தடுமாறி கொண்டிருந்த நேரத்தில், ரமணனிடம் புனாவில் சிக்கினான்.

அப்பொழுது அறிவழகன் இருபது வயது இளைஞன், போதையின் பிடியில் சிக்கி சின்னா பின்னமாகிக் கொண்டிருந்தான்.

போதைக்கு பணம் வேண்டி, புனாவில் சுற்றுலா வந்த ஒரு தம்பதியை அடித்து, அவர்கள் வைத்திருந்ததை இவனும் இவன் நண்பர்களும் எடுத்துக் கொண்டு ஓட...

அந்த தம்பதிகளின் வலியின் ஓலம் அவனை அசைக்க, நண்பர்களை விட்டு அந்த தம்பதிகளை காப்பாற்றி ஹாஸ்பிடலில் சேர்க்க போய் போலீசிடம் மாட்டிக் கொண்டான்.

அந்த பையனிடம் இருந்த ஏதோ ஒன்று அவனை காப்பாற்ற ரமணனை தூண்ட, அவன் தமிழ் என்பதும் ரமணனுக்கு கூடுதல் ஈடுபாட்டை தர, அவனை கேசில் மாட்ட வைக்காமல் விடுவித்து, சென்னைக்கு ஒரு வேலை தேடிக் கொடுத்து அனுப்பினான்.



அறிவும் அந்த உதவிக்கு தகுதியானவனே, தன்னுடைய பழக்கத்தில் இருந்து முயன்று மருத்துவர் மற்றும், ரமணன் உதவியுடன் வெளிவந்தான்.

ஆனால் வேலை தனக்கு ஒத்துவரவில்லை என்றான்.

ரமணன் தன் சொந்த செலவில் ஒரு மெக்கானிக் செட் வைத்து கொடுக்க, அதை நன்கு பற்றி கொண்டவன், வாழ்க்கையில் முன்னேறி கொண்டிருந்தான்.

அவர்களுடைய பழக்கம் யாருக்கும் தெரியாது. அது ரமணன் பணியில சேர்ந்த புதிதில் ஆரம்பித்த பழக்கம். ராமநாதனுக்கு மட்டும் தெரியும். அவருக்கு தெரியாமல் ரமணன் எதுவும் செய்வதில்லை.

தனக்கு ரகசியமாக, அலுவலகம் மூலம் அல்லாமல் செய்ய வேண்டிய அத்துணை வேலைகளையும் அறிவழகன் மூலமாக தான் வெங்கட ரமணன் செய்வான்.

அவனிடம் தான் நேற்று கைது செய்தவர்கள் பற்றிய விவரங்களை கூறி உண்மையா, பொய்யா என்று கண்டறிய சொன்னான்.

''எத்தனை நாள் வேணும் அறிவு'' என...

''போலீஸ் வேற ஒரு பக்கம் விசாரிச்சுட்டு இருக்கும். அவங்களுக்கு தெரியாம செய்யணும். உங்களுக்கு எப்போண்ணா வேணும்?''

''எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம்'' என்றான்.

''இன்னைக்கு நான் வேலையை ஆரம்பிச்சுடறேன். நம்ம பசங்க செஞ்சிடுவாங்க. அதெல்லாம் உஷாரு.'' அவனுக்கு நிறைய தொடர்புகள். தானாக வளர்த்து கொண்டிருந்தான்.

வெங்கட ரமணன் அவனிடம் சிறிது பேசிக்கொண்டிருந்து, பின்பு ஆபீஸ் சென்றான்.

கிளம்பும் முன் பாக்கெட்டில் கை விட்டு, இருந்த பணத்தை அப்படியே ரமணன் எடுத்து கொடுக்க... ''வேண்டாம் அண்ணா என்கிட்ட இருக்கு.''

''உன்கிட்ட எவ்வளவு இருக்குன்னு எனக்கு தெரியும். இதுக்கு தேவை இருக்காதுன்னு தெரியும்.''

''நான் உன்னை பார்த்தேன். பணம் கொடுக்காம வந்தேன்னு, எங்கப்பாவுக்கு தெரிஞ்சது, அவ்வளவு தான். உனக்கு வேண்டாம்னா நீ அவர் கிட்ட சொல்லு.''

''குடுங்கண்ணா, இது பத்தலைன்னா இன்னும் கேட்கிறேன்'' என்று சிரிப்போடு விடை கொடுத்தான்.

அங்கே ஆபீசில் சிட்டி லிமிட்டில் இருக்கும், எல்லா ஸ்டேஷன் இன்சார்ஜெஸ், இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், மற்றும் மற்ற அதிகாரிகளையும் கூப்பிட்டிருந்தான், மீட்டிங்கிற்காக.

அவர்களோடு மீட்டிங்...

அவன் கொடுத்த இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கேட்டு அனைவரும் மண்டையை உடைத்து கொண்டிருக்க...

எதுவும் அவன் செயல்பாடுகளை கட்டுப் படுத்த போவதில்லை என்று உணர்ந்தவர்களில் சில பேர், 'எப்போடா இவனோட ட்ரான்ஸ்பர்' என்று நினைக்க துவங்கினர்.

அன்றைய நாளின் வேலை முடிந்து, வீட்டிற்கு வந்த போது... வீட்டையே ரோஹித் பிரசாத்தும், ஸ்ருதியும் அமர்களப்படுத்தி கொண்டிருந்தனர் அவர்கள் ரகளையால்.

சமாளிக்க முடியாமல் கல்பனா திணறிக் கொண்டிருக்க... அதை பார்த்து ரசித்து கொண்டிருந்தாள் வரா.



இவனை பார்த்தவுடனே, ''பார்த்தியா உன் பொண்டாட்டியோட அழகை'' என்றாள் எரிச்சல் மறையாத குரலில் கல்பனா.

'என் பொண்டாட்டி எப்பவுமே அழகு தான்!' என்று மனதிற்குள் சொல்லிகொண்டவன்,

வெளியில், ''என்ன பண்ணினா?'' என்றான்.

''என்ன பண்ணினாளா? ஒரு வார்த்தை அவ சொன்னா இவங்க ரெண்டு பேரும் அமைதியா உட்கார்ந்துடுவாங்க. சொல்ல மாட்டேங்கறா'' என்றாள் சலிப்பாக.

அவன் வராவை பார்க்க, ''அண்ணி எப்போவும் அப்படிதான்'' என்றாள் அவனுக்கு மட்டும் புரியும்படியாக...

''கல்பனாவை டென்ஷன் செய்யாதே'' என்று கண்களாலேயே வரமஹாலக்ஷ்மிக்கு ரமணன் கட்டளையிட,

''குட்டிம்மா உட்காருங்க'' என்ற ஒரு அதட்டல் வேலை செய்ய, சோபாவில் கால் தூக்கி வைத்து அமர்ந்தாள் ஸ்ருதி.

''ரோஹித் இங்க வாங்க'' என்று அவனை அழைக்க, அத்தையினிடத்தில் வந்து அவள் அருகில் அமர்ந்தான்.

ஸ்ருதி, ரோஹித் முகத்தை பார்க்க... ரோஹித் அத்தை முகத்தை பார்க்க... அவள் ரமணன் முகத்தை பார்த்தாள்.

அவள் எதிரில் வந்து அமர்ந்தவனிடம், ''எவ்வளவு நேரம் குழந்தைங்க இப்படி உட்காருவாங்க, விளையாடதான் செய்வாங்க. ரகளை தான் வரும். நம்மளும் இப்படி தானே இருந்திருப்போம்.

''அண்ணிக்கு எல்லாமே கரெக்டா டைம்க்கு நடக்கணும். டைம்க்கு சாப்பிடணும், டைம்க்கு தூங்கணும்,

டைம்க்கு எந்திரிக்கணும். இதெல்லாம் குழந்தைங்க தினமும் ஒரே மாதிரி செய்ய முடியுமா'' என்றாள்.

''தினமும் இப்படி தான் இருப்பீங்களா'' என்றான்.

''ம்கும், என்னை திட்ட மாட்டாங்க. இன்னைக்கு நீங்க இருக்கீங்க இல்லையா, அதனால கம்ப்ளைன்ட்'' என்றாள்.

''என்ன சொல்றா உன் பொண்டாட்டி'' என்றபடி கல்பனா கேட்டுக் கொண்டே அருகில் வர...

ரோஹித் அத்தையை பார்த்து கண் சிமிட்டினான். அதை ரமணனும் கவனித்தான், கல்பனாவும் கவனித்தாள், ''தோ பாரு என்னவோ சொல்றாங்க'' என்று மறுபடியும் கல்பனா குற்றபத்திரிகை வாசிக்க...

''என்ன ரோஹித்'' என்று ரமணன் கேட்க...

''ஷ்'' என்று ஸ்ருதியும் வராவும் ஒரே மாதிரி சொல்ல, ''சொன்னால் நம்ம இப்போ வெளில போலாம்'' என்று ரமணன் ரோஹித்திற்கு ஆசை காட்ட...

''நீங்க ரொம்ப நல்லவங்கன்னு சொன்னாங்க மம்மி'' என்று அவர்களின் உச்சரிக்கும் டயலாக் சொல்ல...

''பாரு, பாரு, எப்போ பார்த்தாலும், இந்த பிலிம் டைலாக். எட்டு வயசு பையன் பேசறதா இது'' என்று கோபப்பட...

''கல்பனா இதெல்லாம் தவிர்க்க முடியாதது. எல்லா குழந்தைங்களும் இப்போ பேசறாங்க, நீ இதுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காத. காலப்போக்குல மறந்துடுவாங்க. நம்ம செய்ய வேண்டாம்னு சொன்னா, அப்போ தான் அதிகமா செய்ய தோன்றும்'' என்றான்.



''எப்படிப்பா இப்படி புருசனும் பொண்டாட்டியும் ஒரே மாதிரி பேசறீங்க'' என்றாள்.

''ஏன் வரா நம்ம ஒரே மாதிரி பேசறோம்'' என்று கேட்டு வராவை சீண்டினான்.

''அதுவா... நம்ம புருசன் பொண்டாட்டி ஆனதுக்கு அப்புறம் தான் நம்மை தெரியாது. அதுக்கு முன்னாடியே ரொம்ப தெரியும் இல்லையா?'' என்று பதிலுக்கு குரலில் கோபம் ஒலிக்க...

திடீரென்று எதற்கு இவ்வளவு கோபம் என்று கல்பனாவுக்கு புரியவில்லை.

எழுந்து போய்விட்டாள் வரமஹாலக்ஷ்மி.

''என்ன பண்ணினேன், தப்பா ஏதாவது சொல்லிட்டேனா'' என்றாள் கல்பனா.

''இது உன்கிட்ட இல்லை கல்பனா. என்கிட்ட. ஆனா உடனே மறந்துடுவா, உனக்கு தெரியாததா'' என்று இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும் போதே, அத்தையை தேடி ரோஹித்தும் ஸ்ருதியும் ஓடினர்.

''அவளோட நேரம் புல்லா இவங்களோட தான்.''

''சண்டை போடணுமா இங்கயே போட்டுக்கங்க. இல்லையா நீ எங்க போகிறாயோ அங்க கூட்டிட்டு போ! விட்டுட்டு போகாத. உங்களுக்கு எப்படியோ, என்னோட வீட்டுக்காரர்... அவருக்காக ப்ளீஸ். அவருக்கு அவரோட பெரிய குழந்தையே வரா தான்'' என்றாள் உணர்ச்சி மயமான குரலில்.

பேசும்போதே ராஜேஸ்வரி வர, பேச்சை மாற்றி வேறு பேசத் துவங்கினர்.

# 24

## அன்றைய நினைவுகள்

ஸ்ரீதர்... வரா காரில் ஏறி அமர்ந்ததும், வேகமாக காரை எடுத்தான்.

''என்ன ஸ்ரீதர் செய்ய நீ'' என்று பதட்டமாக வரா வினவ...

''நம்ம ஒரு இடத்துக்கு அவசரமாக போகணும்'' என்றான்.

''அவசரமா எங்கே போகணும், எதுவா இருந்தாலும் காரை நிறுத்து! நான் வரணும்னா ராம் அண்ணா கிட்ட சொல்றேன். கூட்டிட்டு வருவாங்க! நான் உன்னோட தனியா வர்றது தெரிஞ்சா அப்பா கோபிப்பாங்க. உங்க வீட்லயும் ப்ராப்ளம் ஆகும்'' என்றாள்.

''ப்ளீஸ் வரா அமைதியா வா'' என்றான் கெஞ்சலாக.

''நாம எங்கே போகிறோம். அதையாவது சொல்லு!'' என்றாள் எரிச்சல் மறையாத குரலில்.

சிறிது யோசித்தவன், உண்மையை மறையாமல், ''நாம கல்யாணம் பண்ணிக்க போறோம்'' என்றான்.

''என்ன?'' என்றவள் சிறிது நேரம் பேசவில்லை. அவன் கூறுவது உண்மை தானா என்று அவன் முகத்தை ஆராய முகத்தின் தீவிரம் உண்மை என்று காட்டியது.

இத்தனை நாள் அவள் பார்த்த ஸ்ரீதருக்கும், இன்று பார்க்கும் ஸ்ரீதருக்கும் வித்தியாசமாக அவளுக்கு தோன்றியது.



''என்ன ஸ்ரீதர் உளறல் இது? முட்டாளா நீ! என்னை கல்யாணம் பண்ணிக்க உங்க அப்பா சம்மதம், எங்க அப்பா சம்மதம், தேவையில்லைன்னு நீ நினைத்தாலும், என் சம்மதம் தேவைன்னு தோணலையா உனக்கு?

''முதல்ல நீ காரை நிறுத்து! எதுவா இருந்தாலும் பேசலாம், நிறுத்து!'' என்று கோபத்தில் கத்தினாள்.

'எப்படி என்னிடம் கேட்காமல், இவன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வான். நேற்று தானே காதல் சொல்லி, திருமணம் பேச வா என்று சொன்னேன், எல்லாம் என்னால் தான்' என்று தன்னையே மனதிற்குள் திட்ட துவங்கினாள்.

''அதற்குள் இப்படியா?''

கார் எதற்கும் நிற்காமல் சென்றது.

''இன்னைக்கு நம்ம கல்யாணம் நடக்கணும் வரா, இல்லைனா எனக்கு என் அத்தை பொண்ணோட நிச்சயம் பண்ணிடுவாங்க'' என்றான்.

''அது உன் ப்ராப்ளம், நீ அங்க சண்டை போடறதை விட்டுட்டு, என்னை வந்து இப்படி எங்க அப்பாக்கு தெரியாம கூட்டிட்டு போவியா... நிறுத்து ஸ்ரீதர்.''

''என் ப்ராப்ளம் வேற, உன் ப்ராப்ளம் வேறயா'' என்ற அவனின் கேள்விக்கு அவளுக்கு பதில் சொல்ல தெரியவில்லை.

அவனே மறுபடியும், ''எதுவா இருந்தாலும் கல்யாணம் முடியட்டும் பேசிக்கலாம் வரா.''

''நான் கல்யாணமே முடியாதுன்னு சொல்றேன். நீ முடியட்டும் பேசாம்னா...?''

வெறி பிடித்தவள் போல், ''நிறுத்து!!!'' என்று கத்தினாள்.

''எங்க அப்பாக்கு தெரியாமா, நான் எதுவும் பண்ண மாட்டேன். நான் நேத்து கூட எங்க அப்பாக்கிட்ட வந்து பேசுங்கன்னு தான் சொன்னேன்.''

நீ என்னவோ பேசிக்கொள். நான் நிறுத்த மாட்டேன், என்பது போல கார் இன்னும் வேகமெடுக்க துவங்க...

வராவிற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

வெளியில் ஐந்து நிமிஷம் நின்று பேச என்று வந்ததால், செல் போனும் எடுத்து வரவில்லை. காரை சென்ட்ரல் லாக் செய்திருந்தான். கதவை திறக்க முடியவில்லை.

கார் போய்க் கொண்டே இருந்தது. கார் கண்ணாடியை இறக்க முடியவில்ல. கத்தினாலும் வெளியே கேட்காது.

வராவிற்கு தைரியம் போய் அழுகை வர ஆரம்பித்தது.

''நிறுத்து ஸ்ரீதர்... அப்பா தேடுவாங்க. அண்ணா பொறுமையா இருக்க சொன்னான். நிறுத்து ஸ்ரீதர்...'' என்று அவள் தேம்ப துவங்கினாள்.

ஸ்ரீதருக்கு அவனுடைய வீட்டிலிருந்து யாராவது போன் மாற்றி மாற்றி செய்து கொண்டு தான் இருந்தனர். அவன் அதை எடுக்கவில்லை அதே சமயம் போன் ஸ்விட்ச் ஆப் செய்யவில்லை.

மெசேஜ் டோன் இரண்டு மூன்று முறை தொடர்ந்து வந்து கொண்டே இருக்க...

எடுத்து பார்த்தால் 'varamahaalakshmi's brother in our custody/ Come home immediately' என்று அப்பாவுடன் எப்பொழுதும் இருக்கும் நபரிடம் இருந்து மெசேஜ் வந்திருக்க... வரா வேறு அழுது கொண்டிருக்க, செய்வதறியாது வேகமெடுத்தான்.



என்ன செய்வது என்று புரியாமல் கால்கள் ஆக்சிலேட்டர் மிதிக்க, கார் பறந்தது.

''வேகமாக போகாத ஸ்ரீதர். எனக்கு பயமாக இருக்கு'' என்று வரா கத்த, கத்த, காரின் வேகம் அதிகரித்தது.

போய் கொண்டே இருந்தவன், என்ன நினைத்தானோ காரை திருப்பி வந்த வழியே வந்தான். ஆனாலும் வேகம்.

பேசி, கத்தி, கெஞ்சி, ஒய்ந்த வரா, நடப்பது நடக்கட்டும் என்று அமர்ந்திருந்தாள்.

வேகம்...

வேகம்...

தான் யாரையே துரத்துவது போல்...

தன்னை யாரோ துரத்துவது போல்...

வேகம் வேகம் வேகம்...

அவ்வளவு வேகத்திலும் ஸ்ரீதர் சரியாக தான் போனான்.

நாம் சரியாக போனாலும் எதிரில் வருபவன் சரியாக வரவேண்டுமே.

எதிரில் எவனோ ஒருவன் தன் முன் சென்ற லாரியை ஓவர்டேக் செய்ய ரைட் எடுக்க...

நேருக்கு நேர் மோதுவது என்பது தவிர்க்க முடியாது என்றாகி போன போது...

நேருக்கு நேர் மோதினால் வராவிற்கு?.

ஸ்ரீதர் தன்னை பற்றி யோசிக்கவில்லை, வராவிற்கு எதுவும் ஆகக்கூடாது என்று நினைத்தவன்,

சட்டென்று ஸ்ரீதர் வண்டியை லெப்டில் ஒடிக்க...

அவன் இருந்த புறம் மட்டும் மிக மோசமாக மோதியது.

மிக மிக மோசமாக மோதியது.

அது மோதிய வேகத்தில் வராவின் புறம் இருந்த கதவு திறந்து, வரா வெளியே தூக்கி எறியப்பட்டாள்.

ஸ்ரீதர் மரணத்தின் பக்கத்தில் சென்று கொண்டிருந் தான்.

உலகமே இருண்டு கொண்டு வந்தது அவனுக்கு.

முதலில் ஆழ்ந்த அமைதி.

பின்பு சுற்றி பல குரல்கள் கேட்டன. கண்ணை திறந்து கொண்டு தான் இருப்பது போல் அவனுக்கு தோன் றியது. ஆனால் கண்முன் எதுவும் தெரியவில்லை.

யாரோ அவன் பாக்கெட்டில் கை விட்டு அட்ரெஸ் தேடினர்.

யாரோ அம்புலன்சிற்கு போன் செய்தனர்,

யாரோ போலீசிற்கு போன் செய்தனர்,

ஆனால் இவன் வாய் மட்டும் ஓயாமல் வராவை கூப்பிட்டது.

அவளை யாரும் கவனிக்கிறார்களா தெரியவில்லையே மனது ஓலமிட்டது.

நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. காரின் உள்ளே சிலர் தேட...

அவன் போனை எடுத்த யாரோ, அதை ஆராய...

நேற்றிலிருந்து பல கால்கள், வரா என்ற நம்பருக்கு முயற்சி செய்திருந்ததால் அந்த நம்பருக்கு அழைக்க...

அப்பொழுது தான் சிவசங்கரன் விவரம் சொல்லி யிருக்க, தனக்கு இங்கே டிபார்ட்மெண்டில் யாராவது தெரிந்தவர்கள் இருக்கிறார்களா என்று அவன் யோசிக் கும் பொழுது வராவின் போன் அடித்தது.



''காலிங் ஸ்ரீதர்'' என்று வர, ரமணன் அவசரமாக எடுத்தான்.

எடுத்தால்... ''இங்கே ஆக்சிடென்ட் அடிபட்டு மயக்க மாகியிருக்கிறவர் போனில் இருந்து தகவல் சொல்ல கூப்பிட்டேன்.''

''எங்கே...?'' என்று வினவியவன், சிவசங்கரனிடம் வருமாறு கூறி... இவன் அங்கே இருந்த வீலர் எடுத்துக்கொண்டு சென்றவன், சிவசங்கரனிடம் தகவல் கூறிய பின் அவர் வருவதற்காக கூட நிற்கவில்லை.

அரைமணி நேரம் ஆம் தூரத்தை பாதி நேரத்தில் வந்தடைந்தான்.

அம்புலன்ஸ் வந்து சிறிது நேரம் ஆகியிருந்தது. போலீசும் வந்து டிராபிக் கிளியர் செய்ய ஆரம்பித்தது.

ஆனால் விபத்தில் சிக்கியவர்களை வண்டியில் இருந்து வெளியே எடுக்க முடியவில்லை.

இரண்டு வண்டிகளும் மிக வேகமாக மோதியதால் ஒன்றோடு ஒன்று ஜாம் ஆகியிருந்தது. எதிர் காரில் டிரைவிங் சீட்டில் இருந்தவனை அப்பொழுதுதான் மிகுந்த சிரமத்திற்கிடையில் வெளியே எடுத்தனர்.

இவனை வெளியில் எடுக்க முயற்சிக்க இரண்டு கால்களும் உள்ளே மாட்டியிருந்தது.

எடுக்கும் போது ஏதாவது ஆகிவிட்டால் என்ற டென்ஷன் அங்கே இருந்த போலீசிற்கும், ஆம்புலன்ஸ் மக்களுக்கும் இருக்க போராடிக்கொண்டிருந்தனர்.

ஸ்ரீதர் நினைவை சிறிது சிறிதாக இழந்து கொண்டிருந் தான். உதடுகள், ''வரா, வரா'' என்று சொல்ல, அருகில்

வந்து கேட்டவர், ''யாரையோ வர சொல்லறார் போல இருக்கே'' என்றார்.

அவர் அதை சொல்லும் போதே ரமணன் வந்திருக்க...

அவன் ஐ.டி. கார்டு அவனை நிமிடத்தில் அந்த இடத்தின் அருகில் அனுமதிக்க, உள்ளே பார்த்தால் ஒரு இளைஞன் மட்டுமே இருந்தான்.

''வரா எங்கே?''

''வரா எங்கே?'' என்று அவனின் அருகே சென்று கேட்க...

கைகளால் துளாவினான் ஸ்ரீதர்...

''வரா எங்கே?'' என்று ரமணன் கத்த...

கைகளை எதிர்புறம் நீட்ட... அந்த பக்கத்து கதவு திறந்திருப்பதை பார்த்தவன், அங்கே செல்ல... ஏற்கனவே எல்லாரும் பார்த்திருந்தனர் யாரும் இல்லை.

ஆனால் அவர்களுக்கு அவனோடு ஒரு பெண் இருந் தாள் என்று தெரியாததால், தேடவில்லை.

ஆனால் ரமணனுக்கு தெரியும் என்பதால், அவளை வேறு எங்காவது விட்டுவிட்டானா, இல்லையா... என்று திரும்பி நின்று யோசிக்க...

எதிரே வீடு கட்டடத்திற்கு கடகால் போடுவதற்காக குழிகள் இருக்க, வேகமாக சென்று அங்கே பார்த்தான். முதல் இரண்டு குழியில் இல்லை.

மூன்றாவது குழியில், நெற்றியில் இருந்து ரத்தம் வடிந்து, முகம் முழுவதும் படிந்த நிலையில் வரா மயங்கி கிடந்தாள்.

பார்த்து... அதிர்ந்து... ரமணன்... ''வரா!!!!'' என்று அவனையறியாமல் கத்திய கத்தல், அங்கே இருந்த



அத்தனை பேரின் கவனத்தையும் இந்த இடத்தை நோக்கி திருப்பியது.

அந்த சத்தம் ஸ்ரீதரின் உயிர் வரை சென்று ஒலித்தது.

# 25

## இன்றைய நிகழ்வுகள்

ராஜேஸ்வரி வந்ததும், அவரிடம் இரண்டு வார்த்தை பேசி மேலே சென்றான் ரமணன்.

அத்தை கட்டிலில் படுத்து கொண்டிருக்க... அவள் மேல் ஏறி ஸ்ருதி படுத்திருக்க... ரோஹித் அருகில் அமர்ந்து, அவன் ஸ்கூல் கதைகளை சொல்லிக் கொண் டிருந்தான்.

''வரா...! என்ன இது? இப்படி நீ திடீர்னு செஞ்சா கல்பனா ஏதோ அவ சொல்லிட்டான்னு வருத்தப்படறா! இப்படி தான் பேசிட்டு இருக்கும் போது நடுவில எழுந்து வர்றதா கெட்ட பழக்கம்'' என்றான்.

பதிலே சொல்லவில்லை வரா. ''நீ என்ன வேண்டு மானாலும் பேசிக்கொள். எனக்கொன்றுமில்லை இல்லை, நான் இப்படித்தான்'' என்ற மனப்பான்மையுடன் ஒரு பார்வை பார்த்தாள்.

''ரோஹித் நம்ம வெளில போகலாமா!'' என்று ரமணன் ரோஹித்திடம் கேட்டுக் கொண்டிருக்கும் போதே... வரா ''வேண்டாம்! இப்பவே ஏழு மணி. நாளைக்கு அவனுக்கு ஸ்கூல் இருக்கு'' என்றாள்.

அவன் ப்ரெஸ் ஆகி வந்த பொழுது, குழந்தைகளும் இல்லை, வராவும் இல்லை.

'காலையில எனக்கு உன்னோட இருக்கிற டைம் கம்மியாகுதுன்னு சொல்லிட்டு, இப்போ ஓடறா பார்' என்று மனதிற்குள்ளேயே அவளை திட்டியவன், கீழே போனான்.

அங்கே இருந்தவள், இவனை பார்த்ததும், ''நான் குட்டிய தூங்க வைக்கிறேன், அண்ணி!'' என்று கல்பனா விடம் கூறி மறுபடியும் ஸ்ருதியை தூக்கிக் கொண்டு மேலே வந்தாள். அவள் தூக்கிக்கொண்டு பாதிப் படி ஏறிக்கொண்டு இருக்கும்போதே, ''கல்பனா!'' என்று அதட்டினார் ராஜேஸ்வரி.

''ஸ்ருதிய அவ கிட்ட இருந்து வாங்கு! நீ போய் தூங்க வை!'' என்று அதட்டினார் ராஜேஸ்வரி.

''எல்லாம் உன்னால் தான்! என்பது போல் ரமணன் வராவை பார்க்க... ''ஏன்மா நான் தூங்க வைச்சா என்ன?'' என்று தன் தாயிடம் வரா பதிலுக்கு கோபப்பட...

''நீ இன்னும் சின்ன பொண்ணு இல்லை வரா! தம்பி சாப்பிட வர்றாங்க, நீ அவளை தூக்கிட்டு மேல போனா?''

''ஏன் நீங்க சாப்பாடு போடமாட்டீங்களா'' என்றாள் பதிலுக்கு.

''இப்போ தான் சொன்னேன்! நீ ஒண்ணும் சின்ன பொண்ணு இல்லை. எத்தனை பேர் இருந்தாலும் சாப் பாடு விஷயத்துல அம்மாவும் மனைவியும் கவனிக்கிற மாதிரி அவருக்கு இருக்காது.

''நீ இப்படி செஞ்சேன்னு தெரிஞ்சா? உன் வள்ளிம்மா என்ன நினைப்பாங்க. இரு! நான் அவங்க கிட்டயே



கேட்கறேன்'' என்றபடி அவர் போனை கையில எடுக்க போக...

''நீங்க ஒண்ணும் அவங்களை கூப்பிடாதீங்க!'' என்று அவள் குரல் ஸ்ருதி இறங்கி... அவள் கையில் வைத்து கொண்டிருந்த ஸ்ருதியையும் இறக்கிவிட... மாடிப்படி இறங்கி வந்தாள்.

''வள்ளிம்மா'' என்ற வார்த்தை அவளிடம் நன்கு வேலை செய்தது.

அவள் இறங்கி வரவும் கண்களாலேயே, ''நாம் செல்ல லாம்'' என்று ராஜேஸ்வரி கல்பனாவை அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தினார்.

''உம்'' என்று முகத்தை தூக்கி வைத்து கொண்டு வரா வந்து அங்கே இருந்த சோபாவில் அமர... சற்று நேரம் பார்த்தவன், அவனாகவே சென்று சாப்பாட்டை எடுத்து போட்டுக் கொண்டு சாப்பிட அமர... அருகில் வந்தவள், ''நான் போடட்டுமா, என்க,

''நீ சாப்பாடு வைக்கறதுக்காக நான் வெய்ட் பண்ண லாம். ஆனால் என் பசி வெய்ட் பண்ணாது.''

அமைதியாக அவனை பார்த்திருந்தாள்.

அவன் சாப்பிட, சாப்பிட, என்ன தேவையோ வைத் தவள், அவன் சாப்பிட்டு முடித்ததும்,

''இவ்வளவு நாளா நானும் வள்ளிமாவும் உங்க கூடவா இருந்தோம். இப்போ மட்டும் என்ன?''

அவளை பார்த்தவன், 'அச்சோ, நீ இவ்வளவு புத்தி சாலியா' என்பது போல் பார்த்தான்.

''இல்லைன்னா இல்லை வரா! ஆனா இருக்குன்றப்போ இல்லாம இருக்க முடியாது. அதுக்கு தான் நான்

இவ்வளவு நாளா இந்த பக்கம் வராம இருந்தேன். நீ கம்பம் வந்தப்போவும் சீக்கிரம் கிளம்பிடுவேன்.

''உனக்கு தெரியாது வரா, நீ என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணுவ. நீ என் பக்கத்துல இருக்கும் போது நிறைய என் சிந்தனைகளை ஆக்ரமிப்ப.

நிறுத்தியவன்... ''உனக்கு ஞாபகம் இருக்கோ இல்லையோ! இந்த வேலைய நீ தான் எனக்கு செலக்ட் பண்ணின. முதல்ல உங்களோட கட்டாயத்துக்காக நான் இதை செலக்ட் பண்ணினேன்.

''ஆனா இப்போ எனக்கு நீ எந்த அளவுக்கு முக்கியமோ, அந்த அளவுக்கு எனக்கு இந்த வேலை பிடிச்சிருக்கு. இதுல மைண்ட் டைவர்ஷன் இருக்கக் கூடாது.''

''இப்படி தினமும் நீ முகத்தை தூக்கி வைச்ச? நான் என்ன பண்ண முடியும். நான் என்ன எனக்காகவா கல்யாணம் முடிந்தவுடனே உன்னை விட்டுட்டு போனேன், உனக்காக தான் போனேன். நீ உன்னோட குழப்பங்கள்ள இருந்து நிரந்தரமா வெளிய வர்றதுக்காக போனேன்.''

''நீ இப்போ வந்துட்டேன்னு எனக்கு தெரியும். வரலைன்னாலும் உன்னோட குழப்பங்களுக்கான காரணங்கள் நல்ல படியா முடிஞ்சிடுச்சு. அதனால தான் வந்தேன்'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே வரமஹாலக்ஷ்மியின் கண்களில் கண்ணீர் மளமளவென இறங்கியது.

பார்த்தவனுக்கு சட்டென்று எரிச்சல் வர... ''முதல்ல எதுக்கெடுத்தாலும் இப்படி அழறதை நிறுத்து! எனக்கு இது பிடிக்காது. உடனே அடுத்த கேள்வி கேட்காத,



உனக்கு பிடிச்சதை நான் ஏன் செய்யணும்னு???'' என்று கோபமாக உரைத்தவன்,

''சீக்கிரம் கிளம்பு கோயில் மூடிடுவாங்க. போன்ல உன் வள்ளிம்மா ஒரே தொல்லை, நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து கோயிலுக்கு போகணுமாம்.''

''எட்டு மணி ஆகப் போகுது'', என்றாள்.

''எந்த கோயில் திறந்திருக்கோ, அங்க போகலாம்.''

''ஏன் அவசரம், நாளைக்கு போகலாமே!'' என்றாள்.

''அம்மா தாயே! அப்புறம் நீ என்னை பார்த்து சிரிக்கவா? பாய்ன்னு சொன்னா சிரிக்கற... அத்தை மட்டும் போதாது, மாமாவும் வேணும்னு குட்டி கிட்ட சொல்லற... இன்னும் டையலாக் எல்லாம் அடிக்கற. கல்யாணத்துக்கு முன்னாடி உன்னை எனக்கு தெரியும், இப்போ தெரியாதுன்னு. இதெல்லாம் நமக்கு ஆகாது நீ கிளம்பு'' என்றான்.

'இதற்கும் நாம் கோயிலுக்கு போவதற்கும் என்ன சம்பந்தம்' என்று யோசித்தவாறே டிரெஸ் மாற்றுவதற்காக மேலே செல்ல கால் வைக்க...

''பாப்பா, நீ எப்பவுமே அழகு தான்! டிரெஸ் மாற்றுகிறேன்னு இன்னும் லேட் பண்ணாதீங்க... வாங்க!'' என்றான் சிறு குழந்தைக்கு சொல்வது போல்.

அவன் சொன்ன விதம் புன்னகையை வரவழைக்க... ''அம்மா! நாங்க கோயிலுக்கு போகிறோம், அண்ணி! அண்ணா வந்தா சொல்லிடுங்க'' என்று கத்திவிட்டு அவனுடன் சென்றாள்.

கேட்டிருந்த ராஜேஸ்வரி மற்றும் கல்பனாவின் முகத்தில் சந்தோஷத்தை வரவழைத்தது.

# 26

## அன்றைய நினைவுகள்

முகம் முழுவதும் ரத்தம்.

எத்தனையோ பார்த்து விட்ட ரமணனுக்கு இதை பார்க்க முடியவில்லை.

ஒரு நொடி கண்மூடியவன் மனதிற்குள், 'இது வரா இல்லை யாரோ' என்று கொண்டு வந்தான்.

இல்லையென்றால் அவனால் செயல்பட முடியாது என்று நன்கு அறிவான்.

''எப்படி இறங்கலாம்'' என்று அவன் யோசித்துக் கொண்டு இருக்கும் போதே சிலர் அருகே ஓடி வந்தனர்.

''இறங்கலாம்!'' என்றாள் குழி முழுவதும் அவள் இருந்தாள்.

அவன் கண்களில் அவனையறியாமல் கண்ணீர் நிறைந்ததால், கண்கள் வேறு சரியாக தெரியவில்லை.

முயன்று கட்டுக்குள் வந்தவன், ஊன்றி பார்த்ததில் ஒரு இடத்தில் சிறிது இடம் தெரிய... மெதுவாக இறங்கி... அவள் மேல் கால் வைத்து விடாதவாறு ஒற்றை கால்களில் நின்றான்.

அப்படியே குனிந்து அவளை ஒரு கையால் தூக்க முயன்ற பிறகு, சிறிது இடம் கிடைக்க... இரு கால்களிலும் நின்றவன். அவளை தூக்கி தோள் மேல் போட்டான்.



அவளிடம் சிறிது அசைவு தெரிய, ''வரா'' என்று கூப்பிட்டு கொண்டே மேலே அவளை தூக்கி எப்படி ஏறுவது என்று பார்த்தான்.

யாரோ கைகளை நீட்டினர் அவளை வாங்குவதற்காக... கொடுக்க மனமில்லாமல் தன்னை தூக்குவதற்கு ஏதுவாக கைகளை நீட்டினான்.

இருவரையும் யாரால் ஒருங்கே தூக்க முடியும். ஒருவர் கையொடுக்க அதோடு சேர்த்து கொண்டு மூன்று பேர் பிடிக்க... அவனுடைய கால்களை பக்கவாட்டில் வைத்து மளமளவென்று ஏறி அவளை கீழே கிடத்தினான்.

எதை கொண்டு அவள் முகத்தின் ரத்தத்தை துடைப்பது என்று தெரியாமல் தன்னுடைய டீ ஷர்ட் கழற்றியவன் அவள் முகத்தை துடைத்தான். மேல் நெற்றியில் இருந்து ரத்தம் வந்து உறைந்திருந்தது.

பல்ஸ் பார்த்தான். பணியில் சேர்ந்ததில் இருந்து நிறைய கடினமான சூழல்கள் பார்த்துவிட்டதால் அவன் உள்மனது கூறியது. சீரியஸ் அல்ல, அவள் ஸ்டேபிள் என்றே சொல்லியது.

''வரா! வரா'' என்று கன்னத்தில் தட்டினான். கொஞ்சம் அதற்கு செவிசாய்ப்பது போல் கண்களில் அசைவு தெரிய... பக்கத்தில் இருந்தவரிடம் தண்ணீர் வாங்கி முகத்தை துடைத்து, மறுபடியும், ''வரா! வரா!'' என்று பலமாக அழைத்து தட்ட துவங்கினான்.

மெதுவாக கண்ணை திறந்தாள். அவனை பார்த்தவுடனே, அவன் தானா என்பதற்காக அவன் கையை பிடித்தவள், ''வெங்கி'' என்றாள்.

அந்த நேரத்திலும், ''எப்போ வந்தே?'' என்று கேட்ட அவள் முகத்தில் வலியையும் மீறி ஒரு நிம்மதி தெரிந்தது.

''ரொம்ப வலிக்குது!'' என்றாள்.

''ஒண்ணுமில்லை வரா! நம்ம இப்போ ஹாஸ்பிடல் போயிடலாம்!'' என்றபடியே இரு கைகளால் அவளை அவன் தூக்கிக் கொண்டு போக, ''வலிக்குது'' என்று முனகினாள்.

''சரியாயிடும்'' என்று கம்மிய குரலில் சொல்லிக் கொண்டு... அவளை தூக்கி கொண்டு ஏறக்குறைய ஓடினான்.

உதவிக்கு வந்தவர்களை, ''தேவையில்லை'' என்று ஒதுக்கினான்.

அதற்குள் சிவசங்கரன் வந்துவிட, அவளை ஆம்புலன்சுக்கு கொண்டு செல்லாமல் அவருடைய காருக்கு கொண்டு சென்று படுக்க வைக்க முற்பட...

அவனை கீழே குனிய சொன்னவள்,

''ஸ்ரீதர் எங்கே?'' என்றாள்.

இந்த நேரத்திலும் அவன் நினைவா எண்ணங்கள் வட்டமிட்டன. பதில் சொல்ல அவசியமில்லாத போதும்...

''அவன் அங்கே காருக்குள்ள மாட்டியிருக்கான்'' என்றான் ரமணன்.

''அவனை காப்பாற்றேன்'' என்றாள் வரா அந்த வலியிலும்,

''அவங்க பார்த்துப்பாங்க!'' என்று சொல்லிய ரமணன், அவளை படுக்க வைத்து... பக்கத்தில் சிவசங்கரனை அமர சொல்லி, கார் ஓட்ட முன்புறம் வர...

''ப்ளீஸ் வெங்கி! அவனை காப்பாத்து, அவன் தான் என்னை காப்பாற்றினான்'' என்றாள் ஒற்றை சொல்லாய்.



சொன்னவள், அந்த வலியிலும்... கண்கள் தானாக வலியில் மூடும் போதும்... விடாமல் சிரமப்பட்டு கண்களை திறந்து, அவனை நேர் பார்வை பார்த்தாள்.

தாமதியாது, ''சரி, நீ அய்யாவோட போ'' என்றவன், அவர்கள் கார் சென்ற பிறகே அங்கே அந்த இடத்திற்கு வந்தான்.

அதற்குள் ஸ்ரீதருடைய தந்தை மற்றும் வேறு ஆட்கள் அங்கே வந்தனர்.

எல்லாரும் முன்புறம் காரை பிரிக்க முற்பட்டு கொண்டிருந்தனர்.

சென்று, ''என்ன செய்யலாம்'' என்று ஆராய்ந்து பார்த்தான்.

ஸ்ரீதர் மயங்கி இருந்தான்.

''டேய், ஒடைங்கடா! காரை ஒடைச்சாவது என் பையனை வெளிய எடுங்கடா!'' என்று கத்தி கொண்டிருந்தார்.

அவர் தான் தந்தை, என்று கூற்றில் மூலமாக உணர்ந்தவன், ''ராம் பிரசாத் எங்கே?'' என்றான் அவரிடம் சென்று நேரடியாக...

அவர் அவனிடம் பதில் சொல்லவில்லை, அருகில் நின்றவன், ''எங்களை கேட்டா'' என்றான்.

நின்றது நின்றபடி ஸ்ரீதரின் தந்தையையே பார்த்திருந்தவன், ''நான் உன்கிட்டே கேட்கலை'' என்றான் பதில் சொன்னவனிடம்.

அருகில் இருந்தவன், ''நீ யாரு?'' என ஒருமையில் அழைத்து, விரல் நீட்டி கேட்க...

கேட்டவன் அவன் கையை கூட கீழே விட்டிருக்க மாட்டான், அதற்குள் ரமணன் அவனை ஓங்கி விட்ட அறையில் சுரப்போய் விழுந்தான்.

''யார் கிட்டடா கைய நீட்டுற, ஆள் தெரியாம தூக்கிட்டிங்கடா. ஏன்டா இப்படி செஞ்சோம்னு நீங்க ரொம்ப வருத்தப்படுவீங்க'' என்று அவனிடம் கத்தியவன்,

திரும்பி, ''இன்னும் உங்க பையன் பொணமாகலை, ஆனா இன்னும் பத்து நிமிஷத்துல ராம் இங்க வரலைன்னா... இந்த வண்டி இடிபாடுகளையே உங்க பையனும் சேர்ந்து பொதஞ்சிடுவான். அப்புறம் காரோட சேர்த்து அவனையும் பொதைக்க வேண்டியது தான்'' என்றான்.

ஸ்ரீதரின் தந்தை வெங்கட ரமணனை பார்க்க,

ஒன்றும் பேசாமல் ஸ்ரீதர் இருந்த காரிடம் சென்றவன்... ''தள்ளுங்க நான் பார்க்கிறேன்'' என்று சொல்லி சீட்... அவன் இருந்த பொசிஷன்... என்று ஆராய முற்பட, அருகில் இருந்தவர்கள் அவனுக்கு வழிவிட்டனர்.

ஸ்ரீதரின் தந்தையின் அருகில் இருந்தவர்கள் ஓடிச் சென்று, ''அவனை ஏன் விடுகிறீர்கள்'' என்று கேட்க,

''யாரோ பெரிய போலீஸ் ஆபீசராங்க. இன்னொரு பொண்ணை இப்போதான் காப்பாத்தி ஹாஸ்பிடல் அனுப்பினார்'' என்று சொல்லி கொண்டிருக்கும் போதே... பின்பக்க காரின் கதவை பிடுங்கி எறிந்து, சீட்டை பின்புறம் இருந்து இழுக்க ஆரம்பித்தான்.

அது வரவில்லை என்ன செய்வது என்று அவன் ஆராய்ந்து கொண்டிருக்க...

ஸ்ரீதரின் தந்தை அவர்களின் ஆட்களை அழைத்து... ''அவனை கொண்டு வந்து இங்க விட்டுட்டு போய்ட சொல்லுங்கடா'' என்று ராமை அழைத்து வர சொல்லி அனுப்பியவர்...



ரமணன் அருகே சென்று, ''அந்த தம்பி ஒரு சேதாரமுமில்லாம வந்துடும். இவனை எப்படியாவது வெளில எடுங்க, சீக்கிரம்!'' என்றார்.

திரும்பி அவரை ஒரு பார்வை பார்த்தவன்... பதில் பேசாது, வேறு ஆட்களை வைத்து, காரில் இருந்த டூல்ஸ் பாக்ஸ் எடுத்து, இரண்டே நிமிடத்தில் தேர்ந்தவன் போல் எதை எதையோ செய்து சீட்டை கழட்டி பின்புறமாக இழுக்க சொன்னவன்... ஸ்ரீதரை அப்படியே கையில் தாங்கி படுக்க வைத்த நிலையில், கால்களை தனித்தனியாக எடுக்க முறபட ஒரு கால் வெளியில் வந்தது.

அடுத்த கால் எடுக்க முடியவில்லை. நன்றாக மாட்டி இருந்தது. எப்படியோ இரண்டு மூன்று பேரின் உதவியை வைத்துக் கொண்டு எடுத்தான்.

எடுக்க, எடுக்க, ரத்தம் சிதறி தெறித்தது. அவன் மேல் எல்லாம் ரத்தம்.

அதற்குள் அவன் பேண்ட் பாக்கெட்டில் இருந்த போன் விடாமல் அடித்தது.

அப்படியே ஸ்ரீதரை தூக்கி எழுந்தான். பின்பு ஸ்ட்ரெச்சரில் அவனை வைத்தான், எல்லோரும் வேகமாக ஸ்ரீதரை ஆம்புலன்ஸ்ஸில் ஏற்ற வந்தனர்.

''இருங்க!'' என்றவன் அவன் தந்தையை பார்த்து... ''ராம் அண்ணா, எங்கே?'' என்றான்.

''கூட்டிட்டு வர்றாங்க தம்பி! ஹாஸ்பிடல் கூட்டிட்டு போகட்டுமே! என்று அவர் சொல்லும்போதே... மறுபடியும் போன் அடிக்க அதை ஒரு கையால் எடுத்து கொண்டே... ''போங்க!'' என்று ஸ்ரீதரை பிடித்திருந்தவர்களிடம் சொல்லி... ''அவனுக்கு பதிலாக நீங்க இருங்க,

அண்ணா வரவரைக்கும்'' என்று ஸ்ரீதரின் அப்பாவிடம் சொன்னான்.

''என்னடா பெருசா உதார் விடுற!'' என்று மறுபடியும் ஸ்ரீதரின் தந்தையிடம் இருந்தவர்கள் சத்தம் போட...

''வாங்கடா! எவனுக்காவது தைரியம் இருந்தா, வந்து கூப்டுக்குங்கடா'' என்று இவன் அவர் முன் சென்று நின்றான்.

''டேய் ஸ்ரீதரை முதல்ல கொண்டு போங்கடா! தாமதிக்காதீங்க!'' என்று சொன்னவர், ''நான் இருக்கேன், அவன் போகட்டும்'' என்று நின்றார்.

அதற்குள் கட்டாகியிருந்த போன்... மறுபடியும் ஒலிக்க ஆரம்பித்தது. அவசரமாக அதை எடுத்து பார்க்க... ராமநாதன் அழைத்தார்.

''என்ன அப்பா!'' என்று அவனின் கேள்விக்கு...

ரமணா, ''ராம் கிடைச்சானா, இல்லையா'' என்றார் பதட்டமாக...

''அப்ப எங்க இருக்காங்கன்னு தெரிஞ்சிடுச்சுப்பா'' வந்துட்டு இருக்காங்க.

''வந்தவுடனே மதுரை அனுப்புடா'' என்றார். அவருக்கு வராவின் நிலையை பற்றி நினைவு இருந்த மாதிரி கூட தெரியவில்லை.

''என்ன அப்பா?'' என்றான் பதட்டமாக... ''கல்பனாக்கு ஆபரேஷன் பண்ணி குழந்தையை வெளிய எடுக்க லாம்னு இருக்காங்க.''

''கல்பனாவுக்கு B.P. ரொம்ப அதிகமா இருக்கு, அடி பட்டிருக்கு வலியில துடிக்கறா. மயக்க மருந்து குடுத் தேன்றாங்கடா... ஆனா கத்திட்டே இருக்கா. நான்



கையெழுத்து போட்டுட்டேன். இருந்தாலும் அவனை உடனே அனுப்பு.''

பேசிக்கொண்டு இருக்கும்போதே... ஒரு சுமோ வந்தது. ராம் அதிலிருந்து இறங்கினான்.

வெங்கட ரமணன் அவன் அருகில் ஓடி அவனை கண்களால் ஆராய ''எனக்கு ஒன்றுமில்லை'' என்றவன், அப்போதுதான் சுற்றுப்புறத்தை பார்த்தான்.

ஆக்சிடென்ட் ஆனது பார்த்து... ''யாருக்கு என்ன? இங்க ஏன் நிக்கற?'' என்றான் பதட்டத்துடன்.

''வராக்கு அண்ணா! ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போய் இருக்காங்க. அடிபட்டிருக்கு. நீங்க வாங்க நாம போக லாம்.''

அவன் வந்த டூ வீலர் இருக்க... மறுபடியும் வேகமாக எடுத்துக் கொண்டு பறந்தனர்.

ஸ்ரீதரின் அப்பாவின் புறம் அவர்கள் திரும்ப கூட இல்லை. அவர்கள் வராவை பார்க்க ஓடினர்.

அங்கே சென்றால் ஐ ஸீ யு வில் இருந்தாள்.

வெளியே இருந்த சிவசங்கரன், ''உயிருக்கு பயமில்லை, எங்க? எங்க? அடிபட்டு இருக்குன்னு பார்த்துட்டு இருக்கோம்னு சொல்றாங்க'' என்றார் அடக்கப்பட்ட கண்ணீருடன்.

அதற்குள் போன் மணியடிக்க... ''அப்பா'' என்றான்.

''ரமணா, குழந்தை பொழைக்காதுங்கறாங்கடா'' என்றார் அங்கே அவர்.

''இங்க வராக்கு ஆக்சிடென்ட், அடிபட்டிருக்கு'' என் றான் இவன்.

இருபுறமும் ஆழ்ந்த அமைதி...

''என்ன செய்யட்டும்?'' என்றவனிடம்,

''வராவை உன்னால் அங்க பார்த்துக்க முடியும்னு தோணினா, அவங்களை அனுப்பிவை. இங்க அவங்க தேவை அதிகம்'' என்றார்.

''சரி'' என்று வைத்தவன்... எப்படி சொல்வது என்று புரியாமல், ''மதுரைக்கு இப்போ ஃப்ளைட் இருக்கா'' என்றான் சிவசங்கரனிடம்.

''எதுக்கு?'' என்றார் அவர். இன்னும் பதட்டத்துடன் அங்கே கல்பனாவுக்கு வலி எடுத்திடுச்சுன்னு ஹாஸ் பிடல் சேர்த்திருக்காங்க'' என்று மட்டும் சொன்னான்.

''இன்னும் நிறைய நாள் இருக்கே'' என்றான் பதட்டத் துடன் ராம் பிரசாத்.

''நீங்க ரெண்டு பேரும் அங்க போங்க அண்ணா! நான் இங்கே பார்த்துக்கறேன்.''

''நீ எதையாவது மறைக்கிறியா, எனக்கு பயமாயிருக்கு! சொல்லு ரமணா!'' என்று அவன் அருகில் வந்து அவன் கைபிடித்து ராம் கேட்க...

''அண்ணா பேசற நேரம், நீங்க அங்க போனா கல்பனா வுக்கு தைரியமா இருக்கும், கிளம்புங்க!''

''இங்கே பாப்பா!!!!'' என்று இழுத்த சிவசங்கரனிடம், ''நான் பார்த்துக்கறேன் ஐயா, நீங்க சீக்கிரம் கிளம்புங்க.''

அங்கே அவர்கள் சென்றபோது, கல்பனா கதறிய கதறல் அவர்களுக்கு ஹாஸ்பிடல் வாசல் வரை கேட்டது.

உறவினர்கள் நிறைய பேர் வாசலிலேயே தென்பட் டனர். எல்லோர் முகங்களையும் பார்த்தவுடனேயே பயம்



அதிகரிக்க... வேகத்தை இன்னும் அதிகரித்து ஏறக் குறைய ஓடினான், ராம் பிரசாத்.

கல்பனாவின் கதறலே குழந்தைக்கு ஏதோ என்று உணர்த்த, ராமநாதன், சுந்தரவல்லி, ராஜேஸ்வரி, அவன் மாமனார், குடும்பத்தினர் என்று எல்லாரும் இவன் வருவதற்காக காத்திருந்தது போல் இருந்தது.

ராஜேஸ்வரி, அவனை பார்த்ததும், ''ராம்'' என்று மறு படியும் அழ துவங்க...

ராஜேஸ்வரி என்று அதட்டிய சுந்தரவல்லி, ''நீ உள்ளே போப்பா!'' என்றார்.

ராமநாதனை பார்த்த சிவங்கரன், ''ஒரே நாள்ல நான் ஒண்ணுமில்லாம போயிட்டேன் அண்ணா'' என்றார்.

''நான் இருக்கிற வரைக்கும், நீ அந்த வார்த்தையை சொல்லாதடா'' என்று ராமநாதன் அவரை தேற்றி கொண்டிருக்க...

ராம் பிரசாத் உள்ளே சென்றவுடனே, ''நீங்க இந்த பொண்ணோட கணவரா'' என்ற டாக்டர், அங்கே அவன் மாமியாரும் இருந்தார்.

ஆம் என்ற அவனின் தலையசைப்பிற்கு...

''சொல்லுங்க சார்! இந்த பொண்ணு! இப்படி அழுதா போட்டிருக்கிற தையல் பிரிஞ்சிடும். உள்ள ப்லீடிங் அதிகம் ஆகிடும். அப்புறம் இவளையும் எங்களால காப் பாற்ற முடியாது. மயக்க மருந்து குடுத்தும் ரெஸ்பான்ஸ் ஆகலை, கத்தறா!'' என்றார்.

கண்களில் கண்ணீர் அவனையறியாமல் இறங்கியது. குழந்தை இறந்து விட்டதா, ராம் பிரசாத்திற்கே மயக்கம் வரும் ...

''கல்பனா'' என்ற அவனின் குரல் கல்பனாவின் செவிகளில் எட்டியது போல தெரியவில்லை.

அங்கே இருந்த சிஸ்டர் அவளை அதட்டி கொண்டிருந்தார்.

''அம்மா! தோ பாரு, கத்தாத! தையல் பிரிஞ்சிடும்! அமைதியாயிரு, இன்னொரு பையன் அம்மா எங்கேன்னு கேட்டுட்டு இருக்கான்! அவனை நினைவில் வை!'' என்று...

## 27

### இன்றைய நிகழ்வுகள்

''எங்கே போகலாம்'' என்று கேட்டுக் கொண்டே ரமணன் காரை எடுக்க... ''அஷ்டலட்சுமி கோயில், என்றால் வர மஹாலக்ஷ்மி.

அதற்கு மேல் அமைதி இருவரிடத்திலும், சென்று சன்னதியில் நின்று... கடவுளை வணங்கிய பொழுது... அவளையறியாமல் கண்களில் மறுபடியும் கண்ணீர் வழிந்தது.

திரும்பி பார்த்தவன், 'இவளை என்ன செய்வது தெரியவில்லையே' என்று மனதிற்குள்ளேயே நினைத்து கொண்டான்.

''போகலாமா'' என்று கேட்டவனிடம், ''சரி'' என்பது போல தலையசைத்தவள் வந்து கார் கதவை திறக்க...

அவள் முகத்தை பார்த்தவன் அவள் சிறிது மனவருத்தத்தில் இருக்கிறாள் என்பதை உணர்ந்தவனாக... அதை மாற்றும் பொருட்டு,



''இங்கே பீச்ல கொஞ்ச நேரம் உட்காரலாமா'' என்று கேட்ட ரமணனிடம்,

''ஒன்பது மணியாயிடுச்சு, அம்மா இன்னும் காணோம்னு தேடுவாங்க'' என்றவளிடம் பதில் பேசாமல் போனை எடுத்து, ராம் பிரசாத்தை அழைத்தவன்...

''அண்ணா வீட்லையா இருக்கீங்க, நானும் வராவும் வெளிய வந்தோம். கொஞ்சம் நேரமாகும்னு சொல்ல கூப்பிட்டேன். அப்படியே வீட்ல சொல்லிடுங்க'' என்று சொல்லி தொலைபேசியை வைத்தான்.

''இப்போ உட்காரலாமா'' என்றான்.

''ம்'' என்று பதில் சொல்லியவளை, ''வா'' என்று அழைத்து சென்று அமைதியாக கடலின் அருகில் சென்று தண்ணீரில் கால் நனைத்தான்.

அவன் முகத்தை பார்த்து, பார்த்து திரும்பியவளிடம்... ''என்ன கேட்கணுமோ கேளேன். நீ இப்படி கேட்காம என்னை திரும்பி, திரும்பி, பார்த்தா... நீ என்னை ஆசையா பார்க்கிறேன்னு நான் தப்பா நினைச்சிட்டா'' என்று வேண்டுமென்றே சீண்டினான்.

அவன் யுக்தி வேலை செய்ய, அழுகையை நிறுத்தி சண்டைக்கு வந்தாள்.

''டேய் ஏதாவது பேசின, தண்ணில தள்ளி விட்டுடுவேன்'' என்றாள்.

''என்ன இது...? இப்படி மரியாதையில்லாம டேய் போட்ட... வள்ளிம்மா கிட்ட சொல்லிடுவேன்'' என்று விளையாட்டாக மிரட்ட...

''சரிங்க டேய்ங்க அவர்களே, இல்லையில்லை மகா கனம் பொருந்திய ஸ்ரீமான் வெங்கட ரமணன் அவர்

களே, அதுவுமில்லை வெங்கி சங்கி மங்கி... அவர்களே'' என்று வரிசையாக அவள் கூறிக்கொண்டே வர...

''அம்மா தாயே! நிறுத்து! நிறுத்து! இதுக்கு அதுவே பரவாயில்லை'' என்றான்.

''எது? எது? பரவாயில்லை, நீ என்னை விட்டுட்டு போனதா?'' என்றாள்.

அவள் சீரியஸ் என்றுணர்ந்தவன், ''நீ எப்போ கூப்பிட்டாலும் நான் வர்றேன்னுதானே சொன்னேன்'' என்றான் தயங்கியபடியே.

''எதுக்கு நான் கூப்பிடணும். என்னை கேட்டா நீ என்னை கல்யாணம் செஞ்ச. நீயே தானே செஞ்ச. அப்புறம் ஏன் விட்டுட்டு போனே.''

''புரியாம பேசாத பாப்பா! நீ நம்ம வாழ்க்கையை இப்போ தொடங்க வேண்டாம். கொஞ்சம் நாள் போகட்டும்னு சொன்னே... நான் செஞ்சேன்'' என்றான்.

''அது நீ என் கூடவே இருந்தா முடியாதா?''

''முடியாது!... எப்படி முடியும்? அழகான மனைவி தேவையில்ல, மனைவின்னு ஒருத்தி இருந்தாளே பக்கத்தில் வராம இருக்க முடியாது. அப்படியிருக்கறப்போ நான் எப்படி இங்கே இருக்க முடியும்.''

அவனே தொடர்ந்தான், ''நீ என்னை ரொம்ப அட்ராக்ட் பண்ணுவ. இப்போன்னு இல்லை, சின்ன பொண்ணுல இருந்தே. உன் இந்த கண்... கண்ணீர் விட்டா எனக்கு பார்க்க முடியாது. உன்னை பார்த்துட்டே எப்படி என்னால இருக்க முடியும்.

''கொஞ்சம் நீ என்னை யோசிச்சு பார்க்கணும்'' என்றான் வேண்டும் குரலில்.



''அதுக்காக நீ என் கூட பேசலை, வீட்ல யாராவது கூப்பிட்டா போன் எடுக்க மாட்டீங்க. கல்பனா அண்ணி டெய்லி எத்தனை தடவை கூப்பிடுவாங்க தெரியுமா'' என்றாள்.

''எடுக்கலைன்னா ஏன் அண்ணி கூப்பிடலீங்கன்னு'' நான் சண்டை கூட போடுவேன்.

''எடுக்கலைன்னா போகுது. அட்லீஸ்ட் இதை பார்க்கும் போது நம்ம ஞாபகமாவது வருமில்லை, அப்படின்னு சொல்லிட்டு மறுபடியும் மறுபடியும் கூப்பிடுவாங்க.''

''நான் உன்னை கொஞ்சம் டென்ஷன்ல வச்சிருந்தால தான் நீ அடங்கின. இல்லைன்னா நீ கல்பனா கிட்ட உளறி இருக்க மாட்டியா'' என்றான் பதிலுக்கு ரமணன்.

''நான் பண்ணினது தப்பில்லையா'' என்று அவனிடமே திருப்பி கேட்டாள்.

''இல்லைன்னு உன்கிட்ட எத்தனை தடவை சொல்றது.''

''என்னால தானே அண்ணாவை கடத்தினாங்க... அதனால தானே அண்ணிக்கு அடிபட்டு, குழந்தை..'' என்று மறுபடியும் விசும்ப ஆரம்பித்தாள்.

அவளருகில் வந்து அவள் தோள் அணைத்தவன், ''நீ அது தெரிஞ்சு செய்யலை! விட்டுடு! அதை பற்றி நினைக்காதே பேசாதே'' என்று சிறிது இடைவெளி விட்டான்.

''அதுக்காக தான் நம்ம உங்க அண்ணிக்கு இன்னொரு குழந்தை பிறக்கும்வரை வெய்ட் பண்ணலாம்னு நீ சொன்னதுக்கு நான் ஒண்ணுமே சொல்லாம உன்னை விட்டுட்டு போனேன்.''

''குழந்தை பிறந்தவுடனே வரலாம்னு நினைச்சதுக்கு... மறுபடியும் ஒண்ணு சொன்னே? அதுக்கும் பதில் பேசாம போயிட்டேன்.''

''ஆனா நீ சொல்ற ஒண்ணை, எப்போவுமே எங்களால ஒத்துக்க முடியாது'' என்றான் சீரியசாக.

''அது எனக்கு தப்பு பண்ணிட்ட மாதிரி இருக்கு'' என்றாள் குரலில் வலியுடன் வரமஹாலக்ஷ்மி.

''உங்கண்ணன் நொறுங்கிப் போயிடுவான் பரவா யில்லையா?''

கண்களில் நீர் வடிய அமைதியாக இருந்தாள்.

''எத்தனை தடவை உன்கிட்ட சொன்ன பிறகும், நீ என்ன பாவமன்னிப்பு கேட்க போறியா கல்பனாகிட்ட... என்னால தான் ராம் அண்ணனை கடத்தினாங்க... அத னால் தான் இப்படி ஆயிடுச்சுன்னு சொல்லணும்னு சொன்னா, எப்படி ஒத்துப்போம்.

''ராம் அண்ணாவுக்கு நீ என்ன மாதிரின்னு உனக்கு தெரியாதா. அதே சமயம் எந்த அம்மாவும் தன்னோட குழந்தை இறந்ததுக்கு மறைமுகமான காரணமா யாரை யாவது நினைச்சா... அவங்களோட அவளால பழக முடியுமா.

''அதனால தான் மறைக்கிறோம். கல்பனா, உன்னை தப்பா எடுத்துப்பாளா இல்லையாங்கற பேச்சுக்கே இடமில்லை. ஒருவேளை நினைச்சுட்டா ராம்னால தாங்க முடியுமா?

''அவனுக்கு உன்னை விட முடியாது. கல்பனாவுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா உன்னோட அவளுக்கான உறவு எப்படி இருக்கும்னு தெரியாது.''



''அதனால தான், உன் வாழ்க்கையில ஸ்ரீதர்ன்னு ஒருத்தன் இருந்தான்றது எனக்கு, எங்கப்பாக்கு, ராம் அண்ணாக்கு, உங்க அப்பாக்கு, தவிர நம்மை தெரிஞ்ச வங்கள்ள யாருக்குமே தெரியாது.''

''நீ இன்னும் ஏதோ தப்பு செஞ்சிட்ட மாதிரி பேசறதை முதல்ல விடு'' என்றான்.

தெளியாதவள்... அன்று ஒரு நாள் ராத்திரி அவனுக்கு தொலைபேசியில், நெஞ்சு நிறைய ஆதங்கத்தில் அழைத்து கேட்ட கேள்வியை இன்று தெளிவாக கேட் டாள்.

''நீ ஏன் என்னை வேண்டாம்னு சொன்னே? நான் கெட்ட பொண்ணா?'' என்றாள்.

''நான் உன்னை ஏன் வேண்டாம்னு சொன்னேன்னு கட்டாயம் தெரியணுமா?''

ஆமாம், என்பது போல் தலையசைத்தாள்.

''ஒரு நாள் நீ டான்ஸ் கிளாஸ் போனதுக்கு நான் திட்டினேன். பதிலுக்கு நீயும் திட்டின, அதுவும் உன்னை திட்றதுக்கு நான் யார்னு கேட்டு கேட்டு திட்டுனியா... அந்த கோபம் நிறைய நாள் இருந்தது. அதனால நீ வேண்டாம்னு சொன்னேன்.

''ஆனா என்ன செஞ்சும் உன் நினைவுகள் என்னை விட்டு போகவேயில்லை. உனக்கு யாரோடயாவது கல்யாணம் ஆகற மாதிரி இருந்திருந்தா கூட நான் கட் டாயம் விட்டிருக்க மாட்டேன்'' என்றான் உண்மையான குரலில்...

''சும்மா சொல்ற நீ... நான் போன் பண்ணலைன்னா நீ வந்திருக்க மாட்ட, நான் கெட்ட பொண்ணு ஆகி யிருப்பேன்'' என்றாள் குரலில் வருத்தத்துடன்.

அதற்கு பதில் சொல்லாத ரமணன், கேள்வியை அவளை நோக்கி திருப்பினான்.

''சும்மா கெட்ட பொண்ணு, தப்பு பண்ணிட்டேன்... இப்படியே சொல்லிட்டு இருக்கிறே. அப்படி என்ன தப்பு பண்ண?'' என்றான்.

அவள் ஸ்ரீதருடன் பழகியதை தப்பென்று நினைத்து கொண்டிருந்தாள். அவள் எதை தப்பென்று நினைத்துக் கொண்டிருக்கிறாளோ, அதை சொல்ல பிரியப்படாமல்... ''அதெல்லாம் உன்கிட்ட சொல்ல முடியாது'' என்றாள் எரிச்சலான குரலில்.

''சரி யார் கிட்ட சொல்லியோ சொல்லு! நான் அவங்க கிட்ட கேட்கறேன்'' என்றான்.

''டேய்!!! சும்மா கடுப்படிக்காத, தண்ணில தள்ளி விட்டுடுவேன்'' என்றாள்.

சுற்றும் முற்றும் பார்த்தான். ஆள் அரவமே இல்லை. சட்டென்று அவளை தண்ணீரில் தள்ளினான்.

''இதை நான் உனக்கு செய்யணும்னு ஆசையா? அதான் சொல்லிட்டே இருக்கியா?'' என்ற அவள் இடையை பிடித்து அமிழ்த்தியவாறே தண்ணீரில் விளையாடி னான்.

திடீரென்று இந்த செய்கையை எதிர்பார்க்காததால், அவள் சத்தம் இறங்கி விட்டது.

மெதுவான குரலில், ''யாராவது பார்க்க போறாங்க'' என்றாள்.

''அப்போ பார்க்கலைனா பரவாயில்லையா'' என்று கேட்க...



''அதை அப்போ தான் சொல்ல முடியும்!'' என்றாள்.

''சரி! நீ இப்போ பண்ணின தப்பை சொல்லு!'' என்றான்.

''ப்ச்! சும்மா தெரிஞ்சிட்டே கேட்காத'' என்றாள்.

''அந்த தப்பை கேட்டால், எனக்கு சிரிப்பு வருது. கொஞ்சம் அந்த ஜோக் கேட்கறேன், சொல்லு'' என்றான்.

சொல்லாமல் விடமாட்டான் என்றுணர்ந்து, ''அது நான் ஸ்ரீதர் பார்த்து ஐ லவ் யூ சொன்னேன்'' என்றாள் எங்கோ பார்த்து கொண்டு.

''என்னை பார்த்து சொல்லு வரா'' என்றான்.

பார்க்கவேயில்லை.

''எத்தனை தடவை சொன்னே?''

''ஒரு தடவை'' என்றாள், அழுகை எட்டி பார்க்க...

''இது எப்படி இருக்கு தெரியுமா, யாராவது தேங்க்ஸ் சொன்னா பதிலுக்கு சில சமயம் அவங்க நிறைய தேங்க்ஸ் சொல்லறாங்களே... நம்ம ஒரு தடவையாவது சொல்லுவோம்னு சொல்லுவோம்.

''அப்படியும் சொல்லலாம், இல்லைன்னா சின்ன குழந்தைங்க சேம் பிஞ்ச் சொல்ற மாதிரி சொல்லலாம், என்று சத்தம் போட்டு சிரிக்க,

அவன் கைகள் மட்டும் அவளை தண்ணீருக்குள் வேறு உலகத்திற்கு அழைத்து சென்று கொண்டிருந்தது.

''ஆனா அதனால எவ்வளவு சேதாரமாயிடுச்சு'' என்று அவள் கண்களில் அவன் தந்த மயக்கத்தையும் மீறி கண்ணீர் பெருக...

''அது நடக்கணும்றது விதி! அது உன் மூலமா நடந்தது! வா!'' என்றவன்,

அவளை அழைத்து தண்ணீருக்கு வெளியே வந்தான்.

அன்று அவள் புடவை உடுத்தியிருந்தாள். உடைகள் ஈரம் ஆனதால் அவள் நடக்க முடியாமல் தடுமாற... அவளை தூக்கி காருக்கு வந்தான்.

கீழே விட மனசில்லாமல் பார்த்திருக்க... ''யாராவது பார்க்க போறாங்க, ப்ளீஸ் விடுங்க'' என்றாள் மறுபடியும்.

அவளை அமர வைத்து, காரை எடுக்க... ஒரு பேச்சில்லா மௌனம் இருவர் இடையே நீடித்தது.

அதுவே வீடுவரை தொடர்ந்தது. வீடு சேர்ந்த பின்பும் தொடர்ந்தது. யாரும் ஹாலில் இல்லாதது சௌகர்யமாக, தண்ணீரில் அமிழ்ந்ததால் நிறைய பசி தெரிந்தது. அவள் சாப்பிடாததால் வேகமாக தட்டில் எடுத்து கொண்டு மேலே போனாள்.

அதற்குள் அவனுக்கு தொலைபேசி அழைப்பு வர பேச நின்றான்.

யாரையும் பார்க்க முடியும் என்று அவளுக்கு தோன்றவில்ல. வேகமாக சென்றவள், உண்டு முடித்து... அதை விட வேகமாக உறங்குவது போல் கண்மூடி கொண்டாள்.

வந்து பார்த்தவனுக்கு அடக்க முடியாமல் சிரிப்பு பீறிட்டது. அவன் சிரிப்பு சத்தம் நன்றாக கேட்டது. இருந்தாலும் கண் திறக்காமல், 'லூசு சிரிக்குது பாரு, நான் தூங்குறதை பார்த்தா சிரிப்பாவா இருக்கு' என்று அவனை மனதிற்குள் செல்லமாக வைதாள்.

பின்பு பத்து நிமிடம் போல் கழிந்த பிறகும், ஒரு சத்தமும் இல்லாததால் மெதுவாக கண்களை திறந்து பார்க்க...



அவள் முகத்துக்கு வெகு அருகில் பார்த்து கொண்டிருந்தான்.

''என்ன இது?'' என்று சற்று அதிர்ந்து அவள் எழுந்து கொள்ள,

''ஹப்பா! கண் திறந்திட்டியா, உனக்கு சத்தம் கேட்காம எவ்வளவு நேரம் மூச்சு அடக்கி வைக்கிறது.''

முகம் கொள்ளா சிரிப்பு அவனுக்கு.

''எதுக்கு இப்படி அவசரமா எல்லா வேலையையும் முடிச்சிட்டு வந்து தூங்கறே... ஆனா ஒரு வேலையை நீ பாக்கி வச்சிட்ட, நான் செய்யறதுக்கா...'' என்றான்.

''நான் ஒண்ணும் எதுவும் பாக்கி வைக்கலை, ஏதாவது இருந்தா நீயே செஞ்சிக்கோ'' என்றாள் தெனாவெட்டாக வரப்போவதை அறியாதவளாக...

''பேச்சு மாற மாட்டியே'' என்றான்.

''வரா மாற மாட்டா'' என்றாள் மறுபடியும் தெனாவெட்டாக.

''நீங்க உங்க ஈரமான டிரெஸ் இன்னும் மாற்றலையே பாப்பா'' என்றான் விஷமமான குரலில்.

அப்போதுதான் தான் ஈரமான உடையுடன் இருப்பதை உணர்ந்தவள், 'அய்யோ! இப்படியா சொதப்புவ வரா!' என்று தன்னை தானே கடிந்தவள், ''இதெல்லாம் செல்லாது! செல்லாது!'' என்று வேகமாக எழுந்து குளியலறை நோக்கி ஓட...

ஒரே கையால் அவளை பிடித்து அப்படியே தூக்கியவன், ''எல்லாம் செல்லும்... நான் பேச்சு மாற மாட்டேன்! நான் தான் மாற்றுவேன்!'' என்றவன், பிறகு அவனும் பேசவில்லை, அவளையும் பேசவிடவில்லை.

காலையில் ரமணன் விழித்ததே அறிவழகனின் தொலை பேசி அழைப்பிற்கு தான்.

''அண்ணா!'' என்றவன், ''நீங்க சொன்னவங்க எல்லாரும் இதுல சம்பந்தப்பட்டு இருக்காங்க! ஆனா அவங்களை விடவும் இன்னுமிரண்டு பேர் இருக்காங்க!'' என்று அவன் கைது செய்ய திட்டமிட்டு இருப்பவர்களையும் கூறினான்.

''சரி அறிவு! நான் பார்த்துக்கறேன்'' என்றான்.

அவனிடம் பேசி முடித்த பிறகு, 'என்னடா இது? அறிவழகன் வேலையை முடிச்சிட்டான். இதே வேலையை தானே நான் எழில் வேந்தன் கிட்ட கொடுத்திருந்தேன்.'

'இன்னும் அவன் எதுவும் ரிப்போர்ட் சொல்லலையே' என்று அவன் நினைத்து கொண்டிருக்கும் போதே எழில் அழைத்தான்.

''சார், நீங்க சொன்னதை விசாரிச்சிட்டேன். அவங்க நாலு பேரும் இன்வால்வ் ஆகி இருக்காங்க. நீங்க சொன்ன இன்னும் ரெண்டு பேரும் தான் இதுக்கு சென்னைல முக்கிய ஆளுங்க'' என்றவனிடம்...

''அப்போ இன்னைக்கு காலையில ரெண்டு பேரையும் அரெஸ்ட் பண்ற மாதிரி பார்த்துக்கறேன்.''

''முதல்ல நான் பண்ணிடறன், ஒரு ரெண்டு மூணு நாள்ல உங்க கிட்ட ஹாண்ட் ஓவர் பண்ணறேன்'' என்று எழில் வேந்தனிடம் கூறியபடியே வேகமாக படுக்கையை விட்டு எழுந்தவன், மின்னல் வேகத்தில் குளித்து யூனிபார்ம் அணிந்து வந்தவன், மணியை பார்க்க அது காலை ஆறரை என்றது.



'என்னடா இது? அவனுங்க தான் ஒரு ஆர்வக்கோளாருல சீக்கிரம் கூப்பிட்டா... நானும் நேரம் பார்க்கலையே. சரி ஆரம்பிச்சிட்டோம் முடிச்சிடுவோம்' என்று நினைத்தவாறு வேலையை பார்க்க கிளம்பினான்.

யாரும் எழுந்திருக்கவில்லை. அப்போது தான் ரோஹித்தை ஸ்கூலிற்காக கல்பனா எழுப்பிக் கொண்டிருந்த சத்தம் கேட்டது.

'வராவை எழுப்பலாமா' என்று நினைத்தவன், அவளை தான் தூங்க விட்டதே சில மணி நேரங்களுக்கு முன் தான் என்று உரைக்க... முகத்தில் அவனையறியாமல் ஒரு ரகசிய புன்னகை மலர்ந்தது.

சமையல் ஆளை தேடினால், அவனை காணவில்லை. காய் கறி வாங்க சென்றிருப்பான். சாப்பிட்டு சென்றால் தேவலாம் போல இவனுக்கு தோன்றியது.

அப்பொழுது தான் ராம் நடைபயிற்சி முடித்து வெளியே இருந்து வந்தவன், இவன் அவசரத்தை பார்த்து, ''இருடா'' என்று அவனே சென்று காபி கலந்து எடுத்து வந்தான்.

ராமிற்கு தெரியும் வீட்டிலிருந்து செல்லும் போதே வெளியில் சாப்பிடுவதை ரமணன் விரும்பமாட்டான் என்று.

இதை ''சாப்பிடு'' என்றவன், அவன் காபி குடிக்கும் முன்னரே தோசை சுட்டு... அதற்கு தொட்டுக் கொள்ளவும் ஏதோ சைட் டிஷ் வைத்து கொடுத்தான்.

''அண்ணா என்ன இது? நான் வெளில பார்த்துக்க மாட்டேனா'' என்று ரமணன் சொன்னதை சிறிது கூட கவனிக்காமல்... அவன் சாப்பிட்ட பிறகே அவனை அனுமதித்தான்.

ரமணன் கிளம்பும் நேரம் அவசரமாக வரா வர... ''நான் போகணும் வரா, ஒரு முக்கியமான வேலை'' என்று அவளிடம் அவள் முகம் பார்க்காமல் சொல்லி சென்றான். மற்றவர்கள் முன் பார்க்கும் கூச்சம்.

அது வராவிற்கு புன்னகையை கொடுக்க... அவள் முகத்திலும் ஒரு வெட்க புன்னகை மலர்ந்தது.

யாரும் இதை உணரவில்லை என்றாலும்... கல்பனா வின் பார்வைக்கு தப்பவில்லை.

''சாப்பிட்டுட்டாங்களா... தேங்க்ஸ் அண்ணா'' என்று கூறிய வராவிடம்,

''போங்க பாப்பா, நீங்க எனக்கு தேங்க்ஸ் சொல்றீங் களா?'' என்று அவள் அண்ணன் சிரிக்க...

''ஓஹ்! நீ அவருக்கு தேங்க்ஸ் சொல்ற அளவுக்கு பெரிய ஆளாகிட்டியா, இல்லை ரமணன் இன்னும் உனக்கு ஸ்பெஷல் ஆகிட்டானா'' என்று கல்பனா அவளிடம் மெதுவாக அவளுக்கு மட்டும் கேட்குமாறு கேட்க,

''அவங்க எனக்கு ஸ்பெஷல் ஆனதால, நான் பெரியா ளாயிட்டேன் அண்ணி'' என்றாள் ஒரு புன்னகையுடன்.

# 28

## அன்றைய நினைவுகள்

''கல்பனா'' என்று அவள் அருகில் சென்று... அவள் கையை பிடித்தவன், ''அமைதியாயிரு கத்தாதே'' என்று சொன்னான்.



வேறு வார்த்தைகள் என்ன சொல்வது என்றே தெரிய வில்லை. இவளுக்கு ஏதாவது ஆகிவிட்டால்... என் குழந்தை இறந்தது என்றும் தெரியவில்லை.

அங்கே வரா எப்படி இருக்கிறாள் என்றும் தெரிய வில்லை.

ஆண்மகனான அவனின் நிலைமை அவனுக்கே பிடித்தமானதாக இல்லை. தன்னை ஒருவர் கடத்தி சென்றது... தன் குழந்தை இறந்தது... கல்பனா சீரியஸ்... வரா சீரியஸ்...

ராம் பிரசாத்திற்கு அடக்கமாட்டாமல் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது. கல்பனாவின் கதறல் குறைந்தபாடாக இல்லை.

வெளியே வந்தவன், ரோஹித்தை வாங்கி கொண்டு உள்ளே சென்றான். ''கல்பனா பாரு! நான் வந்துட்டேன். நீ அழுதா ரோஹித் அழறான் பாரு! அழாதே!'' என்று அதட்டினான்.

இரண்டு மூன்று முறை அதட்டிய பிறகு... அது சற்று வேலை செய்ய... அவள் கதறல் நின்று, தேம்பலாக மாறியது.

சற்று நேரம் அங்கேயே நிற்க... ''அம்மா என்னாச்ச பா, குட்டி பாப்பா பொறந்திடிச்சா'' என்று தன் மகனின் கேள்விக்கு பதிலளிக்க தெரியாமல்... ''பார்த்துக்கோங்க'' என்று தன் மாமியாரிடம் கல்பனாவை காட்டி விட்டு வெளியே வந்தான்.

வந்தவன்... ''குழந்தை'' என்று ராமநாதனை கேட்க...

''வா'' என்று அழைத்து கொண்டு போக, ''இருங்க'' என்ற சுந்தரவல்லி ரோஹித்தை வாங்கி ராஜேஸ்வரி யிடம் கொடுத்தார்.

சென்றவர்கள் பார்த்தது... வெள்ளை துணியில் சுற்றி வைக்கப்பட்டிருந்த பூ குவியல் போன்ற ஒரு பெண் மகவு. பார்த்திருந்த ராம் அடக்கமாட்டாமல் அழத் துவங்கினான்.

ராமநாதன் யாரையும் சிவசங்கரனையும் ராம் பிரசாத்தையும் அணுக விடவில்லை.

அவரே முன்னின்று எல்லாம் செய்தார். ராமின் மாமனாரின் பண்ணையிலேயே ஒரு இடத்தை தேர்வு செய்தவர், எரிக்கும் முறை கொண்டிருந்த சிவங்கரனின் குடும்ப வழக்கத்தை விடுத்து புதைக்கலாம் என்றார்.

குழந்தையின் அன்னையின் மடியில் வைத்து தர வேண்டும் என்ற சாங்கியங்களையெல்லாம் ஒதுக்கி தள்ளினார்.

துக்க வீட்டில் எப்பொழுதும் ஆளுக்கொரு முறையை சொல்லி வைப்பர், எதையும் யாரையும் சொல்ல விட வில்லை.

ராமிடம் மட்டும் இன்னும் யாரும் கல்பனாவிடம் குழந்தையை காட்டவில்லை. எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை. இப்பொழுது தான் மயக்கமான உறக்கத்தை தழுவி இருக்கிறாள். அவள் விழித்த பிறகு அவளிடம் ஒரு முறை குழந்தையை காட்டி பிறகு அதற்கு செய்ய வேண்டியதை செய்யலாம் என்று விட்டார்.

ஒன்றிரண்டு பேர் வரமஹாலக்ஷ்மியை கேட்டதற்கு, ''அவளுக்கு காலில் அடிபட்டிருக்கிறது... ஹாஸ்பிடலில் இருப்பதால் அழைத்து வரவில்லை'' என்றார்.

ராஜேஸ்வரியிடம் கூட அதையே தான் கூறினர்.



வரமஹாலக்ஷ்மி தானாக தான் ஸ்ரீதரோடு சென்றாள், என்றே அதுவரை சிவசங்கரன், ராமநாதன், ராம் பிரசாத், என்று அனைவரும் நினைத்திருந்தனர்.

ஆனால் அந்த சூழலிலும் அதை பற்றி மூவரும் ஒரு வார்த்தை பேசினாரில்லை, தங்களுக்குள்ளும் பேச வில்லை, தாங்கள் மனைவியரிடமும் பேசவில்லை.

கல்பனா கண் விழிப்பதற்காக காத்திருந்த போது, வராவின் நிலையை பற்றி அந்த நிலையிலும் ராம் பிரசாத், ரமணனை தொலைபேசி அழைத்து கேட்டான்.

வெங்கட ரமணன் சாமானியத்தில் சொல்ல வில்லை. ''அண்ணா நீங்க அங்க பாருங்க'' என்றான் குழந்தையை பற்றி கேள்வி பட்டிருந்தவன்.

''இனி அவ திரும்ப முடியாத இடத்துக்கு போயிட்டா. நீ வராவை பற்றி சொல்லு'' என்று அவன் கட்டாயப் படுத்திய பிறகே,

''வராவிற்கு வலது பக்கம் இடுப்பு எலும்பில் சிறு மயிரிழை எலும்பு முறிவு, வலது தோளில் மூட்டு பிசகி இருக்கிறது.''

''இடது பக்கம் முட்டியில் எலும்பு முறிவு, தலையில் அடிபட்டது தையல் போட்டிருக்கிறார்கள்'' என்று அவன் ஒரு பெரிய லிஸ்ட் கொடுத்தான்.

கொடுத்தவன்... ''நான் இருக்கிறேன் அவளை பார்த்துக் கறேன். இப்போ உங்க சப்போர்ட் கல்பனாவுக்கு ரொம்ப தேவை. அவசரப்பட்டு சென்னை வந்துடாதீங்க. நான் இங்கே தான் நீங்க வர்ற வரைக்கும் இருப்பேன், பார்த் துக்கறேன்'' என்றான்.

ராஜேஸ்வரியிடம் வராவிற்கு அக்சிடென்ட்... ராமை யாரோ அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக கடத்தி விட்டார்கள்... என்றே சொல்ல பட்டது.

ராஜேஸ்வரி தன் மகளிடம் செல்ல பிரியப்பட்ட போது கூட, ''இந்த மாதிரி நடந்திருக்கும் போது... நீ போகாதே! என் மகன் பார்த்துக் கொள்வான்'' என்றார் சுந்தரவல்லி...

''நான் காரியம் முடிந்ததும் செல்கிறேன், மகாலட்சுமியை பார்த்துக்கொள்கிறேன்'' என்று சமாதானப்படுத்தி ராஜேஸ்வரியை அங்கே நிறுத்தி வைத்தனர்.

மறுபடியும் கல்பனாவிடம் குழந்தையை காட்டி, அவளின் கதறலை கேட்டு... கேட்டுக் கொண்டிருந்தவர்களின் கண்களில் எல்லாம் கண்ணீரை வரவழைத்தாள்.

ராம் கூட ''குழந்தையை காட்ட வேண்டாம்'' என்ற போது... ராமநாதன் தான் பிடிவாதமாக... ''காட்டுப்பா சரியோ தப்போ அவ பார்த்துடட்டும். அவளுக்கு இது நிறைய வலியையும் வேதனையையும் கொடுக்கும் தான்.

''ஆனா பார்க்காம விட்டுட்டா, இன்னுமே அந்த வலி அதிகமா இருக்கும். நீயே போய் காட்டு'' என்று சொல்லி அனுப்பினார்.

ஏதோ நடக்கிறது என்றுணர்ந்த ராம், கல்பனாவின், தலைமகன் ரோஹித் ''குட்டி பாப்பா எங்கே'' என்று தன்னை வைத்திருந்த பாட்டியிடம் மறுபடியும் மறுபடியும் கேட்க...

''அவ சாமியாயிட்டா செல்லம்'' என்று அவர் பாட்டி பதிலளித்ததை கேட்டிருந்த அனைவரின் கண்களும் குளமாகின.



அந்த சிறு பெண் மகவின் அன்னையும் தந்தையும் மீண்டும் மீண்டும் கதறிய பிறகு... கதற வைத்த பிறகும்...

அவள் வளர்ந்து... ஆளாகி... வாழ்ந்து... கடைசியாக போகும் இடத்திற்கு... பிறந்ததும் நேராக சென்றாள்.



# 29

## இன்றைய நிகழ்வுகள்

அன்றைய தினம் மிகவும் பரபரப்பான தினமான வெங்கட ரமணனுக்கு அமைந்தது. இரு கட்சிகளை சேர்ந்த மிக முக்கியமான புள்ளிகளை ஒரே குற்றத்திற்காக கைது செய்தது, அதுவும் போதை மருந்தோடு சம்பந்தப்படுத்தி நகரத்தினுள் சிறு சலசலப்பை ஏற்படுத்தியது.

அதற்காக கலவரங்கள் எதுவும் நடந்து விடாதபடி பார்த்துக் கொள்வது அவசியமாகி போனதால், அன்றைய நாள் பரபரப்பாகவே இருந்தது.

யாரும் எதிர் பார்க்கவில்லை, இவ்வளவு எளிதாக கைது படலம் நடக்கும் என்று.

அவர்களை கைது செய்து கொண்டிருக்கும் போதே, நகரத்தில் உள்ள எல்லா பள்ளிகளுக்கு பக்கத்தில் இருக்கும் பெட்டி கடைகள், சிறு கடைகள், ஐஸ்கிரீம் கடைகள் என்று அத்தனையும் சோதனையிடப்பட்டது.

யாராவது இந்த டிரக்ஸ் விற்பனையோடு தொடர்பில் இருந்தாலும்... முன்தினம் நடந்த கைது படலத்திலேயே உஷாராகி இருப்பர் என்று அறிந்தது தான்.

இருந்தாலும் இந்த சோதனை ஒரு பயத்தை கொடுக்கும் என்பதாலேயே செய்தான்.

அது மட்டுமின்றி எல்லா ஸ்கூல் வாசலிலும், ஸ்கூல் ஆரம்பிக்கும் சமயமும், விடும் சமயமும் காவலர்கள் அங்கே தினம் இருக்குமாறு ஒரு புதிய ஆணை பிறப்பித்தான்.

அவனுக்கு தெரியும் ஒரு நாளில் முடியும் விஷயமுமில்லை இது என்று, மாதங்களாகும், சில சமயம் வருடங்களாகும்.

சில சமயம் தோல்வியை கூட தழுவலாம், ஏனென்றால் ரமணன் கருத்து... தங்களை விட குற்றவாளிகள் புத்திசாலிகள் என்பதே.

சில சமயம் யோசிப்பான்... இப்படி மூளையை கசக்கி, பிழிந்து குற்றம் புரிவதற்கு யோசிக்கும் இவர்கள், ஏன் அதை ஆக்கப்பூர்வமான செயலாக மாற்றக்கூடாது.

அவனுக்கு தெரிந்தவரை இதற்கு கிடைக்கும் பதில் ஈசி மணி, சுலபமாக கிடைக்கும் பணம். அது கிடைத்ததால் குற்றங்கள் நிகழலாம் அல்லது கிடைப்பதற்காக குற்றங்கள் நிகழ்த்தப்படலாம்.

இன்னும் வேறு சிலதை யோசிக்கும் போதே நெஞ்சே கனத்து விடும்.

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்துவிட்டால்...

பின் நிகழ்பவைகளை முன் சொன்னானோ நம் பாரதி...

அதுவும் சமீப காலமாக நிகழும் பாலியல் வன்முறைகள்... அவர்களுக்கு தூக்கு தண்டனை தரக்கூடாது. அது



மிகவும் சிறியது. அது அவர்களுக்கு மரணத்தை உடனே கொடுத்து விடும்.

அவர்கள் வாழும் காலம் முழுமைக்கும் சித்ரவதை செய்ய வேண்டும். அதை கேள்வி படும் யாரும் இனி அந்த தவறை செய்ய யோசிக்கக் கூட பயப்படும் அளவுக்கு தண்டனை இருக்க வேண்டும்.

''மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டுமம்மா

என்பது

''மங்கையராய் பிறப்பதற்கே மாது அவம் செய்திடல் வேண்டுமம்மா

என்று திரிந்து விட்டதோ...

அந்தோ அந்த முண்டாசு கவிஞன், இதை காணும் முன்னே மரணித்து விட்டான். இல்லையென்றால் மரணம் அவனை தழுவும்முன்னே அவனை அதை தழுவி இருப்பான்.

யோசனை ஓடிக்கொண்டு இருக்கும் பொழுதே வீடு வந்து விட...

வீடு வந்த போது சுந்தரவல்லியும் ராமநாதனும் வந்திருந்தனர்.

வயோதிகத்தின் அறிகுறிகள் நன்கு ராமநாதனிடம் வந்திருந்தன. நடையில் நிறைய தடுமாற்றம். மூப்பு அவரை தன் வசப்படுத்தி கொண்டிருந்தது. அவரை அந்த நிலையில் ரமணனால் பார்க்க முடியவில்லை. அவரை அவன் பார்த்து ஆறு மாதங்கள் ஆகியிருக்கும்.

அப்பாவும் மகனும் அருகில் இல்லாவிட்டாலும் இருவரின் பாசமும் அலாதியானது. அதனால் தான் இவ்வளவு தைரியமாக எந்த விஷயத்திலும் வெங்கட ரமணனால் செயல் பட முடிந்தது.

தான் என்ன செய்தாலும் தன் தந்தை தன்னுடன் இருப்பார் என்ற எண்ணம் அவனை தைரியமாக செயல் பட வைக்கும்.

இத்தனை நேரமாக இதை செய்ய வேண்டும், அதை செய்ய வேண்டும், என்று குற்றத்தையும் குற்றவாளி களையும் பற்றி நினைத்து கொண்டு வந்தவன்... தன் தந்தையை பார்த்ததும் அனைத்தையும மறந்தான்.

''அப்பா, நான் உங்களோட வந்துடட்டுமா'' என்றான்.

''என்ன ரமணா இது, சின்ன பையன் மாதிரி, சின்ன பையன்லயே, நீ இப்படி சொன்னது இல்லையே'' என்றார்.

''நான் உங்களோட வந்துடறேன்பா'' என்றான் மறு படியும்.

''அது... உங்களுக்கு நான் இப்போ பக்கத்துல இருக் கறது, அவசியமில்லையாப்பா'' என்றான்.

''தேவை தான்... ஆனால் என்னைவிட நீ இங்க இருந்தா மற்றவங்களுக்கு இன்னும் அதிகமா பயன்படுவ. எனக்கு அதுல ரொம்ப பெருமை ரமணா. அதை விட ரொம்ப கர்வம்.'' என்று சொல்லி தன்னுடைய வழக்க மான சிரிப்பை உதிர்க்க...

நிறைய தைரியசாலியாகி ரமணனையே மிரட்ட ஆரம்பித்து விட்ட போதும்... அந்த சிரிப்பை கண்டு வரா பயந்து, ரமணன் பின்னே ஒண்டினாள்.

அதை பார்த்த சுந்தரவல்லி, ''உங்களுக்கு எத்தனை தடவை சொல்றது, மகாலக்ஷ்மி முன்னால் இப்படி சிரிக்காதீங்கன்னு'' என்று சொல்லியவர், தான் அனுபவ



சாலி என்று நிரூபித்தார்... ''ஆனா பாருங்க, எப்போ பயந்தாலும் அவங்க அம்மா பின்னால, இல்லைன்னா என் பின்னால தான் ஒளிஞ்சிக்குவா. இப்போ அவ புருஷன் பின்னாடி ஒளியறா'' என்று கிண்டல் செய்ய,

''போங்க வள்ளிமா நீங்க'' என்று சொல்லி அந்த இடத்தை விட்டு வழக்கம் போல ஓடியே போனாள்.

புன்னகையோடு பார்த்த ரமணன், ''இருங்கம்மா நான் டிரெஸ் மாத்திட்டு, அவளை இழுத்துட்டு வர்றேன்'' என்று சொல்லியபடி சென்றான்.

அதற்குள் ஸ்ருதி தன்னை தூக்கி வைத்திருந்த வள் ளிம்மாவிடம் ஏதோ கேட்க... என்னவென்று புரியாமல் ராம் பிரசாத் பார்த்திருக்க, ''அந்த தாத்தா மீசை எப்படி ஒட்டியிருக்காருன்னு கேட்கிறாள்'' என்றார் சுந்தரவல்லி.

''என்ன இது குட்டிம்மா?'' என்று ராம் ஸ்ருதியை கடிந்து கொள்ள, அவசரமாக கல்பனா உதவிக்கு வந்தாள்.

''அது ஒண்ணுமில்லைங்க தாத்தா'' என்று ராமநாதனிடம் கூறியவள்,

''இந்த தடவை மாறுவேடப் போட்டிக்கு அவங்க அண்ணனுக்கு நான் பாரதியார் வேஷம் போட்டு மீசை ஒட்டினேன். அதுவும் உங்க மீசை மாதிரி பெரிய மீசை. அதை பார்த்து கேட்கிறாள்'' என்று கூறியவுடன் மறுபடி யும் ராமநாதன் பெரிதாக சிரிக்க ஆரம்பித்தார்.

இந்த சத்தத்தை கேட்ட... மேலே இருந்த வரமஹா லக்ஷ்மி, அங்கே வந்த ரமணன் பின் மறுபடியும் ஒண்டினாள்.

அப்படியே அவளை பிடித்து அவளை முன்புறம் இழுத்து அணைத்தவன், ''நம்ம அப்பாவோட போயிட லாமா'' என்றான்.

''போகலாமே'' என்றவள் உடனேயே... ''எப்போ போகலாம்'' என...

''உடனே முடியாது வரா, இன்னும் ரெண்டு மூணு வருஷம் போகணும். இப்போ தானே இங்கே வந்திருக் கேன்'' என்றான்.

''அப்போ அதுவரைக்கும் அவங்களை இங்கே இருக்க சொல்லலாம்'' என்றாள்.

''வேண்டாம் வரா! இனிமே அது அப்பாவினாலோ அம்மாவினாலே முடியாது. சீக்கிரம் நம்ம அங்க போக யோசிக்கிறேன்'' என்றான்.

''ம்''... ''சரி.'' என்றவள் அசையாமல் நிற்க..

''இன்னும் எவ்வளவு நேரம் இப்படி நிற்ப... என் கால் வலிக்குது'' என்றான்.

''நான் நின்னா உன்கால் ஏன் வலிக்குது'' என்றவ ளிடம்...

''நீ என் கால் மேல நின்று கழுத்தை பிடிச்சி தொங் கிட்டு இருக்க'' என்றான் சிரிப்போடு.

அப்பொழுதுதான் தான் அவன் மேல் நின்று தொங் கிக்கொண்டு இருப்பதை உணர்ந்தவள் முகம் சிவந்து விலக போக...

அவளை விடாமல் பிடித்தவன் சிரித்தான்.

''ப்ளீஸ் விடுங்க'' என்று அவள் வழக்கம் போல் டையலாக் பேச...



''உன் வாயை முதலில் மூடணும்'' என்றவன், அந்த வேலையை அவன் வாயால் செய்ய... இருவருமே விலகாமலேயே நின்றனர்.

''இரு அப்பாவோட சிரிப்புக்கு பயந்து வந்து... என் னென்ன செஞ்சிட்டு இருக்கோம்'' என்று சிரித்தவன்

''இரு அப்பா முன்னாடி உட்கார வைத்து... நாள் ஃபுல்லா அப்பாவை சிரிக்க சொல்றேன்'' என்று ரமணன் சிரித்தான்.

''இந்த சிரிப்புக்கு தாத்தா சிரிப்பே பரவாயில்லை'' என்று சொல்லி மறுபடியும் கீழே போனாள்.

'இவ என்னடா நான் மேல வந்தா கீழ போறா, கீழ வந்தா மேலே போறா, கண்ணாமூச்சி விளையாடறா' என்று நினைத்தவாறே கீழே சென்ற போது அங்கே இன்னுமே வட்ட மேஜை மாநாடு நடந்து கொண்டிருந்தது.

குழந்தைகள் வரா அவர்களுக்கு சொல்லிக்கொடுத் ததை ஒவ்வொன்றாக எடுத்து விட்டு கொண்டிருந்தனர்.

அவள் ''ஷ், சொல்லாத ம்கும்'' என்று செய்த செய் கைகள் எல்லாம் வேலைக்கே ஆகவில்லை. அவனுக்கு புரிந்தது அப்பா பெரிய டீலிங்காக குழந்தைகளிடத்தில் போட்டிருப்பார் என்று.

''அப்புறம் என்ன சொல்வாங்க உங்க அத்தை'' என்று அவர் கேட்க...

''இந்த ராம் க்ரூப்ஸ் ரொம்ப மோசம் சொல்வாங்க. ஒரே ரூல்ஸ் ஆ போட்டு தள்ளு வாங்கலாம்'' என்று ராகம் பிடித்தாள் ஸ்ருதி.

''அய்யய்யோ!'' என்று இருந்தது வராவிற்கு. ஓடிப் போய் மறுபடியும் யார் பின்னாடி ஒளிவது என்று

தெரியாமல், ரமணன் புறம் சென்ற கால்களை வலுக் கட்டாயமாக மாற்றி இந்த முறை தன் அண்ணன் பின் னாடி ஒளிந்தாள்.

''யார் வரா அது? ராம் க்ரூப்ஸ்'' என்று ரமணன் கேட்க...

''அது மட்டும் ஏன் என்கிட்ட கேட்கறீங்க? அந்த குட்டி பிசாசு சொல்லுவா'' என்றாள்.

''ம்கும்... அத்தைக்கு கோபம் வந்துடுச்சு'' என்று உதடு பிதுங்கி ஸ்ருதி பார்க்க, மனம் கேளாமல் உட னேயே வந்து அவளை தூக்கியவள்.

''அத்தை தான் பயப்படுவேன். குட்டிம்மா யாருக்கும் பயப்படக்கூடாது. சொல்லுங்க... அத்தையை யாராவது திட்டினா என்ன பண்ணுவீங்க'' என்றாள் வரமஹாலக்ஷ்மி.

''ம், டிஷ்யும்'' என்றாள் ஸ்ருதி.

''சரி சொல்லுங்க, குட்டிம்மா'' என்று ரமணன் கேட்க...

''ராம் பிரசாத்...

ரமணன்...

ராமநாதன்...'' என்று தன் மழலை குரலில் மிளிர்த்தாள்.

இப்போது மூவரும் திரும்பி வராவை பார்க்க... அதிலும் ராமநாதன் மறுபடியும் பெருங் குரலெடுத்து சிரித்தார்.

''நம்ம பொண்ணு சரியாத்தான் சொல்லியிருக்கா'' என்று சொல்லியபடியே.

''இன்னும் என்ன என்ன வரா சொல்லியிருக்க?'' என்று ரமணன் கேட்க,



''இது மட்டும் தான்!'' என்றவள் ரோஹித்திடமும் ஸ்ருதியிடமும்...

''இது மட்டும் தானே!'' என்று சொன்னதே, ''ஆமாம்'' என்று சொல்லுங்கள் என்ற குறிப்போடு இருந்தது.

அது மற்றவர்களுக்கும் புரிய... இந்த முறை சிறு வயது வழக்கமாக தன் தாயின் பின் ஒன்டினாள்.

# 30

## அன்றைய நினைவுகள்

இங்கே காரியம் முடிந்ததுமே, வரமஹாலக்ஷ்மியை பார்த்துகொள்வதற்காக சுந்தரவல்லி சென்னை சென்றார்.

உயிருக்கு ஆபத்தில்லை என்றாலும்... மூன்று இடத்தில் எழும்பு முறிவு இருந்ததினால்... அவளுக்கு தெரிந்த தெல்லாம் வலி வலி வலி மட்டுமே.

உடல் வலி... அதையும் மீறி மனதில் வலி.

தன்னால் இப்படி ஆகி விட்டதே என்று...

வெங்கட ரமணனை பார்த்தவுடனே, ''எப்போ வந்தே என்று கேட்டு அந்த ஆக்சிடென்ட் இடத்தை விட்டு வரும் முன் ஸ்ரீதரை காப்பாற்ற சொல்லி கேட்டது வரை மட்டுமே அவள் அவனுடன் பேசியது.

அவன் காப்பாற்றி இருப்பான் என்ற நம்பிக்கை இருந்ததால் பிறகு அவனை பற்றி கேட்கவில்லை.

ரமணனும் வராவை பார்த்த உடனே கூறிய முதல் வார்த்தை, ''ஸ்ரீதர் உயிரோடு இருக்கிறான்'' என்பதே.

இடுப்பு எலும்பில் விரிசல் இருந்ததால் அவள் முழுவதும் படுக்கையில்... ஒரு தோளில அடி, மற்றொரு முட்டியில் அடி, அந்த இரண்டு இடத்திலும் எலும்பு முறிவு.

டாக்டர்கள் அவனுக்கு, ''சர்ஜரியா அல்லது மாவுக் கட்டா'' என்று அபிப்ராயம் கேட்ட போது, ''சர்ஜரி'' என்று அவனே அபிப்ராயம் கூறிவிட்டான்.

யாரிடமும் கேட்க கூட இல்லை. தன் தந்தையிடம் கூட இல்லை. அவர்கள் அடுத்த நாள் காலையில் தான் சர்ஜரி போஸ்ட் செய்து இருந்தனர்.

ஒன்றை ஆளாய் அந்த ஐ.ஸீ.யு வாசலில் ஒரு பொட்டு தூக்கம் இல்லாமல் அமர்ந்திருந்தான்.

ஏனோ தன்னால் தான் இது. அவள் என்ன பேசினாலும் தான் அவளை விட்டிருக்கக் கூடாது என்று மனம் கிடந்து அடித்துக்கொள்ள... அவன் அவளை காப்பாற்ற நாடியது இறைவனின் சன்னிதியை.

அரை மணிக்கொரு முறை உள்ளே செல்வான், சில சமயம் மட்டுமே விழித்திருப்பாள். பல நேரங்களில் மயக்கம் தான். விழித்திருக்கும் சமயம் அவள் கண்களில் தெரியும வலி இவனை ஆறுதல் வார்த்தை கூட பேச விடாது.

ஆனால் அரை மணிக்கொரு முறை சென்று பார்த்து வருவான். காலை அவளை ஆபரேசன் தியேட்டர் கொண்டு செல்லும் போதே சுந்தரவல்லி வந்து விட்டார்.

இரண்டு இடத்தில சர்ஜரி என்பதால் பத்து மணிக்கு அவளை உள்ளே கொண்டு சென்றவர்கள் ஒரு மணிக்கு தான் வெளியே கொண்டு வந்தனர்.



அதற்குள் சிவசங்கரன், ராஜேஸ்வரி, ராமநாதன், என்று எல்லாரும் வந்திருந்தனர்.

சுந்தரவல்லி விபத்தை பற்றி ஏதோ விவரம் தெரிந்து கொள்ள ரமணனிடம் கேள்வி கேட்க... அவன் பார்த்த பார்வையே அவரை வாயை மூடிக்கொள்ள வைத்தது.

சுந்தரவல்லிக்கே அந்த பார்வை என்றால், பின்பு யாரும் ஒரு வார்த்தை கேட்கவில்லை.

வரா உடலளவில் தேறுவதற்கு மூன்று மாதங்கள் ஆனது மனதளவில்??

கிட்ட தட்ட ஒரு மாதம் அங்கேயே தான் இருந்தான் ரமணன். நடுவில் வந்து வரமஹாலக்ஷ்மியை பார்த்த போதும் ராம் சென்னை நிரந்தரமாக வர ஒரு மாதம் ஆனது.

அவன் அங்கே வந்த பிறகே ரமணன் பணியை பார்க்க சென்றான், அதுவும் அவன் ஸ்ரீதர் வீட்டாரை எதுவும் செய்யக் கூடாது என்று வாக்குறுதி பெற்ற பிறகே.

அவனுக்கு வராவின் நிலை தெரியவில்லை. தெரியாமல் எதுவும் செய்ய அவனுக்கு மனமில்லை.

அதுவுமல்லாமல் ஸ்ரீதர் மிக மோசமாக அடிபட்டிருந்தான்.

அவனுக்கு போதிக்கப்பட்டது சமமான நிலையில் வைத்து போராடுபவனே க்ஷத்ரியன் என்று. அவன் குடும்பத்தார் தற்பொழுது ஸ்ரீதரின் நிலையால் மிகவும் சோர்ந்த நிலையில் இருந்தது அவனுக்கு தெரியும்.

அவர்களை அப்படியே விடும் எண்ணம் அவனுக்கு இல்லை. ஆனால் வராவுக்காக பார்த்தான். அவனுக்கு ஸ்ரீதரின் மேல் என்ன எண்ணம் என்று தெரியவில்லை.

ஒரு வேளை குழந்தைக்கு இப்படி ஆகிவிட்டது என்று மௌனமாக இருக்கிறாளா என்று தெரியவில்லை.

ஆனால் இப்படியே விடும் எண்ணம் இல்லை. ஒரு எக்ஸ் மினிஸ்டரின் மகளுக்கே ஜாதியை காரணம் காட்டி இந்த நிலைமை என்றால், வரா இடத்தில் சாதாரண பெண் இருந்தாள். அவனுக்கு நெஞ்சு கொதித்தது.

ராம் ஒரு முடிவோடு இருந்த போது கூட அதை மாற்றி னான்.

''உங்களை வீட்டுக்கு வந்து கடத்தியிருக்காங்க, சும்மா விடமாட்டேன். ஆனா இப்போ என்ன செஞ்சாலும் வராக்கு ஸ்ரீதர் மேல சாப்ட் கார்னர் ஆகிடும்.''

''அவளா விரும்பி ஸ்ரீதர் கூட போயிருக்கா'' என்றான். அப்போதும் அவர்கள் வரா ஸ்ரீதரோடு சென்றது போல தப்பர்த்தம் செய்து கொண்டு இருந்தனர்.

வராவிடமும், ''ஸ்ரீதர் விஷயம் யாருக்கும் தெரியாது, உங்க அம்மாவுக்கு கூட தெரியாது. அதை பற்றி பேசாதே!'' என்று சொன்னதால், குழந்தை இறந்த அதிர்ச்சி யில் இருந்ததால்... உடல் வலி எல்லாவற்றையும் விட மிக அதிகமாக இருந்ததால்... அவளும் பேசவில்லை.

அவளுடைய சிந்தனை எல்லாம் அண்ணியை எப்படி எதிர்கொள்வது என்றே இருந்தது.

ராமநாதனிடமும் வெங்கட ரமணன் அதே தான் சொன்னான். ''இப்போ ஒண்ணும் செய்ய வேண்டாம்பா நான் பார்த்துக்கறேன், என்றான்.

இங்கே வரமஹாலக்ஷ்மி உடல் தேறி எழுவதற்கும், கல்பனாவை வீட்டிற்கு அழைத்து கொண்டு வருவதற் கும் சரியாக இருந்தது.



கல்பனாவை பார்த்தவுடன் மீண்டும் அழுகை பொங் கியது.

கல்பனா வருகிறாள் என்று தெரிந்த உடனே, அவளை பற்றி நன்கு அறிந்த ரமணன் வந்து விட்டான். இவள் ஏதாவது உளறி விட்டாள். யாருக்கும் ஸ்ரீதரை பற்றி தெரியாது.

ராமும், ரமணனும் சேர்ந்து வராவிடம்... ''ஸ்ரீதரை பற்றி யாருக்கும் தெரியாது, சொல்ல வேண்டாம்'' என்றனர்.

''பாப்பா ப்ளீஸ்! கல்பனாக்கு எதுவும் தெரியாது. எதுவும் சொல்லிடாத! இது தெரியாம நடந்த விஷயமா தான் நினைச்சிட்டு இருக்கா. அவளை பொறுத்த வரைக் கும் விபத்து அப்படியே இருக்கட்டும்'' என்றான்.

வெங்கட ரமணனுமே, ''சொல்ல வேண்டாம்'' என்று சொல்ல... ஒரு பெரிய குழப்பத்தில் இருந்தாள்.

பேச்சு வாக்கில் ரமணன் வேறு... ''நீ அவனோட போனதால தான் இவ்வளவு நடந்திடுச்சு'' என்று சொன்னவன், அவள் முகத்தின் அதிர்ச்சியை கவனிக்க தவறினான்.

அதனோட, ''இல்லேனா நம்ம வீட்ல நடந்ததுக்கு, அந்த ஸ்ரீதர்... அவன் குடும்பம்... அவங்களை தொலைச் சிருப்பேன்'' என்று சொல்ல...

''இவர்கள் தன்னை தப்பாக நினைத்துவிட்டார்கள் என்பது ஒரு புறமிருக்க, இந்த நிலையில் தான் என்ன நடந்தது என்று சொன்னாள்... மற்றுமொரு பிரளயம் நடக்கும், என்று தோன்ற நடந்ததை தனக்குள்ளேயே புதைத்து கொண்டாள்.

இந்த ஆக்சிடென்ட் நடந்ததில் இருந்து வராவை யாரும் பார்க்க விடப்படவில்லை. ஆக்சிடென்ட் நடந்த மறுநாளே ரமணன் அந்த போனை தூக்கி எறிந்து விட்டான்.

வராவிற்கு ஶ்ரீதர் ஞாபகம் அவ்வப்போது வரும். அவளின் இந்த வலி அவனால் தான் எனும்போது எப்படி நினைக்காமல் இருக்க முடியும். அதுவுமில்லாமல் இரண்டு வருடம் அவனோடு பேசி பழகி இருக்கிறாள்.

அதனால் அவன் ஞாபகம் தெரிந்தவன் என்ற முறையில் வரும். என்னவானான் என்று யாரிடம் கேட்பது என்று தெரியாமல் விட்டுவிட்டாள்.

அன்று அவளுக்கு செக் அப் செல்லும் நாள், பழைய நடை இன்னும் வரவில்லை. சரியாகிவிட்டாலும் பாதி நேரம் மற்றவர்கள் கைபிடித்தே நடந்தாள்.

ரமணன் வந்ததால்... ராஜேஸ்வரி அன்று ரமணனை அழைத்து கொண்டு தான் செக் அப் சென்றார்.

டாக்டரின் ரூம் முன் காத்திருந்த வேளையில் தான் வரா அதனை உணர்ந்தாள். யாரோ தன்னை பார்ப்பது போல். இந்த ஜாக்கிரதை உணர்வு முன்பு எப்பொழுதும் அவளிடம் இருந்ததில்லை. வலி அவளுக்கு நிறைய கற்றுக் கொடுத்து இருந்தது.

திரும்பி பார்த்தாள்... ஶ்ரீதர் இவளையே பார்த்தபடி நின்றிருந்தான். நிறைய மாற்றம் அவனிடம். முகம் வீங்கி இருந்தது.

வாக்கர் வைத்து அதை பிடித்து தான் நின்றிருந்தான். அவன் பார்வையே அவளை பார்ப்பதற்காக வந்தது போல் தான் தோன்றியது.



நிறைய நேரம் அவள் பார்வை ஓரிடத்தில் தங்கியதுமே, ரமணன் அந்த இடம் நோக்கி தன் பார்வையை திருப்பினான்.

சிரமப்பட்டு போராடி தூக்கியவன் அல்லவா. அதனால் ஶ்ரீதர் முகம் அவனுக்கு மறந்து போகவில்லை.

''ஶ்ரீதரா?'' என்றான் வராவிடம்...

''ஆம்'' என்பதாக அவள் தலையசைக்க...

''இரு, நான் போய் பார்த்துட்டு வர்றேன்'' என்று எழுந்தவனிடம்... ''நானும் வர்றேன்'' என்றாள் சன்ன குரலில்.

''எதுக்கு?'' என்றான் ரமணன் சற்று குரலை உயர்த்தி.

''நீ எதுக்கு போற'' என்றாள் வரா அவனிடம். இப்படி என்றுமே வரா அவனிடம் குரலை உயர்த்தியதில்லை.

''பார்க்க போகிறேன்'' என்றான்.

''நானும் அதுக்கு தான் போகிறேன்'' என்றாள்.

அவனை மீறி என்ன நடந்து விடும் என்ற தைரியம் அவனுக்கு... அதனால், ''சரி வா'' என்று அவனருகில் கை பிடித்து அழைத்து சென்றான்.

ஶ்ரீதர் அவர்கள் தன்னை நோக்கி வரவும், புன்னகைக்க முயன்று தோற்றான்.

''எப்படி இருக்க வரா'' என்றான்.

அவள் அந்த கேள்வி தன்னை பார்த்து கேட்பாளா என்பதுபோல் அவன் பார்க்க வரா வாயை திறக்கவில்லை.

''நான் உன்கிட்ட பேசணுமே'' என்றான் ஶ்ரீதர். அப்படி அவன் சொன்னவுடனே ரமணன் ஏதோ ஶ்ரீதரிடம் பேச வர, ரமணன் கையை பிடித்து அழுத்தினாள் வரா. ''நீ

அமைதியா இரு'' என்பது போல் அவனை பார்வையா லேயே அடக்கினாள்.

''பேசுங்களேன்!'' என்றாள் வரா. ''நம் வரா வா இது'' என்று அதிசயமாக ரமணன் பார்க்கும் பொழுதே, ''சொல்லுங்க ஸ்ரீதர்'' என்றாள்.

பேசுவது வரா தானா, என்று இருந்தது ரமணனுக்கு. குரலில் ஒரு கம்பீரம் ஏறியிருந்தது அவளுக்கு.

ஸ்ரீதர் ரமணனை பார்க்க...

''அவங்க இருப்பாங்க ஸ்ரீதர். நீங்க இப்படியே சொல்ல வந்ததை சொல்லுங்க. நான் போக சொன்னாலும் அவங்க போக மாட்டாங்க'' என்றாள் வரமஹாலக்ஷ்மி.

அவள் போகவேண்டாம் என்று நினைத்து அப்படி சொன்னாளோ இல்லை அவன் போகமாட்டான் என்று தெரிந்து சொன்னாளோ...?

''அது ஐ அம் சாரி. அது குழந்தை இறந்திருச்சாமே. என் பிரண்ட்ஸ் சொன்னாங்க'' என்றான்.

கேட்டவுடன் மறுபடியும் தன்னால் தான் என்ற துக்கம் பொங்கியது வராவுக்கு.

''நான் நிறைய தடவை உன்னோட இந்த ரெண்டு மாசமா பேச ட்ரை பண்ணினேன். ஆனால் உன் கிட்ட நெருங்கவே முடியலை. அதனால் தான் ஹாஸ்பிடல் நீ செக் அப் வர்ற நாள் தெரிஞ்சு வந்தேன். என் வீட்டு ஆளுங்க செஞ்சதுக்கு ஐ அம் சாரி'' என்றான் மறுபடியும்.

பொங்கிய வேதனையை கட்டுக்குள் கொண்டு வந்து... ''நானும் உன்கிட்ட சாரி கேட்கணும் ஸ்ரீதர்'' என்றாள்.

''நீ இதை எப்படி எடுத்துப்பேன்னு தெரியலை ஸ்ரீதர். நான் உன்கிட்ட தெரிஞ்சு தான் ஐ லவ் யூ சொன்னேன்.



னா அந்த வார்த்தையை தெரியாம சொல்லிட்டேன்'' என்றாள்.

''நான் பண்ணினது தப்புதான் ஐ அம் சாரி'' என்றாள். ''அதனால நிறைய வேதனையை என்னால என் வீட்ல அனுபவிச்சிட்டாங்க. இனிமே நீங்க என்னை பார்க்க முயற்சி பண்ணாதீங்க'' என்றாள்.

''அப்போ நமக்குள்ள எல்லாம் அவ்வளவு தானா'' என்றான் ஸ்ரீதர்.

பதில் பேசாமல் வரா திரும்ப... ''சொல்லிட்டு போ வரா'' என்றான் சற்று குரலை உயர்த்தி.

அந்த த்வனி அவளுக்குள் கோபத்தை கிளப்ப...

''மறுபடியும் ஏதாவது முட்டாள்தனம் பண்ணிடாத ஸ்ரீதர்'' என்றாள் அவளும் குரலை உயர்த்தி.

''முட்டாள்தனம், நான் என்ன பண்ணினேன்?'' என்றான் பதிலுக்கு.

''நான் எத்தனை முறை சொன்னேன் நீ வீட்டுக்கு போ. அப்புறம் பேசலாம்னு அன்னைக்கு. நான் உன்கூட வரமாட்டேன்னு சொல்ல சொல்ல என்னை ஏமாத்தி கூட்டிட்டு போனதும் இல்லாம, நீ கல்யாணத்துக்கு ஏற்பாடு செஞ்சிருந்த...''

''அதனால தான் எங்க அண்ணாவை கடத்திட்டாங்க... எங்க அண்ணிக்கு இப்படி ஆயிடுச்சு. அதுவுமில்லாம வேகமா போகாதன்னு எப்படி கெஞ்சினேன். உன்னோட முட்டாள்தனம் தான் இந்த ஆக்சிடென்ட். அந்த வலி... வேண்டாம் அந்த வலி எனக்கு எப்பவுமே வேண்டாம். ஸ்ரீதர் அதை மறந்துடலாம்'' என்ற ... ரமணன் இருப்ப தையும் மறந்து.

இதுவரை வராவின் புதிதாக உதித்த தைரியத்தை ரசித்து கொண்டிருந்த ரமணன், ''என்ன உனக்கு தெரியாம.. உன் சம்மதமில்லாம இவன் கூட்டிட்டு போனானா...?'' என்று ரமணன் அதிர்ந்து ஸ்ரீதரை ஒரு கை பார்க்கும் உத்வேகத்துடன் நெருங்க...

ரமணன் கையை பிடித்து நிறுத்தினாள்.

''நான் பேசிட்டு இருக்கேன்ல, நீங்க தலையிடாதீங்க'' என்றவள்...

ஸ்ரீதரை பார்த்து, ''எங்க வீட்ல இன்னும் யாருக்கும் தெரியாது. ராம் அண்ணாக்கு தெரியவே தெரியாது. ஸ்ரீதர் நீ என்னை கட்டாயப்படுத்தி கூட்டிட்டு போனேன்னு தெரிஞ்சது... உன்னை காப்பாத்தறது ரொம்ப சிரமம், என் அண்ணா என்ன பண்ணுவாங்க தெரியாது'' என்றாள்.

ரமணன் வேறு தன்னை நோக்கி வந்ததும்... வரா அவன் கையை பிடித்ததும் ஸ்ரீதருக்கு சுத்தமாக பிடிக்கவில்லை... ''ஏன் இவன் என்னை என்ன செஞ்சிடுவான்? எனக்கு இன்னும் முழு பலம் திரும்பலைன்னு மிரட்டுறான்களா'' என்றான் ரமணனை பார்த்து.

''நீயும் உங்க வீட்டு ஆளுங்க மாதிரின்னு ப்ரூவ் பண்ணு ஸ்ரீதர். உன்னை காப்பாத்தினவங்க கிட்ட நீ இந்த மாதிரி தான் நடந்துக்குவியா.''

''போ! போய் அன்னைக்கு அந்த ஆக்சிடென்ட் ஸ்பாட்ல இருந்தவங்க, யாரை வேணா கேட்டு பாரு. உன்னை யாரு காப்பாத்தினாங்கன்னு?''

மிரட்டல் சரி வராததால் கெஞ்சலில் இறங்கினான் ஸ்ரீதர். ''நீ சொல்றது எல்லாமே சரியாக இருக்கட்டும் வரா, but my love for you is sincere. I still love you. And I will love only you. I can't live without you'' என்றவனிடம்,



''But I can't live with you'' என்று கூறி என் பேச்சு முடிந்தது என்பது போல் திரும்ப...

''அப்படி அவ்வளவு சுலபமா யாருக்காகவும் எதுக்காகவும்... உன்னை நான் விட்டுட மாட்டேன் வரா... என்னை தவிர யாரும் உன்னை கல்யாணம் செஞ்சுக்க முடியாது, விடவும் மாட்டேன்!'' என்று அடிக்குரலில் சீறினான்.

அப்போது அந்த கண்களில் வராவின் நிராகரிப்பால் தெரிந்த வலி, வேதனை, சீற்றம், தீவிரம்... இவனை அத்தனை சுலபமாக வரமஹாலக்ஷ்மியின் வாழ்க்கையில் இருந்து அகற்ற முடியாது என்றே தோன்றியது.

அருகே ஹாஸ்பிடலில் அவர்கள் டாக்டர் ரூமிற்கு சென்ற நேரம், அங்கே இருந்த படியே தன் தந்தையை அழைத்தவன், ''அப்பா எனக்கு இன்னும் மூணு நாள் லீவ் இருக்கு, அதுக்குள்ள எனக்கு நீங்க கல்யாணம் செஞ்சு வைக்கிறீங்களா'' என்றான்.

''யாரைப்பா?'' என்ற தன் தந்தையிடம் ''வரமஹாலக்ஷ்மியை'' என்றான்.

''நம்ம மகாலக்ஷ்மி பொண்ணுதானே பா, நாள் குறித்து பெருசா விமரிசையா பண்ணலாம்பா'' என்றார் சந்தோஷமாக.

''மூணு நாள்ல என்ன பண்ண முடியுமோ பண்ணுங்க. ஆனா யாருக்கு பிடிக்குதோ இல்லையே எனக்கு தெரியாது அவளை நீங்க எனக்கு போகுறதுக்குள்ள பண்றீங்கப்பா'' என்றான்.

''ரமணா பொண்ணுக்காவது பிடிக்கணுமேப்பா'' என்றவரிடம்,

''அவளுக்கு பிடிச்சா என்ன? பிடிக்காட்டி என்ன? நான் அவளை தான் கல்யாணம் கட்டுவேன், அவ மறுபடியும் ஏதாவது பிரச்சனையில மாட்டுறதுக்குள்ள சீக்கிரம் கல்யாணத்தை முடிங்கப்பா'' என்ற வார்த்தையில் முடித்து போனை வைத்தான்.

## 31

### இன்றைய நிகழ்வுகள்

வெங்கட ரமணன் சென்னையில் பணியில் சேர்ந்து மூன்று மாதங்களாகி விட்டது. அதற்குள் சென்னை சிட்டிக்குள் நிறைய மாற்றங்கள் கொண்டு வந்தான்.

எல்லாம் கட்டுக்குள் இருந்தது என்று சொல்ல முடியாது... இருந்தாலும் பெரிதாக எந்த குற்றங்களும் வீதிகளிலோ, அல்லது சொல்லும்படியான இடங்களிலோ நடக்கவில்லை.

தினமும் ஒரு மணி நேரம், எந்த ஏரியா என்று தீர்மானமாக இல்லாமல் ஏதாவது ஒரு ஏரியா ரௌண்ட்ஸ் செல்வான்.

நேரடியாக தானே தான் பார்ப்பான். நிறைய போலீஸ் ஆபீசர்ஸ் அவன் சொல் கேட்டு நடக்க பிரியப்பட்டனர்.

எல்லாரும் இந்த காவல் துறையில் சேரும்போது உண்மையாக, நேர்மையாக, குற்றங்களை, ஒடுக்குபவனாக இருக்க வேண்டும் என்று தான் சேருவர்.

சில ரௌடியிசம் தலையீடுகள், அரசியல் தலையீடுகள், பேராசைகள், அவர்களை அவர்கள் இந்த பணியில் சேரும்போது நினைத்த மாதிரி இருக்க விடுவதில்லை.



ஆனால் வெங்கட ரமணன் கீழ் பணிபுரியும் போது அவர்களுக்கு எந்த நிர்பந்தமும் இல்லாமல் சுதந்திரமாக செயல்பட முடிந்தது. அது அவர்களுக்கு புதிய உற்சாகத்தை கொடுத்தது.

எங்கே சென்றாலும் எந்த வேலையில் இருந்தாலும் தினமும் ஒரு வேளை வந்து அவனுடைய டீக்கடை நண்பன்... அந்த பையனிடம் டீ குடிப்பதை மறக்க மாட்டான்.

அவனுடைய கமிஷனர் அலுவலக ஏரியாவில் என்ன நடக்கிறது என்று அந்த பையன் மூலமாகவே அவனுக்கு தெரிந்துவிடும்.

முடிந்தவரை இந்த கட்டப்பஞ்சாயத்து முறைகளை கட்டுக்குள் கொண்டு வந்தான்.

சிறிய அளவில் இருந்த ரௌடிகளை கூப்பிட்டு எச்சரித்தான், மேலும் குற்றங்கள் செய்யாமல் இருந்தால் அவர்களை கைது செய்யாமல் விட்டு விடுவதாக...

''நீ என்ன சொல்வது, நாங்கள் என்ன கேட்பது'' என்ற மனப்பான்மையில் அதற்கு பிறகும் இருந்த ரௌடிகள், அவனின் அப்போதைய செயல் கண்டு அவன் சொல்வதை கேட்பதே உத்தமம் என்று நினைக்க செய்தான்.

நிறைய குற்றங்களை செய்து... காவல் துறையினரிடம் அகப்படாமல், தன்னுடைய குற்றங்களுக்கும் மற்றவர்களை சரணடைய வைத்துக் கொண்டிருந்த... சென்னையை பதட்டப்படுத்தி கொண்டிருந்த ஒரு ரௌடியை மக்கள் பார்க்க, பார்க்க, தப்பி ஓடுகிறான்... என்ற பெயரில் என்கவுண்ட்டர் செய்தான்.

மிகவும் கோரமான மரணம் அந்த ரௌடிக்கு. அந்த ரௌடி மேல் கிட்ட தட்ட பன்னிரெண்டு கொலை வழக்குகள் இருந்தது.

அதை விடவும் அந்த ரௌடி செய்து வந்த காரியம்... தனியாக இருக்கும் வயதான தம்பதிகளுக்கு. அவர்கள் பெயரில் வீடு இருந்தால் மிக குறைந்த விலையில் அவர்களுக்கு இஷ்டமுண்டோ இல்லையோ வாங்கி விடுவது.

அவனால் இருக்க இடமின்றி வீடு இழந்தவர் பலர். வந்த ஒன்றிரண்டு மாதங்களிலேயே அவனை பற்றி முழு விசாரணையில் இறங்கினான், காவல்துறை மூலமாகவும்... அறிவழகன் மூலமாகவும்.

பின்பு யாரையும் நடுவில் வர விடாமல், யாருக்கும் தெரியாமல முதலமைச்சரிடம் நேரடியாக பேசி முடிவெடுத்து...

அவனுக்கு ஒரு கோரமான மரணத்தை வழங்கி, மற்றவர்களுக்கு அதன் மூலம் ஒரு பயத்தை கொடுத்தான்.

அந்த இறந்த உடலை உடனே எடுக்காமல் வேண்டுமென்றே தாமதித்து... காலையில் நடந்ததை, மாலை வரை அப்படியே விட்டு மெதுவாக அப்புறப்படுத்தினான்.

ரமணனுக்கு பணியில் இருக்கும் பொழுது வேறு எந்த நினைவும் இருக்காது. அவன் நகரில் மாற்றங்கள் நிகழ்த்திய போது அவனுக்கு எந்த வகையான சிறு தொந்தரவும் வரமஹாலக்ஷ்மி கொடுக்கவில்லை.

அவன் சிரித்தால், அவளும் சிரித்தாள். அவன் முகத்தை தூக்கி வைத்திருந்தால் அவள் அவனை மேலும் பதட்டப் படுத்தாமல அமைதி காத்தாள்.



சந்தர்ப்பம் கிடைக்கும் போது வரா அவனை ஒரு வழியாக்கினாலும்... அவனுக்கு அவளால் ஒரு தொந்தரவும் வரவில்லை.

அவளோடான அவனுடைய மிகவும் தாமதமாக ஆரம்பித்த திருமண வாழ்க்கை, ரமணனுக்கு நிறைவையே கொடுத்தது. திருமண வாழ்க்கையை பூரணமாக அனுபவித்தான் என்றே சொல்ல வேண்டும்.

''வீடு அல்லாட் ஆகிவிட்டது ராம் அண்ணா, நாங்கள் அங்கே போகவா?'' என்று ரமணன் கேட்டதற்கு... சிவசங்கரனும் ராஜேஸ்வரியும் கூட, ''சரி'' என்று விட்டனர். ஆனால் ராம் பிரசாத்தும் கல்பனாவும் ஒத்துக்கொள்ளவில்லை.

''ஊருக்குள் இருக்கிற அத்தனை பேருகிட்டயையும் நீ ரொம்ப ஸ்ட்ரிக்ட் ஆபீசர் ஆகிட்ட, உன்னை நம்பி பொண்ணை அனுப்பிட்டு, நீ இல்லாத நேரம் இவளுக்கு யாராவது தொந்தரவு கொடுத்துட்டா... நீ உன் வேலையை பார்ப்பியா இல்லை இவளையே நினைச்சிட்டு இருப்பியா. அதெல்லாம் முடியாது. அவளை தனியா எல்லாம் அனுப்பமாட்டோம்'' என்றாள் கல்பனா பளிச்சென்று.

'அவளை அனுப்பிட்டு என் புருஷன் முகத்தை தூக்கி கவலையா வச்சிருக்கிறதை யாரு பார்ப்பா' என்று மனதிற்குள்ளேயே நினைத்தாள்.

அப்படியே அதை கல்பனாவிடம் திருப்பினான் ரமணன், ''இதை நீ எங்களுக்காக சொல்கிற மாதிரி... ராம் அண்ணாக்காக சொல்றியா'' என்றான்.

''தெரியுதில்லை, அப்புறம் அதை ஏன் சொல்ற நீ... அவரை மட்டும் என்றாலும் நான் சமாளிப்பேன்...

ஸ்ருதி? வாய்ப்பேயில்லைப்பா... என்னால சமாளிக்க முடியாது!'' என்றாள் பரிதாபமாக.

''ஒரு வேளை நீ மாமனார் வீட்ல இருக்கிறது கௌரவ குறைச்சல்ன்னு நினைச்சா... நீ புது வீட்டுக்கு போ! அடுத்த நாள் நாங்க எல்லாம் அங்க வந்து இருக்கிறோம்'' என்றான் ராம் பிரசாத்.

இந்த யோசனையை கேட்ட அடுத்த நிமிடம் வரா... போனில் அவளுடைய மாமியாரை அழைத்தவள், ''வள்ளிம்மா இந்த வெங்கி...'' என்று ஆரம்பித்தவள்... பெயர் சொன்னால் வள்ளிம்மாவிடம் திட்டு விழும் என்று உடனே அவங்க என்று மாற்றி...

''அவங்க என்னென்னவோ சொல்றாங்க... ராம் அண்ணா அதை விட ஏதோ சொல்றாங்க'' என்று இருவரை பற்றி புகார் வாசிக்க...

கேட்ட சுந்தரவல்லி, ''எல்லாம் அவங்க அவங்க வேலையை பார்க்க சொல்லு வரா, நீயே சொல்லு... எங்கேயும் போகவேண்டாம். அங்கேயே இருங்க...'' என்று முடித்து விட்டார்.

''என்னோட மருமக எல்லாரையும்... அதட்டி... உருட்டி... மிரட்ட... வேண்டாமா? அப்புறம் இங்க வந்து நீ எப்படி பண்ணையம் பார்க்கிறது. ரமணன் அப்பா இங்கே இப்போ எல்லாம் வர்றதேயில்லை. எல்லாமே நான் தான்.''

''ரமணன் போலீஸ்ல இருக்கிறதுனால, அவனுக்கும் இதை பார்க்கறது சிரமம். சீக்கிரம் சமயம் கிடைக்கும் போது வந்து இதையெல்லாம் பார்த்தது பழகு'' என்று அதட்டலோடு முடித்தார்.



''நீ ஸ்ருதி பாப்பாக்கு என்ன சொல்லி கொடுக்கறியோ... அது நீதான்'' என்றார்.

அவள் ஸ்ருதிக்கு அடிக்கடி சொல்லும் வாக்கியம், ''யூ ஆர் தெ பெஸ்ட்'' என்பது.

போனை வைக்கும் போது மனதிற்குள்ளே வரா அவளுக்கு அவளே சொல்லி கொண்டாள்... ''ஐ ஆம் தி பெஸ்ட்'' என்று புன்னகையோடு...

எதற்கு இவள் வள்ளிமாவோடு பேசிய பிறகு இப்படி புன்னகைக்கிறாள் என்று மூவரும் அவளையே பார்த்தனர்.

''என்ன...'' என்று கண்களாலேயே கேட்ட வெங்கட ரமணனை பார்த்து, வரமஹாலக்ஷ்மி கண்ணடிக்க...

அவசரமாக யாராவது பார்த்துவிட்டார்களா என்று பார்த்தான் ரமணன்.

''நான் உங்களை பார்த்து கண்ணடிச்சதை யாரும் பார்க்கலை'' என்று சத்தமாக கூறி... மறுபடியும் அவனை பார்த்து கண்ணடிக்க, ரமணனை பார்த்து ராம் பிரசாத்தும் கல்பனாவும் வாய் விட்டு சிரித்தனர்.

இந்த பேச்சு காலையில் அவர்கள் டிபன் சாப்பிடும் சமயம் நடந்து கொண்டிருந்தது. அன்று மெதுவாக ரமணன் கிளம்பி கொண்டிருந்தான். நேரம் காலை பத்தை கடந்திருந்தது.

அவன் கிளம்பி வெளியே வந்த போது அவர்கள் வீட்டுக்குள் வந்துகொண்டிருந்த ஆளை பார்த்து அதிர்ந்தனர்.

வந்தது ஸ்ரீதர், முகத்தில் நிறைய பதட்டத்தோடு வந்தான். அப்பொழுது தான் பார்த்தனர்... அவன் பின்புறம் அவன் தங்கை, முன்பொரு காலத்தில் வராவின் தோழியான பத்மாவும் இருந்தாள்.

வரா வெளியே வராமல் உள் வாயிலிலேயே நின்றாள். அதை கவனித்த ரமணன், ''வரா, வந்தவங்களை வான்னு சொல்லு'' என்றான்.

''என்ன ஸ்ரீதர்? ரொம்ப பதட்டமா இருக்கீங்க? என்ன விஷயம்'' என்றான், முன்பு நிகழ்ந்தவைகள் எதையும் காட்டி கொள்ளாமல்...

''குழந்தைங்க காணோம்'' என்றான் பதட்டத்தில் மொட்டையாக.

இப்போது இன்னும் அதிர்ந்த வரா வெளியே வந்தாள்.

பத்மாவிடம், ''என்ன நடந்தது பத்மா?'' என்றாள் வரமஹாலக்ஷ்மி.

''காலையில் ஸ்கூலுக்கு போன குழந்தைங்க காணோம்'' என்றாள் அழுகையோடு.

''ரெண்டு பேரும் இப்படி பேசினா... எனக்கு என்ன புரியும்'' என்றான் வெங்கட ரமணன். ''நீங்க நடந்ததை தெளிவா சொன்னீங்கன்னா தான் என்ன நடந்ததுன்னு எனக்கு தெரியும். என்ன செய்யலாம்னு நான் யோசிப்பேன்'' என்றான்.

பத்மா பேசினாள்... ''என்னுடைய குழந்தை அஞ்சு வயசு, இப்போதான் யு.கே.ஜி போகிறா. அவளும் என் கணவரோட அண்ணன் பொண்ணு பன்னிரெண்டு வயசு, செவன்த் படிக்கறா. ரெண்டு பேரும் டெய்லி ஸ்கூலுக்கு எங்க கார்லதான் போவாங்க. டிரைவர் கூட்டிட்டு போவான்.

''இன்னைக்கும் அவன் தான் கூட்டிட்டு போனான். எட்டரைக்கு ஸ்கூல்ல ப்ரேயர். அவர் அண்ணா பொண்ணுக்கு கொஞ்சம் மூச்சு திணறல் வரும். அவளுக்கு



ஆஸ்த்துமா இருக்கு. அதனால எப்பவும் ஆஸ்த்மாக்கு வைக்கிற பஃப் சேஃப்டிக்கு கொடுத்து விடுவோம். இன்னைக்கு மறந்துட்டோம்.''

உடனே ஞாபகம் வந்து டிரைவர்க்கு கூப்பிட்டா... போன் சுவிட்ச் ஆஃப்ன்னு வருது. ஸ்கூலுக்கு உடனே என் கணவரோட அண்ணன் அதை கொடுக்க போனாங்க. அங்கே குழந்தைங்க வரவேயில்லை.

''இந்த ஒரு மணி நேரமா எல்லா இடமும் நாங்களே தேடி பார்த்தோம். காணலை. அப்பாவும் சித்தப்பாவும் ஸ்டேசன்ல கம்ப்ளைன்ட் கொடுக்க போயிருக்காங்க... என் கணவர், அவங்க அண்ணா, எங்க மற்ற ஆளுங்க தேடிட்டு இருக்காங்க. ஸ்ரீதர் தான் சொன்னான்... ''நாம வராவோட கணவரை போய் பார்க்கலாம்னு'' என்று படபடவென பேசி முடித்து அழத்துவங்கினாள்.

''ப்ளீஸ் ஏதாவது பண்ணுங்களேன்'' என்றான் ஸ்ரீதர்.

''வாங்க'' என்றவன், அவர்களை தன்னுடைய வாகனத்திலேயே ஏற்றிக் கொண்டு பறந்தான்.

''எந்த ஏரியா?...''

''வீடு வளசரவாக்கம்... ஸ்கூல் கே கே நகர்'' என்றாள் பத்மா.

''என்ன வண்டி?'' வண்டி நம்பர் என்றதற்கு...

''இண்டிகோ TN 07 AB 3345'' என்றாள்.

கண்ட்ரோல் ரூம் அழைத்து... எல்லா ஸ்டேசனுக்கும் அழைத்து தேடச் சொல்லி... சொல்ல... சொன்னவன்... அப்படியே சிட்டி லிமிட்டில் உள்ள எல்லா செக் போஸ்டையும் அழைத்து... இந்த வண்டி வந்தால் நிறுத்தி தனக்கு உடனே தகவல் தருமாறு சொன்னான்.

கையோடு அறிவழகனையும் அழைத்தவன், ''அறிவு ஏதாவது மெக்கானிக் செட்ல, இந்த வண்டி நம்பர் ஏதாவது மாத்தறாங்களா பாரு'' என்றான்.

அறிவழகன் கடந்த ஐந்து, ஆறு வருடங்களாக... மெக்கானிக் ஷெட்டோடு கார் வாங்கி விற்கும் வேலையும் செய்வதால் நிறைய செட் அவனுக்கு பழக்கம்.

அதை பார்க்க சொன்னவன், பின்பு... ''இந்த வண்டி எந்த ஏரியாவில் உள்ள பெட்ரோல் பங்கிலாவது பெட்ரோல் போட்டிருக்கிறார்களா'' என்று, அந்த அந்த போலீஸ் ஸ்டேசன் மூலமாக செக் செய்ய சொன்னான்.

பின்பு அந்த டிரைவர் பற்றிய விசாரணையில் இறங்கிய போது அவர்கள் ஏரியா ஸ்டேசன் வந்திருந்தது.

ஏற்கனவே காணாமல் போனது நகரில் மிகவும் செல்வாக்குள்ள ஆட்களின் மக்கள் என்பதால் சிறிது பரபரப்போடு தான் ஸ்டேசனில் தேடும் படலம் இருந்தது.

தற்பொழுது கமிஷனர் நேரடியாக இறங்கியதால் பரபரப்பு தொற்றி கொண்டது.

ரமணன் அங்கு வந்து இறங்கி உள்ளே வந்தவுடனேயே, அங்கே இருந்த ஸ்ரீதரின் தந்தை... அவனை பார்த்ததும் வேகமாக வந்தவர்... ''ஒரு தடவை நீங்க தான் என் பையனை காப்பாற்றி கொடுத்தீங்க, எப்படியாவது எங்க குழந்தைகளை காப்பாற்றி கொடுங்க'' என்று அவன் கையை பிடித்து குரல் கரகரக்க கேட்டது அவனையே சற்று அசைத்தது.

எவ்வளவு பெரிய ஆட்களாக இருந்தாலும், பிள்ளைகள்... அதுவும் பெண் பிள்ளைகள்... எனும் பொழுது இன்னுமே பதட்டம் தொற்றும்.



''கட்டாயம் கண்டு பிடிச்சிடலாம், தைரியமா இருங்க. உங்க நல்ல காலம் அவங்க காணாம போனது உங்களுக்கு சீக்கிரமே தெரிஞ்சிருச்சி'' என்று சொன்னவன்,

''அந்த டிரைவர் செஞ்சானா... இல்லை அந்த டிரைவரையும் சேர்த்து வேற யாராவது தூக்கியிருக்காங்களா நம்ம பார்க்கணும். அந்த டிரைவர் யாரு? உங்க வீட்ல எவ்வளவு நாளா வேலை செய்யறான்'' என்று கேட்டான்.

''இப்போ ஒரு வருஷமா வேலை பார்க்கிறான். அதும் கடைல தான் இருக்கான். பழைய டிரைவர் உடம்பு சரியில்லாதால ஒரு வாரமா தான் குழந்தைகளை இவன் கொண்டு போய் விடறான்.

''சும்மா பத்து நாள் தான் அவனுக்கு அந்த வேலை. மறுபடியும் இன்னும் மூணு நாள்ல பழைய டிரைவர் வந்தவுடனே மாறிடுவான்'' என்றார்.

''இந்த மாதிரி ஆகும்னு எதிர்பார்க்கவில்லை'' என்றார்.

''அவன் போன் நம்பர் கொடுங்க'' என்றவன் அதை அழைக்க... ''தற்பொழுது அணைத்து வைக்கப் பட்டுள்ளது'' என்று வந்தது.

''என்ன நம்பர் இதுன்னு பாருங்க... ஏர்டெல், பி எஸ் என் எல், ஏர்செல், எதுன்னு சீக்கிரம் பாருங்க, பார்த்து நேத்து இருந்து இவன் பேசின கால் லிஸ்ட் உடனே வாங்குங்க'' என்று சொல்ல சொல்ல வேலைகள் மிக வேகமாக நடந்தன...

அவன் அங்கே என்ன என்று பார்த்து கொண்டு இருக்கும் போதே, அறிவழகன் அழைத்தான், ''அண்ணா உங்க கமிஷனர் ஆபீஸ் ஏரியால இருக்கிற ஒரு செட்ல வண்டிய விட்டவன் ஆள் திரும்ப வரலை.''

''எதுக்குடா விட்டான் அவன்'' என்று கோபமாக ரமணன் கேட்க... ''வாட்டர் வாஷ்ன்னு சொல்லி விட்டுருக்கான்.''

''விவரம் சரியா சொல்ல தெரியாம, ஓனர் வர்றார் கூட்டிட்டு வந்துடரேன்னு ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி போய் இருக்கான்'' என்றான்.

''சரி நான் பார்த்துக்கறேன், இருந்தாலும் வண்டிய தேடி யாராவது வந்தா... உடனே என் போன் நம்பர் கொடுத்து என்னை உடனே கூப்பிட சொல்லு'' என்றான்.

''நம்பர் நெட் வொர்க் என்னன்னு பார்த்தீங்களா'' என்று கேட்டுக் கொணடே பம்பரமாக இருந்த இடத்தில் இருந்தே சுழன்று எல்லோரிடத்திலும் வேலையை வாங்கி தகவலை சேகரித்தான்.

அதற்குள் எந்த நம்பரில் அவன் நேற்று இருந்து பேசினான் என்ற லிஸ்ட் வர... அதில் யாரோடு, எவ்வளவு நேரம் பேசினான் என்று பார்த்தான். ஒரு நம்பரிடம் ஆறு முறை பேசியுள்ளான் என தெரிந்தது.

''அந்த நம்பர்க்கு யாரையாவது விட்டு போன் செய்வாங்க சார்'' என்று அந்த ஏரியா இன்ஸ்பெக்டர் கேட்க...

''வேண்டாம்... இந்த நம்பர்க்கு வர்ற கால் ட்ரேஸ் பண்ண சொல்லி அந்த போன் நெட்வொர்க்ல சொல்லுங்க. எந்த ஏரியாவுல இருக்குன்னு மட்டும் பாருங்க'' என்றான்.

மறுபடியும் அது அவனின் கமிஷனர் ஆபீஸ் பக்கத்தில் உள்ள ஏரியாவை காட்டியது.

''என் ஏரியா பக்கத்துல இருந்துட்டு எவனுக்குடா இந்த மாதிரி செய்யறதுக்கு தைரியம்'' என்று வண்டியை



அவன் அலுவலகத்துக்கு புயல் போல கிளம்பிச் சென்றான்.

# 32

## அன்றைய நினைவுகள்

பிடிவாதம்... யார் சொன்னாலும் காதில் போட்டு கொள்ளாத பிடிவாதம்... ரமணனிடத்தில் திடீரென்று தோன்றியது.

'ஏன் தனக்கு இவ்வளவு பிடிவாதம்' என்று வெங்கடரமணனுக்கே புரியவில்லை.

ஏதோ உள்ளுணர்வு சொன்னது, ஸ்ரீதர் வராவை அவ்வளவு சீக்கிரமாக மறந்து விட மாட்டான். அவள் வேண்டாம் என்றாலும் விட்டு விட மாட்டான். ஏதாவது ஒரு வகையில் அவளுக்கு தொந்தரவு கொடுப்பான் என்று.

அதுவும் வரா இஷ்டமில்லாமல் அவளை கட்டாயப் படுத்தி அழைத்து சென்றான் என்று தெரிந்ததில் இருந்து, மறுபடியும் அந்த மாதிரி ஏதாவது செய்து கல்யாணத்தை முடித்து விட்டால்...?'

இப்படிப் பல யோசனைகள் உள்ளுக்குள் ஓடினாலும்... உண்மையான யோசனை ரமணனுக்கு வராவை மறுபடியும் தொலைக்க மனமில்லை என்பதே உண்மை.

அவள் அன்று இரவு அவனை அழைத்து, ''என்னை ஏன் வேண்டாமென்று சொன்னே?'' என்று கேட்ட பிறகு தோன்றிய ஒரு உணர்வு...

இங்கே வந்து அவள் காணோம் என்று தெரிந்து... முதன் முறையாக அவனுள் எழுந்த பயம்...

அவளை கண்டுபிடித்து குழியில் அவளை ரத்த வெள்ளத்தில் பார்த்த போது... தன்னுடைய கால்கள் தொய்ந்து தான் விழுந்துவிடுவோமா என்று...

எல்லாம் முடிந்ததோ என்ற உணர்வு...

எல்லாமுமாக அவன் உணர்ந்தது அவள் தனக்குரியவள் என்பது தான். ஆனால் ஸ்ரீதரோடு அவள் விருப்பப்பட்டு சென்றாள் என்று நினைத்து கொண்டிருந்ததால் மேலே வராவை பற்றி சிந்திப்பதில் தடுமாறிக்கொண்டு இருந்தான்.

அதுவும் ஸ்ரீதரிடம் அவள் தற்போது பேசிய போது தோன்றிய உணர்வு தனக்கு மட்டுமே உரியவள் என்பது' தான்.

ஸ்ரீதரை சமாளிப்பது என்பது வெங்கட ரமணனை பொருத்தவரை ஒரு பெரிய விஷயமல்ல.

ஆனால் வரா விஷயத்தில் அவனுக்கு சிறிதளவு கூட ஆபத்தான முயற்சி எடுக்க விரும்பவில்லை. அதுவும் ஸ்ரீதர், நீ தான் என் மனைவி, என்று சொன்னபோது அவனை கொன்றுவிட வேண்டும் போல் ஒரு ஆத்திரம் தோன்றிய போது தான், அவன் வராவை நேசிப்பதை அவனுக்கு அவனே உணர்ந்தான்.

எல்லோருக்கும் இப்படி திடீர் என்று திருமணம் ஏன் என்ற கேள்வி இருந்தது, முக்கியமாக ராஜேஸ்வரிக்கு, கல்பனாவுக்கு, அவர்கள் எல்லோரையும் விட வரமஹாலக்ஷ்மிக்கு.



எல்லோருக்கும், ''ஏன்'' என்ற கேள்வி மட்டுமே இருந்தது. வேண்டாம், என்று யாரும் நினைக்காததால் வேலைகள் மளமளவென நடந்தது. அதுவும் ராம் பிரசாத் எல்லாவற்றையும் வேகமாக நடத்தி முடித்தான்.

தனக்கு வெங்கட-ரமணனுடனான திருமணம் ஒரு புதிய தைரியத்தை வரமஹாலக்ஷ்மிக்கு கொடுத்தது. அவள் மனதளவில் திருமணத்திற்கு உடனடியாக தயாரில்லை என்றபோதும் அன்று ஸ்ரீதரை பார்த்து விட்டு வந்த பிறகு ஒரு பயம் அவளையறியாமல் மனதிற்குள் சூழ ஆரம்பித்தது.

ஸ்ரீதரிடம் இருந்து தப்பித்தால் போதும் என்ற உணர்வே ஓங்கி இருந்தது. அதுவும் நேற்று அவனை பார்த்த பிறகு அன்றைய தின ஞாபகங்கள், ''மெதுவாக போ'' என்று அவள் கதறியது அவளுக்கே திரும்ப திரும்ப தோன்றி ஒரு பயத்தை கொடுத்தது.

அவளுக்கு இருந்த மனப்பான்மை யாரையோ திருமணம் செய்வதற்கு ரமணன் அவளுக்கு பிடித்தமே. ஸ்ரீதருடன் அவள் உறவை மேலே சிந்திக்க விருப்பம் இல்லாததால் வேறு யாரை பற்றியும் யோசிக்க மனம் இடம் கொடுக்கவில்லை. குற்ற உணர்ச்சி அதிகமாக அவளை தின்றது.

அதனால் அவள் தந்தை அவளிடத்தில் கேட்ட போது சரி என்று விட்டாள்.

நேற்று முடிவெடுத்த... நாளை திருமணம்... என்பதால் இன்று வேலைகள்... மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. வடபழனி கோயிலில் முதல் நாள் திருமணம்,

பின்பு கம்பத்தில் மறுநாள் ஒரு விருந்து, என்று சுருக்கமாக முடித்தனர்.

திருமணம் மிக எளிமையாக நெருங்கிய சொந்தங்களை மட்டுமே அழைத்து நடந்தது. ஆனால் ரமணன் ஊரான கம்பத்தில் நடந்த விருந்தை ராமநாதன் அமர்க்களப்படுத்தி விட்டார். பொதுவாக விருந்துக்கு வருபவர்கள் அன்பளிப்பை கொடுப்பர்.

ஆனால் ராமநாதன் தன் ஒரே மகனின் திருமணத்திற்கு வந்த அத்தனை பெண்களுக்கும் வெள்ளி கொலுசுகள், மற்றும் ஆண்களுக்கும் வீட்டில் உள்ளவர்களுக்கு கொடுப்பதற்காக அதே... மற்றும் தங்களிடத்தில் வேலை செய்பவர்கள் அனைவருக்கும் ஆளுக்கு ஒரு ஏக்கர் நிலத்தை சொந்தமாக கொடுத்தார்.

இங்கே விமரிசையாக திருமண விருந்து நடைபெற்று கொண்டிருக்கும் போதே ரமணனுக்கு தகவல் வந்தது. ''என்னடா இது?'' என்று இருந்தது ரமணனுக்கு.

தனக்கும் வராவுக்கும் திருமணம் நடந்ததை ஸ்ரீதரின் காதுகளுக்கு செல்லுமாறு பார்த்து கொண்டான். அதற்கு ஸ்ரீதர் என்ன செய்யப் போகிறான் என்று அவன் பார்க்க நினைத்தான். வராவிடம் வந்து சண்டை போடுவான் இல்லையென்றால், வேறு ஏதாவது கலாட்டா செய்வான் என்று அவன் நினைத்து இருக்க...

ஸ்ரீதர் செய்ததோ தற்கொலை முயற்சி. இதை ரமணன் எதிர்பார்க்கவில்லை.

இது வராவுக்கு தெரிந்தால் நிச்சயம் கலங்குவாள் என்று தெரிந்த ரமணன் அவளிடம் இருந்து மறைத்து விட்டான்.



இப்படி ஏதோ ஒன்று இருவர் மனதிற்குள்ளும் இருந்ததால், பெரிதாக இருவருமே திருமணம் நடக்கும் போதோ... அது முடிந்த பிறகோ பேச ஆர்வம் காட்டவில்லை.

அதுவும் ஸ்ரீதர் விஷயம் கேள்விப்பட்டதில் இருந்து மிகவும் டென்ஷனாக இருந்தது ரமணனுக்கு. ''ஸ்ரீதர் பிழைக்க வேண்டுமே, என்று.

தனது தந்தையிடம் மட்டும் விஷயத்தை சொன்னவன்... ''எனக்கு பயமா இருக்குது அப்பா'' என்றான்.

''ஏன்பா'' என்றவரிடம்... ''அடுத்தவன் சாவுலையா என் திருமணம் நடக்கணும்'' என்று கலங்க...

''ஒண்ணும் ஆகாதுப்பா... அவன் பொழைச்சுக்குவான்'' என்று அவனிடத்தில் ஆறுதல் கூறியவர்,

'அவன் பிழைத்ததுக்கு பிறகு நான் அவர்களை என்ன செய்கிறேன் பார்' என்று மனதிற்குள்ளேயே நினைத்தார்... வெளியே சொல்லவில்லை.

விருந்து முடிந்தவுடனே அங்கே இருக்க பிடிக்காதவனாக... ரமணன் உடனே பணியில் சேருவதற்காக கிளம்பினான், ''எங்கே போய் விட போகிறாள் வரா. ஒரு வாரம் கழித்து அழைத்து கொள்ளலாம்'' என்று.

ஸ்ரீதர் ஒரு வழியாக பிழைத்து விட்டான் என்று தெரிந்த பிறகே அவனால் வராவோடு பேச முடிந்தது.

வராவை தொலைபேசியில் அழைத்தவன், ''எப்போ வரா இங்கே வர்ற?'' என்றான்.

''வரணுமா... எதுக்கு'' என்றாள்.

''என்ன வரா இப்படி பேசுற'' என்ற அவனின் கேள்விக்கு... ''வந்த... ரெண்டு நாள்ல கல்யாணம்னு... விருந்து

முடிஞ்சவுடனே விட்டுட்டு போய்ட்ட... இப்போ எதுக்கு கூப்பிடற...'' என்றாள் மரியாதையெல்லாம் காற்றில் பறக்க விட்டவளாக.

சிறிதும் கூச்சப்படாமல், ''சாரி'' என்றான் உடனே, ''ஐ அம் ரியல்லி சாரி வரா, தப்பு தான். உன் கிட்ட கல்யாணத்துக்கு கூட கேட்கலை. ஏதோ டென்ஷன் விட்டுடேன்'' என்றான் தணிந்த குரலில் உண்மையாக.

''என்ன டென்ஷன்'' என்றாள்.

''அது ஸ்ரீதரின் டென்ஷன் என்று சொல்லவா முடியும். இல்லை ஒரு வேளை நீ மறுத்துவிட்டாள் என்று சொல்ல முடியுமா.

''ஏதோ டென்ஷன், ப்ளீஸ் விட்டுடேன், எனக்காக'' என்றான்.

வெங்கட ரமணனை பற்றி நன்கு அறிந்தவள் ஆதலால், அவன் இப்படி பணிவாக தணிந்த குரலில் பேசுவது அவன் இயல்புக்கு மீறிய ஒன்று என்று தெரிந்து, ''ம்'' என்று சத்தம் மட்டும் கொடுத்தாள்.

அவன் குரலில் இருந்த உண்மை அவளை அசைக்க அவளால் மேலும் சண்டை வளர்க்க முடியவில்லை.

''எப்போ வர்றே வரா'' என்றான் மறுபடியும்.

''அது நீங்க இங்கயே வந்துடறீங்களா'' என்றாள்.

''ஏன் நீ வரமாட்டியா'' என்றான்.

''எனக்கு வரமுடியாது'' என்றாள்.

''ஏன்..???''

மௌனமே பதிலாக கிடைத்தது.



''பேசு வரா... பேசாம எதுவும் சரியாகாது'' என்று மிகவும் வற்புறுத்திய பிறகு, ''அண்ணிக்கு குழந்தை பிறந்த பிறகு தான் இங்கே இருந்து வருவேன்னு சொல்லிவிட்டேன்'' என்றாள்.

''யார்கிட்ட?'' என்றவனிடம்...

''சாமிக்கிட்ட'' என்றாள்.

இருவரிடமும் ஆழ்ந்த மௌனம்.

மௌனம் நிமிடங்கள் வரை நீடித்தது.

இதற்கு பிறகு என்ன செய்ய முடியும். சொல்லப் போனால் வராவை விட ரமணனுக்கு கடவுள் பக்தி அதிகம். அவளே வேண்டியிருக்கும் போது அவன் என்ன சொல்வான்.

''வீட்ல எல்லாரும் கேட்பாங்க... என்ன சொல்லுவ'' என்றான்.

''அதெல்லாம் எனக்கு தெரியாது, நீ தான் அவசரமா கல்யாணம் பண்ணிகிட்ட... நீயே சொல்லிடு'' என்று அவள் மனதின் பாரம் குறைந்தவளாக, அந்த பாரத்தை அவனிடம் ஏற்றி, தொலைபேசியை வைத்து விட்டாள்.

எல்லோரையும் சமாளிக்கும் பொறுப்பை அவன் தலையில் கட்டினாள்.

எல்லோருக்கும் ரமணனே... ''தான் தற்பொழுது ஒரு முக்கியமான பணியில் ஈடுபட்டு இருப்பதாகவும்... இதில் நிறைய ஆபத்து குடும்பத்தாருக்கு வர வாய்ப்பிருப்பதால், வரா இப்பொழுது தன்னோடு வர வேண்டாம், சிறிது மாதங்கள் கழித்து அழைத்து கொள்கிறேன்'' என்றான்.

அவனே எதிர்பார்க்கவில்லை அவர்கள் பிரிவு வருடக் கணக்கில் நீண்டு விடும் என்று.

## 33

### அன்றைய நிகழ்வுகள்

வெங்கட ரமணன் வரமஹாலக்ஷ்மி திருமணம் முடிந்து ஆறு மாதங்களுக்கு பிறகு கல்பனா மீண்டும் தாய்மை அடைந்தாள்.

சிறிது மாதங்களுக்கு முன்பு தான் அசம்பாவிதம் நிகழ்ந்திருந்தால் மிகவும் ஜாக்கிரதையாக... சொல்லப் போனால் ஒரு கண்ணாடி பாத்திரத்தை கையாள்வது போல் பார்த்துக்கொண்டனர், ஒன்பதாவது மாத இறுதியில் மீண்டும் ஒரு பெண் மகவை ஈன்றெடுத்தாள்.

எல்லோரையும் விட வரமஹாலக்ஷ்மிக்கு தலை கால் புரியாத சந்தோஷம். குழந்தையை அவள் அன்னையிடம் கூட பால் கொடுப்பதற்காக மட்டுமே கொடுத்தாள்.

''கையில் வைத்து பழக்காதே வரா... பின்பு கீழே படுக்க வைத்தாள் குழந்தை அழுவாள்'' என்று சொன்னதற்கு கூட வரா அவளை கீழே படுக்க வைக்கவில்லை.

''பரவாயில்லை, அழுதா நான் தூக்கி வச்சுக்கறேன்'' என்றாள்.

ஹாஸ்பிடலில் குழந்தை தூங்கும் நேரம் சிறிது நடந்து விட்டு வரலாம் என்று வெளியே நடக்க வரும்பொழுது எதிர்பாராத சந்திப்பு ஸ்ரீதருடன்...



அவனை கடந்து போகும் பொழுதுதான் யாரோ தன்னை பார்ப்பது உணர்ந்து திரும்ப, அது ஸ்ரீதர்...

பார்த்துக்கொண்டே பேசாமல் தான் கடந்து சென்றான்.

கடந்த பிறகு தான் அது ஸ்ரீதர் என்பதை உணர்ந்தாள். அவன் பார்த்த பார்வை... அந்த கண்களில் தெரிந்த வலி... அவளையறியாமல் கால்களை அவன் புறம் இழுத்து சென்றது.

வேகமாக எட்டு வைத்த அவனை அடைந்து... ''ஹலோ ஸ்ரீதர், எப்படி இருக்க'' என்றாள்.

நின்றவன் அவளை பதில் சொல்லாமல் பார்த்தான். அவளும் அமைதியாக ஸ்நேக பாவத்தோடு பார்த்திருக்க...

''இதுக்கு நான் என்ன பதில் சொல்லணும்னு எதிர் பார்க்கற வரா'' என்றான்.

பதிலே அவளை குற்றம் சொல்லியது.

குழந்தை பிறந்த சந்தோஷத்தில் இருந்த அவள் முகம் விழுந்து விட்டது. திரும்பி அமைதியாக நடக்க துவங்கினாள்.

இப்போது ஸ்ரீதருக்கு அவள் முகம் விழுந்தது, பொறுக்க முடியாமல், ''நில்லு வரா'' என்றான்.

''நல்லாயிருக்கேன், என்றான்.

பார்த்தால் உடம்பு சரியில்லாத மாதிரி தோற்றமளிக்க... ''இன்னும் ஆக்சிடென்ட்ல அடிபட்டது, சரியாகலையா'' என்றாள்.

புரியாத பார்வை பார்த்தான்.

'ஏன் இப்படி பார்க்கிறான்' என்று அவள் நினைத்துக் கொண்டிருக்க...

''அதுக்கப்புறம் கொஞ்சம் சரியில்லாம போச்சு வரா'' என்றான்.

''என்ன ஆச்சு?'' என்றாள்.

பெருமூச்சு விட்டவன்... ''நான் விரும்பின பொண்ணு, என்னை விரும்பறேன்னு சொல்லிட்டு... என்னவோ தெரியலை... திடீர்னு மனசு மாறிட்டா.''

''நான் பண்ணின சில காரியங்கள்னால சில அசம்பாவிதங்கள் நடந்துடுச்சு. ஆனா நான் அதை வேணும்னு செய்யலை. இதுவே நான் அவளை திருமணம் செஞ்சதுக்கு அப்புறம் நடந்திருந்தா... என்ன பண்ணியிருப்பா'' என்று அவனுக்கு அவனே பேசுவது போல சொன்னவன்...

''ஆனா ரொம்ப நம்பிக்கையோட இருந்தேன். சண்டை போட்டாலும் சமாதானமாகிடலாம்னு. ஆனா இப்படி என்னை ஏமாத்திட்டு கல்யாணம் செஞ்சுப்பான்னு நினைக்கலை'' என்று அவன் குரலில் ஒரு வலியோடு சொல்லும்போதே வராவின் கண்கள் குளமாக ஆரம்பித்தன.

அதை கவனியாத ஸ்ரீதர் சொல்லிக்கொண்டே சென்றான்... ''அதை தாங்க முடியாம, நீ சொன்ன மாதிரி முட்டாள்தனமா தற்கொலைக்கு முயற்சி செஞ்சேன்.

''ஆனா பாரேன், சாவுக்கு கூட என்னை பிடிக்கலை போல, என்னை வேண்டாம்னு சொல்லிடுச்சு'' என்று சொல்லியவன் நிமிர்ந்து வராவை பார்க்க கண்களில் கண்ணீர் நிற்காமல் வடிந்து கொண்டே இருந்தது.

''ஹேய்! என்ன இது அழாத'' என்றான் பதட்டமாக... ''அது முடிஞ்சு போச்சு. நான் இப்போ நல்லா இருக்கேன். இது என்னோட ஜெனரல் செக் அப் தான்'' என்றான்.



கண்களை துடைத்து அவனை பார்த்தவள், ''ஏமாத்திட்டேன்னு சொல்லாத ஸ்ரீதர். நான் உன்னை கல்யாணம் பண்ணியிருந்தா, அது தான் நீ சொன்னதுக்கு சமம். நான் உன்னை காதலிக்கவேயில்லை ஸ்ரீதர். அது தெரியாம நடந்திடுச்சு. முடிஞ்சா அதை மறந்துடு'' என்று சொல்லியவள் நிற்காமல் செல்ல...

''வரா'' என அழைத்து பின்னோடு வந்தான் ஸ்ரீதர். பேச வந்த ஸ்ரீதரை பேசவே விடவில்லை, வரா. ''ப்ளீஸ் ஸ்ரீதர் மேல மேல முட்டாள்தனம் பண்ணி இந்த ஜன்மத்துக்கு நான் நிம்மதியா வாழ தகுதியில்லாதவளா ஆக்கிடாதே.

''இல்லைன்னா நீ செஞ்ச மாதிரி ஏதாவது நானும் தற்கொலைன்னு முட்டாள்தனம் செய்யற மாதிரி செஞ்சிடாதே'' என்று கூறி சென்று விட்டாள்.

குழந்தை பிறந்ததை கேள்விப்பட்ட ரமணன் அந்த சந்தோஷத்தில் அப்போது பார்த்து வராவை அழைத்தான் அவளின் வருத்தம் தெரியாமல்...

அவன் அழைத்தவுடனே எடுத்த வரா பொறிந்தாள். ''ஏன் வெங்கி என்கிட்ட சொல்லாம மறைச்ச'' என்றாள்.

''எதை மறைச்சேன் நான் உன்னை காதலிச்சதையா?'' என்றான் உற்சாகமாய்.

''காதல்! காதல்! ஏன்? இந்த வார்த்தையை வெச்சு எல்லாரும் என்னை ஏன்... என்னை ஏன்... இப்படி கொல்றீங்க. எனக்கு அது வேண்டாம்!'' என்று கத்தினாள்.

''ஏய் என்னடி ஆச்சு?'' என்று கோபத்தில் ரமணன் கத்திய பிறகே உணர்வுக்கு வந்தவள்.

''ஸ்ரீதர் தற்கொலைக்கு முயற்சி பண்ணினானாமே! ஏன் என்கிட்ட சொல்லலை'' என்றாள்.

''எதுக்கு சொல்லணும், சொன்னா என்ன பண்ணுவ நீ. ஐயோ! நீ சாகாதன்னு அவனோட போய்டுவியா'' என்றான்.

''ஓஹ்! போய்டுவேன்னு நினைச்சு தான், நீ என்கிட்ட சொல்லலையா'' என்றாள் இவள் பதிலுக்கு அதே ஆத்திரத்துடன்.

வாயடைத்து போனான் ரமணன்.

''நீ இப்படி பண்ணுவேன்னு நான் நினைக்கவே இல்லை'' என்று வரா போனை வைத்து விட்டாள்.

அப்பொழுது தான் ரமணனுக்கு உறைத்தது, இத்தனை நாட்கள் இல்லாமல் இப்பொழுது இது எப்படி இவளுக்கு தெரிந்தது என்று.

உடனே மறுபடியும் போன் அடித்தான். எடுக்கப்பட வில்லை என்ற பிறகு மறுபடியும் மறுபடியும் அடிக்க...

அதற்கு மேல் தவிர்க்க முடியாமல் எடுத்தாள்.

எடுத்தவுடனேயே... ''இப்போ என்ன பிரச்சனையை இழுத்து விட்டிருக்கே'' என்று ரமணன் கோபமாக கேட்க...

''எதையும் இழுத்துவிடலை, உன் வேலையை பார். எனக்கு என்னை பார்த்துக்க தெரியும். மீறி என்னை பார்க்கணும்னா இங்கே வந்து பார்த்துக்கோ.

''ஏன்னா நான் இப்போவும் அங்கே வரமாட்டேன்'' என்றாள்.

''இந்த முறை என்னடி, மறுபடியும் ஏதாவது சாமிக்கிட்ட சொல்லிக்கிட்டியா'' என்றான் எரிச்சல் முழுவது மாய் குரலில் ஒலிக்க...



''இல்லை சாமிக்கிட்ட எல்லாம் சொல்லலை. ஆனா ஸ்ரீதர் கல்யாணம் பண்ணிகிட்டா தான் வருவேன்'' என்றாள்.

''ஏய்! நீ வராதடி... வரவே வராத... நீ அங்கேயே இரு! நான் இங்கேயே இருக்கேன்! அடுத்தவன் கல்யாணம் பண்ணிக்கட்டும், நம்ம கல்யாணம் இல்லாம போயிடட்டும், அடுத்தவன் குழந்தை பெத்துக்கட்டும், நீ அதை பார்த்துட்டு, இங்கே வரவே வராத!'' என்று சொல்லி போனை வைத்தவன் தான், வராவை அழைக்கவே இல்லை.

அவளும் மிகுந்த குற்ற உணர்ச்சியில் இருந்ததால் கூப்பிடவில்லை.

எத்தனை முறை யார் அழைத்தாலும் எடுக்க மாட்டான்.

வராவின் அழைப்புக்காக காத்திருக்க அவளும் அழைக்க வில்லை.

அவன் எப்பொழுதாவது அங்கே கம்பத்திற்கு அன்னையையும் தந்தையையும் பார்க்க வரும்பொழுது... அவர்கள் வராவை வரவழைப்பர் அங்கே...

ஆனால் அவள் வந்தவுடனே... உடனே இவன் கிளம்பி விடுவான்.

இந்த கண்ணாமூச்சி ஆட்டத்தை கிட்டதட்ட மூன்று வருடங்கள் நடந்தது.

சிவசங்கரன் ராம்பிரசாத் ஒரு பக்கம் அழைத்துக் கொண்டே இருக்க...

மறுபக்கம் ராமநாதன் சொல்ல...

இன்னொரு புறம் சுந்தரவல்லி கோபத்தை காட்ட...

ஒருவழியாக சென்னை வந்து சேர்ந்தான் வெங்கட ரமணன் வரமஹாலக்ஷ்மியோடு குடும்பம் நடத்துவதற்காக...

## 34

### இன்றைய நிகழ்வுகள்

வேகமாக வந்தவன்... அவனுடைய அலுவலகத்தை அடைந்ததும், 'நோ ஆத்திரம்' என்று தன்னை தானே ஆசுவாசப்படுத்தினான்.

தன்னுடைய சிறு தவறும் சிறுமிகளை பாதித்து விட்டால்...

அமைதியானவன், முதலில் அவர்கள் எங்கே இருக்கிறார்கள்... தங்கள் ஏரியாவிலா இல்லை பக்கத்து ஏரியாவிலா குழம்பி நின்ற போது, ''சாரை பார்க்கணும்'' என்று வந்தான் அவனுடைய டீக்கடை நண்பன்... அந்த பையன்.

''இப்போ சார் பிஸி'' என்று அவன் வாயில் காவலர் சொன்ன பிறகும் ''அவசரம்'' என்று நின்றான்.

அவன் சில சமயம் ரமணன் சொன்னால் ஆபீசிற்கே டீ எடுத்து வருவான், அதனால் அவனை அங்கிருப்பவர்களுக்கு தெரியும்.

''என்ன விஷயம்'' என்று கேட்டாலும் சொல்லவில்லை.

''ஒரு தபா நான் பார்க்கணும்னு சொல்லு சாரு'' என்றான் கெஞ்சுதலாக...



''இப்போ எல்லாம் கேட்க முடியாது போடா, புரிஞ்சிக்கோடா'' என்று சொல்ல, சத்தம் கேட்டு ரமணன் சொன்னா வந்து பார்த்தான்.

''என்னடா'' என்றான் அந்த பையனைப் பார்த்து...

''அர்ஜென்டுகா அஞ்சு நிமிட்டு உன்னை பார்க்கணும் சாரு.''

''சரி வா'' என்று உள்ளே அழைத்து போக...

''சாரு நம்ம கடையாண்ட ஒருத்தன் இப்போ கொஞ்ச டைம் முன்னாடி டீ குடிக்க வந்தான் சாரு.

''ஆளு ஒரே திருட்டு முழி. சும்மானாச்சுக்கும் திரும்பி திரும்பி பார்த்துட்டு இருந்தானா... எனக்கு ஒரே டவுட்டுகா ஆயிடுச்சு.

''எங்க பூத்தாண்ட இருந்து ஒரு போன் பண்ணுனானா, நான் ஒட்டு கேட்டேன் சாரு.

''யாராண்டையோ பேசினான்.

''டேய்! நீ சொன்னேன்னு ரெண்டு பொண்ணுங்களையும் யாருக்கும் தெரியாம இட்டாந்துட்டேன்... நீ எங்கடா போய்ட்டேன்னு... கத்திட்டு இருந்தான் சாரு. அவனுகளுக்கு போன போட்டு பணத்தை கேட்கணும் சீக்கிரம் வாடா. மயக்க மருந்து எவ்வளவு நேரம் தாங்கும்னு தெரியாதுன்னு சொன்னான்.

''பின்ன, என்னது? சாயந்தரம் ஸ்கூல் விட்டதுக்கு அப்புறம் தான் போன் பண்ணணுமா. எதுவா இருந்தாலும் வந்து தொலைடா! எனக்கு தனியா பயமாயிருக்குன்னு சொல்லி வெச்சிட்டான்.

''அவன் போன பின்னாடியே நான் போனா... நம்ம ஸ்ட்ரீட்டு தாண்டி அப்பால ஒரு சந்துல ஒரு வீட்டுக்குள்ள போய்ட்டான்.

''அவன் பேசுனது எனக்கு டௌட்டா பூடுச்சு சாரு. அதான் உங்கையாண்ட ஒரு தபா சொல்லிக்கலாம்னு வந்தேன்'' என்றான்.

அவன் தோளில் தட்டி தன் சந்தோஷத்தை பகிர்ந்து கொண்டவன்...

''டேய் தம்பி... நீ என்ன செஞ்சிருக்கன்னு உனக்கே தெரியலைடா, சரி யார்கிட்டயும் இதைபத்தி பேசாத... நீ அந்த சந்துக்குள்ள ஒரு தடவை போயிட்டு வர முடியுமா.

''அந்த வீட்ல என்ன நடக்குதுன்னு வெளில ஜன்னல் மாதிரி ஏதாவது இருக்கான்னு பார்க்க முடியுமா. நீ அந்த சந்துக்குள்ள முதல்லயே போய் இருக்கியா'' என்றான்.

''இருக்கேன் சார். அங்க அதிகமா யாரும் பூமாட்டாங்கோ... அதனால அங்க தான் எல்லாரும் உச்சா விட பூவானுங்கோ'' என்று தயக்கமாக உரைத்தான்.

அங்கே சிறுமிகளை அடைத்து வைத்திருக்கிறானா மனம் பாரமாகியது.

''செய்ய முடியுமாடா'' என்றான்.

''செய்யறேன் சாரு. நீ சொல்லி நான் செய்யாம இருப்பேனா.''

''நீ போய் பார்த்துட்டு வா'' என்றவன்...

''டேய் இருடா...'' என்றவன் இது என் நம்பர். ஏதாவதுன்னா அங்கேயே இருந்துட்டே என்னை கூப்பிடு. பேச முடியலைன்னா... போன் பண்ணு. நம்பர் பார்த்த அடுத்த நிமிஷம் நான் அங்கே இருப்பேன்'' என்றான்.

போலீஸ் ஸ்டேசனில் இருந்தவர் போனை கொடுத்தனுப்பினான்.



அங்கே சென்ற சிறிது நேரத்திற்கு எல்லாம் அழைத்த அந்த பையன்... ''ஒண்ணுமே தெரியலை சாரு. சைலன்டுகா இருக்கு! நான் இங்கயே யாரும் உள்ளே போறாங்களா, வெளில வர்றாங்களா, பார்த்துட்டு இருக்கேன், நீ வந்துடு சாரு'' என்றான்.

ஒரு நான்கைந்து பேரை அழைத்துக்கொண்டு ரமணனே சென்றான்.

ஸ்ரீதரும் உறவினர்களும் உடன் வர... அவர்களை தவிர்க்க முடியாமல் ''வாங்க ஆனா தூரமா நில்லுங்க, அங்க வந்து என்னை மீறி எதுவும் செய்யக் கூடாது'' என்றான்.

அந்த இடத்திற்கு வந்தபொழுது, ''சாரு, இன்னொருத்தன் உள்ளே போனான்'' என்றான்.

உடன் வந்த போலீசாருக்கே அந்த வீட்டை பற்றி தெரிந்திருந்தது. ''சார் முன்புறம் வேற வீடு. இது பின்புறம். வாஸ்து படி, பின்புறம் படி மட்டும் போகும். ரெண்டு மாடி. மேல மொட்டை மாடி இருக்கும்'' என்றான்.

''அப்போ முன்னால போக முடியுமா'' என...

''முன்னால போக முடியாது சார். வீடு அப்படியே முடிஞ்சிடும்.''

பக்கத்தில் இருக்கும் மாடி வழியாக போகலாம் என்றால் இருபுறமும் ஓட்டு வீடு மட்டுமே. ஓட்டு வீட்டின் பக்கத்தில் ஒரு புறம் மாடி வீடு இருந்தது.

வேகமாக அங்கே சென்று பார்த்தால் மாடியில் யாரும் இல்லை.

படியிலேயே அநேகமாக அடைத்து வைத்திருக்க வேண்டும். அதுவும் அந்த பையன் சொல்லியதை

வைத்து பார்த்தால் மயங்கிய நிலையிலேயே வைத்திருக்க வேண்டும்.

அதுவும் பெண்பிள்ளைகள் ஒருவள் சிறுமி, மற்றவள் பருவம் எய்தும் நிலையில் உள்ள சிறுமி... நடக்கும் நிகழ்வுகளை பார்க்கும்பொழுது நிறைய நேரம் எடுத்துக்கொள்ளவும் ரமணனுக்கு தயக்கமாக இருந்தது.

ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டால்...

அந்த இடத்தை பார்த்து தேர்ந்தெடுத்து இருக்கின்றனர். யாரும் அங்கே போவது இல்லை. அந்த கதவை மூடிவிட்டால் உள்ளே போக வேறு வழியில்லை.

சுவரும் எந்த பிடிமானமும் இன்றி செங்குத்தாக இருந்தது. ஏறுவது சிரமம்! நிறைய தேர்ந்தவர்களால் மட்டுமே முடியும்! அதுவும் மேலே இருப்பவர்கள் பார்த்துவிட்டால், அவர்கள் ஏறும் கயிற்றை எடுத்துவிட்டால் மரணம் நிச்சயம்.

அவன் மட்டும் சென்று கதவு தள்ளி பார்த்தான் திறக்கவில்லை. கதவை கழட்ட முயன்று பார்த்தால் அதுவும் முடியவில்லை.

சத்தம் கேட்டு அவன் உஷாராகி சிறுமிகளை ஏதாவது செய்துவிட்டால். யாரையாவது தீயணைப்பு பிரிவில் இருந்து வர சொல்லலாம் என்று யோசித்தான். நேரம் கடத்தவும் பயமாகியது. அங்கே அந்த சந்தில் ஒரு மயான அமைதி நிலவியது.

அத்தனை பேர் இருந்தும் சிறு சத்தம் கூட இல்லை. ஏதாவது சத்தம் கேட்குமா என்று எல்லாரும் பார்த்திருக்க...

அந்த ஏரியாவில் இருந்த செட்டிக்கு அந்த கடத்தல் காரை பற்றி விசாரிப்பதற்காக அறிவழகன் அங்கே



வந்திருந்தான். இவர்கள் எல்லாரும் அந்த சந்தின் புறம் போவதை பார்த்ததுமே அவன் வந்து எட்டி பார்த்தான்.

ரமணன் எப்படி ஏறிவது என்று அந்த சுவரை பார்த்திருந்தவன்,

அவனே ஏற முடிவெடுத்து, கயிற்றை கொண்டு வர சொல்ல... கயிறு வந்தவுடன் அதை எப்படி மேலே ஏறிவது என்று பார்த்திருக்க...

அருகில் வந்தான் அறிவழகன் எல்லாரும் அவனை விலக்க முற்பட...

சைகையாலேயே, 'அவனை விடுங்கள்' என்றான் ரமணன். வந்தவன் ரமணன் கையில் இருந்த கயிற்றை வாங்கினான். ரமணன் கொடுக்க மாட்டேன் என்பது போல் கூற...

''எனக்கு சின்ன வயசுல ஏறி நிறைய பழக்கம்'' என்றான் ஒற்றை வார்த்தையில். அவன் அப்பொழுது ஈடுபட்டிருந்தது திருட்டுகளில் தானே.

கொடுக்கமாட்டேன், என்பது போல அப்பொழுதும் ரமணன் மறுக்க... ''குடுங்க அண்ணா'' என்று இழுத்தான்.

வேறு வழியில்லாமல் கொடுத்தவன், யாரும் அறியாமல் அவன் கைகளில் கயிற்றோடு சேர்த்து துப்பாக்கியையும் திணித்தான்.

''ரொம்ப ரிஸ்க் எடுக்காத! முடிஞ்சா பாரு! முடியாட்டி போட்டுடு!'' என்றான்.

அவன் மெதுவாக கூறினாலும்... அமைதியாக இருந்தால் எல்லோர் காதிலும் அது நன்றாகவே விழுந்தது.

''அவனுங்க ரெண்டு பேர் ஜாக்கிரதை'' என்றான் மறுபடியும்.

''பார்த்துக்கறேன் அண்ணா!'' என்றான்.

அப்பொழுதுதான் அங்கே இருப்பவர்களுக்கு இவன் ரமணனுக்கு தெரிந்தவன் போல் என்று தெரிந்தது.

அவன் மேலே அந்த கயிற்றை போட்ட சத்தம் நன்கு கேட்டது.

இங்கே வெளியே ட்ராபிக் நிறுத்தி வைத்திருந்தனர்.

அறிவழகன் மேலே லாவகமாக ஏறினான்.

சரியான ஆள்தான், என்று எல்லோருக்கும் தோன் றும்படியாக ஏறினான்.

அமைதி... மறுபடியும் மயான அமைதி, அந்த அமைதிய கிழித்து கொண்டு சில சத்தம். அதற்காகவே காத்திருந்தது போல ரமணன் கதவை உடைத்து வேகமாக ஏறினான்.

மொட்டை மாடி ஆரம்பிக்கும் இடத்தில் ஐந்து வயது பெண் மயங்கி கிடந்தாள். இன்னொரு பெண் மொட்டை மாடியில படியேறும் இடத்தில் மயங்கி கிடந்தாள்.

ஆடைகளை கலைக்க முயற்சி நடந்தது போல் தோன்றின.

குற்றம் இழைத்த நபர்களை பார்க்காமல்.... எல்லாரும் வருவதற்கு முன் படுத்த நிலையில் இருந்த, அந்த சிறு மியை அமர வைத்தான். சட்டென்று கதவை அடைத் தவன், பார்த்தால் அறிவழகன் அந்த இருவரையும் துப்பாக்கி முனையில் உட்கார வைத்திருந்தான்.

''என்ன அறிவு நீ பார்த்தே...''



''இதுல ஒருத்தன் அந்த பொண்ணை...'' மேலே முடிக்க வில்லை. ''இன்னொருத்தன் அவனை விடாம இழுத் துட்டு இருந்தான்.

துப்பாக்கியை பார்த்ததும் உட்கார்ந்துட்டாங்க,''

''எவண்டா அவன், என ரமணன் கேட்க...''

அதில் ஒருத்தனை கைகாட்டினான். ''நீ இந்த பொண்ணை தூக்கிட்டு வெளிய மட்டும் போ, கீழ போகாத, நான் கீழே வந்தவுடனே நீ கிளம்பிடு'' என்று துப்பாக்கியை வாங்கிக் கொண்டு... அவனை கதவை திறந்து வெளியே அனுப்பினான்.

இரண்டு சத்தங்கள், இரண்டுமே அந்த நபர்களின் அலறல் சத்தங்கள். சிறிது நேரம் கழித்து வெளியே வந் தவன் எஸ்.பி.யிடம் ஏதோ கூறி சென்றான்.

பத்திரிகையாளர்கள் விவரம் தெரிந்து வரும் முன் சிறுமிகளை ஹாஸ்பிடலில் சேர்க்குமாறு அனுப்பினான்.

மயக்க மருந்தில் இருந்ததால் இருவருமே அதுவரை யும் முழிக்க வில்லை.

அவர்கள் செல்வதற்கும், பத்திரிகையாளர்கள் வருவ தற்கும் சரியாக இருக்க...

வழக்கமான கேள்வி... ''சார் என்ன நடந்தது?''

''குழந்தைங்க கடத்தல்! நோக்கம் என்னன்னு தெரி யாது. ஒருத்தன் செத்துட்டான். இன்னொருத்தன் மயக்க மாயிருக்கான்.

''கோர்ட்ல அவனை நிறுத்தும் போது தெளிவா சொல் றேன். இப்போ அவனுங்க போட்டோஸ் மட்டும் சீக்கிரம் எடுத்துட்டு விடுங்க!'' என்று அவன் கிளம்ப... பின்பு ஆம்புலன்ஸ் தன் கடமையை செய்தது.

பத்திரிகைகளில் செய்தி வெளியானது, ''நிறைய நாள் தேடப்பட்ட கைதி சுட்டுக் கொலை. அவன் நண்பன் குண்டடிபட்டு கைது, என்று...

நிறைய வேலைகள் இதில் நடுவில் அறிவழகனை அழைத்து பாராட்டி, அந்த பையனை அழைத்து பாராட்டி... அவன் மறுபடியில் வீடு வந்த போது மாலை ஆகி யிருக்க...

''வர்றியா வரா! அந்த பொண்ணுங்களை பார்க்க போறேன்'' என்றான்.

''எனக்கு அதுக்கு முன்னாடி ஒரு இடத்துக்கு போக ணும்'' என்றாள் சீரியசாக...

கேட்டவன், ''அங்கே எதற்கு'' என...

''ப்ளீஸ்! கூட்டிட்டு போங்க'' என்றாள்.

''எனக்கு ஒரே ஒரு கேள்வி கேட்கணும்.''

''கூட்டிட்டு போங்களேன்!'' என்றாள்.

இதையெல்லாம் பார்த்திருந்த ராம் பிரசாத்தும் ராஜேஸ்வரியும், ''வேண்டாம்'' என்று மறுக்க...

''அத்தை பயம் வேண்டாம்! என் கூட தான் வர்றா!'' என்று அவள் தாயையும், அண்ணனையும் சமாதானப் படுத்திய பிறகு அவளை அழைத்து சென்றான்.

சென்று... மறுபடியும் அவர்கள் சென்ற இடம்... அந்த குழந்தைகள் இருந்த ஹாஸ்பிடல். மயக்க மருந்தின் வீரியம் அதிகமாக இருந்ததால் கண் விழிப்பதும் சிறிது கண் சொருகுவதுமாக இருந்தனர் சிறுமிகள்.

அவர்களின் மொத்த குடும்பமும் அங்கே தான் இருந்தது.



ரமணனை பார்த்த நிமிடத்தில் ஸ்ரீதரின் தந்தை வேகமாக வந்து கையை பற்றினார்.

விவரம் கூறினான்... ''உங்க வீட்டு டிரைவர் பணத் துக்காக தான் கடத்தியிருக்கான். அதுக்குள்ள அவனுக்கு திட்டம் போட்டு குடுத்த நண்பன் பொண்ணு கிட்ட தப்பா நடக்க முயற்சி பண்ணியிருக்கான். உங்க டிரைவர் விடாம அவனை இழுத்து... கைகலப்பு நடந்த போது நம்மாளு போய்ட்டான்.

''அதான் அந்த டிரைவர்... அவன் பணத்துக்காக பண் ணினான், இருந்தாலும் உங்க பொண்ணை காப்பாத்த முயற்சி பண்ணினான்னு உயிரோட விட்டுட்டேன், இன்னொருத்தனை அனுப்பிட்டேன்'' என்றான் மேலே கைகளை காட்டியபடி...

மொத்த குடும்பமும் அவனை தெய்வம் போலே பார்த்தது.

''அன்னைக்கும் நீங்க தான் தம்பி, என் பையனை காப்பாற்றினீங்க, இன்னைக்கும் எங்க குழந்தைகளை நீங்க தான் காப்பாற்றியிருக்கீங்க, ரொம்ப நன்றின்றது சின்ன வார்த்தைன்னு, எனக்கே தெரியுது. இருந் தாலும்...'' என்று கண்கலங்கினார்.

''எனக்கு நீங்க நன்றி சொல்லணும்னா, உங்க ஆளுங் கன்னு ஒரு வெறியோட சில காரியங்கள் செய்யறீங்க இல்லையா, அதை தவிர்த்திடுங்க'' என்றான்.

ரமணன் கவனமாக ஜாதி என்ற வார்த்தையை தவிர்த்து...

இதை கேட்டவுடன் உறங்கும் அச்சிறுமிகளை பார்த்துக் கொண்டிருந்த வரமஹாலக்ஷ்மி பொறிய ஆரம்பித்து விட்டான்...

''நீங்க தான் ஸ்ரீதர் அப்பாவா, இவரை நான் எங்க வீட்ல பார்த்திருக்கேன், எங்களை வந்து மிரட்டிட்டு போனப்போ'' என்றாள் அவர் சித்தப்பாவை பார்த்து.

''உங்களுக்கு தெரியுமா, நான் இப்போ எங்க இருந்து வர்றேன்னு, ஹாஸ்பிடல்ல இருந்து, அடிபட்ட கைதியை பார்த்துட்டு வர்றேன்.''

''எதுக்கு தெரியுமா? அவன் என்ன ஜாதின்னு கேட்க,''

''எனக்கு தெரியும்! நீங்க வேற ஜாதி ஆட்களை உங்க இடத்துல வேலைக்கு வைக்க மாட்டீங்க இல்லையா. அதனால தான் கேட்டேன். அவன் உங்க ஜாதி தான்... எந்த ஜாதினா, நீங்க சொல்ற பிறப்புசான்றிதழ் சாதி மட்டுமல்ல... உங்களை மாதிரி அடாவடியான ஜாதி கூட.''

''நிமிஷத்துல எங்க ராம் அண்ணாவை கடத்தினீங் களே! என்ன ஆச்சு? இப்போ அது உங்க வீட்ல நடக்க எவ்வளவு நாள் ஆச்சு? சில வருஷங்கள் மட்டுமே இல்லையா...

ஆனா அன்னைக்கும் இன்னைக்கும்... ரமணன் கையை பிடித்தவள், ''இவர் இல்லைன்னா உங்க பசங்க இல்லை. இவர் உங்க ஜாதி இல்லையே! காப்பாத்த தேவைப்படும் போது மட்டும் ஜாதி பேதம் இல்லையா! மற்ற நேரங்களில் எல்லாம் இருக்கா!'' என்று அவள் கேட்க...

அவர்கள் வீட்டினர் ஒவ்வொருவரின் உயிரும் போய் வந்தது.

''அடுத்த வீட்டு பொண்ணுங்கன்னா என்ன வார்த்தை வேணா பேசுறீங்க இல்லையா... அதே நிலைமை உங்க வீட்டு பொண்ணுக்கு வர எத்தனை நேரம் ஆச்சு.



''எத்தனை கொடுமைகள் நீங்க ஜாதி பேரை சொல்லி செய்யறீங்க! எந்த ஜாதி இப்படி சொல்லியிருக்கு. உங்க கிட்ட ஏதாவது இதை பத்தி புக் இருக்கா, இல்லை ஏதாவது மகான் சொல்லியிருக்காங்களா, யார் சொன்னது உங்களுக்கு இப்படி?

''உங்களுக்கு தேவைன்றதுக்காக நீங்களே சொல்லி கிட்டது. இதுல பணம் இருக்குன்ற திமிர் வேற. பிறக்கும் போதே கோடீஸ்வரன்னு பேசறீங்களே! நீங்க உபயோகிக் கறீங்களே பணம். அதுக்கு இருக்கா ஜாதி பேதம்.''

அப்படியே வராவை கட்டிபிடித்து தூக்க வேண்டும் போல் ரமணனுக்கு ஆசை பொங்கியது.

''வேற ஜாதிக்காரன் தொட்டுட்டான்னு அந்த பணத்தை நீங்க தொடுறது இல்லையா உபயோகப்படுத்தறது இல்லையா...

''அறிவுக்கெட்டவங்களா உங்களால எங்க பாப்பா போச்சு! இன்னும் இது மாதிரி நீங்க என்ன செஞ்சிருக்கீங் களோ'' என்று ஆவேசமாக அவள் கத்திக்கொண்டே போக...

''வரா'' என்று ரமணன் அவளை அழைத்து, அழைத்து, பார்த்தான். அவள் நிறுத்தவேயில்லை...

அவள் தோள் சுற்றி கைகள் போட்டு அழுத்தி பிடித் தவன், ''அமைதியாயிரு வரா, இப்போ அவங்க பட்டதே! அவங்க உணர்றதுக்கு போதுமானது. அப்புறம் பார்க்க லாம்'' என்று அனைவரிடமும் கூறி... ''வா'' என்று அழைத்து சென்றான்.

வெளியே வந்து அவளை அமர வைத்தவன்... அவன் மட்டும் உள்ளே சென்று, ''சொல்லப்போனா அன்னைக்கு உங்களால ராம் அண்ணாக்கு, வராக்கு நடந்ததுக்கு

எல்லாம் உங்களை ஒரு வழி பண்ணியிருப்பேன். நான் பண்ணலைன்னாலும் என் வீட்டு ஆளுங்க பண்ணியிருப் பாங்க.

''ஆனா நாங்க யாரும் எதுவும் செய்யாததுக்கு காரணம் வரமஹாலக்ஷ்மி தான். அவ இதை பத்தி இனி எப்போவும் நினைக்கக் கூடாதுன்னு நான் நினைச்சதால தான் நீங்க பொழைச்சீங்க.

''நான் விட்டாலும் கடவுள் காட்டிட்டார் பார்த்தீங் களா... இனிமேலாவது ஜாதி பேர்ல எந்த கலாட்டாவும் பண்ணாம அமைதியா வாழுங்க'' என்று கூறி திரும்ப...

''நிச்சயம்'' என்று ஸ்ரீதரின் தந்தை அவனுக்கு வாக்கு கொடுத்தார்.

அவர்கள் செல்வதை அனைவரும் பார்த்து இருக்க.. அப்பொழுதுதான் தான் அவர்களுக்கு நன்றி கூறாததை உணர்ந்த ஸ்ரீதர் வேகமாக அவர்கள் பின்னே ஓடிவந்து, ''தேங்க்ஸ் சார்'' என்றான் ரமணனை பார்த்து...

''உங்களுக்கு கல்யாணம் ஆகிடுச்சா ஸ்ரீதர்'' என்றான் ரமணன்.

''இல்லை'' என்பது போல் ஸ்ரீதர் தலையசைக்க...

''எனக்கு நிஜமாவே, நீங்க தேங்க்ஸ் சொல்லணும்னு நினைச்சீங்கன்னா, நீங்க ஒரு கல்யாணம் பண்ணிக்கங்க ஸ்ரீதர்'' என்றான் ரமணன்.

''கட்டாயம் அடுத்த முறை உங்களை என் கல்யாண பத்திரிகையோடு தான் சந்திப்போன்'' என்றான் ஸ்ரீதர்.

இப்பொழுதும் மனதில் வராவை மிஸ் செய்த வருத்தம் இருந்தாலும் ரமணன் வராவின் நெருக்கம் இனி நினைத்து பயனில்லை என்று ஸ்ரீதருக்கு தெளிவாக உணர்த்தியது.



அதற்குள் பேக் டு நார்மல் ஆகியிருந்த வரமஹா லக்ஷ்மி, ''யார் ஸ்ரீதர் அது கல்யாண பொண்ணு உங்க அத்தை பொண்ணு சித்ராவா'' என்று முகத்தை பாவமாக வைத்து தன் கணவனின் தோள் சாய்ந்தவள் கேட்க...

''இல்லை வரா, அவளுக்கு கல்யாணம் ஆயிடுச்சு...''

''அப்போ நீ க்ரேட் எஸ்கேப்பா'' என்று சொல்லி வரா கலகலவென சத்தமாக சிரிக்க...

'இப்படி சிரிச்சே மறுபடியும் அவனை பின்னால சுத்த வைப்பா போல' என்று மனதிற்குள்ளேயே வராவை ரமணன் கடிந்தான்...

அவனிடம் கண்களாலேயே விடைபெற்ற ரமணன், ''இது என்னதிது உன் மாமனார் சிரிப்பு உனக்கும் வந்துடுச்சா'' என்று சொல்லி அவன் பெருங்குரலெடுத்து சிரித்தான்.

''அய்யே! என்ன சிரிப்பு'' என்றாள் வரா அவனை பார்த்து...

மறுபடியும் அவள் முக சேஷ்டை பார்த்து அவன் சிரிக்க... ''நீங்க பெரிய க க க ன்னு எல்லாரும் நினைக்கறாங்க. அப்படியே மெயின்டெய்ன் பண்ணுங்க. இப்படி சிரிச்சு ஸ்பாயில் பண்ணாதீங்க'' என அவள் கூற...

''அது என்ன க க க,'' என்று மறுபடியும் சிரிக்க...

''அது கடமை கண்ணியம் கட்டுப்பாடு'' என்று அவள் சொல்ல...

''இதப்பார்றா நம்மளை இவ கிண்டல் பண்ணுறா'' என்று மறுபடியும் சிரிக்க... இப்பொழுது வராவுக்கும் மறுபடியும் சிரிப்பு வர...

இருவருமே சந்தோஷமான மனநிலையில் இருந்ததால் காரணமில்லாமல் சிரிப்பு வந்தது.

''இதுக்கு எங்கப்பா சிரிப்பே பரவாயில்லை'' என்றான் மறுபடியும்.

''இரு! வள்ளிமா கிட்ட சொல்றேன்'' என்று உடனே அவள் வள்ளிமாவை அழைத்தாள்...

''பாருங்க வள்ளிமா, இவங்க கிண்டல் பண்றாங்க, தாத்தாவை சொல்லி'' என்று எப்பொழுதும் போல் புகார் வாசிக்க...

அவளிடம் இருந்து போனை பிடுங்கியவன்... ''எங்கம்மா பிடிச்சீங்க இவளை. ஆன்னா ஊன்னா உங்களுக்கு போன் பண்ணிடறா, என...''

''நாங்க எங்கடா பிடிச்சோம். நீதாண்டா பிடிச்ச! அதுவும் நான் பிடிச்ச முயலுக்கு மூணு கால்ன்னு நின்னு, மூணு நாள்ல கல்யாணத்தை வைக்க சொன்ன'' என்று திருப்ப...

''அம்மா! இதுக்கு இவளே பரவாயில்லைமா'' என்று ரமணன் பயந்தது போல் நடிக்க...

''டேய்! அவகிட்ட குடுறா'' என்று அதட்டிய வள்ளிமா...

''மகாலக்ஷ்மி!'' என்று அதட்டல் போட்டவர்... ''அவன் சொன்ன மாதிரி சும்மா ஆன்னா ஊன்னா போன் பண்ணக் கூடாது. அடுத்த தடவை நீ போன் பண்றது நாங்க பாட்டி தாத்தாவாயிட்டோம்ற செய்தியோட தான்'' என்று அவர் சொல்ல...

இந்த முறை யாரும் இல்லாமலேயே... எதுவும் சொல்லாமலேயே... ரமணன் பின்னால் ஒளிந்தாள்.

''என்ன வரா?'' என்று கேட்டு அவன் திரும்ப முற்பட... அவன் முதுகுக்கு பின்னாலேயே அவளும் சுற்றி எப்பொழுதும் போல் கண்ணாமூச்சி ஆட...



இப்படி பேச்சும் சிரிப்புமாய் இவர்கள் நின்றது ஹாஸ்பிடல் நுழைவாயில்.

சட்டென்று இன்னுமே அடக்க முடியாமல் சிரித்தான் வெங்கட ரமணன்.

''எதுக்கு இவ்வளவு சிரிப்பு. போதும்'' என்று வரா கூற...

''சிரிக்காம என்ன பண்ணுவாங்க... அங்க பாரு இன்னும் காணோம்னு... என்னவோ ஏதோன்னு உங்க அண்ணன் வந்துட்டான், கூடவே உங்க அண்ணியும் வந்துட்டா'' என்றான்.

பார்த்தாள்... அவர்கள் இருவரும் தான். திடீரென்று சீரியஸ் ஆன வரா... ''நாம மறைக்கறது தப்பில்லையா'' என்றாள். எந்த சூழ்நிலையில் கல்பனா கீழே விழுந்தாள் என்பதை நினைவு படுத்தி கேட்க...

''உண்மை நம்ம அத்தனை பேருக்கும் கஷ்டத்த கொடுக்கும்னா, அதை மறைக்கறது தப்பில்லை. கல்பனா வர்றா அமைதியாயிரு'' என்றான் ரமணன்.

''என்ன? நான் வர்றேன்னு உன் பொண்டாட்டிக்கிட்ட வேகமா சொன்ன?'' என்றாள் கல்பனா.

''ம், அண்ணி நீங்க ரொம்ப நல்லவங்கன்னு சொல்றாங்க'' என்றாள் வரா குழந்தைகளோடு சேர்ந்து சொல்வது போல்...

''பாரு! பாரு! எத்தனை தடவை சொல்றேன். யாராவது இவளை கேக்கறீங்களா'' என்று கல்பனா... சிறிது டென்ஷன் ஆக...

எப்பொழுதும் போல் ரமணன், ''வரா கல்பனாவை டென்ஷன் பண்ணாத'' என்று மெல்லிய குரலில்

''வாயை மூடுடான்னா பேசிட்டு இருக்கான் இவன்'' என்று கல்பனா ரமணனை கடிந்து கொள்ள...

வராமஹாலக்ஷ்மி ரமணனுக்கு மட்டும் கேட்குமாறு... ''இத்தனை பேர் இருக்கும் போது நீ எப்படி என் வாயை மூடுவ'' என்று ஒரு பெரிய சந்தேகத்தை எழுப்பினாள்.

புரியாமல் ரமணன் பார்க்க... ''உன் வாயால எப்படி என் வாயை மூடுவ'' என்று கேட்க...

கேட்ட ரமணன் அவளுக்கு மட்டும் கேட்குமாறு சிறு குரலில் அலறினான்... ''அம்மா தாயே! நீ ஆளை விடு! நான் போலீஸ் ஸ்டேசன் போறேன். நீ உன் பாச மலர்களை கூட்டிட்டு வீடு போய் சேர்'' என்றான்.

இவர்களை ரசித்து பார்த்துக் கொண்டிருந்தனர் ராம் பிரசாத்தும் கல்பனாவும்.

''அண்ணா நான் கிளம்பறேன், பை கல்பனா, கொஞ் சம் வேலை'' என்றவன் கண்களாலேயே வராவிடம் விடைபெற்று கிளம்பினான்.

இத்தனையையும் அமைதியாக வேடிக்கை பார்த்து கொண்டிருந்த ராம் பிரசாத்தையும், பக்கத்தில் இருந்த கல்பனாவையும், வரமஹாலக்ஷ்மிக்கு காட்டிய படியே... கையசைத்து படிகளில் இறங்கினான்.

தலைவியின் நாயகன் கடமையை நோக்கி செல்ல...

வேகமாக படிகளில் தன் நாயகன் இறங்குவதை கண் களால் தலைவி சிறையெடுக்க...

தலைவியை பார்க்கும் ஆசையில் நாயகன் திரும்ப...

அவனை அதிலிருந்து மீள முடியாமல் சிறைப்படுத்தி னாள் நம் தலைவி.